ப்ரதிஜக்₃முஶ்ச தா நத்₃யோ க₃ந்த₄ர்வாஶ்ச யத₂ாக₃தம் ।
ப₄ரத்₃வாஜமநுக்ஞாப்ய தாஶ்ச ஸர்வா வராங்க₃நா: ॥ (82)

ததை₂வ மத்தா மதி₃ரோத்கடா நராஸ்–
ததை₂வ தி₃வ்யாக₃ருசந்த₃நோக்ஷிதா: ।
ததை₂வ தி₃வ்யா விவித₄ா: ஸ்ரகு₃த்தமா:
ப்ருத₂க்ப்ரகீர்ணா மநுஜை: ப்ரமர்தி₃தா: ॥ (83)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
அயோத்₄யாகாண்டே₃ ஏகநவதிதம: ஸர்க₃: ॥

த்₃விநவதிதம: ஸர்க₃:

ப₄ரத்₃வாஜாமந்த்ரணம்

ததஸ்தாம் ரஜநீம் வ்யுஷ்ய ப₄ரத: ஸபரிச்ச₂த₃: ।
க்ருதாதித்₂யோ ப₄ரத்₃வாஜம் காமாத₃பி₄ஜக₃ாம ஹ ॥ (1)

தம்ருஷி: புருஷவ்யாக்₄ரம் ப்ரேக்ஷ்ய ப்ராஞ்ஜலிமாக₃தம் ।
ஹ்ருதாக்₃நிர்ஹோத்ரோ ப₄ரதம் ப₄ரத்₃வாஜோঽப்₄யபா₄ஷத ॥ (2)

கச்சித₃த்ர ஸுக₂ா ராத்ரிஸ் தவாஸ்மத்₃விஷயே க₃தா ।
ஸமக்₃ரஸ்தே ஜந: கச்சித₃ாதித்₂யே ஶம்ஸ மேঽநக₄ ॥ (3)

தமுவாசாஞ்ஜலிம் க்ருத்வா ப₄ரதோঽபி₄ப்ரணம்ய ச ।
ஆஶ்ரமாத₃பி₄நிஷ்க்ராந்தம் ருஷிமுத்தமதேஜஸம் ॥ (4)

ஸுகே₂ாஷிதோঽஸ்மி ப₄க₃வந் ஸமக்₃ரப₃லவாஹந: ।
தர்பித: ஸர்வகாமைஶ்ச ஸாமாத்யோ ப₄க₃வந்ஸ்த்வயா ॥ (5)

அபேதக்லம ஸந்தாபா: ஸுபி₄க்ஷா: ஸுப்ரதிஶ்ரயா: ।
அபி ப்ரேக்ஷ்யாநுபாத₃ாய ஸர்வே ஸ்ம ஸுஸுகே₂ாஷிதா: ॥ (6)

ஆமந்த்ரயேঽஹம் ப₄க₃வந் காமம் த்வாம்ருஷிஸத்தம ।
ஸமீபம் ப்ரஸ்தி₂தம் ப்₄ராதுர் மைத்ரேணேக்ஷஸ்வ சக்ஷுஷா ॥ (7)

ஆஶ்ரமம் தஸ்ய த₄ர்மக்ஞ த₄ார்மிகஸ்ய மஹாத்மந: ।
ஆசக்ஷ்வ கதமோ மார்க₃: கியாநிதி ச ஶம்ஸ மே ॥ (8)

இதி ப்ருஷ்டஸ்து ப₄ரதம் ப்₄ராத்ருத₃ர்ஶநலாலஸம் ।
ப்ரத்யுவாச மஹாதேஜா ப₄ரத்₃வாஜோ மஹாதபா: ॥ (9)

ப₄ரதார்த₄த்ருதீயேஷு யோஜநேஷ்வஜநே வநே ।
சித்ரகூடோ கி₃ரிஸ்தத்ர ரம்யநிர்ஜ₃ரகாநந: ॥ (10)

(பொழுது விடிந்ததும்) அந்த நதிகள், கந்தர்வர்கள், அழகான பெண்கள் அனைவரும், பரத்வாஜரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வந்தபடியே திரும்பிச் சென்றார்கள். (82)

(ஆனால்) அந்த மக்கள் எல்லோரும் மதுபானத்தால் மதிமயங்கியவர்களாகவும், திவ்யமான அகில்–சந்தனக் குழம்பு பூசப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். அவர்களால் (மதிமயங்கிய நிலையில்) எறியப்பட்ட மலர்மாலைகள் ஆங்காங்கே தனித்தனியாக வாடிக் கிடந்தன. (83)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்று இரண்டு

பரத்வாஜரிடம் விடைபெறுதல்

விருந்தினர்க்குரிய சகல உபசாரங்களையும் மனம் விரும்பியபடி தன் படைகளோடு பெற்றுக் கொண்டு, அந்த இரவை அவ்விடத்தில் கழித்துவிட்டு, (பொழுது விடிந்ததும்) பரத்வாஜரை நோக்கிச் சென்றான், பரதன். (1)

அக்னிஹோத்ரம் முதலான நித்திய கர்மாக்களை முடித்துவிட்டு (குடிலிலிருந்து) வெளியே வந்த பரத்வாஜ முனிவர், கைகளைக் கூப்பிக்கொண்டு எதிரே வந்துகொண்டிருந்த புருஷோத்தமனான பரதனைப் பார்த்துக் கூறினார்— (2)

''புண்ணியாத்மாவே! இரவில் இந்த இடத்தில் சுகமாகத் தங்கினாயா? உன்னுடைய பரிவாரங்கள் எல்லாம் விருந்துபசாரங்களால் திருப்தி அடைந்தார்களா? இதைப் பற்றி எனக்குச் சொல்.'' (3)

ஆசிரமத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருந்தவரும், ஆன்மசக்தி மிக்கவருமான முனிவரைக் கண்டதும் தரையில் விழுந்து வணங்கி கைகளைக் கூப்பிக்கொண்டு பரதன் சொன்னான்— (4)

''தொழுந்தகையீர்! எல்லா படைவீரர்கள்–அமைச்சர்கள்–வாகனங்களுடன் சுகமாகத் தங்கினேன். பகவானே! தங்களால் எங்களுடைய எல்லா வகையான (சுக–சௌக்கிய) விருப்பங்களும் நிறைவேற்றப்பட்டன. (5)

கீழ்நிலைப் பணியாளர்களிலிருந்து எல்லோரும் தளர்ச்சியும் உடல்வலியும் நீங்கியவர்களாக, நல்ல உணவை வயிறார உண்டவர்களாக, நன்றாக உபசரிக்கப்பட்டவர்களாக, சுகமாகப் பொழுதைக் கழித்தார்கள். (6)

பெருந்தகையீர்! முனிவர் திலகமே! தமையன் இருக்குமிடத்திற்குச் செல்ல தங்களிடம் அனுமதிகோரி வந்திருக்கிறேன். அருள் நிறைந்த பார்வையால் தாங்கள் கடாட்சிக்க வேண்டும். (7)

அறம் அறிந்த வள்ளலே! அறம் அறிந்தவரும், பேரருளாளருமான அவருடைய ஆசிரமம் பற்றி விவரமாகக் கூறவேண்டும். அவ்விடம் செல்லும் வழி எது? இங்கிருந்து எவ்வளவு தொலைவு? என்பதையும் அடியேனுக்குச் சொல்லவேண்டும்.'' (8)

மகாதேஜஸ்வியும் பெரும் தவசியுமான பரத்வாஜர், தமையனாரைக் காண்பதற்குத் தவித்துக் கொண்டிருக்கும் பரதன் மேற்கண்டவாறு கேட்டதும், அவனுக்குப் பதில் சொன்னார்— (9)

''பரதா! இங்கிருந்து இரண்டரை யோஜனை தூரத்தில் மக்கள் நடமாட்டமில்லாத இடத்தில் அழகான நீரருவிகளும், காட்டுப் பிரதேசமும் சூழ்ந்த சித்திரகூடம் என்ற மலை இருக்கிறது. (10)

உத்தரம் பார்ஶ்வமாஸாத்3ய தஸ்ய மந்த3ாகிநீ நதீ3 ।
புஷ்பிதத்3ருமஸம்ச்ச2ந்நா ரம்யபுஷ்பிதகாநநா ॥ (11)

அநந்தரம் தத்ஸரிதஶ்சித்ரகூடஶ்ச பர்வத: ।
தயோ: பர்ணகுடீ தாத தத்ர தெள வஸதோ த்4ருவம் ॥ (12)

த3க்ஷிணேநைவ மார்கே3ண ஸவ்யத3க்ஷிணமேவ வா ।
க3ஜவாஜிரத2ாகீர்ணாம் வாஹிநீம் வாஹிநீபதே ॥
வாஹயஸ்வ மஹாப4ாக3 ததோ த்3ரக்ஷ்யஸி ராக4வம் ॥ (13)

ப்ரயாணமிதி தச்ச்2ருத்வா ராஜராஜஸ்ய யோஷித: ।
ஹித்வா யாநாநி யாநார்ஹா ப்3ராஹ்மணம் பர்யவாரயந் ॥ (14)

வேபமாநா க்ருஶா தீ3நா ஸஹ தே3வ்யா ஸுமித்ரயா ।
கௌஸல்யா தத்ர ஜக்3ராஹ கராப்4யாம் சரணௌ முநே: ॥ (15)

அஸம்ருத்3தே4ந காமேந ஸர்வலோகஸ்ய க3ர்ஹிதா ।
கைகேயீ தஸ்ய ஜக்3ராஹ சரணௌ ஸவ்யபத்3ரபா ॥ (16)

தம் ப்ரத3க்ஷிணமாக3ம்ய ப4க3வந்தம் மஹாமுநிம் ।
அதூ3ராத்3ப4ரதஸ்யைவ தஸ்தெ2ள தீ3நமநாஸ்ததா3 ॥ (17)

தத: பப்ரச்ச2 ப4ரதம் ப4ரத்3வாஜோ த்3ருட4வ்ரத: ।
விஶோஷம் க்ஞாதுமிச்சா2மி மாத்ரூணாம் தவ ராக4வ ॥ (18)

ஏவமுக்தஸ்து ப4ரதோ ப4ரத்3வாஜேந தா4ர்மிக: ।
உவாச ப்ராஞ்ஜலிர்பூ4த்வா வாக்யம் வசநகோவித3: ॥ (19)

யாமிமாம் ப4க3வந் தீ3நாம் ஶோகாநஶநகர்ஶிதாம் ।
பிதுர்ஹி மஹிஷீம் தே3வீம் தே3வதாமிவ பஶ்யஸி ॥ (20)

ஏஷா தம் புருஷவ்யாக்4ரம் ஸிம்ஹவிக்ராந்தகா3மிநம் ।
கௌஸல்யா ஸுஷுவே ராமம் தா4தாரமதிதீ3ர்யதே3ா ॥ (21)

அஸ்யா வாமபு4ஜம் ஶ்லிஷ்டா யைஷா திஷ்ட2தி து3ர்மநா: ।
இயம் ஸுமித்ரா து3:கா2ர்தா தே3வீ ராக்ஞஶ்ச மத்4யமா ॥ (22)

கர்ணிகாரஸ்ய ஶாகே2வ ஶீர்ணபுஷ்பா வநாந்தரே ।
ஏதஸ்யாஸ்து ஸுதௌ தே3வ்யா: குமாரௌ தே3வவர்ணிநௌ ॥
உபௌ4 லக்ஷ்மணஶத்ருக்4நௌ வீரௌ ஸத்யபராக்ரமௌ ॥ (23)

யஸ்யா: க்ருதே நரவ்யாக்4ரௌ ஜீவநாஶமிதோ க3தௌ ।
ராஜா புத்ரவிஹீநஶ்ச ஸ்வர்க3ம் த3ஶரதே2ா க3த: ॥ (24)

க்ரோத4நாமக்ருதப்ரக்ஞாம் த்3ருப்தாம் ஸுப4க3மாநிநீம் ।
ஐஶ்வர்யகாமாம் கைகேயீமநார்யாமார்யரூபிணீம் ॥ (25)

மமைதாம் மாதரம் வித்3தி4 நிருஶம்ஸாம் பாபநிஶ்சயாம் ।
யதோமூலம் ஹி பஶ்யாமி வ்யஸநம் மஹத3ாத்மந: ॥ (26)

அதன் வடக்குப் பகுதியில் மலர்கள் நிறைந்த மரங்களால் மறைக்கப்பட்டதும், மனங்கவர் பூஞ்சோலைகளை உடையதுமான மந்தாகினி நதி இருக்கிறது. (11)

பிள்ளாய்! அந்த ஆற்றின் கரையை ஒட்டி சித்திரகூட மலை இருக்கிறது. அவ்விடத்தில்தான் அவ்விருவரும் (இராம–லட்சுமணர்கள்) தங்கியிருக்கிறார்கள் என்பது நிச்சயம். (12)

படைகளுக்குத் தலைவனே! யானை–குதிரை–தேர்கள் கொண்ட சேனையை, தெற்கு வழியே நடத்திச் சென்று, (பின் பாதை பிரியுமிடத்தில்) தென்மேற்கு நோக்கிச் செலுத்து. பெரும் புகழுக்குரியவனே! அந்த வழியில் செல்லும்போது இராகவனைக் காண்பாய். (13)

(மறைவாக) வாகனங்களில் அமர்ந்திருந்த மாமன்னரின் மனைவிமார்கள் அவ்விடத்திலிருந்து புறப்பட்டுச் செல்ல வேண்டும் என்பதைக் கேட்டதும், வாகனங்களிலிருந்து இறங்கி பிரும்மரிஷியின் அருகே வந்தார்கள். (14)

உடல் மெலிந்து பரிதாபமான நிலையிலிருந்த கோசலை, அந்த முனிவருடைய திருவடிகளை சுமித்திராதேவியோடு நடுங்கும் கரங்களுடன் தொட்டு வணங்கினாள். (15)

தன் விருப்பம் கைகூடப் பெறாதவளும், எல்லா மக்களாலும் இழித்துரைக்கப்பட்டவளுமான கைகேயி, வெட்கத்தால் வெதும்பி முனிவரின் திருவடிகளில் பணிந்தாள். (16)

பின்னர், வருத்தம் தோய்ந்த மனமுடைய அவள், இறைவனுக்கு ஒப்பான மாமுனிவரை வலம் வந்து, (மற்றவர்களுடன் சேராமல்) தன் மகன் பரதன் அருகில் வந்து நின்றாள். (17)

அப்போது அறவொழுக்கத்தில் உறுதியுடைய பரத்வாஜர், பரதனைப் பார்த்து, 'பரதா! இந்த உன் தாய்மார்களில் யார், இன்னாரென்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்' என்று கேட்டார். (18)

பரத்வாஜரால் இவ்வாறு கேட்கப்பட்ட அறநெறியாளனும் சொல் திறன் உடையவனுமான பரதன், இரு கைகளையும் கூப்பிக் கொண்டு, (பின்வரும்) சொற்களைக் கூறினான்— (19)

"சான்றோரே! சோகத்தாலும் உணவு உண்ணாமையாலும் உடல் தளர்ந்திருப்பவரும், ஒரு தேவதையைப் போல் தோற்றமளிப்பவருமான இவர்தான், என் தந்தையின் பட்டத்தரசி; இவர்தான் அதிதிதேவி மகாவிஷ்ணுவைப் பெற்றது போல வீறுகொண்ட சிங்கம் போன்ற நடையையுடைய இராமனை ஈன்றெடுத்த கௌசல்யை! (20,21)

இவருடைய இடது கையைப் பிடித்துக் கொண்டு நொந்த மனத்துடன் துயரத்தால் தாக்கப்பட்டவராக, (அணிகலன்கள் அணியாததால்) காட்டில் மலர்கள் உதிர்ந்துவிட்ட கர்ணிகார மரக்கிளையைப் போல் இருக்கும் இந்த சுமித்திராதேவி மன்னரின் மனைவியரில் நடுவர். வீண்போகாத பராக்கிரமம் கொண்டவர்களும், தேவர்களுக்கு ஒப்பான ஒளி படைத்தவர்களும், தரும வீரர்களும், வாலிபர்களுமான லட்சுமண–சத்ருக்னர்கள் இவருடைய (மணி வயிற்றில் உதித்த) புத்திரர்கள். (22,23)

எவள் காரணமாக புருஷோத்தமர்களான அவ்விருவரும் (சுக வாழ்விற்குரிய) நாட்டிலிருந்து உயிருக்கே ஆபத்தை விளைவிக்கும் இடத்திற்குச் சென்றார்களோ; மன்னர் தசரதர், புதல்வனைப் பிரிந்ததால் (உயிரை விட்டு) தேவருலகம் சென்றடைந்தாரோ; மிகவும் கோபம் கொண்டவளும், நல்வழி புகட்டப்படாத புத்தி உடையவளும், கர்வம் கொண்டவளும், ஈடில்லாத கட்டழகி என்று தன்னை நினைத்துக் கொண்டவளும், செல்வத்தில் பேராசை உடையவளும், உயர்குடித் தோன்றல் போன்ற உருவத்தில் இருந்தாலும் இழிகுணம் கொண்டவளும், வெறுக்கத்தக்கவளும், பாவம் செய்வதற்கு உறுதிபூண்டவளுமான இவள், என் தாயார் என்று அறிந்து கொள்ளுங்கள். இவளால்தான் எனக்கு மாளாத துயரம் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறேன்." (24–26)

இத்யுக்த்வா நரஶார்தூ3லோ ப3ாஷ்பக3த்3க3த3யா கி3ரா ।
ஸ நிஶஶ்வாஸ தாம்ராக்ஷோ நாக3: க்ருத்3த4 இவ ஶ்வஸந் ॥ (27)

ப4ரத்3வாஜோ மஹர்ஷிஸ்தம் ப்3ருவந்தம் ப4ரதம் தத3ா ।
ப்ரத்யுவாச மஹாபு3த்3தி4ரித3ம் வசநமர்த2வத் ॥ (28)

ந தே3ாஷேணாவக3ந்தவ்யா கைகேயீ ப4ரத த்வயா ।
ராமப்ரவ்ராஜநம் ஹ்யேதத் ஸுகே2ாதோ3ர்கம் ப4விஷ்யதி ॥ (29)

தே3வாநாம் தா3நவாநாம் ச ருஷீணாம் ப4ாவிதாத்மநாம் ।
ஹிதமேவ ப4விஷ்யத்3தி4 ராமப்ரவ்ராஜநாதி3ஹ ॥ (30)

அபி4வாத்3ய து ஸம்ஸித்3த4: க்ருத்வா சைநம் ப்ரத3க்ஷிணம் ।
ஆமந்த்ர்ய ப4ரத: ஸைந்யம் யுஜ்யதாமித்யசோத3யத் ॥ (31)

ததோ வாஜிரத2ாந் யுக்த்வா தி3வ்யாந் ஹேமபரிஷ்க்ருதாந் ।
அத்4யாரோஹத்ப்ரயாணார்தீ2 ப3ஹஶிந் ப3ஹுவிதே4ா ஜந: ॥ (32)

க3ஜகந்யா க3ஜாஶ்சைவ ஹேமகக்ஷ்யா: பதாகிந: ।
ஜீமூதா இவ க4ர்மாந்தே ஸகே4ாஷா: ஸம்ப்ரதஸ்தி2ரே ॥ (33)

விவித4ாந்யபி யாநாநி மஹாந்தி ச லகூ4நி ச ।
ப்ரயயு: ஸுமஹார்ஹாணி பாதை3ரேவ பத3ாதய: ॥ (34)

அத2 யாநப்ரவேகைஸ்து கௌஸல்யாப்ரமுகா2: ஸ்த்ரிய: ।
ராமத3ர்ஶநகாங்க்ஷிண்ய: ப்ரயயுர்முதி3தாஸ்ததா3 ॥ (35)

சந்த்3ரார்கதருணாப4ாஸாம் நியுக்தாம் ஶிபி3காம் ஶுப4ாம் ।
ஆஸ்தா2ய ப்ரயயௌ ஸ்ரீமாந் ப4ரத: ஸபரிச்ச2த3: ॥ (36)

ஸ ப்ரயாதா மஹாஸேநா க3ஜவாஜிரதா2குலா ।
த3க்ஷிணாம் தி3ஶமாவ்ருத்ய மஹாமேக4 இவோத்தி2த: ॥ (37)

வநாநி து வ்யதிக்ரம்ய ஜுஷ்டாநி ம்ருக3பக்ஷிபி4: ।
க3ங்கா3யா: பரவேலாயாம் கி3ரிஷ்வபி நதீ3ஷு ச ॥ (38)

ஸா ஸம்ப்ரஹ்ருஷ்டத்3விபவாஜியோதா4
வித்ராஸயந்தீ ம்ருக3பக்ஷிஸங்கா4ந் ।
மஹத்3வநம் தத்ப்ரதிகா3ஹமாநா
ராஜ ஸேநா ப4ரதஸ்ய தத்ர ॥ (39)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 த்3விநவதிதம: ஸர்க3: ॥

இவ்வாறு, புருஷோத்தமனான பரதன் கண்ணீர் பெருக்கிக் கொண்டு தழுதழுத்த குரலில் கூறிவிட்டு, சிவந்த கண்களுடன் சினம் கொண்ட சர்ப்பம் போல் பல தடவைகள் பெருமூச்செறிந்தான். (27)

முன்பு கூறியபடி பேசிக் கொண்டிருந்த பரதனுக்கு, பேரறிஞரும் மாமுனிவருமான பரத்வாஜர் பொருள் நிறைந்த (பின்வரும்) பதில் மொழிந்தார்— (28)

"பரதா! கைகேயியை நீ இவ்வாறு குற்றம் சுமத்தும் முறையில் ஏசலாகாது. இராமனைக் காட்டிற்கு அனுப்பியது என்ற இந்த நிகழ்ச்சி பிற்காலத்தில் நன்மையை விளைவிக்கப் போகிறது. (29)

இராமன், நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதால் இவ்வுலகில் தேவ-அசுரர்களுக்கும், ஆத்ம சாட்சாத்காரம் பெற்ற முனிவர்களுக்கும் நன்மையே ஏற்படப் போகிறது." (30)

(இராமன் இருக்குமிடத்தை முனிவரிடமிருந்து தெரிந்து கொண்டுவிட்டு) தான் வந்த காரியம் கைகூடப் பெற்றவனான பரதன், முனிவரை வலம் வந்து வணங்கிவிட்டு விடைபெற்றுக் கொண்டான். 'சேனைகளை ஆயத்தப்படுத்துங்கள்' என்று (அதிகாரிகளுக்கு) உத்திரவிட்டான். (31)

உடனே, பிரயாணப்பட வேண்டிய பல்வகை மக்களும் (படைவீரர், கூடாரம் அமைப்போர், சாலை அமைப்போர், உணவு-தண்ணீர் வசதி செய்வோர் போன்ற எல்லா தொழிலாளர்களும்), பொன் வேலைப்பாடுகளால் அற்புதமாக விளங்கிய குதிரைகள் பூட்டப்பட்ட தேர்களில் ஏறிக் கொண்டார்கள். (32)

பொற்சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்த ஆண்யானைகளும், பெண்யானைகளும் பதாகைகள் பறக்க மழைக்கால மேகங்கள் இடிமுழக்கம் செய்வதைப் போல (தம் கழுத்தில் கட்டப்பட்டிருந்த) மணிகளை ஒலித்துக் கொண்டு புறப்பட்டன. (33)

பலவகையான பெரிய-சிறிய வடிவுடைய மிக்க மதிப்புடைய வாகனங்களில் சேனைத்தலைவர்கள் ஏறிக் கொண்டார்கள். காலாட்படையினர் காலால் நடந்து செல்லத் தொடங்கினார்கள். (34)

அப்போது, இராமனைக் காண்பதில் எல்லையில்லாத வேட்கை கொண்ட கௌசல்யை முதலான அரசபத்தினிகள் மிக்க மகிழ்ச்சியுடன் சிறந்த வாகனங்களில் ஏறிக் கொண்டு சென்றார்கள். (35)

அறச்செல்வரான பரதன், உதிக்கும் சூரிய-சந்திரனைப் போன்று ஒளிவீசும் அழகிய சிவிகையில் அமர்ந்து, தம் பரிவாரங்களுடன் சென்றான். (36)

யானை-குதிரை-தேர்கள் நிறைந்த அந்த மாபெரும் சேனை, ஆகாயத்தில் உலா வரும் மேகக்கூட்டம் போல தென்திசையில் வெகுதூரம் சென்றது. (37)

கங்கையின் எதிர்க்கரையில் சிறு குன்றுகள் சிற்றாறுகள் நிறைந்து, விலங்கு-பறவைகள் ஓடிக் களிக்கும் காட்டுப் பகுதிகளைக் கடந்தது. (38)

பரதனுடைய யானை-குதிரை-போர்வீரர்களைக் கொண்ட அந்த சேனை உற்சாகத்துடன் இருந்தது. அந்தப் பெருங்காட்டிலிருந்த விலங்கு மற்றும் பறவைக் கூட்டங்களைப் பயத்தால் மிரளச் செய்து கொண்டு பீடுநடை போட்டுச் சென்றது. (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று இரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

த்ரிநவதிதம: ஸர்க3:

சித்ரகூடவநப்ரேக்ஷணம்

தயா மஹத்யா யாயிந்யா த்4வஜிந்யா வநவாஸிந: ।
அர்தி3தா பூத2பா மத்தா: ஸபூத2: ஸம்ப்ரது3த்3ருவு: ॥ (1)

ருக்ஷா: ப்ருஷதஸங்கா4ஸ்ச ருரவஸ்ச ஸமந்தத: ।
த்3ருஶ்யந்தே வநவாடேஷு கி3ரிஷ்வபி நதீ3ஷு ச ॥ (2)

ஸ ஸம்ப்ரதஸ்தே2 த4ர்மாத்மா ப்ரீதோ த3ஶரத2ாத்மஜ: ।
வ்ருதோ மஹத்யா நாதி3ந்யா ஸேநயா சதுரங்க3யா ॥ (3)

ஸாக3ரௌக4நிப4ா ஸேநா ப4ரதஸ்ய மஹாத்மந: ।
மஹீம் ஸஞ்ச2ாத3யாமாஸ ப்ராவ்ருஷி த்3யாமிவாம்பு3தை3: ॥ (4)

துரங்கை3ளகை4ரவததா வாரணைஸ்ச மஹாப3லை: ।
அநாலக்ஷ்யா சிரம் காலம் தஸ்மிந் காலே ப3பூ4வ பூ4: ॥ (5)

ஸ கத்வா தூ3ரமத்4வாநம் ஸுபரிஶ்ராந்தவாஹந: ।
உவாச ப4ரத: ஶ்ரீமாந் வஸிஷ்ட2ம் மந்த்ரிணாம் வரம் ॥ (6)

யாத்3ருஶம் லக்ஷ்யதே ரூபம் யத2ா சைவ ஶ்ருதம் மயா ।
வ்யக்தம் ப்ராப்தா: ஸ்ம தம் தே3ஶம் ப4ரத்3வாஜோऽயமப்3ரவீத் ॥ (7)

அயம் கி3ரிஶ்சித்ரகூட இயம் மந்த3ாகிநீ நதீ3 ।
ஏதத்ப்ரகாஶதே தூ3ராந்நீலமேக4நிப4ம் வநம் ॥ (8)

கி3ரே: ஸாநூநி ரம்யாணி சித்ரகூடஸ்ய ஸம்ப்ரதி ।
வாரணைரவம்ருத்3யந்தே மாமகை: பர்வதோபமை: ॥ (9)

முஞ்சந்தி குஸுமாந்யேதே நக3ா: பர்வதஸாநுஷு ।
நீலா இவாதபாபாயே தோயம் தோயத4ரா க4நா: ॥ (10)

கிந்நராசரிதம் தே3ஶம் பஶ்ய ஶத்ருக்4ந பர்வதம் ।
ம்ருகை3: ஸமந்தாத3ாகீர்ணம் மகரைரிவ ஸாக3ரம் ॥ (11)

ஏதே ம்ருக3க3ணா ப4ாந்தி ஶீக்4ரவேக3ா: ப்ரஸோதி3தா: ।
வாயுப்ரவித்3த4ா ஶரதி3 மேக4ராஜிரிவாம்ப3ரே ॥ (12)

குர்வந்தி குஸுமாபீட3ாஞ்ஜிர:ஸு ஸுரபீ4நமீ ।
மேக4ப்ரகாஶை: ப2லகைர்த3ாக்ஷிணாத்யா யத2ா நரா: ॥ (13)

ஸர்க்கம் : தொண்ணூற்று மூன்று

சித்திரகூடம் நோக்கிப் பயணம்

பயணம் செய்து கொண்டிருந்த அந்த மாபெரும் சேனையைக் கண்டு மிகவும் பயந்து போன, காட்டிலிருந்த யானைக் கூட்டங்களின் மதங்கொண்ட தலைமை யானைகள், தத்தம் கூட்டங்களோடு வேகமாக வெளியிடங்களுக்கு ஓடிப் போயின. (1)

கரடிகள், புள்ளிமான்கள், கலைமான்கள் ஆகியவை காட்டுப் பகுதிகளிலும் மலையுச்சிகளிலும் நதியோரங்களிலும் மற்றும் எல்லாப் பக்கங்களிலும் (அச்சங்கொண்டு ஓடுகின்றவைகளாகக்) காணப்பட்டன. (2)

மிகவும் உற்சாகத்துடன் பேரொலி எழுப்பும் விஸ்தாரமான நால்வகைப் படையால் சூழப்பட்ட பரதன் மிக்க மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சென்றான். (3)

மழைக்கால மேகக்கூட்டங்கள் ஆகாயத்தை மறைப்பதைப் போல, மகாத்மாவான பரதனுடைய பெருங்கடல் போன்ற படைக்கூட்டம், வெகுதூரத்திற்குப் பூமியை மறைத்துக் கொண்டிருந்தது. (4)

குதிரைக் கூட்டங்களாலும், மகாபலம் பொருந்திய யானைகளாலும் நிரம்பிய மண்தரை வெகுநேரம் வரை கண்ணுக்குப் புலப்படாததாக இருந்தது. (குதிரை–யானைகளின் கால்களால் எழுப்பப்பட்ட மண்புழுதி வெகுநேரம் வரை அடங்கவில்லை. குதிரை–யானைப் படைகள் அவ்வளவு அதிகமாக இருந்தன – என்றவாறு.) (5)

வெகுதூரம் நடந்து சென்றதால் மிகவும் களைத்துப் போன வாகனங்களைக் கொண்ட பண்புத்திரு மிக்கவனான பரதன் ஆலோசனை சொல்பவர்களுள் தலைசிறந்தவரான வசிஷ்டரை நோக்கிக் கூறினான்— (6)

"பரத்வாஜ முனிவரிடமிருந்து நான் எவ்வாறு கேட்டேனோ, அத்தகைய காட்சிகள் இங்கே காணப்படுகின்றன. அதனால் அவரால் கூறப்பட்ட இடத்திற்கு நாம் வந்துவிட்டோம் என்பது தெளிவாகிறது. (7)

இந்த மலை சித்திரகூட மலை; இது மந்தாகினி ஆறு; கார்வண்ண மேகத்தைப் போன்ற காட்டுப் பகுதி தொலைவில் தெரிகிறது. (8)

தற்சமயம், சித்திரகூட மலையின் தாழ்வரைகள் மலைகள் போன்ற நம்முடைய யானைப்படையால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. (நாம் சித்திரகூட மலைக்கே வந்துவிட்டோம் என்பது நிச்சயம்.) (9)

கார்காலத்தில் நீருண்ட மேகங்கள் மலைச்சிகரங்களில் மழையைப் பொழிவதைப்போல, இந்தக் காட்டிலுள்ள மரங்கள் (ஏராளமான) மலர்களை மலையின் தாழ்வரைகளில் பொழிகின்றன." (10)

(இதன் பின்னர் சத்ருக்னனை நோக்கி பரதன் பேசுகிறான்—) "சத்ருக்னா! பெருங்கடல் சுறாமீன்களால் நிரம்பியிருப்பதைப் போன்று கின்னரர்கள் உலாவரும் மலையின் தாழ்வரை எங்கும் மான்கள் நிரம்பியிருக்கின்றன. (11)

சரத்காலத்தில் ஆகாயத்தில் மிதக்கும் மேகக் கூட்டங்கள் காற்றினால் தாக்கப்பட்டுச் சிதறி ஓடுவதைப் போல, இந்த மான்கூட்டங்கள் (நமது சேனையின் பேரொலியால் பயந்து) மிக வேகமாக ஓடுகின்றன. (12)

இந்தக் காட்டிலுள்ள ஆதிவாசிகள் மேகவண்ணக் கேடயங்களோடு விளங்கும் தென்னாட்டவர்போல தலைகளில் மணம் மிக்க மலர்களைக் கொண்டு அழகு செய்து கொள்கிறார்கள். (13)

நிஷ்கூஜமிவ பூ4த்வேத3ம் வநம் கே4ரப்ரத3ர்ஶநம் ।
அயோத்4யேவ ஜநாகீர்ணா ஸம்ப்ரதி ப்ரதிபா4தி மே ॥ (14)

கு3ரைரூதீ3ரிதோ ரேணுர்தி3வம் ப்ரச்சா2த்3ய திஷ்ட2தி ।
தம் வஹத்யநில: ஶீக்4ரம் குர்வந்நிவ மம ப்ரியம் ॥ (15)

ஸ்யந்த3நாம்ஸ்துரகே3ாபேதாந் ஸுதமுக்2யைரதி4ஷ்டி2தாந் ।
ஏதாந் ஸம்பதத: ஶீக்4ரம் பஶ்ய ஶத்ருக்4ந காநநே ॥ (16)

ஏதாந் வித்ராஸிதாந் பஶ்ய ப3ர்ஹிண: ப்ரியத3ர்ஶநாந் ।
ஏவமாபதத: ஶுலமதி4வாஸம் பதத்ரிணாம் ॥ (17)

அதிமாத்ரமயம் தே3ஶோ மநோக்ஞ: ப்ரதிபா4தி மே ।
தாபஸாநாம் நிவாஸோ(ऽயம் வ்யக்தம் ஸ்வர்க3பதே2ா யதா2 ॥ (18)

ம்ருக3ா ம்ருகீ3பி4: ஸஹிதா ப3ஹவ: ப்ருஷதா வநே ।
மநோக்ஞரூபா லக்ஷ்யந்தே குஸுமைரிவ சித்ரிதா: ॥ (19)

ஸாது4 ஸைந்யா: ப்ரதிஷ்ட2ந்தாம் விசிந்வந்து ச காநநம் ।
யதா2 தெள புருஷவ்யாக்4ரௌ த்3ருஶ்யேதே ராமலக்ஷ்மணௌ ॥ (20)

ப4ரதஸ்ய வச: ஶ்ருத்வா புருஷா: ஶஸ்த்ரபாணய: ।
விவிஶுஸ் தத்3வநம் ஶீ4ரா தூ4மாக்3ரம் த3த்3ருஶுஸ்தத: ॥ (21)

தே ஸமாலோக்ய தூ4மாக்3ர மூசுர்ப4ரதமாக3தா: ।
நாமநுஷ்யே ப4வத்யக்3நிர் வ்யக்தமத்ரைவ ராக4வெள ॥ (22)

அத2 நாத்ர நரவ்யாக்4ரௌ ராஜபுத்ரௌ பரந்தபௌ ।
அந்யே ராமோபமா: ஸந்தி வ்யக்தமத்ர தபஸ்விந: ॥ (23)

தச்ச்2ருத்வா ப4ரதஸ்தேஷாம் வசநம் ஸாது4ஸம்மதம் ।
ஸைந்யாநுவாச ஸர்வாந்ஸ் தாநமித்ரப3லமர்த3ந: ॥ (24)

யத்தா ப4வந்தஸ்திஷ்ட2ந்து நேதோ க3ந்தவ்யமக்3ரத: ।
அஹமேவ க3மிஷ்யாமி ஸுமந்த்ரோ த்4ருதிரேவ ச ॥ (25)

ஏவமுக்தாஸ்தத: ஸைந்யாஸ் தத்ர தஸ்து2: ஸமந்தத: ।
ப4ரதோ யத்ர தூ4மாக்3ரம் தத்ர த்3ருஷ்டிம் ஸமாத3தே4 ॥ (26)

வ்யவஸ்தி2தா யா ப4ரதேந ஸா சமூ:
நிரீக்ஷமாணாபி ச தூ4மமக்3ரத: ।
ப3பூ4வ ஹ்ருஷ்டா நசிரேண ஜாநகீ
ப்ரியஸ்ய ராமஸ்ய ஸமாக3மம் ததா3 ॥ (27)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 த்ரிநவதிதம: ஸர்க3: ॥

மனித அரவமே இல்லாததால் மிகவும் அச்சம் விளைவிப்பதாக விளங்கிய இந்தக் காடு, இப்போது (நம்முடைய சேனை, மக்கள் நிரம்பியதாய்) குடிமக்கள் நிறைந்த அயோத்தி நகர் போலவே எனக்குத் தோன்றுகிறது. (14)

(குதிரைகளின்) குளம்புகளால் எழுப்பப்பட்ட மண்தூசி ஆகாயத்தை அளாவி நிற்கிறது. (தூசி மூட்டத்தால் எனக்குக் கஷ்டம் ஏற்படும் என்பதை உணர்ந்து) எனக்கு நன்மையைச் செய்ய விரும்பும் காற்றானது தூசிக்கூட்டத்தை விரைவாக அப்பால் கொண்டு செல்கிறது. (15)

சத்ருக்னா! பார்! (நன்றாக அமைக்கப்பட்ட சாலைகளிலேயே சென்று பழக்கப்பட்ட) குதிரைகள் பூட்டிய தேர்கள், வல்லுநர்களான தேரோட்டிகளால் இந்தக் காட்டுப்பாதையிலும் வேகமாகச் செல்கின்றன. (16)

காட்சிக்கினிய மயில்கள் (நமது படையைக் கண்டு) பயந்து பறவைகளின் இருப்பிடமான மலையை நோக்கிப் பறந்து சென்று புகுந்து கொள்கின்றன. (17)

இந்தப் பிரதேசம் மிகவும் மனத்தைப் பரவசப்படுத்துவதாக எனக்குத் தோன்றுகிறது. தவம் செய்பவர்கள் வசிக்கும் இந்த இடம் தேவருலகத்திற்கு அழைத்துச் செல்லும் பாதை என்பது உறுதி. (இந்தப் பிரதேசம் அவ்வளவு புனிதமான ஸ்தலம்.) (18)

காட்டில் மலர்களால் பலவகையாக அலங்கரிக்கப்பட்டு மனம் கவரும் தோற்றமுடைய பெண்மான்களோடு கூடிய புள்ளிமான்கள் ஏராளமாகக் காணப்படுகின்றன. (19)

சரி, காட்டினுள் வீரர்கள் முன்னேறிச் செல்லட்டும். புருஷோத்தமர்களான இராம–லட்சுமணர்கள் கண்ணில் படுகிறார்களா? என்று தேடிப் பார்க்கட்டும்." (20)

பரதனுடைய சொற்களைக் கேட்டு, ஆயுதம் தாங்கிய சில வீரர்கள் (அடர்த்தியான) காட்டிற்குள் புகுந்தார்கள். அப்போது, ஓர் இடத்தில் புகை வருவதைக் கண்டார்கள். (21)

மேலெழும்பி வரும் புகையைக் கண்ட அவர்கள் பரதனிடம் வந்து கூறினார்கள்— "மனிதர்கள் இல்லாத இடத்தில் நெருப்பு இருக்கிறது. (நெருப்பு இல்லாமல் புகை தோன்றாது.) அதனால், இந்தப் பகுதியில்தான் இராம–லட்சுமணர்கள் இருக்க வேண்டும். (22)

எதிரிகளை வாட்டும் புருஷோத்தமர்களான மாமன்னரின் திருக்குமாரர்கள், ஒருக்கால் இங்கே இல்லாமற்போனாலும், இராமபிரானுக்கு நிகரான வேறு தபஸ்விகள் நிச்சயமாக இருப்பார்கள்." (23)

பகைவர்களின் பலத்தை அடக்கும் பரதன், தகுந்த காரணங்களோடு கூடிய அவர்களுடைய சொற்களைக் கேட்டு, பின்னர், தன் படைவீரர்களைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னான்— (24)

"நீங்கள் இதற்கு மேல் செல்ல வேண்டாம்; இங்கேயே எச்சரிக்கையுடன் இருங்கள். நானே (தொடர்ந்து புகை வரும் இடம் நோக்கிச்) செல்கிறேன்; என்னுடன் சுமந்திரரும் த்ருதியும் வருவார்கள்." (25)

இவ்வாறு கூறப்பட்ட படைவீரர்கள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டு (தம் விருப்பம்போல்) தங்கிவிட்டார்கள். புகையின் மேல்நுனி தெரியும் இடத்திலேயே பரதன், தன் பார்வையைச் செலுத்தினான். (26)

எந்தச் சேனையானது பரதனால் கட்டளையிடப்பட்டு அதே இடத்தில் நின்றுவிட்டதோ, அதே சேனை கண்ணுக்கு எட்டும் தூரத்தில் புகையைக் கண்டு, பேரன்புக்குரிய இராமப்பிரபுவின் சந்திப்பு விரைவில் நிகழப்போகிறது என்றுணர்ந்து மனமகிழ்ச்சியுடன் இருந்தது. (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

சதுர்நவதிதம: ஸர்க3:

சித்ரகூடவர்ணநா

தீ3ர்க4காலோஷிதஸ்தஸ்மிந் கி3ரௌ கி3ரிவநப்ரிய: ।
வைதே3ஹ்யா: ப்ரியமாகாங்க்ஷந் ஸ்வம் ச சித்தம் விலோப4யந் ॥ (1)

அத2 தா3ஶரதி2ஶ்சித்ரம் சித்ரகூடமதா3ர்ஶயத் ।
பா4ர்யாமமரஸங்காஶ: ஶசீமிவ புரந்த3ர: ॥ (2)

ந ராஜ்யாத்3ப்4ரம்ஶநம் பத்3ரே ந ஸுஹ்ருத்3பி4ர்விநாப4வ: ।
மநோ மே பா3த4தே த்3ருஷ்ட்வா ரமணீயமிமம் கி3ரிம் ॥ (3)

பஶ்யேமமசலம் பத்3ரே நாநாத்3விஜக3ணாயுதம் ।
ஶிக2ரை: க2மிவோத்3வித்3தை4ர் தா4துமத்3பி4ர்விபூ4ஷிதம் ॥ (4)

கேசித்3ரஜதஸங்காஶா: கேசித்க்ஷதஜ ஸந்நிபா4: ।
பீதமாஞ்ஜிஷ்ட2வர்ணாஶ்ச கேசிந்மணிவரப்ரபா4: ॥ (5)

புஷ்பார்ககேதகாபா4ஶ்ச கேசிஜ் ஜ்யோதீரஸப்ரபா4: ।
விராஜந்தேঽசலேந்த்3ரஸ்ய தே3ஶா தா4துவிபூ4ஷிதா: ॥ (6)

நாநாம்ருக3க3ணைர் த்3வீபிதரக்ஷ்வ்ருக்ஷக3ணைர்வ்ருத: ।
அது3ஷ்டைர்பா4த்யயம் ஶைலோ பா3ஹ்யபக்ஷிஸமாகுல: ॥ (7)

ஆம்ரஜம்பூ3வஸநைர்லோத்4ரை: ப்ரியாலை: பநஸைர்த4வை: ।
அங்கோலைர்ப4வ்யதிநிஶைர்பி3ல்வதிந்து3கவேணுபி4: ॥ (8)

காஶ்மர்யரிஷ்டவரணைர் மதூ4கைஸ்திலகைஸ்ததா2 ।
பா3தா3ர்யாமலகைர்நீபைர் வேத்ரத4ந்வநபீ4ஜகை: ॥ (9)

புஷ்பவத்3பி4: பா2லோபேதைஶ்சா2யாவத்3பி4ர்மநோரமை: ।
ஏவமாதி3பி4ராகீர்ண: ஶ்ரியம் புஷ்யத்யயம் கி3ரி: ॥ (10)

ஶைலப்ரஸ்தே2ஷு ரம்யேஷு பஶ்யேமாந் ரோமஹர்ஷணாந் ।
கிந்நராந் த்3வந்த்3வஶோ பத்3ரே ரமமாணாந் மநஸ்விந: ॥ (11)

ஶாக2ாவஸக்தாந் க2ட்3க3ாம்ஶ்ச ப்ரவராண்யம்பா3ராணி ச ।
பஶ்ய வித்3யாத4ரஸ்த்ரீணாம் க்ரீடோ3த்3தே3ஶாந் மநோரமாந் ॥ (12)

ஜலப்ரபாதைருத்3பே4தை3ர் நிஷ்யந்தை3ஶ்ச க்வசித்க்வசித் ।
ஸ்ரவத்3பி4ர்பா4த்யயம் ஶைல: ஸ்ரவந்மத3 இவ த்3விப: ॥ (13)

கு3ஹாஸமீரணோ கந்த4ாந் நாநாபுஷ்பப4வாந் வஹந் ।
க்4ராணதர்பணமப்4யேத்ய கம் நரம் ந ப்ரஹர்ஷயேத் ॥ (14)

ஸர்க்கம் : தொண்ணூற்று நான்கு

சித்திரகூடத்தின் அழகு

மலை–காடுகளில் மனம் திருப்தியடையும் இயல்புடையவரும், தேவர்கள் போல் ஒளிவீசுபவருமான தசரத குமாரர், அந்த மலையில் பல நாட்கள் வசித்த பின்னர், சீதாப்பிராட்டியை சந்தோஷப்படுத்தவும், தன் மனத்திற்கு ஆனந்தமூட்டவும் விருப்பம்கொண்டு, இந்திராணியை இந்திரன் மகிழ்வுறச் செய்வதுபோல, தன் மனைவிக்கு சித்திரகூட மலையின் அழகுக் காட்சிகளை விளக்கிக் கூறினார்— (1,2)

"நற்பண்பினாய்! மனம் கவரும் அற்புத அழகு வாய்ந்த இந்த மலையைக் காணும்போது, நாட்டிலிருந்து வெளியேறி வந்தது, நண்பர்கள் உடன் இல்லாதது ஆகியவை என் மனத்தில் எந்தப் பாதிப்பையும் உண்டாக்கவில்லை. (துயரத்தைத் தரவில்லை.) (3)

நங்காய்! பலவகையான பறவைக் கூட்டங்கள் நிறைந்து விளங்கும் இந்த மலையை நன்றாகப் பார். பலவகையான தாதுப் பொருள்கள் நிரம்பிய மலைச் சிகரங்கள் ஆகாயத்தைப் பிளந்து கொண்டு நிற்கும் பேரழகைப் பார். (4)

பலவகைப்பட்ட தாதுக்களால் அலங்கரிக்கப்பட்ட, உன்னதமான இந்த மலையின் எல்லாப் பக்கமும் அழகுடன் மிளிர்கிறது. சில இடங்களில் வெள்ளியைப் போன்ற பிரகாசம்; சில இடங்களில் இரத்தச் சிவப்பு; சில இடங்களில் மஞ்சள்–சிவப்பின் கலவை வண்ணம்; சில இடங்களில் இந்திரநீல மணியின் ஒளி; புஷ்பராகம், படிகம், தாழம்பூ போன்று சில இடங்கள்; தாரகையின் பளிச்சென்ற ஒளியுடன் பாதரசம் போன்று வழிந்தோடும் தாதுக்களைக் கொண்ட சில பகுதிகள்! (5,6)

இந்த மலையில் எண்ணிறந்த பறவைக் கூட்டங்கள் இருக்கின்றன; பலவகையான விலங்குகளும், புலி–சிறுத்தை–கரடிக் கூட்டங்களும் இருக்கின்றன; ஆனால், தத்தம் இயல்பான கொடூர குணத்தைத் துறந்து, பிறரைத் துன்பப்படுத்தாமலிருப்பதன் மூலம் மலையின் பெருமையை அதிகரிக்கின்றன. (7)

இந்த மலை, மலர்–பழம்–நிழல் தரும் மா, நாவல், வேங்கை, வெள்ளலொத்தி, முரளை, பலா, தவம், அழிஞ்சல், பவ்யம், தினிசம், பில்வம், திந்துகம், மூங்கில், கொம்மட்டி, வேம்பு, மாவிலங்கை, இலுப்பை, மஞ்சாடி, இலந்தை, நெல்லி, கடம்பம், பிரம்பு, மருதை, மாதுளை – இவை போன்ற அநேக மரங்கள் நிறைந்ததாக அழகைக் கூட்டுகிறது. (8–10)

சீலத்திருவினளே! மலையின் தாழ்வரைகளில் தன்னால் நேசிக்கப்படும் ஆண்–பெண்கள், இருவர் இருவராக காமக் கேளிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இந்தக் கின்னரர்களைப் பார். (11)

வித்யாதரர்களின் கத்திகள் மரக்கிளைகளில் தொங்கவிடப்பட்டிருக்கின்றன; வித்யாதரப் பெண்கள் விளையாடுமிடங்களில் அவர்களின் சிறந்த ஆடைகள் காணப்படுவதையும் பார். (12)

இந்த மலை, ஆங்காங்கே பெருகி ஓடிவரும் அருவிகளாலும், பூமியிலிருந்து பீறிட்டு எழும்பும் ஊற்றுக்களாலும் மதநீரைப் பெருக்கும் மாபெரும் யானைபோல் தோற்றமளிக்கிறது. (13)

குகைகளிலிருந்து வெளியே வரும் காற்று பலவகையான மலர்களின் நறுமணத்தைச் சுமந்து வந்து நுகர்ப்புலனைத் திருப்தி செய்விப்பதால் எந்த மனிதனைத்தான் மகிழ்விக்காது? (14)

யதீ$_3$ஹ ஶரதே$_3$ாऽநேகாஸ் த்வயா ஸார்த$_4$மநிந்தி$_3$தே ।
லக்ஷ்மணேந ச வத்ஸ்யாமி ந மாம் ஶோக: ப்ரத$_4$க்ஷ்யதி ॥ (15)

ப$_3$ஹுபுஷ்பப$_2$லே ரம்யே நாநாத்$_3$விஜக$_3$ணாயுதே ।
விசித்ரஶிக$_2$ரே ஹ்யஸ்மிந் ரதவாநஸ்மி ப$_4$ாமிநி ॥ (16)

அநேந வநவாஸேந மயா ப்ராப்தம் ப$_2$லத்$_3$வயம் ।
பிதுஶ்சாந்ருணதா த$_4$ர்மே ப$_4$ரதஸ்ய ப்ரியம் தத$_2$ா ॥ (17)

வைதே$_3$ஹி ரமஸே கச்சிச் சித்ரகூடே மயா ஸஹ ।
பஶ்யந்தீ விவித$_4$ாந் ப$_4$ாவாந் மநோவாக்காய ஸம்யதாந் ॥ (18)

இத$_3$மேவாம்ருதம் ப்ராஹு ராக்ஞி ராஜர்ஷய: பரே ।
வநவாஸம் ப$_4$வார்த$_2$ாய ப்ரேத்ய மே ப்ரபிதாமஹா: ॥ (19)

ஶிலா: ஶைலஸ்ய ஶோப$_4$ந்தே விஶாலா: ஶதஶோऽபி$_4$த: ।
ப$_3$ஹுலா ப$_3$ஹுலைர் வர்ணைர் நீலபீதஸிதாருணை: ॥ (20)

நிஶி ப$_4$ாந்த்யசலேந்த்$_3$ரஸ்ய ஹுதாஶநஶிக$_2$ா இவ ।
ஓஷத்$_4$ய: ஸ்வப்ரப$_4$ாலக்ஷ்யா ப்$_4$ராஜமாநா: ஸஹஸ்ரஶ: ॥ (21)

கேசித்க்ஷயநிப$_4$ா: தே$_3$ஶா: கேசிது$_3$த்$_3$யாநஸந்நிப$_4$ா: ।
கேசிதே$_3$கஶிலா ப$_4$ாந்தி பர்வதஸ்யாஸ்ய ப$_4$ாமிநி ॥ (22)

பி$_4$த்த்வேவ வஸுத$_4$ாம் ப$_4$ாதி சித்ரகூட: ஸமுத்தி$_2$த: ।
சித்ரகூடஸ்ய கூடோऽயம் த்$_3$ருஶ்யதே ஸர்வத: ஶுப$_4$: ॥ (23)

குஷ்ட$_2$புந்நாக$_3$ஸ்த$_2$க$_3$ரபூ$_4$ர்ஜபத்ரோத்தரச்ச$_2$த$_3$ாந் ।
காமிநாம் ஸ்வாஸ்தராந் பஶ்ய குஶேஶயத$_3$ளாயுதாந் ॥ (24)

ம்ருதி$_3$தாஶ்சாபவித்$_3$த$_4$ாஶ்ச த்$_3$ருஶ்யந்தே கமலஸ்ரஜ: ।
காமிபி$_4$ர்வநிதே பஶ்ய ப$_2$லாநி விவித$_4$ாநி ச ॥ (25)

வஸ்வோகஸாராம் நளிநீமத்யேதீவோத்தராந் குரூந் ।
பர்வதஶ்சித்ரகூடோऽஸௌ ப$_3$ஹுமூலப$_2$லோத$_3$க: ॥ (26)

இமம் து காலம் வநிதே விஜஹ்ரிவாந்ஸ்–
த்வயா ச ஸீதே ஸஹ லக்ஷ்மணேந ச ।
ரதிம் ப்ரபத்ஸ்யே குலத$_4$ர்மவர்தி$_4$நீம்
ஸதாம் பதி$_2$ ஸ்வைர்நியமை: பரை: ஸ்தி$_2$த: ॥ (27)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ சதுர்நவதிதம: ஸர்க$_3$: ॥

மாசற்றவளே! இந்த இடத்தில், பல ஆண்டுகள் உன்னோடும் லட்சுமணனோடும் வாழ்ந்தாலும்கூட, (நாட்டிலிருந்து வெளியேறிய) சோகம் என்னை வருத்தாது. (15)

அழகியவளே! பலவகையான மலர்களும் பழங்களும், மற்றும் விதவிதமான பறவைக் கூட்டங்களும் விளங்கும் அற்புதமான சிகரங்களையுடைய, பேரழகு வாய்ந்த இந்தப் பிரதேசத்தில் நான் மனமுவந்து ஈடுபட்டிருக்கிறேன். (16)

இந்த வனவாசத்தால் என்னால் இரண்டு பயன்கள் அடையப்பட்டுள்ளன: ஒன்று, அறநெறிப்படி தந்தையின் வாக்கைக் காப்பாற்றியதால், அவர் கடன் தீர்ந்துபோனது; இரண்டு, பரதனுக்கு உகந்ததைச் செய்தது. (17)

வைதேகி! சித்திரகூடத்தில் என்னோடுகூட மனம்–வாக்கு–சரீரங்களைக் களிப்புறச் செய்யும் பலவகையான காட்சித் தோற்றங்களைப் பார்த்துக் கொண்டு மகிழ்கிறாய் அல்லவா? (18)

தேவி! என்னுடைய முன்னோர்களும், மற்றுமுள்ள ராஜரிஷிகளும் இவ்விதமான வனவாசம், உடலை உருத்த பிறகு மிக உயர்ந்த நிலையை அடைவிக்கும் சாதனம் எனக் கூறியிருக்கிறார்கள். (19)

இந்த மலையின் நான்கு புறங்களிலுமுள்ள நூற்றுக்கணக்கான பெரும் பாறைகள், கருமை, மஞ்சள், வெண்மை, செம்மை நிறங்கள் கொண்டதாக ஒளி வீசுகின்றன. (20)

உன்னதமான இந்த மலையின் உச்சியில் வளர்ந்துள்ள ஆயிரக்கணக்கான தாவரங்கள் தாமாக ஒளி வீசிக்கொண்டு நெருப்புச் சுவாலைகள் போல் இரவில் பிரகாசமாக விளங்குகின்றன. (21)

பேரழகியே! இந்த மலையில் சில இடங்கள் வீடுகளைப்போல் விளங்குகின்றன. (வசிப்பதற்கு ஏற்றவைகளாக இருக்கின்றன); சில இடங்கள் (மலர்ச் செடிகள் நிறைந்திருப்பதால்) பூஞ்சோலைகள் போல் அழகாக இருக்கின்றன; சில இடங்கள் (எவ்விதப் பயிர் வகைகளும் வளர முடியாத) ஒரே பாறையாக இருக்கின்றன. (22)

சித்திரகூட மலை பூமியைப் பிளந்து கொண்டு மேலெழுந்தது போல் விளங்குகிறது; சித்திரகூடத்தின் இந்தச் சிகரம் எல்லாப் பக்கங்களிலும் அழகாகக் காணப்படுகிறது. (23)

கீழாநெல்லி, புன்னை, ஸ்தகரம், பூர்ஜம் ஆகியவை பரப்பப்பட்டு, தாமரை இதழ்களால் மூடப்பட்ட தம்பதிகள் உல்லாசமாக இருப்பதற்கேற்ற (படுக்கை) விரிப்புகளைப் பார். (24)

மாதரசியே! தருமபத்தினியுடன் சுகம் அனுபவித்தவர்களால் கசக்கி எறியப்பட்ட தாமரை மாலைகளையும், பல்வகைப் பழங்களையும் பார். (25)

இந்தச் சித்திரகூட மலை, குபேரனுடைய தலைநகரையும், இந்திரனின் பட்டணத்தையும், வடக்கு குரு தேசங்களின் சிறப்புக்களையும் மிஞ்சி, அநேக வகையான கிழங்கு, பழம், நீர் முதலியவைகளுடன் (சுகமான வாழ்விற்கு ஏற்ற முறையில்) விளங்குகிறது. (26)

உயிரினும் மேலான சீதே! பெரியோர்கள் சென்ற வழியில், எனக்குரிய விதி–நியமங்களை ஒழுங்காகக் கடைப்பிடித்து, (சிற்றன்னையால்) நியமிக்கப்பட்டுள்ள (பதிநான்கு ஆண்டுக்) காலத்தை உன்னோடும் லட்சுமணனோடும் கழித்துவிட்டேனேயானால், பரம்பரையாக வந்த தருமத்தை அனுஷ்டித்த நற்பயனைப் பெறுவேன்." (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

பஞ்சநவதிதம: ஸர்க$_3$:

மந்த$_3$ாகிநீவர்ணநா

அத$_2$ ஶைலாத்$_3$விநிஷ்க்ரம்ய மைதி$_2$லீம் கோஸலேஶ்வர: ।
அத$_3$ர்ஶயச் சு$_2$ப$_4$ஜலாம் ரம்யாம் மந்த$_3$ாகிநீம் நதீ$_3$ம் ॥ (1)

அப்$_3$ரவீச்ச வராரோஹாம் சந்த்$_3$ரசாருநிப$_4$ாநநாம் ।
விதே$_3$ஹராஜஸ்ய ஸுதாம் ராமோ ராஜீவலோசந: ॥ (2)

விசித்ரபுலிநாம் ரம்யாம் ஹம்ஸஸாரஸஸேவிதாம் ।
கமலைருபஸம்பந்நாம் பஶ்ய மந்த$_3$ாகிநீம் நதீ$_3$ம் ॥ (3)

நாநாவிதை$_4$ஸ் தீரருஹைர் வ்ருதாம் புஷ்பப$_2$லத்$_3$ருமை: ।
ராஜந்தீம் ராஜராஜஸ்ய நளிநீமிவ ஸர்வத: ॥ (4)

ம்ருக$_3$யூத$_2$நிபீதாநி கலுஷாம்ப$_4$ாம்ஸி ஸாம்ப்ரதம் ।
தீர்த$_2$ாநி ரமணீயாநி ரதிம் ஸஞ்ஜநயந்தி மே ॥ (5)

ஜடாஜிநத$_4$ரா: காலே வல்கலோத்தரவாஸஸ: ।
ருஷயஸ்த்வவக$_3$ாஹந்தே நதீ$_3$ம் மந்த$_3$ாகிநீம் ப்ரியே ॥ (6)

ஆதி$_3$த்யமுபதிஷ்ட$_2$ந்தே நியமாதூ$_3$ர்த்$_4$வ ப$_3$ாஹவ: ।
ஏதே பரே விஶாலாக்ஷி முநய: ஸம்ஶிதவ்ரதா: ॥ (7)

மாருதோத்$_3$தூ$_4$தஶிக$_2$ரை: ப்ரந்ருத்த இவ பர்வத: ।
பாத$_3$பை: பத்ரபுஷ்பாணி ஸ்ருஜத்$_3$பி$_4$ரபி$_4$தோ நதீ$_3$ம் ॥ (8)

க்வசிந்மணிநிகாஶோத$_3$ாம் க்வசித்புலிநஶாலிநீம் ।
க்வசித்ஸித்$_3$த$_4$ஜநாகீர்ணாம் பஶ்ய மந்த$_3$ாகிநீம் நதீ$_3$ம் ॥ (9)

நிர்தூ$_4$தாந் வாயுநா பஶ்ய விததாந் புஷ்பஸஞ்சயாந் ।
போப்லூயமாநாநபராந் பஶ்ய த்வம் ஜலமத்$_4$யக$_3$ாந் ॥ (10)

பஶ்யைதாந் வல்கு$_3$வசஸோ ரத$_2$ாங்க$_3$ாஹ்வயநா த்$_3$விஜா: ।
அதி$_4$ரோஹந்தி கல்யாணி நிஷ்கூஜந்த:ஶுப$_4$ா கி$_3$ர: ॥ (11)

த$_3$ர்ஶநம் சித்ரகூடஸ்ய மந்த$_3$ாகிந்யாஶ்ச ஶோப$_4$நே ।
அதி$_4$கம் புரவாஸாச்ச மந்யே தவ ச த$_3$ர்ஶநாத் ॥ (12)

விதூ$_4$தகலுஷை: ஸித்$_3$தை$_4$ஸ் தபோத$_3$ம ஶமாந்விதை: ।
நித்யவிக்ஷோபி$_4$தஜலாம் விக$_3$ாஹஸ்வ மயா ஸஹ ॥ (13)

ஸகீ$_2$வச்ச விக$_3$ாஹஸ்வ ஸீதே மந்த$_3$ாகிநீம் நதீ$_3$ம் ।
கமலாந்யவமஜ்ஜந்தீ புஷ்கராணி ச ப$_4$ாமிநி ॥ (14)

ஸர்க்கம் : தொண்ணூற்றைந்து

மந்தாகினி அழகு வர்ணனை

பின்னர், இராமன் அந்த மலையிலிருந்து புறப்பட்டு, (சிறிது தூரம் சென்று) தூய நீரையுடைய மந்தாகினி நதியை மைதிலிக்குச் சுட்டிக்காட்டினார். (1)

தாமரைக் கண்ணரான இராமன், விதேக மன்னரின் புதல்வியும், சந்திரன் போன்று அழகிய முகத்தை உடையவளும், பெண்ணரசியுமான அவளிடம் (இவ்வாறு) கூறினார்— (2)

"பல்வேறு வடிவமுடைய மணற்திட்டுகளை உடையதும், கண்ணுக்கு இனியதும், அன்னம்–ஸாரஸப் பறவைகள் உலாவுவதும், தாமரைகள் நிறைந்துள்ளதுமான மந்தாகினியைப் பார். (3)

கரையோரங்களில் பலவகையான மலர்–பழங்களையுடைய மரங்களால் சூழப்பெற்று, குபேரன் நீராடும் தாமரையோடை போல் கண்கவர்வதாக இருக்கிறது. (4)

தற்சமயம், மான் கூட்டங்கள் நீர் அருந்தியதால் கலங்கியிருந்தாலும், கண்ணுக்கினிய நீரோட்டம் எனக்கு மனத்திருப்தியை உண்டுபண்ணுகிறது. (5)

அன்புடையாளே! சடை, மான்தோல், மரவுரி, மேலாடை தரிக்கின்ற முனிவர்கள், உரிய வேளைகளில் மந்தாகினி ஆற்றில் தலைமூழ்கிக் குளிக்கிறார்கள். (6)

நெடுந்தடங்கண்ணினாய்! வேறு சில முனிவர்கள் கடுமையான விரதங்களை மேற்கொண்டவர்களாக இரு கைகளையும் உயரே தூக்கிக் கொண்டு சூரிய பகவானை உபாசிக்கிறார்கள். (7)

வேகமான காற்று வீச்சினால் நதியின் எல்லாப் பக்கங்களிலுமுள்ள மரங்களின் உச்சிக் கிளைகள் ஆடுகின்றன; அவற்றிலிருந்து இலைகளும் மலர்களும் உதிர்கின்றன. இதைக் காணும்போது மலையே நடனமாடுவதுபோல் தோன்றுகிறது. (8)

தேவி! பார்! சில இடங்களில் ஆற்று நீர் இந்திரநீலமணி போல் ஒளி வீசுகிறது; சில இடங்களில் மணற்திட்டுகள் காணப்படுகின்றன; சில இடங்களில் ஆத்ம தரிசனம் பெற்ற ஸித்த புருஷர்கள் தலைமூழ்கி நீராடிக் கொண்டிருக்கிறார்கள். (9)

காற்றடிப்பதால் உதிர்ந்துபோன மலர்கள் பல இடங்களில் குவியலாகக் கிடப்பதைப் பார்; பூக்குவியல்கள் ஆற்றின் நடுவில் மிதந்து செல்லும் காட்சியைப் பார். (10)

மனத்திற்கினியாளே! இனிமையாகக் குரலெழுப்பும் சக்ரவாகப் பறவைகள், மங்களமான ஓசையை எழுப்பிக் கொண்டு மேலே பறந்து செல்வதைப் பார். (11)

பேரழகுடையாளே! சித்திரகூட மலையையும் மந்தாகினி நதியையும் உன்னையும் (தினந்தோறும்) பார்த்துக் கொண்டிருப்பதால், நகரத்தில் வசிப்பதைக் காட்டிலும் இந்த வனவாசம் சுகமானது என எண்ணுகிறேன். (அயோத்தியில் அழகுமிக்க இந்த மலையையும் மந்தாகினியையும் காண முடியாதன்றோ!) (12)

தவம், புலனடக்கம், மனச்சாந்தி முதலியவைகளால் பாவம் நீங்கியவர்களான ஸித்தர்களால் நாள்தோறும் நீராடப்படுவதால், இந்த ஆற்றின் நீர் எப்போதும் புண்ணியம் தரவல்லதாக இருக்கிறது. வா, என்னுடன் நீராடுவாயாக. (13)

உத்தமியே! சீதே! ஒரு தோழியுடன் ஜலக்ரீடை செய்வதைப் போல (நாணத்தை விட்டு) மந்தாகினியில் சுதந்தரமாகக் குதித்து அளைந்து நீராடு. நீ மூழ்கி எழும்போது உண்டாகும் அலைகளால் செந்தாமரை–வெண்டாமரை மலர்கள் நீரில் மூழ்கட்டும். (14)

த்வம் பௌரஜநவத்3வ்யாலாநயோத்4யாமிவ பர்வதம் ।
மந்யஸ்வ வநிதே நித்யம் ஸரயூவதி3மாம் நதீ3ம் ॥ (15)

லக்ஷ்மணஶ்சாபி த4ர்மாத்மா மந்நிதே3ஶே வ்யவஸ்தி2த: ।
த்வம் சாநுகூலா வைதே3ஹி ப்ரீதிம் ஜநயதோ மம ॥ (16)

உபஸ்ப்ருஶம்ஸ் த்ரிஷவணம் மது4மூலப2லாஶந: ।
நயோத்4யாயை ந ராஜ்யாய ஸ்ப்ருஹயேத்3ய த்வயா ஸஹ ॥ (17)

இமாம் ஹி ரம்யாம் க3ஜயூத2லோலிதாம்
நிபீததோயாம் க3ஜஸிம்ஹவாநரை: ।
ஸுபுஷ்பிதை: புஷ்பத4ரைரலங்க்ருதாம்
ந ஸோऽஸ்தி ய: ஸ்யாத3கா3தக்லம: ஸுகீ2 ॥ (18)

இதீவ ராமோ ப3ஹுஸங்க3தம் வச:
ப்ரியாஸஹாய: ஸரிதம் ப்ரதி ப்3ருவந் ।
சசார ரம்யம் நயநாஞ்ஜநப்ரப4ம்
ஸ சித்ரகூடம் ரகு4வம்ஶவர்த4ந: ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 பஞ்சநவதிதம: ஸர்க3: ॥

ஷண்ணவதிதம: ஸர்க3:

லக்ஷ்மணக்ரோத4:

தாம் ததா2 த3ர்ஶயித்வா து மைதி2லீம் கி3ரிநிம்நகா3ம் ।
நிஷஸாத3 கி3ரிப்ரஸ்தே2 ஸீதாம் மாம்ஸேந ச2ந்த3யந் ॥ (1)

இத3ம் மேத்4யமித3ம் ஸ்வாது3 நிஷ்டப்தமித3மக்3நிநா ।
ஏவமாஸ்தே ஸ த4ர்மாத்மா ஸீதயா ஸஹ ராக4வ: ॥ (2)

ததா2 தத்3ராஸதஸ்தஸ்ய ப4ரதஸ்யோபயாயிந: ।
ஸைந்யரேணுஶ்ச ஶப்3த3ஶ்ச ப்ராது3ராஸ்தாம் நப4:ஸ்ப்ருஶௌ ॥ (3)

ஏதஸ்மிந்நந்தரே த்ரஸ்தா: ஶப்3தே3ந மஹதா தத: ।
அர்தி3தா யூத2பா மத்தா: ஸயூதா2 து3த்3ருவுர்தி3ஶ: ॥ (4)

ஸ தம் ஸைந்யஸமுத்3பூ4தம் ஶப்3த3ம் ஶுஶ்ராவ ராக4வ: ।
தாம்ஶ்ச விப்ரத்3ருதாந் ஸர்வாந் யூத2பாநந்வவைக்ஷத ॥ (5)

தாம்ஶ்ச வித்3ரவதோ த்3ருஷ்ட்வா தம் ச ஶ்ருத்வா மஹாஸ்வநம் ।
உவாச ராம: ஸௌமித்ரிம் லக்ஷ்மணம் தீ3ப்ததேஜஸம் ॥ (6)

நங்காய்! இங்குள்ள விலங்குகளை நகர மக்களைப் போலும், இந்த மலையை அயோத்தி என்றும், இந்த (மந்தாகினி) நதியை சரயூவாகவும் கருதுவாயாக. (15)

வைதேகி! அறத்தையே மூச்சாகக் கொண்ட லட்சுமணன், என் கட்டளைக்கு அடிபணிந்து நடக்கிறான்; நீயும் எனக்கு அனுகூலமாக இருக்கிறாய். அதனால், என் மனம் திருப்தியுடன் இருக்கிறது. (16)

உன்னோடு மூன்று வேளைகளிலும் (நித்திய கர்மாக்களுக்குப் பூர்வாங்கமாக) நதியில் நீராடி, தேன்–கிழங்கு–பழங்களைப் புசித்துக் கொண்டு இருக்கும் நான், அயோத்தியை (அங்கு திரும்பிச் செல்வதை) விரும்பவில்லை; அரசாட்சியையும் விரும்பவில்லை. (17)

இங்கே மான் கூட்டங்கள் சஞ்சரிக்கின்றன; யானை–சிங்கம்–குரங்கு முதலானவை இந்த நதியின் நீரை (விருப்பத்துடன்) குடிக்கின்றன; இரு கரைகளிலும் ஏராளமான மலர்களைக் கொண்ட மரங்கள் அழகாக விளங்குகின்றன. இப்படிப்பட்ட இந்த நதியில் நீராடி சுகத்தை அனுபவிக்காதவனோ, களைப்புத் தீராதவனோ இருக்கவே மாட்டான்." (18)

ரகுகுல நாயகரான இராமன், இவ்வாறெல்லாம் அந்த ஆற்றைப் பற்றிய பொருத்தமான செய்திகளை விரிவாக விளக்கியவாறே, (மரங்களின் அடர்த்தியால்) கண்மை போல் கருநீல ஒளியுடன் காட்சி தரும் சித்திரகூடத்தில் தன் மனத்திற்குகந்த மனைவியுடன் நடைபயின்றார். (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
தொண்ணூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றாறு

இலக்குவன் சீற்றம்

மிதிலை மன்னரின் புதல்வியான சீதைக்கு மலையைச் சுற்றி ஓடும் மந்தாகினியின் அழகைக் காட்டிய பின்னர், மலைச்சாரலில் உட்கார்ந்து உண்பதற்கான பொருள்களைக் கொடுத்து உற்சாகப்படுத்திக் கொண்டு அமர்ந்திருந்தார். (1)

தருமாத்மாவான இராமன், 'இந்தப் பண்டம் பரிசுத்தமானது; இது சுவையாக இருக்கிறது; இது அக்கினியில் நன்றாக காய்ச்சப்பட்டிருக்கிறது' என்றெல்லாம் சீதையுடன் பேசிக் கொண்டு உட்கார்ந்திருந்தார். (2)

இவ்வாறாக, அவர்கள் அளவளாவிக் கொண்டிருந்தபோது, பரதனுடன் வந்துகொண்டிருந்த மாபெரும் படைகளால் எழுப்பப்பட்ட பேரொலியும் அடர்த்தியான தூசியும் ஆகாயத்தை அளவளாவிக் கிளம்பின. (3)

இதனிடையில் மதங்கொண்ட யானைக் கூட்டங்களின் தலைமை யானைகள் தத்தம் கூட்டங்களோடு, (படைகளின்) பெரும் கூச்சலால் அச்சம் கொண்டு நாலா பக்கங்களிலும் சிதறி ஓடின. (4)

இராமன், அந்தப் படைவீரர்களின் நடமாட்டத்தால் எழுந்த பேரொலியைக் கேட்டார்; யானைக் கூட்டங்களெல்லாம் அச்சங்கொண்டு சிதறி தறிகெட்டு ஓடுவதையும் பார்த்தார். (5)

சிதறி ஓடிக்கொண்டிருக்கும் அவைகளைப் பார்த்தும், பயங்கரமான சப்தத்தைக் கேட்டும் (வியப்படைந்த) இராமன், கொழுந்து விட்டெரியும் அக்னி போன்ற பேராற்றல் உடையவனும், சுமித்திரையின் புதல்வனுமான இலக்குவனைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினார்— (6)

ஹந்த லக்ஷ்மண பஶ்யேஹ ஸுமித்ரா ஸுப்ரஜாஸ்த்வயா ।
பீ4மஸ்தநித க3ம்பீ4ரஸ்துமுல: ஶ்ரூயதே ஸ்வந: ॥ (7)

க3ஜயூத2ாநி வாரண்யே மஹிஷா வா மஹாவநே ।
வித்ராஸிதா ம்ருக3ா: ஸிம்ஹை: ஸஹஸா ப்ரத்3ருதா தி3ஶ: ॥ (8)

ராஜா வா ராஜபுத்ரோ வா ம்ருக3யாமடதே வநே ।
அந்யத்3வா ஶ்வாபத3ம் கிஞ்சித் ஸௌமித்ரே க்ஞாதுமர்ஹஸி ॥ (9)

ஸுது3ஶ்சரோ கி3ரிஶ்சாயம் பக்ஷிணாமபி லக்ஷ்மண ।
ஸர்வமேதத்3யதா2தத்த்வமசிராத்ஞாதுமர்ஹஸி ॥ (10)

ஸ லக்ஷ்மண: ஸந்த்வரித: ஸாலமாருஹ்ய புஷ்பிதம் ।
ப்ரேக்ஷமாணோ தி3ஶ: ஸர்வா: பூர்வாம் தி3ஶமவைக்ஷத ॥ (11)

உத3ங்முக2: ப்ரேக்ஷமாணோ த3த3ர்ஶ மஹதீம் சமூம் ।
க3ஜாஶ்வரத2ஸம்பா3தா4ம் யத்தைர்யுக்தாம் பதா3திபி4: ॥ (12)

தாமஶ்வக3ஜஸம்பூர்ணாம் ரத2த்4வஜவிபூ4ஷிதாம் ।
ஶஶம்ஸ ஸேநாம் ராமாய வசநம் சேத3மப்3ரவீத் ॥ (13)

அக்3நிம் ஸம்ஶமயத்வார்ய: ஸீதா ச பீ4ஜதாம் கு3ஹாம் ।
ஸஜ்யம் குருஷ்வ சாபம் ச ஶராம்ஶ்ச கவசம் ததா2 ॥ (14)

தம் ராம: புருஷவ்யாக்4ரோ லக்ஷ்மணம் ப்ரத்யுவாச ஹ ।
அங்கா3வேக்ஷஸ்வ ஸௌமித்ரே கஸ்யேமாம் மந்யஸே சமூம் ॥ (15)

ஏவமுக்தஸ்து ராமேண லக்ஷ்மணோ வாக்யமப்3ரவீத் ।
தி3தி4க்ஷந்நிவ தாம் ஸேநாம் ருஷித: பாவகோ யதா2 ॥ (16)

ஸம்பந்தம் ராஜ்யமிச்சா2ம்ஸ்து வ்யக்தம் ப்ராப்யாபி4ஷேசநம் ।
ஆவாம் ஹந்தும் ஸமப்4யேதி பா4ரத: கைகயீஸுத: ॥ (17)

ஏஷ வை ஸுமஹாந்ஶ்ரீமாந் விடபீ ஸம்ப்ரகாஶதே ।
விராஜத்யுத்3க3தஸ்கந்த4: கோவிதா3ரத்4வஜோ ரதே2 ॥ (18)

பா4ஜந்த்யேதே யதா2காமமஶ்வாநாருஹ்ய ஶீக்4ரகா3ந் ।
ஏதே ப்4ராஜந்தி ஸம்ஹ்ருஷ்டா க3ஜாநாருஹ்ய ஸாதி3ந: ॥ (19)

க்3ருஹீதத4நுஷௌ சாவாம் கி3ரிம் வீர ஶ்ரயாவஹே ।
அத2வேஹைவ திஷ்ட2ாவ: ஸந்நத்3த4வுத்3யதாயுதௌ4 ॥ (20)

"தம்பி லட்சுமணா! உன்னைப் போன்ற நல்ல மகனைப் பெற்ற சுமித்திரை போற்றற்குரியவள்! பூமியே அசைவது போன்ற கம்பீரமான பெரும் சப்தம் கேட்கப்படுகிறது. இல்லையா? 'ஏன், இப்படி?' என்று பார். (7)

புனிதமான இந்தப் பெருங்காட்டில் யானைக் கூட்டங்களும் எருமைகளும் மான்களும் சிங்கங்களால் திடீரென்று துரத்தப்பட்டு, மருட்சி அடைந்து எல்லாப் பக்கங்களிலும் ஓட்டமாக ஓடுகின்றன. (8)

ஓர் அரசனோ அல்லது அரசன் போன்ற நாட்டுத் தலைவனோ துஷ்ட மிருகங்களை வேட்டையாட வந்திருக்கிறானா? அல்லது, வேறு ஏதேனும் காரணம் உண்டா? என்று தெரிந்து கொண்டு வா. (9)

பறவைகள் பறந்து செல்வதற்குக்கூட இயலாத இந்தக் கானகத்தில் (குரூரப் பிராணிகள் வர முடியாது; சரியான பாதை இல்லாததால் மக்களும் வரமுடியாது – என்றிருக்கும்போது) விலங்குகள் ஓடுவதற்கும், பெருஞ்சத்தம் எழுவதற்கும் உண்மையான காரணம் என்ன? என்பதை உடனே நீ அறிந்து வருவாயாக." (10)

மலர்கள் பூத்திருந்த ஓர் ஆச்சாமரத்தில் வெகுவேகமாக ஏறிய இலக்குவன், எல்லாத் திசைகளிலும் பார்வையைச் செலுத்தி கிழக்குத் திசையில் கண்களைச் செலுத்தினான். (11)

பின்னர், வடக்குத் திக்கில் யானை–குதிரை–தேர்ப்படைகளுடன் வாகனங்களும், காலாட்படையும் சேர்ந்த பெரிய சேனையைக் கண்டான். (12)

குதிரை–யானைகள் நிறைந்ததும், கொடிகள் பறக்கும் தேர்களை உடையதுமான அந்தப் படையைப் பற்றி இராமனிடம் தெரிவித்து, மேலும் கூறினான்— (13)

"அண்ணா! நெருப்பை அணைத்து விடுங்கள். (நெருப்பு இருந்தால் புகை கிளம்பும்; புகையைக் கண்டதும் நேராக இங்கே வந்துவிடுவது எளிது.) சீதாதேவி குகை போன்ற மறைவான இடத்தில் பத்திரமாக இருக்கட்டும்; தாங்கள் வில்லில் நாண் ஏற்றி அம்புகளையும் (அம்பறாத் தூணிகளையும்), கவசத்தையும் அணிந்து கொள்ளுங்கள்." (14)

ஆண்புலி நிகர் வல்லமை படைத்த இராமன், (இலக்குவன் கூறியதைக் கேட்டுவிட்டு,) "லட்சுமணா! நீ நன்றாகப் பார்த்திருப்பாயே? இது யாருடைய சேனை என்று எண்ணுகிறாய்?" என்று கேட்டார். (15)

இவ்வாறு இராமன் கேட்டதும், இலக்குவன் ஜொலிக்கும் அக்னியைப் போல் மிகவும் கோபம் கொண்டவனாக, அந்தப் படையை எரித்துவிடுபவன் போல் பார்த்து (பின்வருமாறு) பதில் சொன்னான்— (16)

"அண்ணா! கைகேயியின் மைந்தனான பரதன், மன்னனாகப் பட்டாபிஷேகம் செய்யப்பட்டு, (நாம் இருவரும் பின்னாட்களில் அரசாட்சியில் பங்கு கேட்டால் என்ன செய்வது? என்ற நச்சுப் போன்ற முன்யோசனையுடன்) நம்மைக் கொல்வதற்காக வருகிறான் என்பதில் ஐயமில்லை. (17)

எதிரே மிகப்பெரிய ஒரு மரம் காணப்படுகிறது. அதன் அருகில் விஸ்தாரமான கிளைகளுடன் கூடிய கோவிதாரக் கொடி தேரில் பறக்கிறது. (18)

வேகமாகச் செல்லும் புரவிகளில் ஏறிக்கொண்டு, தம் விருப்பப்படி குதிரை வீரர்கள் வருகிறார்கள்; யானைப் படையினர் யானைகளில் ஏறிக்கொண்டு முகமலர்ச்சியுடன் விளங்குகிறார்கள். (19)

மாவீரரே! நாமிருவரும் வில்லேந்தியவர்களாக மலையின் மேல்பகுதிக்குச் செல்வோம். (அப்படிச் செய்தால் பரதனின் படைகளை எதிர்ப்பதற்குச் சௌகரியமாக இருக்கும்.) அல்லது, ஆயுதங்கள் தாங்கியவர்களாக இவ்விடத்திலேயே இருப்போம். (20)

அபி நௌ வஸுமாக$_{3}$ச்சேத்$_{2}$ கோவித$_{3}$ாரத்$_{4}$வஜ்ஞோ ரணே ।
அபி த்$_{3}$ரக்ஷ்யாமி ப$_{4}$ரதம் யத்க்ருதே வ்யஸநம் மஹத் ॥ (21)

த்வயா ராக$_{4}$வ ஸம்ப்ராப்தம் ஸீதயா ச மயா ததா$_{2}$ ।
யந்நிமித்தம் ப$_{4}$வாந் ராஜ்யாச்ச்யுதோ ராக$_{4}$வ ஸாஶ்வதாத் ॥ (22)

ஸம்ப்ராப்தோऽயமரிர்வீர ப$_{4}$ரதோ வத்$_{4}$ய ஏவ மே ।
ப$_{4}$ரதஸ்ய வதே$_{4}$ தே$_{3}$ாஷம் நாஹம் பஶ்யாமி ராக$_{4}$வ ॥ (23)

பூர்வாபகாரிணம் ஹத்வா ந ஹ்ருயத$_{4}$ர்மேண யுஜ்யதே ।
பூர்வாபகாரீ ப$_{4}$ரதஸ் த்யக்த த$_{4}$ர்மஶ்ச ராக$_{4}$வ ॥ (24)

ஏதஸ்மிந்நிஹதே க்ருத்ஸ்நாமநுஸாதி$_{4}$ வஸுந்த$_{4}$ராம் ।
அத்$_{3}$ய புத்ரம் ஹதம் ஸங்க்$_{2}$யே கைகேயீ ராஜ்யகாமுகா ॥ (25)

மயா பஶ்யேத் ஸுது$_{3}$:க$_{2}$ார்தா ஹஸ்திப$_{4}$க்$_{3}$நமிவ த்$_{3}$ருமம் ।
கைகேயீம் ச வதி$_{4}$ஷ்யாமி ஸாநுப$_{3}$ந்த$_{4}$ாம் ஸப$_{3}$ாந்த$_{4}$வாம் ॥
கலுஷேணாத்$_{3}$ய மஹதா மேதி$_{3}$நீ பரிமுச்யதாம் ॥ (26)

அத்$_{3}$யேமம் ஸம்யதம் க்ரோத$_{4}$மஸத்காரம் ச மாநத$_{3}$ ।
மோக்ஷ்யாமி ஶத்ருஸைந்யேஷு கக்ஷேஷ்விவ ஹுதாஶநம் ॥ (27)

அத்$_{3}$யைதச்சித்ரகூடஸ்ய காநநம் நிஶிதை: ஶரை: ।
பி$_{4}$ந்த$_{3}$ந் ஶத்ருஶரீராணி கரிஷ்யே ஶோணிதோக்ஷிதம் ॥ (28)

ஶரைர்நிர்பி$_{4}$ந்ந ஹ்ருத$_{3}$யாந் குஞ்சராம்ஸ் துரக$_{3}$ாம்ஸ்ததா$_{2}$ ।
ஸ்வாபத$_{3}$ா: பரிகர்ஷந்து நராம்ஶ்ச நிஹதாந் மயா ॥ (29)

ஶராணாம் த$_{4}$நுஷஶ்சாஹமந்ருணோऽஸ்மி மஹாம்ருதே$_{4}$ ।
ஸஸைந்யம் ப$_{4}$ரதம் ஹத்வா ப$_{4}$விஷ்யாமி ந ஸம்ஶய: ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே அயோத்$_{4}$யாகாண்டே$_{3}$ ஷண்ணவதிதம: ஸர்க$_{3}$: ॥

ஸப்தநவதிதம: ஸர்க$_{3}$:

ப$_{4}$ரதக்ருத$_{3}$ணப்ரஶம்ஸா

ஸுஸம்ரப்$_{3}$த$_{4}$ம் து ஸௌமித்ரம் லக்ஷ்மணம் க்ரோத$_{4}$மூர்ச்சி$_{2}$தம் ।
ராமஸ்து பரிஸாந்த்வ்யாத$_{2}$ வசநம் சேத$_{3}$மப்$_{3}$ரவீத் ॥ (1)

கிமத்ர த$_{4}$நுஷா கார்யமஸிநா வா ஸசர்மணா ।
மஹேஷ்வாஸே மஹாப்ராக்ஞே ப$_{4}$ரதே ஸ்வயமாக$_{3}$தே ॥ (2)

இராகவனே! தங்களுக்கும் சீதாப்பிராட்டிக்கும் எனக்கும், எந்த பரதன் காரணமாக மிகப்பெரிய துக்கம் ஏற்பட்டிருக்கிறதோ, எவன் காரணமாகத் தாங்கள் அரசுரிமையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்டீர்களோ, அப்படிப்பட்ட பரதன் மாமன்னரின் கோவிதாரக் கொடியுடன் வந்திருக்கிறானே? போரில் அவனை வென்று, அரச சின்னமான கோவிதாரக் கொடி நம் வசப்படுமா? (21,22)

வீரரே! இராகவனே! எதிரியான இந்த பரதன், இதோ நம் எதிரே வந்திருக்கிறான்; அவன் என்னால் கொல்லத்தக்கவன்; பரதனைக் கொல்வதில் நான் எந்த ஒரு குற்றத்தையும் காணவில்லை. (23)

இராமசந்திரா! (அவனைக் கொல்வது பாவமாகாதா? என்றால்) பரதன்தான் முதலில் அபகாரம் செய்தவன்; தருமத்தைக் கைவிட்டவன். எனவே, அவனைக் கொல்வது என்பது அதருமமாகாது. (24)

இவன் கொல்லப்பட்டதும் பூமண்டலம் முழுவதையும் தாங்கள் ஆள்வீர்கள். அரசாள்வதற்குப் பேராசைப்பட்ட கைகேயி, யானையால் முறிக்கப்பட்ட மரம் போல போரில் என்னால் கொல்லப்படும் புத்திரனைப் பார்த்து மிகவும் துக்கப்படுவாள். பரிவார ஜனங்கள், உறவினர்களோடு கைகேயியையும் கொல்லப் போகிறேன். (அவள் கொல்லப்பட்டபின்) இந்த உலகம் பெரும் பாவத்திலிருந்து விடுபட்டதாகும். (25,26)

பெருந்தகையீர்! (தங்கள் பேச்சைக் கேட்டு) அடக்கி வைத்திருந்த கோபத்தையும் அவமரியாதையையும் உலர்ந்த சருகுக்குவியலை நெருப்புப் பொசுக்கி விடுவதைப் போல, எதிரிப் படைகளின் மேல் செலுத்தப் போகிறேன். (27)

என்னுடைய கூரிய பாணங்களால் எதிரிகளின் உடல்களை வெட்டித் தள்ளி, சித்திரகூட மலையின் இந்தக் காட்டை இரத்தப் பெருக்குடையதாகச் செய்வேன். (28)

பாணங்களால் மார்பு பிளக்கப்பட்ட யானை-குதிரைகளையும், என்னால் கொல்லப்பட்ட மனிதர்களையும் (நரி முதலான) கொடூர விலங்குகள் இழுத்துச் செல்லட்டும். (29)

(நடைபெறப் போகும்) பெரும் போரில் படைவீரர்களோடு பரதனைக் கொன்று, என்னுடைய அம்புகளுக்கும் வில்லுக்கும் பட்டிருக்கும் கடனைத் தீர்த்துவிட்டவனாக ஆவேன் என்பதில் ஐயமில்லை. (வெகுகாலமாகப் போர் செய்யாததால், வில்-அம்புகளுக்குத் தான் கடன்பட்டிருப்பதாக லட்சுமணனின் வீரத்தனமான உரை.)'' (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றேழு

இராமன் பரதனைப் புகழ்தல்

அப்போது, மிகவும் கோபமும் பகைமையும் கொண்டு மனக்குழப்பத்திலிருந்த சுமித்திரையின் குமாரன் இலக்குவனைப் பார்த்து, மிகவும் சமாதானப்படுத்தும்படியான (பின்வரும்) சொற்களை இராமன் கூறினார்— (1)

''மாபெரும் வில்லாளியும் பேரறிவாளனுமான பரதனே நேரில் வருகிறானென்றால், வில்-கத்தி-கேடயத்தினால் ஆவது என்ன? (2)

பிது: ஸத்யம் ப்ரதிஸ்ருத்ய ஹத்வா ப4ரதமாக3தம் ।
கிம் கரிஷ்யாமி ராஜ்யேந ஸாபவாதே3ந லக்ஷ்மண ॥ (3)

யத்3த்3ரவ்யம் ப3ாந்த4வாநாம் வா மித்ராணாம் வா க்ஷயே ப4வேத் ।
நாஹம் தத்ப்ரதிக்3ருஹ்ணீயாம் ப4க்ஷாந் விஷக்ருதாநிவ ॥ (4)

த4ர்மமர்த2ம் ச காமம் ச ப்ருதி2வீம் சாபி லக்ஷ்மண ।
இச்சா2மி ப4வதாமர்தா2 ஏதத்ப்ரதிஸ்ருணோமி தே ॥ (5)

ப்4ராத்ரூணாம் ஸங்க்3ரஹார்த2ம் ச ஸுகா2ர்த2ம் சாபி லக்ஷ்மண ।
ராஜ்யமப்யஹமிச்சா2மி ஸத்யேநாயுத4மாலபே4 ॥ (6)

நேயம் மம மஹீ ஸௌம்ய து3ர்லப4ா ஸாக3ராம்ப3ரா ।
ந ஹீச்சே2யமத4ர்மேண ஶக்ரத்வமபி லக்ஷ்மண ॥ (7)

யத்3விநா ப4ரதம் த்வாம் ச ஶத்ருக்4நம் சாபி மாநத3 ।
ப4வேந்மம ஸுகா2ம் கிஞ்சித்3ப4ஸ்ம தத்குருதாம் ஶிகீ2 ॥ (8)

மந்யேঽஹமாக3தோঽயோத்4யாம் ப4ரதோ ப்4ராத்ருவத்ஸல: ।
மம ப்ராணாத்ப்ரியதர: குலத4ர்மமநுஸ்மரந் ॥ (9)

ஸ்ருத்வா ப்ரவ்ராஜிதம் மாம் ஹி ஜடாவல்கலத4ாரிணம் ।
ஜாநக்யா ஸஹிதம் வீர த்வயா ச புருஷர்ஷப4 ॥ (10)

ஸ்நேஹோநாக்ராந்தஹ்ருத3ய: ஶோகேநாகுலிதேந்த்3ரிய: ।
த்3ரஷ்டுமப்4யாக3தோ ஹ்யேஷ ப4ரதோ நாந்யதா2க3த: ॥ (11)

அம்ப3ாம் ச கைகயீம் ருஷ்ய பருஷம் சாப்ரியம் வத3ந் ।
ப்ரஸாத்3ய பிதரம் ஸ்ரீமாந் ராஜ்யம் மே தா3துமாக3த: ॥ (12)

ப்ராப்தகாலம் யதே3ஷோঽஸ்மாந் ப4ரதோ த்3ரஷ்டுமர்ஹதி ।
அஸ்மாஸு மநஸாப்யேஷ நாஹிதம் கிஞ்சித3ாசரேத் ॥ (13)

விப்ரியம் க்ருதபூர்வம் தே ப4ரதேந கத3ா நு கிம் ।
ஈத்3ருஶம் வா ப4யம் தேঽத்3ய ப4ரதம் யத்3விஶங்கஸே ॥ (14)

ந ஹி தே நிஷ்டு2ரம் வாச்யோ ப4ரதோ நாப்ரியம் வச: ।
அஹம் ஹ்யப்ரியமுக்த: ஸ்யாம் ப4ரதஸ்யாப்ரியே க்ருதே ॥ (15)

கத2ம் நு புத்ரா: பிதரம் ஹந்யு: கஸ்யாஞ்சித3ாபதி3 ।
ப்4ராதா வா ப்4ராதரம் ஹந்யாத் ஸௌமித்ரே ப்ராணமாத்மந: ॥ (16)

யதி3 ராஜ்யஸ்ய க்ஷேதோஸ்த்வமிமாம் வாசம் ப்ரப4ாஷஸே ।
வக்ஷ்யாமி ப4ரதம் த்3ருஷ்ட்வா ராஜ்யமஸ்மை ப்ரதீ3யதாம் ॥ (17)

லட்சுமணா! நான் தந்தைக்கு ஒரு சத்தியம் செய்து கொடுத்துவிட்டு (தனக்கு வனவாசம்; பரதனுக்கு அரசுரிமை), இங்கே வந்திருக்கும் பரதனைக் கொன்று, பிறர் பழிச்சொல்லுடன் கிடைக்கும் ராஜ்யத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வேன்? (தந்தைக்குக் கொடுத்த வாக்கை மீறிய பாவம் என்னை வந்தடையாதா? மக்கள் தூற்ற மாட்டார்களா?) (3)

உறவினர்கள், நண்பர்கள் அழிவினால் எந்தப் பொருள் கிடைக்குமோ, அதை விஷம் கலந்த உணவைப் போல நான் ஏற்கமாட்டேன். (4)

லட்சுமணா! தருமார்த்த காமங்களையும் பூமியையும், உங்கள் (தம்பிகள்) பொருட்டாகவே நான் விரும்புகிறேன். இதை உனக்கு சத்தியமாகக் கூறுகிறேன். (5)

நான் ராஜ்யத்தை விரும்புவதுகூட, சகோதரர்களின் ஒற்றுமைக்காகவும் சௌக்கியத்திற்காகவும்தான். என் ஆயுதங்களின் மீது ஆணையிட்டு இதைக் கூறுகிறேன். (6)

லட்சுமணா! நல்லியல்பினாய்! கடலை எல்லையாகக் கொண்ட இந்தப் பூமண்டலம் என்னால் அடைய முடியாததன்று. ஆனால், லட்சுமணா! அதருமத்தினால் (தவறான வழிகளை மேற்கொள்வதால்) இந்திரப்பதவியே கிடைப்பதானாலும், அதை நான் விரும்பமாட்டேன். (7)

நற்பண்பினாய்! பரதனும் நீயும் சத்ருக்னனும் இல்லாமல் (உங்களுக்கெல்லாம் கிடைக்காமல்) எனக்கு (மட்டும்) எள்ளளவு சுகம் கிடைப்பதாக இருந்தால், அதனை அக்னிதேவன் சுட்டு எரிக்கட்டும். (8)

பரதன், சகோதரர்களிடம் பாசம் உள்ளவன்; எனக்கு, என் உயிரைக் காட்டிலும் பிரியமானவன். சூரனே! அவன் அயோத்திக்குத் திரும்பி வந்ததும் உன்னுடனும் சீதையுடனும், நான் சடைமுடி–மரவுரி தரித்துக் கொண்டு நாடு கடத்தப்பட்டதைக் கேள்விப்பட்டு, (மூத்தகுமாரனே இளவரசுப் பட்டம் ஏற்கவேண்டும் என்ற) பரம்பரை வழக்கத்தை நினைவுகூர்ந்து, துயரத்தால் புலன்கள் கலங்க, அன்பு மேலீட்டினால் நெஞ்சம் நிரம்பி வழிய, நம்மைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறான் என்று கருதுகிறேன். மாவீரனே! வேறு எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவன் வந்திருக்க மாட்டான் (என்பது நிச்சயம்). (9–11)

திருவளர் செல்வனாகிய அவன், அன்னை கைகேயியிடம் மிகவும் கோபம் கொண்டு, கடுமையான வார்த்தைகளால் ஏசி, தந்தையாரைப் பிரார்த்தித்து, மனங்குளிரச் செய்து, அரசுரிமையை எனக்குக் கொடுப்பதற்காக வந்திருக்கிறான். (12)

பரதன் நம்மைப் பார்க்கவேண்டும் என்று சரியான காலத்தில்தான் விரும்பியிருக்கிறான். இவன் நமக்கு நல்லது அல்லாததை மனத்தாலும் சிறிதளவுகூடச் செய்யமாட்டான். (13)

முன்னர் எப்போதாவது, உனக்குத் துன்பம் விளைவிப்பதான ஒரு செயலை பரதன் செய்திருக்கிறானா? (செய்ததே இல்லை என்னும்போது) பரதன் விஷயத்தில் உனக்கு இப்படிப்பட்ட பயமும் சந்தேகமும் எப்படி வந்தது? (அவன் நம்மைக் கொல்வதற்காகவே வருகிறான் என்று ஏன் தீர்மானிக்கிறாய்?) (14)

பரதனைக் குறித்து இவ்வளவு கடுமையான, அன்பில்லாத சொற்களை நீ பேசலாகாது. பரதனைப் பற்றி நீ நிந்தனை செய்தால், அது, நான் நிந்திக்கப்பட்டதாகவே ஆகும். (15)

லட்சுமணா! ஏதேனும் ஒரு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும், புதல்வர்கள் தம் தந்தையைக் கொல்வார்களா? (கொல்லமாட்டார்கள் தானே? அதுபோல) தனக்கு உயிர் போன்ற சகோதரனை, அவனுடைய சகோதரன் எவ்வாறு கொல்வான்? (16)

உனக்கு அரசாட்சி வேண்டும் என்ற காரணத்தால் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்கிறாயேயானால், நான் பரதனைப் பார்த்து, 'ராஜ்யத்தை இவனுக்குக் கொடுத்துவிடு' என்று சொல்கிறேன். (17)

உச்யமாநோऽபி ப4ரதோ மயா லக்ஷ்மண தத்த்வத: ।
ராஜ்யமஸ்மை ப்ரயச்சே2தி ப3ாட4மித்யேவ வக்ஷ்யதி ॥ (18)

ததே2ாக்தோ த4ர்மஜ்ஞேந ப்4ராத்ரா தஸ்ய ஹிதே ரத: ।
லக்ஷ்மண: ப்ரவிவேஶேவ ஸ்வாநி க3ாத்ராணி லஜ்ஜயா ॥ (19)

தத்3வாக்யம் லக்ஷ்மண: ஶ்ருத்வா வ்ரீடி3த: ப்ரத்யுவாச ஹ ।
த்வாம் மந்யே த்3ரஷ்டுமாயாத: பிதா த3ஶரத2: ஸ்வயம் ॥ (20)

வ்ரீடி3தம் லக்ஷ்மணம் த்3ருஷ்ட்வா ராக4வ: ப்ரத்யுவாச ஹ ।
ஏஷ மந்யே மஹாப3ாஹுரிஹாஸ்மாந் த்3ரஷ்டுமாக3த: ॥ (21)

அத2வா நௌ த்4ருவம் மந்யே மந்யமாந: ஸுகே2ாசிதௌ ।
வநவாஸமநுத்4யாய க்3ருஹாய ப்ரதிநேஷ்யதி ॥ (22)

இமாம் வாப்யேஷ வைதே3ஹீமத்யந்தஸுக2ஸேவிநீம் ।
பிதா மே ராக4வ: ஶ்ரீமாந் வநாத்3ாத3ாய யாஸ்யதி ॥ (23)

ஏதௌ தௌ ஸம்ப்ரகாஶேதே கே3ாத்ரவந்தௌ மநோரமௌ ।
வாயுவேக3ஸமௌ வீர ஜவநௌ துரகே3ாத்தமௌ ॥ (24)

ஸ ஏஷ ஸுமஹாகாய: கம்பதே வாஹிநீமுகே2 ।
நாக3: ஶத்ருஞ்ஜயோ நாம வ்ருத்3த4ஸ்தாதஸ்ய தீ4மத: ॥ (25)

ந து பஶ்யாமி தச்ச2த்ரம் பாண்ட3ரம் லோகஸத்க்ருதம் ।
பிதுர்தி3வ்யம் மஹாப3ாஹோ ஸம்ஶயோ ப4வதீஹ மே ॥ (26)

வ்ருக்ஷாக்4ராத3வரோஹ த்வம் குரு லக்ஷ்மண மத்3வச: ।
இதீவ ராமோ த4ர்மாத்மா ஸௌமித்ரிம் தமுவாச ஹ ॥ (27)

அவதீர்ய து ஸாலாக்3ராத் தஸ்மாத்ஸ ஸமிதிஞ்ஜய: ।
லக்ஷ்மண: ப்ராஞ்ஜலிர்பூ4த்வா தஸ்தௌ2 ராமஸ்ய பார்ஶ்வத: ॥ (28)

ப4ரதேநாத2 ஸந்தி3ஷ்டா ஸம்மர்தே3ா ந ப4வேதி3தி ।
ஸமந்தாத்தஸ்ய ஶைலஸ்ய ஸேநா வாஸமகல்பயத் ॥ (29)

அத்4யர்த4மிக்ஷ்வாகுசமூர் யோஜநம் பர்வதஸ்ய ஸா ।
பார்ஶ்வே ந்யவிஶத3ாவ்ருத்ய க3ஜவாஜிரத2ாகுலா ॥ (30)

ஸா சித்ரகூடே ப4ரதேந ஸேநா த4ர்மம் புரஸ்க்ருத்ய விதூ4ய த3ர்பம் ।
ப்ரஸாத3நார்த2ம் ரகு4நந்த3நஸ்ய விராஜதே நீதிமதா ப்ரணீதா ॥ (31)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 ஸப்தநவதிதம: ஸர்க3: ॥

லட்சுமணா! 'அரசாட்சியை இவனிடம் ஒப்படைத்து விடு' என்று நான் சொல்லியதைக் கேட்டவுடனேயே, 'அவ்வாறே ஆகட்டும்' என்றுதான் பரதன் நிச்சயமாகச் சொல்வான்." (18)

அறவொழுக்கமுடைய சகோதரரால் இவ்வாறு கூறப்பட்டவனும், அவருடைய நலனில் அக்கறை உள்ளவனுமான இலக்குவன், வெட்கத்தால் உடல் குறுகிப் போனான். (19)

அந்தச் சொற்களைக் கேட்டு மனம் தவித்துப் போன இலக்குவன் (பேச்சை மாற்ற விரும்புபவன் போல்), "தந்தையார் தசரதர் அவர்களே தங்களைக் காண்பதற்காக வந்திருக்கிறார் என்று எண்ணுகிறேன்" என்று பதில் கூறினான். (20)

இலக்குவன் மிகவும் மனம் வெதும்பிப் போனதை உணர்ந்து கொண்ட இராகவன் கூறினார்— "பெருந்தோளரான அவரே நம்மைப் பார்க்க வந்திருக்கிறார் என்று எண்ணுகிறேன். (21)

அல்லது, சுக–சௌக்கியத்தோடு வளர்ந்த நாம் காட்டில் எவ்வளவு கஷ்டத்துடன் வாழவேண்டியிருக்கும் என்பதை எண்ணிப் பார்த்து, வீட்டிற்கு அழைத்துப் போகப் போகிறார் என்று உறுதியாக எண்ணுகிறேன். (22)

(அல்லது) மிகவும் சுகபோகங்களை அனுபவித்த இந்த சீதாதேவியை, அனைத்துப் பெருமைகளுக்கும் உரிய ரகுகுல திலகமான என்னுடைய திருத்தந்தையார் காட்டிலிருந்து அழைத்துக் கொண்டு போகப் போகிறார். (23)

வீரனே! (அங்கே பார்!) உயர்ந்த ஜாதியிற்தோன்றிய, கண்களுக்கினிய, வாயுவுக்கு நிகரான வேகத்தில் செல்லக்கூடிய உத்தமமான அந்தக் குதிரைகள் இரண்டும் கண்களில் படுகின்றன. (24)

மகாமேதாவியான தந்தையாருடைய, பேருடல் கொண்ட, முதுமையடைந்துவிட்ட சத்ருஞ்ஜயம் என்ற யானை படைகளுக்கு முன்பாக அசைந்தாடிக் கொண்டு வருகிறது. (25)

(ஆனால்) பெருந்தோளாய்! தெய்விகமானதும் உலகத்தோரால் வணங்கப்படுவதுமான, நம் தந்தையினுடைய வெண்கொற்றக்குடை காணப்படவில்லையே? இது ஏனோ எனக்குச் சந்தேகத்தை விளைவிக்கிறது. (26)

லட்சுமணா! மரத்தின் உச்சியிலிருந்து இறங்கு. நான் சொல்கிறபடி செய்" என்று, தருமாத்மாவான இராமன், சுமித்திரையின் குமாரனான இலக்குவனை நோக்கிச் சொன்னார். (27)

வெற்றி வீரனான இலக்குவன் ஆச்சாமரத்தின் உச்சியிலிருந்து இறங்கி வந்து, கைகளைக் கூப்பியவண்ணம் இராமன் அருகே வந்து நின்றான். (28)

'கூச்சல்–குழப்பம் ஏற்படக்கூடாது' என்று பரதனால் உத்திரவிடப்பட்ட அந்தப் பெரும் படை, அந்த மலையின் எல்லாப் பக்கங்களிலும் தங்குவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டது. (29)

யானை–குதிரை–தேர்ப்படை அடங்கிய இக்ஷ்வாகு சேனை, அந்த மலையிலிருந்து ஒன்றரை யோஜனை தூரம் வரை ஆக்கிரமித்துக் கொண்டு நின்றது. (30)

நீதிமானான பரதனால் ஆணையிடப்பட்ட அந்த சேனைக் கூட்டம், இராமப்பிரபுவின் திருப்தியை சம்பாதிப்பதற்காக, தம் செருக்கை ஒழித்து, அறநெறியை கைக்கொண்டு, சித்திரகூட மலைப் பிரதேசத்தில் களிப்புடன் தங்கியிருந்தது. (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
தொண்ணூற்றேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

அஷ்டநவதிதம: ஸர்க$_{3}$:

ராமாந்வேஷணாம்

நிவேஶ்ய ஸேநாம் து விபு$_{4}$: பத்$_{3}$ப்$_{4}$யாம் பாத$_{3}$வதாம் வர: ।
அபி$_{4}$க$_{3}$ந்தும் ஸ காகுத்ஸ்த$_{2}$மியேஷ குஶ$_{3}$ருவார்தகம் ॥ (1)

நிவிஷ்டமாத்ரே ஸைந்யே து யதே$_{2}$ாத்$_{3}$தே$_{3}$ஶம் விநீதவத் ।
ப$_{4}$ரதோ ப்$_{4}$ராதரம் வாக்யம் ஶத்ருக்$_{4}$நமித$_{3}$மப்$_{3}$ரவீத் ॥ (2)

க்ஷிப்ரம் வநமித$_{3}$ம் ஸௌம்ய நரஸங்கை$_{4}$: ஸமந்தத: ।
லுப்$_{3}$தை$_{4}$ஶ்ச ஸஹிதைரேபி$_{4}$ஸ்த்வமந்வேஷிதுமர்ஹஸி ॥ (3)

குஹோ ஞாதிஸஹஸ்ரேண ஶரசாபாஸித$_{4}$ாரிணா ।
ஸமந்வேஷது காகுத்ஸ்த$_{2}$ாவஸ்மிந் பரிவ்ருத: ஸ்வயம் ॥ (4)

அமாத்யை: ஸஹ பௌரைஶ்ச குஶ$_{3}$ருபி$_{4}$ஶ்ச த்$_{3}$விஜாதிபி$_{4}$: ।
வநம் ஸர்வம் சரிஷ்யாமி பத்$_{3}$ப்$_{4}$யாம் பரிவ்ருத: ஸ்வயம் ॥ (5)

யாவந்ந ராமம் த்$_{3}$ரக்ஷ்யாமி லக்ஷ்மணம் வா மஹாப$_{3}$லம் ।
வைதே$_{3}$ஹீம் வா மஹாப$_{4}$ாக$_{3}$ாம் ந மே ஶாந்திர்ப$_{4}$விஷ்யதி ॥ (6)

யாவந்ந சந்த்$_{3}$ரஸங்காஶம் த்$_{3}$ரக்ஷ்யாமி ஶுப$_{4}$மாநநம் ।
ப்$_{4}$ராது: பத்$_{3}$மபலாஶாக்ஷம் ந மே ஶாந்திர்ப$_{4}$விஷ்யதி ॥ (7)

யாவந்ந சரணௌ ப்$_{4}$ராது: பார்தி$_{2}$வ வ்யஞ்ஜநாந்விதௌ ।
ப்ரக்$_{3}$ரஹீஷ்யாமி ஶிரஸா ந மே ஶாந்திர்ப$_{4}$விஷ்யதி ॥ (8)

யாவந்ந ராஜ்யே ராஜ்யார்ஹ: பித்ருபைதாமஹே ஸ்தி$_{2}$த: ।
அபி$_{4}$ஷேகஜலக்லிந்நோ ந மே ஶாந்திர்ப$_{4}$விஷ்யதி ॥ (9)

ஸித்$_{3}$த$_{4}$ார்த$_{2}$: கலு ஸௌமித்ரிர் யஶ்சந்த்$_{3}$ரவிமலோபமம் ।
முக$_{2}$ம் பஶ்யதி ராமஸ்ய ராஜீவாக்ஷம் மஹாத்$_{3}$யுதி ॥ (10)

க்ருதக்ருத்யா மஹாப$_{4}$ாக$_{3}$ா வைதே$_{3}$ஹீ ஜநகாத்மஜா ।
ப$_{4}$ர்தாரம் ஸாக$_{3}$ாந்தாயா: ப்ருதி$_{2}$வ்யா யாநுக$_{3}$ச்ச$_{2}$தி ॥ (11)

ஸுப$_{4}$க$_{3}$ஶ்சித்ரகூடோऽஸௌ கி$_{3}$ரிராஜோபமோ கி$_{3}$ரி: ।
யஸ்மிந் வஸதி காகுத்ஸ்த$_{2}$: குபே$_{3}$ர இவ நந்த$_{3}$நே ॥ (12)

க்ருதகார்யமித$_{3}$ம் து$_{3}$ர்க$_{3}$ம் வநம் வ்யாளநிஷேவிதம் ।
யத$_{3}$த்$_{4}$யாஸ்தே மஹாதேஜா ராம: ஶஸ்த்ரப்$_{4}$ருதாம் வர: ॥ (13)

ஏவமுக்த்வா மஹாதேஜா ப$_{4}$ரத: புருஷர்ஷப$_{4}$: ।
பத்$_{3}$ப்$_{4}$யாமேவ மஹாப$_{3}$ாஹு: ப்ரவிவேஶ மஹத்$_{3}$வநம் ॥ (14)

ஸ தாநி த்$_{3}$ருமஜாலாநி ஜாதாநி கி$_{3}$ரிஸாநுஷு ।
புஷ்பிதாக்$_{3}$ராணி மத்$_{4}$யேந ஜக$_{3}$ாம வத$_{3}$தாம் வர: ॥ (15)

ஸர்க்கம் : தொண்ணூற்றெட்டு

இராமனைத் தேடுதல்

உறுதி படைத்தவனும் மனிதருள் சிறந்தவனுமான அவன், இவ்வாறு படைகளை ஒழுங்காக நிறுத்திவிட்டு, பெற்றோர்–முன்னோர்களிடம் பேரன்பு கொண்ட இராமனைத் தேடிக் கண்டுபிடிக்கக் காலால் நடந்து செல்லத் தீர்மானித்தான். (1)

கட்டளைக்குக் கீழ்ப்படிந்து சேனை அவ்விடத்தில் தங்கியவுடன், பரதன் சகோதரனான சத்ருக்னனைப் பார்த்து (பின்வருமாறு) கூறினான்— (2)

"தம்பி! நம்முடன் வந்திருக்கும் மனிதர்களோடும் வேடுவர்களோடும் இந்தக் காட்டின் எல்லாப் பகுதிகளிலும் (இராமனை), நீ உடனே தேடவேண்டும். (3)

ஆயிரக்கணக்கான உறவினர்களோடு வந்திருக்கும் குகன், அம்பு–வில்–கத்தி ஏந்தியவர்களாக இந்தக் காட்டில், இரு காகுத்தர்களையும் தானே முன் சென்று தேடுவானாக. (4)

அமைச்சர்கள், நகரமக்கள், ஆசார்யர்கள், அந்தணர்கள் முதலியோருடன் காடு முழுவதையும் நடந்து சென்று, நானும் தேடப் போகிறேன். (5)

இராமனையோ, லட்சுமணனையோ, பெரும் பாக்கியசாலியான சீதையையோ காணாத வரையில் என் மனம் அமைதி அடையாது. (6)

சந்திரன் போல் தண்ணொளி வீசும் பிரகாசமுடையவரும், தாமரையிதழ் போன்ற கண்களையுடைய அழகிய திருமுகத்தையுடையவருமான என் சகோதரரைக் காணாத வரையில், என் மனம் அமைதி அடையாது. (7)

அரச லட்சணங்களுள்ள தமையனாரின் திருவடிகளை, என் தலையால் தாங்காத வரையில் என் மனம் அமைதி அடையாது. (8)

ஆட்சி செலுத்தும் உரிமை பெற்ற அவர், பாட்டன்–மூப்பாட்டன் காலத்திற்கு முன்பிருந்தே பரம்பரையாக வந்துள்ள அரசபீடத்தில், பட்டாபிஷேகப் புனித நீரால் நனைக்கப்பட்டவராக உட்காராத வரையில் என் மனம் அமைதி அடையாது. (9)

மாசற்ற சந்திரன் போல் ஒளிவீசுபவரும் தாமரைக்கண்ணரும் பேரொளி படைத்தவருமான இராமனுடைய திருமுகத்தை (நாள்தோறும்) தரிசிக்கும் லட்சுமணனன்றோ கொடுத்து வைத்தவன்? (10)

பூமண்டலம் முழுவதற்கும் உரிமையாளரான தன் கணவரைப் பின்தொடர்ந்து செல்லும் பேறுபெற்ற ஜனகன் புதல்வியான வைதேகி கொடுத்து வைத்தவள். (11)

நந்தனத்தில் குபேரன் வசிப்பதைப் போல, இந்தச் சித்திரகூட மலை இராமப்பிரபு தங்கியிருப்பதால் (மிகப் புனிதமான) இமயமலையையொத்த புனிதத்தைப் பெற்றுவிட்டது. (12)

ஆயுதமேந்தியவர்களில் சிறந்தவரும் மகா தேஜஸ்வியுமான இராமன் தங்கியிருப்பதால், கொடிய விலங்குகள் வசிப்பதும் உட்புக முடியாததுமான இந்த வனம் பெரும் புகழை அடைந்துவிட்டது." (13)

இவ்வாறு சொல்லிவிட்டு மிக்கபலம் பொருந்திய பெருந்தோளனும் புருஷோத்தமனுமான பரதன், அந்த அடர்ந்தக் காட்டிற்குள் நடந்து சென்றான். (14)

பேச்சுத்திறனுடைய பரதன், மலைச்சாரலில் கிளை நுனிகளில் மலர்களையுடைய ஏராளமான மரக்கூட்டத்தினிடையே புகுந்து சென்றான். (15)

ஸ கி$_3$ரேஶ்சித்ரகூடஸ்ய ஸாலமாஸாத்$_3$ய புஷ்பிதம் ।
ராமாஶ்ரம க$_3$தஸ்யாக்$_3$நேர் த$_3$த$_3$ர்ஶ த்$_4$வஜமுச்$_2$ரிதம் ॥ (16)

தம் த்$_3$ருஷ்ட்வா ப$_4$ரத: ஸ்ரீமாந் முமோத$_3$ ஸஹப$_3$ாந்த$_4$வ: ।
அத்ர ராம இதி ஞாத்வா க$_3$த: பாரமிவாம்ப$_4$ஸ: ॥ (17)

ஸ சித்ரகூடே து கி$_3$ரௌ நிஶம்ய
ராமாஶ்ரமம் புண்யஜநோபபந்நம் ।
கு$_3$ஹேந ஸார்த$_4$ம் த்வரிதோ ஜக$_3$ாம
புநர்நிவேஶ்யைவ சமூம் மஹாத்மா ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ அஷ்டநவதிதம: ஸர்க$_3$: ॥

ஏகோநஶததம: ஸர்க$_3$:

ராமஸமாக$_3$ம:

நிவிஷ்டாயாம் து ஸேநாயாமுத்ஸுகோ ப$_4$ரதஸ்தத: ।
ஜக$_3$ாம ப்$_4$ராதரம் த்$_3$ரஷ்டும் ஶத்ருக்$_4$நமநுத$_3$ர்ஶயந் ॥ (1)

ருஷிம் வஸிஷ்ட$_2$ம் ஸந்தி$_3$ஶ்ய மாத்ரூர்மே ஶீக்$_4$ரமாநய ।
இதி த்வரிதமக்$_3$ரே ஸ ஜக$_3$ாம கு$_3$ருவத்ஸல: ॥ (2)

ஸுமந்த்ரஸ்த்வபி ஶத்ருக்$_4$நமதூ$_3$ராத$_3$ந்வபத்$_3$யத ।
ராமத$_3$ர்ஶநஜஸ்தர்ஷோ ப$_4$ரதஸ்யேவ தஸ்ய ச ॥ (3)

க$_3$ச்ச$_2$ந்நேவாத$_2$ ப$_4$ரதஸ் தாபஸாலயஸம்ஶ்ரிதாம் ।
ப்$_4$ராது: பர்ணகுடீம் ஸ்ரீமாநுடஜம் ச த$_3$த$_3$ர்ஶ ஹ ॥ (4)

ஶாலாயாஸ்த்வக்$_4$ரதஸ்தஸ்யா த$_3$த$_3$ர்ஶ ப$_4$ரதஸ்ததா$_3$ ।
காஷ்ட$_2$ாநி சாவப$_4$க்$_3$நாநி புஷ்பாண்யபசிதாநி ச ॥ (5)

ஸலக்ஷ்மணஸ்ய ராமஸ்ய த$_3$த$_3$ர்ஶாஶ்ரமமீயுஷ: ।
க்ருதம் வ்ருக்ஷேஷ்வபி$_4$க்ஞாநம் குஶீரை: க்வசித்க்வசித் ॥ (6)

த$_3$த$_3$ர்ஶ ச வநே தஸ்மிந் மஹத: ஸஞ்சயாந் க்ருதாந் ।
ம்ருக$_3$ாணாம் மஹிஷாணாம் ச கரீஷை: ஶீதகாரணாத் ॥ (7)

க$_3$ச்ச$_2$ந்நேவ மஹாப$_3$ாஹுர் த்$_3$யுதிமாந் ப$_4$ரதஸ்ததா$_3$ ।
ஶத்ருக்$_4$நம் சாப்$_3$ரவீத்$_3$த்$_4$ருஷ்டஸ்தாநமாத்யாம்ஶ்ச ஸர்வஶ: ॥ (8)

மந்யே ப்ராப்தா: ஸ்ம தம் தே$_3$ஶம் ப$_4$ரத்$_3$வாஜோ யமப்$_3$ரவீத் ।
நாதிதூ$_3$ரே ஹி மந்யேঽஹம் நதீ$_3$ம் மந்த$_3$ாகிநீமித: ॥ (9)

சித்திரகூட மலையில் மலர்கள் நிறைந்த ஓர் ஆச்சா மரத்தில் ஏறி, இராமனுடைய குடிலிலிருந்து உயரே கிளம்பி வந்த புகையைக் கண்டான். (16)

அதைக் கண்டவுடன் தொண்டுச் செல்வனான பரதன், உறவினர்களிடம் கூறி, (தன் தேடலுக்கு வெற்றி கிடைத்துவிட்டதால்) பெருங்கடலின் அக்கரையை அடைந்துவிட்டதைப் போன்று, 'இராமன் இங்கேதான் இருக்கிறார்' என்று உறுதியாகத் தெரிந்து கொண்டு பெருமகிழ்ச்சி அடைந்தான். (17)

மகாத்மாவான அவன், புண்ணியாத்மாக்களான முனிவர்களுடன் இருக்கும் இராமசந்திரமூர்த்தியின் ஆசிரமம் அதுதான் என்று (காட்டு மக்களிடம் கேட்டு) உறுதி செய்து கொண்டு, படைகளை ஆங்காங்கே நிறுத்திவிட்டு, குகனுடன் வேகமாக (ஆசிரமத்தை நோக்கி) நடந்து சென்றான். (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : தொண்ணூற்றொன்பது

இராமனைச் சந்தித்தல்

சேனை அந்த இடத்தில் தங்கியதும், சகோதரரைக் காண்பதில் ஆவல் மிக்கவனான பரதன், செல்லும் வழியிலுள்ள அடையாளங்களை சத்ருக்னனுக்கு விவரித்துக் கொண்டே சென்றான். (1)

தமையனாரிடம் பெரும் பாசம் கொண்ட பரதன், 'என் தாயார்களை விரைவில் தங்களுடன் அழைத்து வருக' என்று வசிஷ்டரிடம் தெரிவித்துவிட்டு, முன்னதாக அவன் வேகமாகச் சென்றான். (2)

சுமந்திரரும், சத்ருக்னனுக்கு அருகிலேயே பின்தொடர்ந்து சென்றார். இராமனைச் சந்திக்க வேண்டும் என்ற துடிப்பு, பரதனைப் போல அவருக்கும் இருந்தது. (3)

சென்று கொண்டிருக்கும்போதே, தவம் செய்வோர் வாசம் செய்யும் இடம் போல் நன்கு அமைக்கப்பட்ட, தமையனாரின் குடிலையும் பர்ணசாலையையும் பரதன் கண்டான். (4)

இலைகளால் வேயப்பட்ட அந்தக் குடிலின் முன்பு, வெட்டிப் போடப்பட்ட மரச்சுள்ளிகளையும், சேகரித்து வைக்கப்பட்ட மலர்களையும் பரதன் கண்டான். (சுள்ளிகள் ஹோமத்திற்காக; மலர்கள் தேவபூஜைக்காக.) (5)

இராம–லட்சுமணர்களுடைய ஆசிரமத்தை நெருங்கிக் கொண்டிருந்த பரதன், நடந்து செல்வதற்குப் பாதை அடையாளம் தெரிவதற்காக, ஆங்காங்கே மரக்கிளைகளில் தர்பக் கட்டுகளும் மரவுரிகளும் தொங்கவிடப்பட்டிருந்ததைக் கண்டான். (6)

அந்தக் காட்டில், குளிர் காய்வதற்காக (முன்னேற்பாடாகச் சேமித்து வைக்கப்பட்டிருந்த) மான்–எருமைகளின் சாண வரட்டிகளின் குவியல்களைக் கண்டான். (7)

இப்படி நடந்து போய்க் கொண்டிருக்கும்போதே பெருஞ்சோதியாளனும் பெருந்தோளனுமான பரதன், மனமகிழ்ச்சியுடன் சத்ருக்னனையும் அமைச்சர்கள் எல்லோரையும் பார்த்துக் கூறினான்— (8)

''பரத்வாஜர் கூறிய அந்த இடத்தை நாம் வந்தடைந்துவிட்டோம் எனக் கருதுகிறேன். இங்கிருந்து வெகுசமீபத்திலேயே மந்தாகினி நதி இருக்கிறது என்றும் எண்ணுகிறேன். (9)

உச்சைர்ப₃த்₃த₄நி சீராணி லக்ஷ்மணேந ப₄வேத₃யம் ।
அபி₄க்ஞாநக்ருத: பந்த₂ா விகாலே க₃ந்துமிச்ச₂தா ॥ (10)

இத₃ம் சோத₃ாத்த த₃ந்தாநாம் குஞ்ஜராணாம் தரஸ்விநாம் ।
ஶ்ரலபார்ஶ்வே பரிக்ராந்தமந்யோந்யமபி₄க₃ர்ஜதாம் ॥ (11)

யமேவாத₄ாதுமிச்ச₂ந்தி தாபஸா: ஸததம் வநே ।
தஸ்யாஸௌ த்₃ருஶ்யதே தூ₄ம: ஸங்குல: க்ருஷ்ணவர்த்மந: ॥ (12)

அத்ராஹம் புருஷவ்யாக்₄ரம் கு₃ருஸம்ஸ்கார காரிணம் ।
ஆர்யம் த்₃ரக்ஷ்யாமி ஸம்ஹ்ருஷ்டம் மஹர்ஷிமிவ ராக₄வம் ॥ (13)

அத₂ க₃த்வா முஹூர்தம் து சித்ரகூடம் ஸ ராக₄வ: ।
மந்த₃ாகிநீமநுப்ராப்தஸ் தம் ஜநம் சேத₃மப்₃ரவீத் ॥ (14)

ஜக₃த்யாம் புருஷவ்யாக்₄ரம் ஆஸ்தே வீராஸநே ரத: ।
ஜநேந்த்₃ரோ நிர்ஜநம் ப்ராப்ய தி₄ங்மே ஜந்ம ஸஜீவிதம் ॥ (15)

மத்க்ருதே வ்யஸநம் ப்ராப்தோ லோகநாதே₂ா மஹாத்₃யுதி: ।
ஸர்வாந் காமாந் பரித்யஜ்ய வநே வஸதி ராக₄வ: ॥ (16)

இதி லோகஸமாக்ருஷ்ட: பாதே₃ஷ்வத்₃ய ப்ரஸாத₃யந் ।
ராமம் தஸ்ய பதிஷ்யாமி ஸீதாயா லக்ஷ்மணஸ்ய ச ॥ (17)

ஏவம் ஸ விலபம்ஸ்தஸ்மிந் வநே த₃ஶரத₂ாத்மஜ: ।
த₃த₃ர்ஶ மஹதீம் புண்யாம் பர்ணஶாலாம் மநோரமாம் ॥ (18)

ஸாலதாலாஶ்வகர்ணாநாம் பர்ணைர்ப₃ஹூபி₄ராவ்ருதாம் ।
விஶாலாம் ம்ருது₃விஸ்தீர்ணாம் குஶைர்வேதி₃மிவாத்₄வரே ॥ (19)

ஶக்ராயுத₄நிகாஶைஶ்ச கார்முகைர் ப₄ாரஸாத₄நை: ।
ருக்மப்ருஷ்டை₂ர் மஹாஸாரை: ஶோபி₄தாம் ஶத்ருப₃ாத₄கை: ॥ (20)

அர்கரஶ்மிப்ரதீகாஶைர் கே₄ாரைஸ்தூணீக₃தை: ஶரை: ।
ஶோபி₄தாம் தீ₃ப்தவத₃நை: ஸர்பைர்பே₄க₃வதீமிவ ॥ (21)

மஹாரஜத வாஸோப்₄யாமஸிப்₄யாம் ச விராஜிதாம் ।
ருக்மபி₃ந்து₃விசித்ராப்₄யாம் சர்மப்₄யாம் சாபி ஶோபி₄தாம் ॥ (22)

கே₃ாத₄ாங்கு₃லித்ரைராஸக்தைஶ் சித்ரை: காஞ்சநபூ₄ஷிதை: ।
அரிஸங்கை₄ரநாத்₄ருஷ்யாம் ம்ருகை₄: ஸிம்ஹகு₃ஹாமிவ ॥ (23)

வெளிச்சமில்லாத காலங்களில் காலால் நடந்து போய் வரும்போது பாதை புலப்படுவதற்காக மரங்களின் மேலே உள்ள மரவுரி அடையாளங்கள் இலக்குவனால் கட்டப்பட்டவைகளாக இருக்கக் கூடும். (10)

நீண்ட தந்தங்களையுடைய வேகமாகச் செல்லும் யானைகள் ஒன்றையொன்று பார்த்து (சினங்கொண்டு), கர்ஜித்துக் கொண்டு மலைச்சாரலில் நடந்து போகும் இடம் இது. (அவைகளிடமிருந்து விலகிச் செல்வதற்காகவே, பாதுகாப்பான பாதையைக் குறிப்பதற்காக, தகுந்த சின்னங்களை மரங்களின் உச்சியில் இலக்குவன் கட்டியிருக்கிறான் போலும்!) (11)

காட்டில் வசிக்கும் தவசிகள், எந்தக் காலத்திலும் அணையாமல் பாதுகாக்க விரும்பும் வேள்விக்குண்டத்திலுள்ள அக்னியின் புகைக்கூட்டம் இதோ காணப்படுகிறது. (12)

இந்த இடத்தில் மாபெரும் வீரரும், ஆசார்யர்களை கௌரவிப்பவரும், உயர் பண்பினரும், மாமுனிவர்போல் எப்போதும் ஆனந்தத்தில் திளைத்திருப்பவருமான இராகவனை தரிசிக்கப் போகிறேன்.'' (13)

பின்னர், ஒரு முகூர்த்த காலம் நடந்து சென்று சித்திரகூடத்தில் பாய்ந்தோடும் மந்தாகினியை அடைந்து, தன்னுடன் வந்திருப்பவர்களைப் பார்த்து ரகுகுல திலகமான பரதன் இவ்வாறு கூறினான்— (14)

''மன்னராக முடிசூட்டிக் கொண்டு சிம்மாசனத்தில் வீற்றிருந்து அரசு செலுத்த வேண்டிய புருஷோத்தமரான இராமன், மக்கள் நடமாட்டமில்லாத காட்டில் வெறுந்தரையில் (தவம் இயற்றுவோருக்குரிய நியமமான) வீராஸன நிலையில் அமர்ந்திருக்கிறார். (இந்தத் துன்பங்களுக்கெல்லாம் நானல்லவா, காரணம்?) நான் ஏன் பிறந்தேன்? இந்த கேடுகெட்ட வாழ்வு எனக்கு எதற்கு? (15)

மக்கள் தலைவரும் தேசு மிக்கவருமான இராகவன், என் பொருட்டு மகத்தான துன்பத்தை அடைந்து, எல்லாவித சுகபோகங்களையும் துறந்து வனத்தில் வசிக்கிறார். (16)

'மக்களால் நான் நிந்திக்கப்படுகிறேன்' என்று விண்ணப்பித்து, இராமசந்திரனை மனங்குளிரச் செய்து, அவருடைய திருவடிகளில் வீழ்ந்து பிரார்த்திப்பேன்; சீதையினுடைய மற்றும் (என் தம்பியாக இருந்தாலும் கைங்கர்ய ஸ்ரீமானான) லட்சுமணனுடைய பாதங்களில் பணிந்து வேண்டிக் கொள்வேன்.'' (17)

அந்தக் காட்டில் தசரத மைந்தனான பரதன், இவ்வாறு புலம்பிக் கொண்டிருக்கும்போதே, மனத்திற்கினியதும் மிகப்பெரியதும் புண்ணியம் தருவதுமான பர்ணசாலையைக் கண்டான். (18)

வேள்விச்சாலையில் வேதிகை(மேடை)யின் மீது தர்பங்களைப் பரப்பினாற்போல, ஆச்சா–பனை–அசுவகர்ணம் ஆகிய மரங்களின் அநேக இலைகளால் மூடப்பட்டதும், அதிக பரப்பளவுள்ளதுமான அந்தப் பர்ணசாலையின் தரையில் தர்பம் பரப்பப்பட்டிருந்தது; (19)

மிகக் கடினமான வேலைகளையும் செய்யவல்ல இந்திரனுடைய வில்லைப் போன்ற விற்கள் பல வைக்கப்பட்டிருந்தன; அவைகள் பொன்னால் இழைக்கப்பட்டிருந்தன; வெகு உறுதியாகவும், எதிரிகளை நசுக்கவல்லதாகவும், ஒளியுடன் திகழ்பவையாகவும் இருந்தன; (20)

அங்கிருந்த அம்பறாத்தூணிகளில் சூரிய கிரணங்களைப் போல் ஒளிவீசும் பயங்கரமான பாணங்கள் இருந்தன; ஒளி உமிழும் முகத்தையுடைய சர்ப்பங்களால் போகவதி நகரம் பிரகாசிப்பதைப் போல (அந்தப் பர்ணசாலை ஒளி வீசியது.) (21)

தங்க உறையில் வைக்கப்பட்ட இரண்டு கத்திகளாலும், பொன்மணிகள் பதிக்கப்பட்டு அழகுடன் விளங்கும் இரு கேடயங்களாலும் (அவ்விடம் பிரகாசித்தது.) (22)

கலைத்திறனோடு கூடிய பொன்வேலைப்பாடுகளால் அழகாக விளங்கும் கைவிரலைக் காப்பாற்றும் கொப்பிகள் இருந்தன; சிங்கத்தின் குகையை மான்கள் நெருங்க முடியாததைப் போல, அந்த ஆசிரமவளாகம், பகைவர் கூட்டங்களால் அணுக முடியாததாக இருந்தது. (23)

ப்ராகு3த3க்ப்ரவணாம் வேதி3ம் விஶாலாம் தீ3ப்தபாவகாம் ।
த3த3ர்ஶ ப4ரதஸ்தத்ர புண்யாம் ராமநிவேஶநே ॥ (24)

நிரிக்ஷ்ய ஸ முஹூர்தம் து த3த3ர்ஶ ப4ரதோ கு3ரும் ।
உடஜே ராமமாஸீநம் ஜடாமண்ட3லதா4ரிணம் ॥ (25)

க்ருஷ்ணாஜிநத4ரம் தம் து சீரவல்கலவாஸஸம் ।
த3த3ர்ஶ ராமமாஸீநமபி4த: பாவகோபமம் ॥ (26)

ஸிம்ஹஸ்கந்த4ம் மஹாப3ாஹும் புண்ட3ரீகநிபே4க்ஷணம் ।
ப்ருதி2வ்யா: ஸாக3ராந்தாயா ப4ர்தாரம் த4ர்மசாரிணம் ॥ (27)

உபவிஷ்டம் மஹாப3ாஹும் ப்3ரஹ்மாணமிவ ஶாஶ்வதம் ।
ஸ்த2ண்டி3லே தா3ர்ப4ஸம்ஸ்தீர்ணே ஸீதயா லக்ஷ்மணேந ச ॥ (28)

தம் த்3ருஷ்ட்வா ப4ரத: ஶ்ரீமாந் து3:க3மோஹபரிப்லுத: ।
அப்4யதா4வத த4ர்மாத்மா ப4ரத: கைகயீஸுத: ॥ (29)

த்3ருஷ்ட்வைவ விலலாபார்தோ ப3ாஷ்பஸந்தி3க்3தா4 கி3ரா ।
அஶக்நுவந் த4ாரயிதும் தை4ர்யாத்3வசநமப்3ரவீத் ॥ (30)

ய: ஸம்ஸதி3 ப்ரக்ருதிபி4ர் ப4வேத்3யுக்த உபாஸிதும் ।
வந்யைர்ம்ருகை3ருபாஸீந: ஸோ(யமாஸ்தே மமாக்3ரஜ: ॥ (31)

வாஸோபி4ர்ப3ஹுஸாஹஸ்ரைர் யோ மஹாத்மா புரோஹித: ।
ம்ருகா3ஜிநே ஸோ(யமிஹ ப்ரவஸ்தே த4ர்மமாசரந் ॥ (32)

அத4ார்யத்3யோ விவித4ாஶ் சித்ரா: ஸுமநஸஸ்ததா3 ।
ஸோ(யம் ஜடாப4ாரமிமம் வஹதே ராக4வ: கத2ம் ॥ (33)

யஸ்ய யக்ஞைர்யதை2ாத்3தி3ஷ்டைர் யுக்தோ த4ர்மஸ்ய ஸஞ்சய: ।
ஶரீரக்லேஶஸம்பூ4தம் ஸ த4ர்மம் பரிமார்க3தே ॥ (34)

சந்த3நேந மஹார்ஹேண யஸ்யாங்க3முபஸேவிதம் ।
மலேந தஸ்யாங்க3மித3ம் கத2மார்யஸ்ய ஸேவ்யதே ॥ (35)

மந்நிமித்தமித3ம் து3:க2ம் ப்ராப்தோ ராம: ஸுகோ2சித: ।
தி4க்3ஜீவிதம் நிருஶம்ஸஸ்ய மம லோகவிக3ர்ஹிதம் ॥ (36)

இத்யேவம் விலபந் தீ3நம் ப்ரஸ்விந்நமுக2பங்கஜ: ।
பாதா3வப்ராப்ய ராமஸ்ய பபாத ப4ரதோ ருத3ந் ॥ (37)

து3:க2ாபி4தப்தோ ப4ரதோ ராஜபுத்ரோ மஹாப3ல: ।
உக்த்வார்யேதி ஸக்ருத்தீ3நம் புநர்நோவாச கிஞ்சந ॥ (38)

இராமன் தங்கியிருந்த அந்தக் குடிசையில் வடகிழக்கில் எரிந்து கொண்டிருந்த அக்னியுடன் கூடிய, விசாலமான, புனிதச் சடங்குகளுக்கான மேடையை பரதன் பார்த்தான். (24)

சிறிது நேரம் அங்கேயே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த பரதன், தன் மூத்த சகோதரர் இராமன், சடைமுடி தரித்தவராகப் பர்ணசாலையில் வீற்றிருப்பதைக் கண்டான். (25)

மான்தோல், மரப்பட்டை, மரவுரி அணிந்து கொண்டிருந்தார்; சிங்கத்தினுடையது போன்ற தோள்கள்; மாவீரர்; தாமரைக்கண்ணர்; பெரும் சமுத்திரத்தை எல்லையாகவுடைய இந்த மேதினியின் தலைவர்; அறநெறிப்படி நடப்பவர்; ஜொலிக்கும் அக்னியைப் போல் ஒளி வீசுபவர்; நெருங்க முடியாதவர்; நீண்ட புஜங்கள் உடையவர்; நிரந்தரமான பிரும்மதேவனைப் போன்றவர் – இப்படிப்பட்ட ஸ்ரீராமன், சீதையும் லட்சுமணனும் இருபுறங்களிலும் சேவித்து நிற்க, (தர்பப் புல் பரப்பப்பட்ட மண்தரையில்) அமர்ந்திருப்பதைக் கண்டான். (26-28)

தொலைவிலிருந்து அவரைக் கண்ணால் பார்த்ததும், துயரத்திலும் மனத்தடுமாற்றத்திலும் மூழ்கிய தருமாத்மாவும் கைகேயியின் மைந்தனுமான பரதன், அவர் இருந்த இடம் நோக்கி வேகமாக ஓடினான். (29)

(அவரைக்) கண்ணால் பார்த்ததுமே மனவேதனை தாங்காமல் கண்ணீர் பெருக்கினான்; துக்கம் தாங்க முடியாமல் தவித்தான்; பின்னர் ஒருவாறு மனம் தேறி, கண்ணீர்விட்டுக் கொண்டு, குரல் தழுதழுக்க (பின்வருமாறு) கூறினான்— (30)

"அட! என் தமையனார் அரசவையில் வீற்றிருந்து நகரமக்கள், மந்திரிப் பிரதானிகள் போன்ற மதிப்புமிக்க மக்களால் போற்றி வணங்கத்தக்கவர்! (இப்போது) காட்டு விலங்குகளால் சூழப்பட்டவராக (தரையில்) அமர்ந்திருக்கிறார்! (31)

மகோன்னத மாமனிதரான எவர், எப்போதும் மதிப்புமிக்க ஏராளமான ஆடைகளை அணிந்து கொண்டிருந்தாரோ, அவர், தவம் செய்வோரின் நெறிமுறைகளை ஏற்றுக் கொண்டு இரண்டு மான்தோல் ஆடைகளை அணிந்து கொண்டிருக்கிறார். (32)

எந்த ஸ்ரீராமன், எப்போதும், பலவகையான, அழகுமிக்க, வாசம் மிகுந்த மலர்களைத் தலைமுடியில் அணிந்து கொண்டிருந்தாரோ, அவர் சுமைமிக்கதான இந்தச் சடாமுடியை எவ்வாறு தாங்கிக் கொண்டிருக்கிறார்? (33)

மலைமலையான புண்ணியக் குவியல்களை, சாஸ்திர முறைப்படி செய்யப்படும் வேள்விகளால் (நாட்டில் இருந்தபடியே) சம்பாதித்துக் கொள்ளக்கூடிய இவர், உடலை வருத்திக் கொண்டு தருமத்தைத் தேடுகிறாரே? (34)

எவருடைய திருமேனி மிக்க மணம் வீசும் உயர்ந்த சந்தனத்தால் பூசப்படத்தக்கதோ, மரியாதைக்குரிய அவருடைய அந்தத் திருமேனி இப்போது (காற்றில் வரும்) தூசுகளால் பூசப்பட்டிருக்கிறதே? (35)

சுக-சௌக்கியங்களுக்கு உரியவரான ஸ்ரீராமன், என் காரணமாகத்தான் துக்கத்தை அடைந்திருக்கிறார். ஐயகோ! மக்களால் நிந்திக்கப்படும் கொடியவனான என் வாழ்க்கை பாழாகப் போகட்டும்." (36)

தாமரையன்ன முகத்தில் வியர்வை கொட்ட, மேற்கண்டவாறு புலம்பிக் கொண்டிருந்தவனும், மனம் வருந்தியவனுமான பரதன், ஸ்ரீராமனுடைய திருவடிகளைத் தொட்டு வணங்குவதற்கு முன்பே வாய்விட்டு அழுதவண்ணம் தரையில் வீழ்ந்தான். (37)

அரசகுமாரனும் மகாபலசாலியும் தாங்க முடியாத துக்கத்தால் தவித்தவனுமான பரதன், 'அண்ணா....' என்று ஒரு தடவை கூறினான். பின் (துக்கம் காரணமாக) மேற்கொண்டு எதுவும் பேச இயலாதவனானான். (38)

ப3ாஷ்பாபிஹிதகண்ட2ஶ்ச ப்ரேக்ஷ்ய ராமம் யஶஸ்விநம் ।
ஆர்யேத்யேவாபி4ஸம்க்ருஶ்ய வ்யாஹர்தும் நாஶகத்தத: ॥ (39)

ஶத்ருக்4நஶ்சாபி ராமஸ்ய வவந்தே3 சரணௌ ருத3ந் ।
தாவுபே4ள ஸ ஸமாலிங்க்3ய ராமோऽப்யஶ்ரூண்யவர்தயத் ॥ (40)

தத: ஸுமந்த்ரேண கு3ஹேந சைவ ஸமீயதூ ராஜஸுதாவரண்யே ।
தி3வாகரஶ்சைவ நிஶாகரஶ்ச யதா2ம்ப3ரே ஶுக்ரப்3ருஹஸ்பதிப்4யாம் ॥ (41)

தாந் பார்தி2வாந் வாரணயூத2பார்ஹாந்
ஸமாக3தாம்ஸ்தத்ர மஹத்யரண்யே ।
வநௌகஸஸ்தேऽபி ஸமீக்ஷ்ய ஸர்வேபி
அஶ்ரூண்யமுஞ்சந் ப்ரவிஹாய ஹர்ஷம் ॥ (42)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 ஏகோநஶததம: ஸர்க3: ॥

ஶததம: ஸர்க3:

கச்சித்ஸர்க3:

ஜடிலம் சீரவஸநம் ப்ராஞ்ஜலிம் பதிதம் பு4வி ।
த3த3ர்ஶ ராமோ து3ர்த3ர்ஶம் யுக3ாந்தே பா4ஸ்கரம் யதா2 ॥ (1)

கத2ஞ்சித3பி4விக்ஞாய விவர்ணவத3நம் க்ருஶம் ।
ப்4ராதரம் ப4ரதம் ராம: பரிஜக்3ராஹ பா3ஹுநா ॥ (2)

ஆக்4ராய ராமஸ்தம் மூர்த்4நி பரிஷ்வஜ்ய ச ராக4வ: ।
அங்கே ப4ரதமாரோப்ய பர்யப்ருச்ச2த்ஸமாஹித: ॥ (3)

க்வ நு தே ஽பூ4த்பிதா தாத யத3ரண்யம் த்வமாக3த: ।
ந ஹி த்வம் ஜீவிதஸ்தஸ்ய வநமாக3ந்துமர்ஹஸி ॥ (4)

சிரஸ்ய பா3த பஶ்யாமி தூ3ராத்3ப4ரதமாக3தம் ।
து3ஷ்ப்ரதீகமரண்யேऽஸ்மிந் கிம் தாத வநமாக3த: ॥ (5)

கச்சிந்நு த4ரதே தாத ராஜா யத்த்வமிஹாக3த: ।
கச்சிந்ந தீ3ந: ஸஹஸா ராஜா லோகாந்தரம் க3த: ॥ (6)

கச்சித்ஸௌம்ய ந தே ராஜ்யம் ப்4ரஷ்டம் பா3லஸ்ய ஶாஶ்வதம் ।
கச்சிச்சு2ஶ்ரூஷஸே தாத பிதரம் ஸத்யவிக்ரமம் ॥ (7)

கச்சித்3த3ஶரதே2ா ராஜா குஶலீ ஸத்யஸங்க3ர: ।
ராஜஸூயாஶ்வமேத4ாநாமாஹர்தா த4ர்மநிஶ்சித: ॥ (8)

கண்ணீர் பெருக, தொண்டை அடைக்க, புகழ்மிக்க இராமனை நெருங்கியபோதும், 'அண்ணா!' என்று மட்டும் அழைத்தானே தவிர, மேலே எதுவும் பேச முடியாத நிலையில் இருந்தான். (39)

சத்ருக்னனும் கண்ணீர் பெருக்கியவாறே இராமனின் திருவடிகளில் வணங்கினான். அவ்விருவரையும் அணைத்துக் கொண்டு இராமனும் கண்ணீர் சொரிந்தார். (40)

அவ்வமயம், ஆகாயத்தில் சூரிய–சந்திரர்களை சுக்கிரனும் பிருகஸ்பதியும் வந்து பார்ப்பதைப் போல, சுமந்திரரும் குகனும் காட்டில் வசிக்கும் அரசகுமாரர்களை (இராம–லட்சுமணர்களை) அணுகி வந்து தரிசித்தார்கள். (41)

அரச யானைகளில், அம்பாரியில் அமர்ந்து அடர்ந்த காட்டில் வனயாத்திரை செய்யத்தக்கவர்களான அரசகுமாரர்கள், அங்கே ஒன்று கூடியிருப்பதைக் கண்டு மட்டில்லாத மகிழ்ச்சி பெற வேண்டிய வனவாசிகள் இன்பத்தைத் துறந்து கண்ணீர் விட்டார்கள். (42)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
தொண்ணூற்றொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூறு

இராமன் கேள்விகள் கேட்பது

சடைமுடி தரித்து, மரவுரி அணிந்து, கைகளைக் கூப்பியவண்ணம் அடையாளம் கண்டு கொள்ள முடியாதபடி, யுகத்தின் முடிவில் பூமியில் விழுந்து கிடக்கும் சூரியனைப்போல் தரையில் விழுந்து கிடந்தவனை இராமன் பார்த்தார். (1)

முகம் ஒளியிழந்து, உடல் இளைத்துக் காணப்பட்ட சகோதரன் பரதனை, ஸ்ரீராமன் ஒருவாறாக அடையாளம் கண்டு கொண்டு, தன் கைகளால் ஆலிங்கனம் செய்து கொண்டார். (2)

ரகுகுல நாயகரான இராமன், பரதனைக் கட்டி அணைத்தவாறே மடியில் வைத்துக் கொண்டு, உச்சிமுகர்ந்து மிகுந்த பாசத்துடன் (பின்வருமாறு) வினவினார்— (3)

"குழந்தாய்! நீ காட்டிற்கு வந்திருக்கிறாயே? அப்படியானால், நமது தந்தை எங்கே இருக்கிறார்? ஏனென்றால், அவர் உயிருடன் இருக்கும்போது (அவருக்குப் பணிவிடை செய்வதை விட்டுவிட்டு), நீ காட்டிற்கு வரக்கூடாதே? (4)

நான், வெகுகாலத்திற்குப்பின் வெகுதூரத்திலிருந்து (கேகய நாட்டிலிருந்து) உட்புக முடியாத இந்த வனத்திற்கு வந்திருக்கும் பரதனை (உன்னை)ப் பார்க்கிறேன். குழந்தாய்! (இவ்வளவு கஷ்டங்களை சகித்துக் கொண்டு) நீ ஏன் காட்டிற்கு வந்தாய்? (5)

தம்பி! நீ இங்கே வந்திருக்கிறாய் என்பதால் மன்னர் (என்னைப் பிரிந்த பின்னர்) மனோதைரியத்துடன் இருக்கிறார் (என்றே நினைக்கிறேன்). எதிர்பாராதவிதமாக (நான், சீதை, லட்சுமணன் காட்டிற்கு அனுப்பப்பட்டுவிட்ட) துன்பத்தைத் தாங்க முடியாமல் வானுலகம் சென்றுவிடவில்லையே? (6)

அன்புடையவனே! நீ இன்னும் சிறுவனாக இருப்பதால் பரம்பரையாக வந்த பேரரசு உன் கைநழுவிப் போய்விடவில்லையே? (பகைவர்கள் அபகரித்துக் கொண்டுவிடவில்லையே?) குழந்தாய்! சத்தியப் பேராற்றல் கொண்ட தந்தையாருக்கு, நீ சேவை செய்து வருகிறாய், அல்லவா? (7)

ராஜசூயம், அசுவமேதம் முதலிய மாபெரும் வேள்விகளை முறைப்படி செய்து முடித்தவரும், தருமத்தில் உறுதியாக நிற்பவரும், சொன்ன சொல் தவறாதவருமான தசரத மன்னர் சௌக்கியமாக இருக்கிறாரா? (8)

ஸ கச்சித்3ப்3ராஹ்மணோ வித்3வாந் த4ர்மநித்யோ மஹாத்3யுதி: ।
இக்ஷ்வாகூணாமுபாத்4யாயோ யதா2வத்தாத பூஜ்யதே ॥ (9)

ஸா தாத கச்சித்கௌஸல்யா ஸுமித்ரா ச ப்ராஜாவதீ ।
ஸுகி2நீ கச்சித3ார்யா ச தே3வீ நந்த3தி கைகயீ ॥ (10)

கச்சித்3விநயஸம்பந்ந: குலபுத்ரோ ப3ஹுஶ்ருத: ।
அநஸூயுரநுத்3ரஷ்டா ஸத்க்ருதஸ்தே புரோஹித: ॥ (11)

கச்சித3க்3நிஷு தே யுக்தோ விதி4க்ஞோ மதிமாந்ருஜு: ।
ஹுதம் ச ஹோக்ஷ்யமாணம் ச காலே வேத3யதே ஸதா3 ॥ (12)

கச்சித்3தே3வாந் பித்ரூந் ப்4ருத்யாந் கு3ரூந் பித்ருஸமாநபி ।
வ்ருத்3த4ாம்ஶ்ச தாத வைத்3யாம்ஶ்ச ப்3ராஹ்மணாம்ஶ்சாபி4மந்யஸே ॥ (13)

இக்ஷ்வஸ்த்ரவரஸம்பந்நமர்த2ஶாஸ்த்ரவிஶாரத3ம் ।
ஸுத3ந்வாநமுபாத்4யாயம் கச்சித்த்வம் தாத மந்யஸே ॥ (14)

கச்சித3ாத்மஸமா: ஶூரா: ஶ்ருதவந்தோ ஜிதேந்த்3ரியா: ।
குலீநாஶ்சேங்கி3தக்ஞாஶ்ச க்ருதாஸ்தே தாத மந்த்ரிண: ॥ (15)

மந்த்ரோ விஜயமூலம் ஹி ராக்ஞாம் ப4வதி ராக4வ ।
ஸுஸம்வ்ருதோ மந்த்ரத4ரைரமாத்யை: ஶாஸ்த்ரகோவிதை3: ॥ (16)

கச்சிந்நித்3ராவஶம் நைஷீ: கச்சித்காலே ப்ரபு3த்4யஸே ।
கச்சிச்சாபரராத்ரேஷு சிந்தயஸ்யர்த2நைபுணம் ॥ (17)

கச்சிந்மந்த்ரயஸே நைக: கச்சிந்ந ப3ஹுபி4: ஸஹ ।
கச்சித்தே மந்த்ரிதோ மந்த்ரோ ராஷ்ட்ரம் ந பரிதா4வதி ॥ (18)

கச்சித3ர்த2ம் விநிஶ்சித்ய லகு4மூலம் மஹோத3யம் ।
க்ஷிப்ரமாரப4ஸே கர்தும் ந தீ3ர்க4யஸி ராக4வ ॥ (19)

கச்சித்தே ஸுக்ருதாந்யேவ க்ருதரூபாணி வா புந: ।
விது3ஸ்தே ஸர்வகார்யாணி ந கர்தவ்யாநி பார்தி2வா: ॥ (20)

கச்சிந்ந தை3ர்கை3ர்யுக்த்யா வா யே சாப்யபரிகீர்திதா: ।
த்வயா வா தவ வாமாத்யைர் பு3த்4யதே தாத மந்த்ரிதம் ॥ (21)

செல்வனே! வேதவித்தகர், பிரும்மஞானி, எந்த நிலையிலும் தருமம் தவறாதவர், தவ ஒளி திகழ்பவர், இக்ஷ்வாகு பரம்பரையின் ஆசார்யர் (வசிஷ்டர்) முறைப்படி கௌரவிக்கப்படுகிறாரா? (9)

தம்பி! கௌசல்யையும், நற்புதல்வர்களைப் பெற்ற சுமித்திரையும் சுகமாக இருக்கிறார்களா? உத்தமியான கைகேயி அம்மையார் சந்தோஷத்துடன் இருக்கிறாரா? (10)

பணிவுமிக்கவர்; நற்குலத்தில் தோன்றியவர்; பல நூல்களைக் கற்றும், கேட்டும் அறிந்தவர்; பொறாமையற்றவர்; முக்காலங்களையும் அறிந்தவர். இப்படிப்பட்ட உன் (நமது) புரோகிதரான (சுயக்ஞர்) அவரை, நீ மதிப்புடன் நடத்துகிறாயா? (11)

மூன்று அக்னிகளையும் பொறுப்புடன் கவனிப்பதற்காக நீ நியமித்துள்ள வேள்வி நெறிமுறை, நூல் அறிவு, நேர்மை கொண்ட அந்தணர் சரியான காலத்தில் செய்யப்பட்ட ஆகுதி, செய்யப்படவேண்டிய ஆகுதிகள் பற்றி உனக்குத் தெரிவிக்கிறாரா? (12)

குழந்தாய்! தேவதைகள், பிதிரர்கள், வேலைக்காரர்கள், ஆசார்யர்கள், தந்தை போல் போற்றத்தக்க வயோதிகர்கள், மருத்துவர்கள், மற்றும் அந்தணர்களை உரிய முறையில் கௌரவப்படுத்துகிறாய், அல்லவா? (13)

பாணப் பிரயோகம், அஸ்திரப் பிரயோகம் பற்றி முழுமையான அறிவு படைத்தவரும், அரச நீதி வல்லுநருமான சுதன்வா என்னும் ஆசார்யரை, நீ மேன்மைப்படுத்துகிறாயல்லவா? (14)

செல்வமே! தனக்கு நிகரான வீரமும், சாஸ்திர அறிவும் உடையவர்கள், புலன்களை வென்றவர்கள், நற்குடியில் தோன்றியவர்கள், உன்னுடைய மெய்ப்பாடுகளைப் பார்த்தே உன் மனத்தில் ஓடும் எண்ணத்தை அறியும் நுட்பத்திறன் உடையவர்கள் – இப்படிப்பட்டவர்களை அமைச்சர்களாக அமர்த்தியிருக்கிறாயா? (15)

பரதனே! அமைச்சர்களுடன் கலந்து ஆலோசிக்கப்படும் ஆலோசனைகள்தாம் எடுத்த காரியங்களில் வெற்றியின் அடிப்படை அதுவும்கூட, ஆலோசனை சொல்வதில் நிபுணர்களும், அரசநீதி பற்றி நன்குணர்ந்தவர்களுமான மந்திரிகளால் ஆலோசனை முடிவுகள் ரகசியமாகக் காப்பாற்றப்பட வேண்டும். (16)

நீ எப்போதும் தூங்கிக் கொண்டே காலத்தைக் கழிக்கவில்லையல்லவா? விடியற்காலைப்பொழுதில் கண்விழிக்கிறாய்தானே? பின்னிரவு வேளைகளில், செல்வம் சேர்ப்பதைப் பற்றி சிந்தித்துப் பார்க்கிறாயா? (17)

நீ தனி ஒருவனாகச் சிந்தித்து முடிவு எடுக்காமல் இருக்கிறாயா? ஏராளமானவர்களை வைத்துக்கொண்டு முக்கிய முடிவுகள் எடுக்காமல் இருக்கிறாயா? உன்னால் தக்க ஆலோசகர்களுடன் கலந்து ஆலோசிக்கப்பட்ட முடிவுகள், நாட்டில் உரிய காலத்திற்கு முன் கசிந்துவிடாமல் இருக்கிறதா? (திட்டங்களின் ரகசியம் பாதுகாக்கப்படுகிறதா?) (18)

பரதா! எளிய முறையில் ஆரம்பிக்கப்பட்டு பெரும் பயனை தரக்கூடிய செயல்களை நிச்சயித்தபின், உடனே செயல்படுத்துகிறாயா? காலதாமதம் செய்யவில்லை, அல்லவா? (19)

உன்னுடைய செயல்திட்டங்கள் முற்றிலும் நிறைவேறியபின், அல்லது, நிறைவேறும் தறுவாயில் இருக்கும்போது மட்டுமே பிற மன்னர்களும் தெரிந்து கொள்ளவேண்டும். அப்படித்தானே நடக்கிறது? அல்லது, நீ ரகசியமாகத் திட்டமிட்டுள்ள செயல்களை அவர்கள் முன்பாகவே அறிந்து கொள்கிறார்களா? (20)

குழந்தாய்! ஆலோசனைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் நீயோ, அல்லது ஆலோசனையில் கலந்து கொண்ட அமைச்சர்களோ வெளியிடாதிருக்கும் நிலையில், (வெளியில் உள்ளவர்கள் உங்கள் முகக்குறி போன்றவைகளைப் பார்த்து) தர்க்கத்தாலும் யுக்தியாலும் (ஊகம், அனுமானங்களால்) அறிந்து கொள்ளாமல் இருக்கிறார்களா? (எந்த முடிவு எடுக்கப்பட்டிருந்தாலும், முகத்தில் எவ்விதச் சலனமும் காட்டாமல் இருக்கிறீர்களா?) (21)

கச்சித்ஸஹஸ்ராந்மூர்க2ாணா மேகமிச்ச2ஸி பண்டி3தம் ।
பண்டி3தோ ஹ்யர்த2க்குச்ச்2ரேஷ்ட2 குர்யாந்நி:ஶ்ரேயஸம் மஹத் ॥ (22)

ஸஹஸ்ராண்யபி மூர்க2ாணாம் யத்3யுபாஸ்தே மஹீபதி: ।
அத2 வாப்யயுதாந்யேவ நாஸ்தி தேஷ்ட2 ஸஹாயதா ॥ (23)

ஏகோऽப்யமாத்யோ மேத4ாவீ ஶூரோ த3க்ஷோ விசக்ஷண: ।
ராஜானம் ராஜபுத்ரம் வா ப்ராபயேந்மஹதீம் ஶ்ரியம் ॥ (24)

கச்சிந்முக்2யா மஹத்ஸ்வேவ மத்4யமேஷ்ட2 ச மத்4யமா: ।
ஜக4ந்யாஸ்து ஜக4ந்யேஷ்ட2 ப்4ருத்யா: கர்மஸ்ட2 யோஜிதா: ॥ (25)

அமாத்யாநுபத4ாதீதாந் பித்ருபைதாமஹாஞ்ஶுசீந் ।
ஶ்ரேஷ்ட2ாஞ்ஶ்ரேஷ்டே2ஷ்ட2 கச்சித் த்வம் நியோஜயஸி கர்மஸ்ட2 ॥ (26)

கச்சிந்நோக்3ரேண த3ண்டே3ந ப்4ருஶமுத்3வேஜிதப்ரஜம் ।
ராஷ்ட்ரம் தவாநுஜாநந்தி மந்த்ரிண: கைகயீஸுத ॥ (27)

கச்சித்த்வாம் நாவஜாநந்தி யாஜகா: பதிதம் யத2ா ।
உக்3ரப்ரதிக்3ரஹீதாரம் காமயாநமிவ ஸ்த்ரிய: ॥ (28)

உபாயகுஶலம் வைத்3யம் ப்4ருத்யம் ஸந்தூ3ஷணே ரதம் ।
ஶூரமைஶ்வர்யகாமம் ச யோ ந ஹந்தி ஸ பூ3த்4யதே ॥ (29)

கச்சித்3த்4ருஷ்டஶ்ச ஶூரஶ்ச மதிமாந் த்4ருதிமாஞ்ஶுசி: ।
குலீநஶ்சாநுரக்தஶ்ச த3க்ஷ: ஸேநாபதி: க்ருத: ॥ (30)

பூ3லவந்தஶ்ச கச்சித்தே முக்2யா யுத்3த4விஶாரதா3: ।
த்3ருஷ்டாபதா3நா விக்ராந்தாஸ்த்வயா ஸத்க்ருத்ய மாநிதா: ॥ (31)

கச்சித்3பூ3லஸ்ய ப4க்தம் ச வேதநம் ச யதோ2சிதம் ।
ஸம்ப்ராப்தகாலம் தா3தவ்யம் த3தா3ஸி ந விலம்பா3ஸே ॥ (32)

காலாதிக்ரமணாச்சைவ ப4க்தவேதநயோர்ப்4ருதா: ।
ப4ர்து: குப்யந்தி து3ஷ்யந்தி ஸோऽநர்த2: ஸுமஹாந் ஸ்ம்ருத: ॥ (33)

கச்சித் ஸர்வேऽநுரக்தாஸ் த்வாம் குலபுத்ரா: ப்ரத4ாநத: ।
கச்சித்ப்ராணாந்ஸ் தவார்தே2ஷ்ட ஸந்த்யஜந்தி ஸமாஹிதா: ॥ (34)

அறிவில்லாத பலரைக் காட்டிலும், புத்திகூர்மையுடைய ஒருவரை அருகில் வைத்துக் கொள்ள விரும்புகிறாய் தானே? ஒரு காரியத்தைச் செய்யும்போது ஏற்படும் இடுக்கண்களை ஒரு புத்திசாலியால்தான் களைய முடியும். (22)

ஒரு மன்னர் அறிவில்லாத ஆயிரம், பதினாயிரம் பேர்களைத் தன் அருகில் (கஷ்ட காலத்தில் நமக்குத் துணையாக இருப்பார்கள் என்று எண்ணி) வைத்துக் கொண்டால், அவசியமான நேரத்தில் அவர்களிடமிருந்து எவ்வித உதவியும் கிடைக்காது. (23)

பேரறிவாளனும், சூரனும், செயல்திறன் உடையவனும், அரசு நிர்வாக நிபுணனுமான ஒரேயொரு மந்திரி இருந்தால் போதும். அவனால் அரசனுக்கும் அரசுப் பொறுப்பில் உள்ளவர்களுக்கும் பெரும்புகழ் ஏற்படும். (24)

குழந்தாய்! அரசுப் பணியாளர்களில் முக்கியப் பிரமுகர்களை பெரிய வேலைகளிலும், நடுத்தரமான மனிதர்களை நடுத்தர வேலைகளிலும், சாமானியர்களை சாமானிய வேலைகளிலும் ஈடுபடுத்துகிறாயல்லவா? (25)

தரும–அர்த்த–காமங்களில் சோதனை செய்து தேறியவர்கள், பாட்டனார்–தந்தையார் காலத்திலிருந்து பணி செய்பவர்கள், அகத்தூய்மை உடையவர்கள், குணசாலிகள் – இப்படிப்பட்டவர்களை உயர்ந்த பணிகளைச் செய்வதற்கு நியமிக்கிறாய், அல்லவா? (26)

கைகேயியின் மைந்தனே! குற்றத்திற்குப் பொருந்தாத கடுமையான தண்டனையைப் பெற்று குடிமக்கள் அமைச்சர்களிடம் முறையிட, அவர்கள் உன்னைத் தடுக்கும்படி வைத்துக் கொள்ளாமல் இருக்கிறாயா? (27)

தவறான வழிகளில் பொருள் சேர்த்து, யாகம் செய்ய விரும்புகிறவனை ரித்விக்குகள் எவ்வாறு ஒதுக்குவார்களோ; நற்குலப் பெண்மணிகள், தங்களை காம இச்சையுடன் அணுகிவரும் ஆண்களை எப்படி அவமதிப்பார்களோ, அதுபோல குடிமக்களைத் துன்புறுத்தி, அவர்கள் செல்வத்தைப் பறித்துக் கொள்பவனாய் உன்னிடம் குற்றம் கண்டு குடிமக்கள் உன்னை அவமதிக்காமல் இருக்கிறார்களா? (28)

(சாம–தான–பேத–தண்டம் என்ற) உபாயங்களைப் பிரயோகிப்பதில் வல்லவனும், பிறரை வஞ்சிக்கும் முறைகளைக் கூறும் நூல்களைக் கற்றவனும், அரசனுக்கு அந்தரங்கமான பணியாளர்கள் மேல் பழி சுமத்துபவனும், மன்னனுக்கு இன்னல் விளைவிப்பதில் சூரனும், அரசாட்சியைக் கைப்பற்றும் தீய விருப்பம் உடையவனுமான ஒருவனைக் கொல்லாமல் விட்டால், அந்த அரசனே (அந்தக் கயவனால்) சிறைப்படுத்தப்படுவான். (29)

எப்போதும் மனநிறைவுடன் இருப்பவனும், சூர–வீரனும், அறிவுள்ளவனும், நற்குடித் தோன்றலும், உன்னிடத்தில் விசுவாசம் உள்ளவனும், காரியங்களைச் செய்வதில் திறமையுள்ளவனுமான ஒருவனை படைத்தலைவனாக நியமித்திருக்கிறாயா? (30)

உன்னுடைய முக்கியமான படைத்தலைவர்கள் பலசாலிகளாகவும், போர்க்கலை வல்லுநர்களாகவும், பராக்கிரமம் மிக்கவர்களாகவும் இருக்கிறார்களா? அவர்களுடைய திறமையை அவ்வப்போது சோதித்துப் பார்த்திருக்கிறாயா? அவர்களில் சிறந்து விளங்குபவர்கள் தத்தம் திறமைக்கேற்றபடி உன்னால் வெகுமதிக்கப்பட்டிருக்கிறார்களா? (31)

படைவீரர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளத்தையும் உணவையும், அவரவர்களுக்குத் தக்கபடி அந்தந்தக் காலங்களில் கொடுத்துவிடுகிறாயா? காலம் தாழ்த்திக் கொடுக்கவில்லை அல்லவா? இவைகளை உரிய காலத்தில் கொடுத்தால்தான் அவர்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். தாமதமானால் மனச்சலிப்பு அடைவார்கள்; தலைவனிடம் கோபம் கொண்டு நம்பிக்கை இழந்துவிடுவார்கள். இதுவே பெரிய அனர்த்தத்தில் கொண்டு போய்விடும். (32,33)

அரசகுலத்தில் தோன்றிய பிரமுகர்கள் எல்லோரும் உன்னிடம் அன்புடையவர்களாகவும், உனக்காக எந்த சந்தர்ப்பத்திலும் தம் உயிரை விடவும் துணிச்சல் உடையவர்களாகவும் இருக்கிறார்களா? (34)

கச்சிஜ்ஜ்ஞாநபதே3ஶ வித்3வாந் த3க்ஷிண: ப்ரதிப4ாநவாந் ।
யதே2ாக்தவாதீ3 தூ3தஸ்தே க்ருதோ ப4ரத பண்டி3த: ॥ (35)

கச்சித3ஷ்டாத3ஶாந்யேஷு ஸ்வபக்ஷே த3ஶ பஞ்ச ச ।
த்ரிபி4ஸ்த்ரிபி4ரவிக்ஞாதைர் வேத்ஸி தீர்த2ாநி சாரணை: ॥ (36)

கச்சித்3வ்யபாஸ்தாநஹிதாந் ப்ரதியாதாம்ஶ்ச ஸர்வத3ா ।
து3ர்ப3லாநநவக்ஞாய வர்தஸே ரிபுஸூத3ந ॥ (37)

கச்சிந்ந லோகாயதிகாந் ப்3ராஹ்மணாந்ஸ்தாத ஸேவஸே ।
அநர்த2குஶலா ஹ்யேதே ப3ாலா: பண்டி3தமாநிந: ॥ (38)

த4ர்மஶாஸ்த்ரேஷு முக்2யேஷு வித்3யமாநேஷு து3ர்பு3த்4: ।
பு3த்3தி4மாந்வீக்ஷிகீம் ப்ராப்ய நிரர்த2ம் ப்ரவத3ந்தி தே ॥ (39)

வீரைரத்4யுஷிதாம் பூர்வமஸ்மாகம் தாதபூர்வகை: ।
ஸத்யநாமாம் த்3ருட4த்3வாராம் ஹ்ருஸ்த்யஶ்வரத2ஸங்குலாம் ॥ (40)

ப்4ராஹ்மணை: க்ஷத்ரியைர் வைஶ்யை: ஸ்வகர்மநிரதை: ஸதா3 ।
ஜிதேந்த்3ரியைர் மஹோத்ஸாஹைர் வ்ருதாமார்யை: ஸஹஸ்ரஶ: ॥ (41)

ப்ராஸாதை3ர் விவித4ாகாரைர் வ்ருதாம் வைத்3யஜநாகுலாம் ।
கச்சித்ஸமுதி3தாம் ஸ்பீ2தாமயோத்4யாம் பரிரக்ஷஸி ॥ (42)

கச்சிச்சைத்யஶதைர்ஜுஷ்ட: ஸுநிவிஷ்டஜநாகுல: ।
தே3வஸ்தா2நை: ப்ரபாபி4ஶ்ச தடாகைஶ்சோபஶோபி4த: ॥ (43)

பரதனே! நீ, ராஜதூதர் என்ற பொறுப்பில் யாரை நியமித்திருக்கிறாயோ, அவர் உன் நாட்டில் பிறந்தவர்தானே? பிறருடைய எண்ணங்களை அறியக் கூடியவராகவும், செயல்களைச் செய்வதில் சாமர்த்தியம் உடையவராகவும், சமயத்திற்குத் தக்கபடி பதில் சொல்லக் கூடியவராகவும், நீ சொல்லியனுப்பியதை நீ சொன்னபடியே சொல்பவராகவும், அவர் சொல்லியதை சொன்னபடியே உன்னிடம் தெரிவிப்பவராகவும், நல்லது–கெட்டது என்ற விவேகம் உடையவராகவும் இருக்கிறாரல்லவா? (35)

பிற மன்னருடைய நாட்டிலுள்ள பதினெட்டு வகை அரசுப் பணியாளர்களையும், உன் நாட்டில் பதினைந்து வகையான பொறுப்பிலுள்ள பணியாளர்களையும், அவர்கள் அறியாவண்ணம் ஒருவன் மும்மூன்று பேர்களைக் கண்காணிக்கும்படி வேவுகாரர்களைக் கொண்டு உண்மை நிலவரத்தை அறிந்துகொள்கிறாயல்லவா? (தன் நாட்டில் அமைச்சர், புரோகிதர், இளைய மன்னர் ஆகிய மூவரும் தன் அருகிலேயே இருப்பதால் அவர்கள் அந்தரங்கத்தை ஒற்றர்கள் மூலம் சோதித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. மீதமுள்ள பதினைந்து வகையான பணிகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன:– படைத்தலைவன், நகரவாயில் காப்போன், அந்தப்புரத் தலைவன், சிறைச்சாலை அதிகாரி, கருவூலத்தலைவன், அவசியமான சிலவுக்குத் தக்கபடி பொருளைப் பகிர்ந்து கொடுக்கும் அமைச்சர், காவலாளர்களுக்குப் பணி நிர்ணயம் செய்பவன், நகர்ப் பாதுகாவலன், கட்டிடத் தொழிலாளர்களை மேற்பார்வை இடுபவன், தீர்வைப் பொருள் திரட்டிக் கொண்டு வந்து கொடுப்பவர்களுக்குத் தலைவன், அவைத்தலைவன், குற்றவாளிகளின் தண்டனையை நிறைவேற்றுபவன், கோட்டைக் காவலன், நாட்டின் நாற்புற எல்லைக் காவலன், வனக்காவலன்.) (36)

எதிரிகளை அடக்குபவனே! நாட்டிற்குத் தீங்கு செய்பவர்களை நாட்டை விட்டுத் துரத்துவது ஒரு தண்டனை. அப்படித் தண்டிக்கப்பட்டவர்களில் சிலர் திரும்பி வந்திருக்கக்கூடும். 'அவர்கள் சக்தி இழந்தவர்கள்' என்று எண்ணி அலட்சியப்படுத்தக் கூடாது. எப்போதும் அவர்களை கண்காணித்துக் கொண்டே இருக்கிறாயல்லவா? (37)

செல்வமே! முறைப்படி வேதம் பயிலாத, பகவத் பக்தி இல்லாத, நாத்திக (வைதிக நெறிகளுக்குப் புறம்பான வழிகளில் செல்கிற) அந்தணர்களுடன் சேராமல் இருக்கிறாயா? ஏனென்றால், தங்களுக்கு எல்லாம் தெரியும் என்று கருதிக் கொண்டிருக்கும் இந்த அறிவிலிகள் தீமை விளைவிப்பதில் சாமர்த்தியமுள்ளவர்கள். (38)

உயர்ந்த கருத்துக்களைப் போதிக்கும் தரும சாஸ்திரங்கள் இருக்கும்போது, மேற்சொன்ன அற்ப புத்தியுள்ள பண்டிதர்கள், வெறும் தர்க்கவாதங்களையே முன்வைத்து, இக–பர சுகங்களுக்குப் பயன்படாத விஷயங்களையே பேசுவார்கள். (39)

குழந்தாய்! அயோத்தி நகரம், இதற்கு முன்னர் மாவீரர்களான நமது முன்னோர்களால் வசிக்கப்பட்டது; பெயருக்கேற்றபடி பிறரால் வெற்றி கொள்ள முடியாதது; உறுதியான நகர வாயில்களை உடையது; யானை–குதிரை–தேர்கள் நிரம்பியது; எப்போதும் தத்தம் கடமைகளைச் செய்வதில் பற்றுடையவர்களும் புலனடக்கமுடையவர்களும் பேராற்வம் உடையவர்களுமான உத்தம அந்தண–அரச–வணிகர்கள் ஆயிரக்கணக்கில் வசிக்கப்படுவது; பெரியதும்–சிறியதுமான கோவில்கள், அரண்மனைகளை உடையது; எல்லாக் கலைகளிலும் தேர்ந்தவர்கள் விரும்பி வரும் நகரம்; மனமகிழ்ச்சியுடன் இருக்கும் மக்களைக் கொண்டதும், வளமிக்கதுமான அயோத்தியைக் கவனமாகப் பாதுகாத்து வருகிறாயல்லவா? (40–42)

எல்லா சௌகரியங்களும் கிடைப்பதால் மனநிறைவுடன் வசிக்கும் மக்கள் நிரம்பியது; நூற்றுக்கணக்கான யாகசாலைகள், தேவாலயங்களைக் கொண்டது; தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படாதபடி நீர்நிலைகளும், வழிப்போக்கர்கள் தாகம் தீர்த்துக் கொள்ளத் தண்ணீர்ப் பந்தல்களும் உடைய நமது நாடு, சுக–சௌக்கிய ஏற்பாடுகளுடன் செழிப்பாக விளங்குகிறதல்லவா? (43)

ப்ரஹ்ருஷ்டநரநாரீக: ஸமாஜோத்ஸவஶோபி4த: ।
ஸுக்ருஷ்டஸீமா பஶுமாந் ஹிம்ஸாபி4ரபி4வர்ஜித: ॥ (44)

அதே3வமாத்ருகோ ரம்ய: ஸ்வாபதை3: பரிவர்ஜித: ।
பரித்யக்தோ ப4ய: ஸர்வை: க2நிபி4ஶ்சோபஶோபி4த: ॥ (45)

விவர்ஜிதோ நரை: பாபைர் மம பூர்வை: ஸுரக்ஷித: ।
கச்சிஜ்ஜநபத3: ஸ்பீ2த: ஸுக2ம் வஸதி ராக4வ ॥ (46)

கச்சித்தே த3யிதா: ஸர்வே க்ருஷிகோ3ரக்ஷஜீவிந: ।
வார்தாயாம் ஸம்ஶ்ரிதஸ்தாத லோகோ ஹி ஸுக2மேத4தே ॥ (47)

தேஷாம் கு3ப்திபரீஹாரை: கச்சித்தே ப4ரணம் க்ருதம் ।
ரக்ஷ்யா ஹி ராக்ஞா த4ர்மேண ஸர்வே விஷயவாஸிந: ॥ (48)

கச்சித்ஸ்த்ரிய: ஸாந்த்வயஸி கச்சித்தாஶ்ச ஸுரக்ஷிதா: ।
கச்சிந்ந ஶ்ரத்3த3த4ஸ்யாஸாம் கச்சித்3கு3ஹ்யம் ந ப4ாஷஸே ॥ (49)

கச்சிந்நாக3வநம் கு3ப்தம் கச்சித்தே ஸந்தி தே4நுகா: ।
கச்சிந்ந கு3ணிகாஶ்வாநாம் குஞ்ஜராணாம் ச த்ருப்யஸி ॥ (50)

கச்சித்3த3ர்ஶயஸே நித்யம் மநுஷ்யாணாம் விபூ4ஷிதம் ।
உத்த2ாயோத்த2ாய பூர்வாஹ்ணே ராஜபுத்ர மஹாபதே2 ॥ (51)

கச்சிந்ந ஸர்வே கர்மாந்தா: ப்ரத்யக்ஷாஸ்தேऽவிஶங்கயா ।
ஸர்வே வா புநருத்ஸ்ருஷ்டா மத்4யமேவாத்ர காரணம் ॥ (52)

கச்சித்ஸர்வாணி து3ர்கா3ணி த4நத4ாந்யாயுதே4ாத3கை: ।
யந்த்ரைஶ்ச பரிபூர்ணாநி தத2ா ஶில்பித4நுர்த4ரை: ॥ (53)

ஆயஸ்தே விபுல: கச்சித் கச்சித3ல்பதரோ வ்யய: ।
அபாத்ரேஷு ந தே கச்சித் கோஶோ க3ச்ச2தி ராக4வ ॥ (54)

தே3வதார்தே2 ச பித்ரர்தே2 ப்3ராஹ்மணாப்4யாக3தேஷு ச ।
யோதே4ஷு மித்ரவர்கே3ஷு கச்சித்3க3ச்ச2தி தே வ்யய: ॥ (55)

பரதனே! மனத்திருப்தி கொண்ட ஆண்–பெண்கள்; அவ்வப்போது நடைபெறும் பொதுமக்கள் பங்கு கொள்ளும் திருவிழாக்களின் சோபை; நீர்ப்பாசனம் தங்குதடையில்லாமல் கிடைப்பதால் வயல்வெளிகளில் இடைவிடாத உழவுவேலை; திருட்டுப் பயம் போன்ற தொல்லைகள் இல்லாதது; அழகானது; ஆற்றுப்பாய்ச்சல் உள்ளது; கொடிய விலங்குகள் இல்லாதது; எந்தவிதமான அச்சங்களுக்கும் இடமளிக்காதது; (தங்கச்) சுரங்கங்கள் உடையது; பாவம் செய்யும் மக்கள் இல்லாதது; என் முன்னோர்களால் நன்கு பரிபாலிக்கப்பட்டதும், வளமிக்கதுமான நமது நாடு (கோசலம்) மக்களுக்குத் திருப்தி அளிப்பதாக இருந்து வருகிறதல்லவா? (44–46)

விவசாயம் செய்பவர்கள், பசுக்களை (ஆடு–மாடுகளை)ப் பராமரித்து வாழ்க்கை நடத்துபவர்கள் – இவர்கள் உன்னிடம் அன்புடன் இருக்கிறார்களா? குழந்தாய்! வாணிபம் செய்யும் வர்த்தக மக்கள் சுகமாக வாழ்கிறார்களா? (அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கிடைக்கிறதல்லவா?) (47)

மன்னனின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் எல்லோருமே நீதி முறைப்படி பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்தாம். அதனால், மேற்சொன்ன வர்த்தகர்களுக்கு வாணிபம் செய்வதற்கு உதவியாகப் பொருள் உதவுதல், தீர்வைகளைத் தள்ளுபடி செய்தல் போன்ற உதவிகளை நீ செய்துவருகிறாயல்லவா? (48)

உன்னைச் சார்ந்திருக்கும் பெண்களை திருப்தியுடன் வைத்திருக்கிறாயா? அவர்கள் பிற ஆண்களுடன் உல்லாசமாகப் பேசாமலும், அவர்கள் தூய்மைக்குக் கேடு விளையாதபடியும் கவனமாகப் பாதுகாக்கிறாயா? அவர்களை முற்றிலுமாக நம்பாமல் இருக்கிறாயா? ரகசிய விஷயங்களை அவர்களிடம் சொல்லாமலிருக்கிறாயா? (49)

(யானைகள் பிறந்து, வளர்ந்து, நடமாடும் காடு பிற மன்னர்கள் கண்ணில்படாமல் இருக்கிறதா?) யானைகளைப் பிடித்துப் பழக்கும் இடம் ரகசியமாக வைக்கப்பட்டிருக்கிறதா? (யானைகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டால் யானைப்படை பலமிழந்துவிடும்.) தேவையான எண்ணிக்கையில் பெண்யானைகள் உன்னிடம் இருக்கின்றனவா? (பெண்யானைகள் மூலமாகத்தான் ஆண்யானைகளைப் பிடிக்க முடியும்.) ஆண்யானை, பெண்யானை, குதிரைகள் விஷயத்தில், 'இவ்வளவு போதும்' என்று திருப்தியடையாமல் இருக்கிறாயா? (நாட்டின் பாதுகாப்பிற்கு யானைப் படையும், குதிரைப் படையும் மிக அவசியம். எனவே, அவைகளின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டே இருக்கவேண்டும்.) (50)

மன்னர் மைந்தனே! விடியற்காலை வேளையில் எழுந்து, அரசருக்குரிய ஆடை–ஆபரணங்கள் அணிந்து கொண்டு ராஜபாட்டையில் ஆங்காங்கே எழுந்தருளி, நாள்தோறும் குடிமக்களின் கண்களில் படுகிறாயா? (அவ்வப்போது மக்கள் பார்வையில் படாவிட்டால், 'அரசனுக்கு உடல் நலமில்லை' என்றெல்லாம் கதையைப் பரப்பிவிடுவார்கள்.) (51)

வெகுசுலபமாக, உன் வேலைக்காரர்கள் உன்னை நெருங்கிப் பார்க்க முடியாமல் வைத்திருக்கிறாயா? (எளிதாகப் பார்க்கும் உரிமையைக் கொடுத்தால் மரியாதையைக் குறைத்து விடுவார்கள்.) அதுபோல, உன்னைப் பார்க்க முடியாமலும் இருக்கக்கூடாது. இரண்டிற்கும் நடுவான ஒரு நிலையை அனுசரிக்கவேண்டும். (52)

உன் கோட்டைகளில் எல்லாம், தனம், தானியம், ஆயுதம், தண்ணீர், யந்திரங்கள், கட்டுமானத் தொழிலாளர்கள், வில்லாளிகள் – இவை நிறைந்திருக்கின்றனவா? (53)

பரதா! உன் அரசாங்க வரவு அதிகமாகவும் சிலவு குறைவாகவும் இருக்கிறதா? உன்னுடைய செல்வம் தகாதவர்களிடம் போகாமலிருக்கிறதா? (54)

தெய்வம், முன்னோர், அந்தணர், விருந்தினர், போர்வீரர்கள், நட்புக் குழுவினர் – இப்படிப்பட்டவர்களுக்கு (அவர்களைப் போற்றிக் கௌரவிக்கும் வகையில்) ஏராளமாகச் சிலவு செய்கிறாயல்லவா? (55)

கச்சித்3ார்யோ விஶுத்3த4ாத்மா க்ஷாரிதஶ்சோரகர்மணா ।
அத்3ருஷ்ட: ஶாஸ்த்ரகுஶலைர்ந லோபாத்3வத்4யதே ஶுசி: ॥ (56)

க்3ருஹீதஶ்சைவ ப்ருஷ்டஶ்ச காலே த்3ருஷ்ட: ஸகாரண: ।
கச்சிந்ந முச்யதே சோரோ த4நலோப4ாந்நரர்ஷப4 ॥ (57)

வ்யஸநே கச்சித்3ாட்4யஸ்ய து3ர்க3தஸ்ய ச ராக4வ ।
அர்த2ம் விராக3ா: பஶ்யந்தி தவாமாத்யா பு3ஹுஶ்ருதா: ॥ (58)

யாநி மித்2யாபி4ஶஸ்தாநாம் பதந்த்யஸ்ராணி ராக4வ ।
தாநி புத்ரபஶூந் க்4நந்தி ப்ரீத்யர்த2மநுஶாஸத: ॥ (59)

கச்சித்3வ்ருத்3த4ாம்ஶ்ச பா3லாம்ஶ்ச வைத்3யமுக்2யாம்ஶ்ச ராக4வ ।
தா3நேந மநஸா வாசா த்ரிபி4ரேதைர்பு3பூ4ஷஸே ॥ (60)

கச்சித்3கு3ரூம்ஶ்ச வ்ருத்3த4ாம்ஶ்ச தாபஸாந் தே3வதாதிதீ2ந் ।
சைத்யாம்ஶ்ச ஸர்வாந் ஸித்3த4ார்தா2ந் ப்3ராஹ்மணாம்ஶ்ச நமஸ்யஸி ॥ (61)

கச்சித3ர்தே2ந வா த4ர்மமர்த2ம் த4ர்மேண வா புந: ।
உபெ4ள வா ப்ரீதிலோபே4ந காமேந ச ந பா3த4ஸே ॥ (62)

கச்சித3ர்த2ம் ச த4ர்மம் ச காமம் ச ஜயதாம் வர ।
விப4ஜ்ய காலே காலக்ஞ ஸர்வாந் வரத3 ஸேவஸே ॥ (63)

கச்சித்தே ப்3ராஹ்மணா: ஶர்ம ஸர்வஶாஸ்த்ரார்த2கோவித3ா: ।
ஆஶம்ஸந்தே மஹாப்ராக்ஞ பௌரஜாநபதை3: ஸஹ ॥ (64)

நாஸ்திக்யமந்ருதம் க்ரோத4ம் ப்ரமாத3ம் தீ3ர்க4ஸூத்ரதாம் ।
அத3ர்ஶநம் ஜ்ஞாநவதாமாலஸ்யம் பஞ்சவ்ருத்திதாம் ॥ (65)

ஏகசிந்தநமர்த2ாநாமநர்த2க்ஞஶ்ச மந்த்ரணம் ।
நிஶ்சிதாநாமநாரம்ப4ம் மந்த்ரஸ்யாபரிரக்ஷணம் ॥ (66)

மங்க3லஸ்யாப்ரயோக3ம் ச ப்ரத்யுத்த2ாநம் ச ஸர்வத: ।
கச்சித்த்வம் வர்ஜயஸ்யேதாந் ராஜதோ3ஷாம்ஶ்சதுர்த3ஶ ॥ (67)

உன் ராஜ்யத்தில் தூய இயல்புடைய உத்தமன் எவனாவது, பேராசைமிக்க ஒருவனால் திடீரென்று திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டு, நீதி சாஸ்திரம் அறிந்தவர்களால் விசாரிக்கப்படாமலே தண்டிக்கப்படுகிறானா? (56)

புருஷோத்தமா! ஒருவன் திருடும் காலத்திலேயே தக்க சான்றுகளுடன் கண்டுபிடிக்கப்பட்டு, நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு, குற்றவாளி என்று தீர்ப்பு அளிக்கப்பட்டவன், பொருளாசையால் (அதிகாரிகளுக்குக் கையூட்டுக் கொடுப்பது, தான் திருடிய பொருள்களை திருப்பிக் கொடுத்து விடுவது போன்ற அநீதியான செயல்கள் காரணமாக) விடுவிக்கப்படாமலிருக்கிறானா? (57)

பரதனே! ஒரு செல்வந்தனுக்கும், ஓர் ஏழைக்குமிடையே வழக்கு விசாரிக்கப்படும்போது, நீதி நூல் வல்லுநர்களும் உன் நலனில் அக்கறையுமுள்ள அமைச்சர்கள் ஒருசார்பாகத் தீர்ப்பளிக்காமல் இருக்கிறார்களா? (58)

பரதா! குற்றம் செய்யாதவர்கள் தவறாக தண்டிக்கப்பட்டால், அவர்கள் கண்களிலிருந்து சிந்தும் கண்ணீர், தன் சுகத்தையே பெரிதாகக் கருதி ஆட்சி செய்பவனுடைய புதல்வர்களையும் பசுக்களையும் (செல்வத்தையும்) அழித்துவிடும். (59)

வயோதிகர்களையும் சிறுவர்களையும் சிறந்த மருத்துவர்களையும் வெகுமானத்தாலும் மனப்பூர்வமான நட்பினாலும் புகழ்ந்து பேசுவதாலும் உன் வசத்தில் வைத்திருக்கிறாயல்லவா? (60)

ஆசார்யர்களையும் முதியவர்களையும் தவம் செய்பவர்களையும் தேவதைகளையும் அதிதிகளையும் தெய்வம் வசிக்கும் (அரசு, வேம்பு போன்ற) மாபெரும் மரங்களையும், யோகமகிமையால் இவ்வுலக பந்தத்திலிருந்து விடுபட்ட பெரியோர்களையும் அந்தணர்களையும் வணங்குகிறாயல்லவா? (61)

தருமத்தை சம்பாதிக்க வேண்டிய காலத்தில் தருமத்தைச் செய்யவேண்டும்; செல்வம் வாழ்க்கைக்கு அவசியமானதால், அதனையும் உரிய முறையிலும், காலத்திலும் சேர்க்க வேண்டும். அதேபோல் காம சுகத்திற்கு என்று விதிக்கப்பட்டுள்ள காலங்களில் மட்டுமே சிற்றின்பத்தில் ஈடுபட வேண்டும். நீ, தரும–அர்த்தங்களை மறந்து காமத்திலேயே இச்சை கொண்டு, அதிலேயே ஈடுபடாமல் இருக்கிறாயா? (62)

வெற்றி வீரர்களில் சிறந்தவனே! காலத்தின் அருமையை அறிந்தவனே! பிறர் வேண்டிக் கேட்கும் உதவிகளைச் செய்பவனே! காலத்தைப் பங்கிட்டு தரும–அர்த்த–காமங்களுக்கான கால விகிதப்படி எல்லாவற்றையும் அனுபவிக்கிறாயல்லவா? (63)

உன் தேசத்திலுள்ள, அனைத்து அறநூல்களிலும் வல்லவர்களான பிராமணர்களும் பட்டணத்து மக்களும் நாட்டுப்புறங்களில் வசிப்பவர்களும், உன் நலனைக் கோரி பிரார்த்தனை செய்கிறார்களல்லவா? (64)

நாத்திகம் பேசுதல், பொய் கூறுதல், அவசியமில்லாதபோது கோபம், தவறுதல், காரியங்களை விரைவில் செய்து முடிக்காமல் நீட்டித்துக் கொண்டே போவது, ஞானம் மிக்கவர்களான மகான்களைத் தரிசிக்காமல் இருப்பது, சோம்பேறித்தனம், புலன்களிடம் வசப்பட்டிருப்பது, அரசாங்க விஷயங்களைத் தான் ஒருவனாகவே ஆலோசிப்பது, விபரீதமான சிந்தனையுடையவர்களுடன் கலந்தாலோசிப்பது, மந்திராலோசனையில் தீர்மானிக்கப்பட்டவைகளைத் தொடங்காமலிருப்பது, ஆலோசித்து எடுக்கப்பட்ட முடிவுகளை பிறர் அறியாமல் காப்பாற்ற முடியாமை, மங்களமான காரியங்களைச் செய்யாமலிருப்பது, எல்லாப் பகைவர்களுடனும் ஒரே நேரத்தில் போரைத் தொடங்குவது – இந்தப் பதிநான்கு குற்றங்களையும் நீ விலக்கி இருக்கிறாயா? (65–67)

த$_3$ஶ பஞ்ச சதுர்வர்க$_3$ாந் ஸப்தவர்க$_3$ம் ச தத்த்வத: ।
அஷ்டவர்க$_3$ம் த்ரிவர்க$_3$ம் ச வித்$_3$யாஸ்திஸ்ரஶ்ச ராக$_4$வ ॥ (68)

இந்த்$_3$ரியாணாம் ஜயம் பு$_3$த்$_3$த்$_4$வா ஷாட்$_3$கு$_3$ண்யம் தை$_3$வமாநுஷம் ।
க்ருத்யம் விம்ஶதிவர்க$_3$ம் ச தத$_2$ா ப்ரக்ருதிமண்ட$_3$லம் ॥ (69)

யாத்ராத$_3$ண்ட$_3$வித$_4$ாநம் ச த்$_3$வியோநீ ஸந்தி$_4$விக்$_3$ரஹௌ ।
கச்சிதே$_3$தாந் மஹாப்ராக்ஞ யத$_2$ாவத$_3$நுமந்யஸே ॥ (70)

மந்த்ரிபி$_4$ஸ்த்வம் யதே$_2$ாத்$_3$தி$_3$ஷ்டைஶ்சதுர்பி$_4$ஸ்த்ரிபி$_4$ரேவ வா ।
கச்சித்ஸமஸ்தைர்வ்யஸ்தைர்வா மந்த்ரம் மந்த்ரயஸே மித$_2$: ॥ (71)

கச்சித்தே ஸப$_2$லா வேத$_3$ா: கச்சித்தே ஸப$_2$லா: க்ரியா: ।
கச்சித்தே ஸப$_2$லா த$_3$ாரா: கச்சித்தே ஸப$_2$லம் ஶ்ருதம் ॥ (72)

கச்சிதே$_3$ஷைவ தே பு$_3$த்$_3$தி$_4$ர்யதே$_2$ாக்தா மம ராக$_4$வ ।
ஆயுஷ்யா ச யஶஸ்யா ச த$_4$ர்மகாமார்த$_2$ஸம்ஹிதா ॥ (73)

யாம் வ்ருத்திம் வர்ததே தாதோ யாம் ச ந: ப்ரபிதாமஹா: ।
தாம் வ்ருத்திம் வர்தஸே கச்சித்$_3$யா ச ஸத்பத$_2$க$_3$ா ஶுப$_4$ா ॥ (74)

கச்சித்ஸ்வாது$_3$க்ருதம் பே$_4$ாஜ்யமேகோ நாஶ்நாஸி ராக$_4$வ ।
கச்சித$_3$ாஶம்ஸமாநேப்$_4$யோ மித்ரேப்$_4$ய: ஸம்ப்ரயச்ச$_2$ஸி ॥ (75)

ரகுவம்ச திலகமான பரதனே! மகாபுத்திசாலியே! பத்து, ஐந்து, நான்கு வர்க்கங்களையும், ஏழு வர்க்கங்களையும், எட்டு வர்க்கங்களையும், மூன்று வர்க்கங்களையும், மூன்று வகையான கல்வியையும், ஐம்புலன்களை அடக்குதலையும், ஆறு வகையான குணங்களையும், இயற்கையால் ஏற்படும் துன்பங்களையும், மனிதர்களால் உண்டாகும் துன்பங்களையும், தன் பகைவரிடம் கோபம் கொண்டு விலகிவிட்டவர்களைத் தன் பக்கம் இழுத்துக் கொள்வதையும், †இருபது வர்க்கங்களையும், பிரகிருதிமண்டலங்களையும், யாத்ரா (எதிரியின் மேல் படையெடுப்பது), தண்டவிதானம் (படைகளை பலவித வியூகங்களாக அமைப்பது) என்பனவற்றையும், இரண்டு வகையான ஸந்தி (நட்புறவு)–விக்ரகம் (நட்பைக் குலைப்பது) – இவைகளையெல்லாம் நன்றாக ஆராய்ந்து நல்லவைகளை ஏற்று, தீயவழிகளைத் தவிர்த்து உரிய காலத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கிறாய், அல்லவா? (68–70)

அரசநீதியின்படி அரசாங்கச் செயல்பாடுகளை மூன்று அல்லது நான்கு மந்திரிகளுடன் ஒன்றாகவும், பின் தனித்தனியாகவும் ஆலோசனைகளைச் செய்கின்றாயா? (71)

நீ அத்யயனம் செய்த வேதசாஸ்திரங்கள் அதிருஷ்டமான (கண்ணுக்குப் புலப்படாத) நற்பலன்களை அளித்து வருகின்றனவா? உன்னுடைய காரியங்கள் எல்லாம் நற்பயனை அளிக்கின்றனவா? உன் பத்தினி உனக்கு அனுகூலமாக இருக்கிறாளா? நீ கற்றுக் கொண்ட நீதிநூல்கள் நற்பயனை அளிக்கின்றனவா? (72)

நான் இதுவரையில் கூறிய நீதி வாக்கியங்கள் நீண்ட ஆயுளையும் புகழையும் கொடுக்கக் கூடியவை; தரும–அர்த்த–காமங்களை நிறைவேற்றக் கூடியவை. எனவே, உன் சித்தத்தின் போக்கு இந்த வழியில் செல்கிறதா? (73)

(நான் கூறிய) நீதிமுறைகள் நல்ல மார்க்கத்தில் கொண்டு சேர்ப்பிக்கும். இவைகளை நமது பாட்டன்மார்கள் அனுஷ்டித்தார்கள், நமது தந்தையார் அனுஷ்டித்து வருகிறார். அதே வழியை நீயும் பின்பற்றி வருகிறாயல்லவா? (74)

சுவையாகப் பக்குவம் செய்யப்பட்ட உணவு வகைகளை நீ ஒருவனாகவே புசிக்காமல் இருக்கிறாயா? உன்னிடமிருந்து உதவியை எதிர்பார்க்கும் நண்பர்களுக்கு வேண்டிய உதவியைச் செய்து வருகிறாயா? (75)

---

† (மேலே, சுருக்கமாகக் கூறப்பட்ட வர்க்கங்கள் – செயல் மற்றும் குணத்தின் தொகுதிகள் பற்றி பண்டைக்கால பாஷ்யக்காரர்கள் வெவ்வேறுவிதமாக விளக்கியிருக்கிறார்கள்; பல இடங்களில் ஒத்துப் போயும் இருக்கிறார்கள். சில விளக்கங்களை இங்கே காணலாம்.

1. **பத்து வர்க்கம்:** வேட்டை, சூதாட்டம், பகலில் தூங்குவது, பிறரை நிந்திப்பது, பெண்களிடம் காமப்பற்றுடன் ஒட்டிக்கொள்வது, மதுபானம், நாட்டியம், பாட்டு, தாளவாத்தியம் – இவைகளில் மூழ்கிப் போவது, நோக்கமில்லாமல் ஊர் சுற்றுதல்.

2. **ஐந்து வர்க்கம்:** நீர் அரண் (அகழி), மலையரண், மரவரண் (உட்புகமுடியாத மரங்களடர்ந்த காடுகளை நாட்டைச் சுற்றிலும் வளர்ப்பது), பாலைவன அரண், மணல் அரண் (கோடை நாட்களில் இவைகளைத் தாண்டி வருவது அசாத்தியம்.)

3. **நான்கு வர்க்கம்:** சாம, பேத, தான, தண்டம்.

4. **ஏழு வர்க்கம்:** மன்னர், அமைச்சர், நாடு, கோட்டை, கருவூலம், படை, நண்பர்.

5. **எட்டு வர்க்கம்:** கோள் சொல்வது, பிடிவாதம், வஞ்சனை, பொறாமை, எல்லாவற்றிலும் குற்றம் காண்பது, செல்வத்தைத் தீயவழியில் சிலவழிப்பது, கடுமையான பேச்சு, சாதாரண குற்றங்களுக்குக் கொடிய தண்டனை அளிப்பது – இவை எட்டும் தீயகுணத்தின் வெளிப்பாடுகளாதலால் மன்னனால் விலக்கத்தக்கவை. இதேபோல் நல்ல குணத்தின் வெளிப்பாடுகளாக எட்டுச் செயல்களையும் சில பண்டிதர்கள் கூறுகிறார்கள். அவையாவன – பயிர்த் தொழிலை மேன்மைப்படுத்துவது, வாணிபத்தைப் பெருக்குவது, ஆங்காங்கே கோட்டைகள் கட்டுவது, நதிநீர் சேமிப்பிற்காக அணைகள் கட்டுவது, காட்டிலிருந்து யானைகளைப் பிடித்துக் கொண்டு வருவது, சுரங்கம் வெட்டுவது, சிற்றரசர்களிடமிருந்து கப்பம் வாங்குவது, மக்கள் இல்லாத பிரதேசங்களில் மக்களைக் குடியேற்றுவது.

6. **மூன்று வர்க்கம்:** தரும–அர்த்த–காமம் (அல்லது, மன்னருக்குரிய உத்ஸாஹசக்தி, பிரபுசக்தி, மந்த்ரசக்தி – எப்போதும் சுறுசுறுப்புடன் இருத்தல்; தலைமையை நிலைநிறுத்திக் கொள்ளுதல், நல்ல ஆலோசனைகளைப் பெறுதல்).

7. **மூன்று வித்தைகள்:** வேதம் கற்றல், பசுப்பாதுகாப்பு–விவசாய–வணிக நுணுக்கம், குற்றவாளிகளைத் தண்டிக்கும் முறையைப் புகட்டும் நீதிசாஸ்திரம் (தண்டநீதி).

8. **ஆறு குணங்கள்:** (பிற மன்னர்களுடன்) நட்புறவு, அவர்களிடையே பகைமையை உண்டாக்கிப் பிரித்தல், போர் தொடுத்தல், போரைத் தவிர்த்து சமாதானமாக இருப்பது, தனது பகைவனின் பகைவனுடன் நல்லுறவு கொள்ளுதல்.

ராஜா து த$_{4}$ர்மேண ஹி பாலயித்வா
மஹாமதிர்த$_{3}$ண்ட$_{3}$த$_{4}$ர: ப்ரஜாநாம் ।
அவாப்ய க்ருத்ஸ்நாம் வஸுத$_{4}$ாம் யத$_{2}$ாவ–
தி$_{3}$தஶ்சயுத: ஸ்வர்க$_{3}$முபைதி வித்$_{3}$வாந் ॥ (76)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_{3}$ராமாயணே வால்மீகீயே ஆதி$_{3}$காவ்யே
அயோத்$_{4}$யாகாண்டே$_{3}$ ஶததம: ஸர்க$_{3}$: ॥

ஏகாதி$_{4}$கஶததம: ஸர்க$_{3}$:

பித்ருதி$_{3}$ஷ்டாந்தஶ்ரவணம்

ராமஸ்ய வசநம் ஶ்ருத்வா ப$_{4}$ரத: ப்ரத்யுவாச ஹ ।
கிம் மே த$_{4}$ர்மாத்$_{3}$விஹீநஸ்ய ராஜத$_{4}$ர்ம: கரிஷ்யதி ॥ (1)

ஶாஶ்வதோऽயம் ஸத$_{3}$ா த$_{4}$ர்ம: ஸ்தி$_{2}$தோऽஸ்மாஸு நரர்ஷப$_{4}$ ।
ஜ்யேஷ்டே$_{2}$ புத்ரே ஸ்தி$_{2}$தே ராக்ஞாம் கநீயாந்ந ப$_{4}$வேந்நரப ॥ (2)

ஸஸம்ருத்$_{3}$த$_{4}$ாம் மயா ஸார்த$_{4}$மயோத்$_{4}$யாம் க$_{3}$ச்ச$_{2}$ ராக$_{4}$வ ।
அபி$_{4}$ஷேசய சாத்மாநம் குலஸ்யாஸ்ய ப$_{4}$வாய ந: ॥ (3)

ராஜாநம் மாநுஷம் ப்ராஹுர் தே$_{3}$வத்வே ஸம்மதோ மம ।
யஸ்ய த$_{4}$ர்மார்த$_{2}$ஸஹிதம் வ்ருத்தமாஹுரமாநுஷம் ॥ (4)

கேகயஸ்தே$_{2}$ ச மயி து த்வயி சாரண்யமாஶ்ரிதே ।
தி$_{3}$வமார்யோ க$_{3}$தோ ராஜா யாயஜூக: ஸதாம் மத: ॥ (5)

நிஷ்க்ராந்தமாத்ரே ப$_{4}$வதி ஸஹஸீதே ஸலக்ஷ்மணே ।
து$_{3}$:க$_{2}$ஶோகாபி$_{4}$பூ$_{4}$தஸ்து ராஜா த்ரிதி$_{3}$வமப்$_{4}$யக$_{3}$ாத் ॥ (6)

புத்திமானான ஒரு மன்னன் தருமநெறிப்படி மக்களைப் பரிபாலித்து, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனையை அளித்து ஆட்சி செய்தால், இந்தப் பூமண்டலம் முழுவதையுமே அடைவான். நல்லுபதேசங்களால் ஞானப்பக்குவம் பெற்று, வினையெச்சம் (கர்மவினையில் மீதமுள்ளது) முற்றுப் பெற்றதும், உடலை உகுத்து சுவர்க்கத்தை அடைவான்." (76)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியொன்று

தந்தையின் மரணச் செய்தியைக் கேட்பது

இராமனுடைய உபதேசங்களைக் கேட்ட பரதன், "எல்லா தருமங்களையும் இழந்துவிட்ட எனக்கு, அரச தருமங்கள் எந்தவிதத்தில் பயன்படப் போகின்றன?" என்று பதில் சொன்னான். (1)

"புருஷோத்தமனே! மன்னனே! நம்முடைய பரம்பரையில் மூத்த புதல்வன் இருக்கும்போது இளையவன் இளவரசனாக ஆவதில்லை என்ற நெறி நிரந்தரமாக (தொடக்க நாட்களிலிருந்தே) இருந்து வருகிறது. (2)

இராகவா! (இப்போதே) செல்வச் செழிப்புடன் கொழிக்கும் அயோத்திக்கு என்னுடன் வாருங்கள்; நம்முடைய பரம்பரை, மற்றும் எங்களுடைய நலனைக் கருதி, நாட்டின் மன்னராகத் தங்களை அபிஷேகம் செய்வித்துக் கொள்ளுங்கள். (3)

அரசனையும் ஒரு சாதாரண மனிதனாக மற்றவர்கள் எண்ணுகிறார்கள். ஆனால், என் கருத்துப்படி அவன் தெய்வாம்சம் பொருந்தியவன். ஏனென்றால், அரசனுடைய தரும–அர்த்த பரிபாலனம் பிறரால் செய்ய முடியாதது. (4)

நான் கேகய நாட்டிலிருந்தபோது தாங்கள் காட்டிற்கு வந்துவிட்டீர்கள். (நானோ, தாங்களோ அயோத்தியில் இல்லாத அந்த இடைக்காலத்தில்) பற்பல வேள்விகளைச் செய்தவரும், மகாமேதாவியும், சான்றோர்களால் மதிக்கப்பட்டவருமான மன்னர் (தசரதர்) சுவர்க்கலோகம் ஏகிவிட்டார். (5)

தாங்கள், சீதையோடும் லட்சுமணனோடும் நாட்டைவிட்டு வெளியேறியவுடனேயே மனவேதனைப்பட்டு கவலையில் மூழ்கிய மன்னர் விண்ணுலகை அடைந்துவிட்டார். (6)

---

9. **இயற்கைத் துன்பங்கள்:** தீ பரவுதல், நீர்ப் பஞ்சம் அல்லது வெள்ளத்தால் சேதம், நோய் பரவுதல், உணவுப் பஞ்சம், இறப்பு. **மனிதரால் ஏற்படும் துன்பங்கள்:** அரசு அலுவலர்களின் கொடுமை, திருடர் பயம், பகைவர் அச்சம், மன்னனுக்கு நெருக்கமானவர்களின் அட்டூழியம், மன்னனின் பேராசையால் வரிச்சுமை போன்றவை

10. **இருபது வர்க்கம்:** சிறுவர்; வயோதிகர்; நீண்டகால நோயாளி; தன் இனத்தாரால் விலக்கப்பட்டவன்; பயந்தாங்கொள்ளி; பயம் கொண்டவர்களைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருப்பவன்; பேராசை கொண்ட மக்களைத் தன் ஆதரவில் வைத்துக் கொண்டிருப்பவன்; மக்கள் மற்றும் தன்னிடம் பணிசெய்வோரின் விசுவாசத்தை இழந்தவன்; புலனின்பங்களில் பற்றுக் கொண்டவன்; சந்தேகப்படும்படியான ஆலோசனைகளைக் கூறுகின்றவர்களிடம் ஆலோசனை கேட்பவன்; தேவதைகளையும், அந்தணர்களையும் நிந்திப்பவன்; தேவதைகளின் கோப–சாபங்களால் பீடிக்கப்பட்டவன்; 'எல்லாம் கடவுள் பார்த்துக் கொள்வார்' என்று சொல்லி வேலை செய்யாமலிருப்பவன்; பஞ்சம் (போர்க் காலத்தில்) படைவீரர்களின் எண்ணிக்கை குறைவதால் தைரியமிழப்பவன்; தன் நாட்டில் வாசம் செய்யாதவன்; பல திசைகளிலும் பகைவர்களை உடையவன்; நவகோள்களின் விபரீத தசைகளால் பாதிக்கப்பட்டவன்; சத்திய–தருமம் இல்லாதவன்.

11. **பிரகிருதிமண்டலங்கள்:** நாட்டின் தலைவன், அமைச்சன், நண்பர், சுருஹூலம், நாடு, கோட்டை, சேனை என்ற ஏழும் பிரகிருதிமண்டலம் எனக் கூறுவார்கள். சில வியாக்கியானக்காரர்கள் பிரகிருதியைத் தனியாகப் பிரித்து ஐந்து வகையாகக் கூறியிருக்கிறார்கள்:– அமைச்சர், நாடு, கோட்டை, பொக்கிஷம், தண்டனை. மண்டலம் என்று பன்னிரெண்டு வித உறவுகளையுடைய – பகைவன், தன் முன்னவனுக்குப் பகைவன், தன் நண்பன் முதலான – மன்னர்களைக் கூறியுள்ளார்கள்.

12. **யாத்ரா–தண்ட விதானம்:** படைகளை ஆயத்தப்படுத்துவது, அணிவகுப்பது, படையை நடத்திச் செல்வது, படைவீரர்களுடனேயே தங்குவது – இவை யாத்ரா எனப்படும் போர்க்கால ஏற்பாடு. நட்புடன் இருக்கும் மன்னர்களிடையே பிளவை உண்டாக்குவது, ஒருவருடன் சமரச உடன்படிக்கை செய்துகொண்டு உதவிகளைப் பெறுவது – இவை தண்டம் எனப்படும்.)

உத்திஷ்ட$_2$ புருஷவ்யாக்$_4$ர க்ரியதாமுத$_3$கம் பிது: ।
அஹம் சாயம் ச ஶத்ருக்$_4$ந: பூர்வமேவ க்ருதோத$_3$கௌ ॥ (7)

ப்ரியேண க$_2$லு த$_3$த்தம் ஹி பித்ருலோகேஷு ராக$_4$வ ।
அக்ஷய்யம் ப$_4$வதீத்யாஹுர்ப$_4$வாம்ஶ்சைவ பிது: ப்ரிய: ॥ (8)

த்வாமேவ ஶோசந்ஸ்தவ த$_3$ர்ஶநேப்ஸு:–
த்வய்யேவ ஸக்தாமநிவர்த்ய பு$_3$த்$_3$தி$_4$ம் ।
த்வயா விஹீநஸ்தவ ஶோகருக்$_3$ணஸ்–
த்வாம் ஸம்ஸ்மரந் அஸ்தமித: பிதா தே ॥ (9)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ த்ரயாதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

த்$_3$வ்யதி$_4$கஶததம: ஸர்க$_3$:

நிவாபத$_3$ாநம்

தாம் ஶ்ருத்வா கருணாம் வாசம் பிதுர்மரணஸம்ஹிதாம் ।
ராக$_4$வோ ப$_4$ரதேநோக்தாம் ப$_3$ஹூ$_4$வ க$_3$தசேதந: ॥ (1)

தம் து வஜ்ரமிவோத்ஸ்ருஷ்டமாஹவே த$_3$ாநவாரிணா ।
வாக்$_3$வஜ்ரம் ப$_4$ரதேநோக்தமமநோக்ஞம் பரந்தப: ॥ (2)

ப்ரக்$_3$ருஹ்ய ப$_3$ாஹூ ராமோ வை புஷ்பிதாக்$_3$ரோ யதா$_2$ த்$_3$ரும: ।
வநே பரஶுநா க்ருத்தஸ் ததா$_2$ பு$_4$வி பபாத ஹ ॥ (3)

ததா$_2$ நிபதிதம் ராமம் ஜக$_3$த்யாம் ஜக$_3$தீபதிம் ।
கூலக$_4$ாதபரிஶ்ராந்தம் ப்ரஸுப்தமிவ குஞ்ஜரம் ॥ (4)

ப்$_4$ராதரஸ்தே மஹேஷ்வாஸம் ஸர்வத: ஶோககர்ஶிதா: ।
ருத$_3$ந்த: ஸஹ வைதே$_3$ஹ்யா ஸிஷிசு: ஸலிலேந வை ॥ (5)

ஸ து ஸம்க்ஞாம் புநர்லப்$_3$த்$_4$வா நேத்ராப்$_4$யாமஸ்ரமுத்ஸ்ருஜந் ।
உபாக்ரமத காகுத்ஸ்த$_2$: க்ருபணம் ப$_3$ஹு ப$_4$ாஷிதும் ॥ (6)

ஸ ராம: ஸ்வர்க$_3$தம் ஶ்ருத்வா பிதரம் ப்ருதி$_2$வீபதிம் ।
உவாச ப$_4$ரதம் வாக்யம் த$_4$ர்மாத்மா த$_4$ர்மஸம்ஹிதம் ॥ (7)

கிம் கரிஷ்யாம்யயோத்$_4$யாயாம் தாதே தி$_3$ஷ்டாம் க$_3$திம் க$_3$தே ।
கஸ்தாம் ராஜவராத்$_3$தீ$_4$நாமயோத்$_4$யாம் பாலயிஷ்யதி ॥ (8)

கிம் நு தஸ்ய மயா கார்யம் து$_3$ர்ஜாதேந மஹாத்மந: ।
யோ ம்ருதோ மம ஶோகேந மயா சாபி ந ஸம்ஸ்க்ருத: ॥ (9)

மாவீரரே! எழுந்திருங்கள். தந்தைக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடனை செலுத்துங்கள். நானும் சத்ருக்னனும் முன்பே தர்ப்பணம் செய்துவிட்டோம். (7)

இராகவனே! (இறந்தவர்களுக்கு மிகவும்) பிரியமானவனால் கொடுக்கப்பட்டது மாத்திரமே, பிதிரர் உலகில் இருப்பவருக்குக் குறைவில்லாமல் போய்ச் சேர்ந்து நற்கதியை அளிக்கிறது என்று சொல்கிறார்கள். தாங்கள் தந்தைக்கு மிகவும் பிரியமான புத்திரர். (8)

தங்களுடைய தந்தையார், தங்களைப் பிரிந்ததும் வருத்தம் தாங்காமல் நோய்வாய்ப்பட்டார்; தங்களைப் பற்றிய கவலையிலேயே ஆழ்ந்து, தங்களைப் பார்க்கப் பேராவல் கொண்டு, தங்களிடம் பதித்திருந்த நினைவைத் திருப்ப முடியாமல், தங்களைப் பற்றிய ஸ்மரணையுடனேயே (இவ்வுலகை விட்டுச்) சென்றுவிட்டார்." (9)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியோராவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியிரண்டு

நீர்க்கடன் இயற்றல்

இராமன், தந்தையின் மரணம் பற்றி பரதனால் சொல்லப்பட்ட துக்ககரமான செய்தியைக் கேட்டதும் உணர்விழந்தார். (1)

பகைவரை வாட்டி வதைக்கும் இராமன், அசுரர்களின் சத்ருவான இந்திரன் போர்க்களத்தில் வஜ்ராயுதத்தை ஏவியதைப் போல, பரதனால் சொல்லப்பட்டதும், செவிக்கு இனிமையில்லாததுமான சொற்கள் என்னும் வஜ்ராயுதத்தால் (தந்தை இறந்த செய்தியால்) தாக்கப்பட்டு, காட்டில் கோடரியால் வெட்டி வீழ்த்தப்பட்ட, மலர்கள் பூத்துக் குலுங்கும் கிளைகளையுடைய ஒரு மரம் போல், இரு கைகளையும் உயரே தூக்கிக்கொண்டு தரையில் சாய்ந்தார். (2,3)

நதிக்கரைகளை இடித்துத் தள்ளி விளையாடி ஓய்ந்து படுத்துவிட்ட யானை போல், சோகத்தால் தாக்கப்பட்டு, தரையில் வீழ்ந்து கிடந்த மாபெரும் வில்லாளியான உலக நாயகனைப் பார்த்து, தம்பிகள் எல்லோரும், வைதேகியும் கண்ணீர் பெருக்கிக் கொண்டே குளிர்ந்த தண்ணீரை எடுத்து (அவர் முகத்தில்) தெளித்தார்கள். (4,5)

சிறிது நேரத்திற்குப் பின்னர், சுய உணர்வைப் பெற்ற காகுத்த இராமன், இரு கண்களாலும் கண்ணீர் பெருக்கிக் கொண்டு மிகவும் மனம் பரிதவித்து பலவிதமாகப் புலம்பத் தொடங்கினார். (6)

அறத்தையே உயிராகக் கொண்ட இராமன், மாமன்னரான தந்தையார் தேவருலகம் சென்றுவிட்டதைக் கேட்டு, பரதனைப் பார்த்து (பின்வரும்) தரும சம்மதமானச் சொற்களைக் கூறினார்— (7)

"தந்தையார் விண்ணுலகத்திற்கு ஏகியபின், நான் அயோத்திக்கு வந்து என்ன செய்யப்போகிறேன்? மாட்சிமைமிக்க அவர் இல்லாத அந்த அயோத்தியை யார் பரிபாலனம் செய்வார்? (8)

எவர், என்னையே நினைத்துக் கொண்டு சோகம் தாங்காமல் மரணமடைந்தாரோ, மகாத்மாவான அவருக்கு ஈமச்சடங்குகள்கூடச் செய்ய முடியாத, உபயோகமற்ற என்னால் என்ன பயன்? (அவர், என்னை மகனாகப் பெற்றதால் ஒரு லாபத்தையும் அடையவில்லையே?) (9)

அஹோ ப₄ரத ஸித்₃த₄ார்தே₂ா யேந ராஜா த்வயாநக₄ ।
ஶத்ருக்₄நேந ச ஸர்வேஷு ப்ரேதக்ருத்யேஷு ஸத்க்ருத: ॥ (10)

நிஷ்ப்ரத₄ாநாமநேகாக்₃ராம் நரேந்த்₃ரேண விநாக்ருதாம் ।
நிவ்ருத்தவநவாஸோऽபி நாயோத்₄யாம் க₃ந்துமுத்ஸஹே ॥ (11)

ஸமாப்தவநவாஸம் மாமயோத்₄யாயாம் பரந்தப ।
கோ நு ஶாஸிஷ்யதி புநஸ் தாதே லோகாந்தரம் க₃தே ॥ (12)

புரா ப்ரேஷ்ய ஸுவ்ருத்தம் மாம் பிதா யாந்யாஹ ஸாந்த்வயந் ।
வாக்யாநி தாநி ஶ்ரோஷ்யாமி குத: கர்ணஸுக₂ாந்யஹம் ॥ (13)

ஏவமுக்த்வா ஸ ப₄ரதம் ப₄ார்யாமப்₄யேத்ய ராக₄வ: ।
உவாச ஶோகஸந்தப்த: பூர்ணசந்த்₃ரநிப₄ாநநாம் ॥ (14)

ஸீதே ம்ருதஸ்தே ஶ்வஶுர: பித்ரா ஹீநோऽஸி லக்ஷ்மண ।
ப₄ரதோ து₃:க₂மாசஷ்டே ஸ்வர்க₃தம் ப்ருதி₂வீபதிம் ॥ (15)

ததோ ப₃ஹுகு₃ணம் தேஷாம் ப₃ாஷ்போ நேத்ரேஷ்வஜாயத ।
தத₂ா ப்₃ருவதி காகுத்ஸ்தே₂ குமாராணாம் யஶஸ்விநாம் ॥ (16)

ததஸ்தே ப்₄ராதர: ஸர்வே ப்₄ருஶமாஶ்வாஸ்ய ராக₄வம் ।
அப்₃ருவஞ் ஜக₃தீப₄ர்து: க்ரியதாமுத₃கம் பிது: ॥ (17)

ஸா ஸீதா ஶ்வஶுரம் ஶ்ருத்வா ஸ்வர்க₃லோக க₃தம் நரூபம் ।
நேத்ராப்₄யாமஶ்ருபூர்ணாப்₄யாம் ந ஶஶாகேக்ஷிதும் பதிம் ॥ (18)

ஸாந்த்வயித்வா து தாம் ராமோ ருத₃ந்தீம் ஜநகாத்மஜாம் ।
உவாச லக்ஷ்மணம் தத்ர து₃:கி₂தோ து₃:கி₂தம் வச: ॥ (19)

ஆநயேங்கு₃தி₃ண்யாகம் சீரமாஹர சோத்தரம் ।
ஜலக்ரியார்த₂ம் தாதஸ்ய க₃மிஷ்யாமி மஹாத்மந: ॥ (20)

ஸீதா புரஸ்தாத்₃வ்ரஜது த்வமேநாமபி₄தோ வ்ரஜ ।
அஹம் பஶ்சாத்₃க₃மிஷ்யாமி க₃திர்ஹ்யேஷா ஸுது₃ாருணா ॥ (21)

ததோ நித்யாநுக₃ஸ்தேஷாம் விதி₄தாத்மா மஹாமதி: ।
ம்ருது₃ர்த₃ாந்தஶ்ச ஶாந்தஶ்ச ராமே ச த்₃ருட₄ப₄க்திமாந் ॥ (22)

ஸுமந்த்ரஸ்தைர்நரபஸுதை: ஸார்த₄மாஶ்வாஸ்ய ராக₄வம் ।
அவாதாரயத₃ாலம்ப்₃ய நதீ₃ம் மந்த₃ாகிநீம் ஶிவாம் ॥ (23)

தே ஸுதீர்த₂ாம் தத: க்ருச்ச்₂ராதுபாக₃ம்ய யஶஸ்விந: ।
நதீ₃ம் மந்த₃ாகிநீம் ரம்யாம் ஸத₃ா புஷ்பிதகாநநாம் ॥ (24)

ஶீக்₄ரஸ்ரோதஸமாஸாத்₃ய தீர்த₂ம் ஶிவமகர்த₃மம் ।
ஸிஷிசுஸ்தூத₃கம் ராக்ஷ்ஸே ததைததத்தே ப₄வத்விதி ॥ (25)

குற்றமற்ற பரதனே! நீ கொடுத்து வைத்தவன்; பெரும்பேறு பெற்றவன். நீயும் சத்ருக்னனும் தந்தையின் ஈமச்சடங்குகளைச் செய்து, அவருக்கு மரியாதை செலுத்தியிருக்கிறீர்கள். (10)

மாமன்னர் இல்லாததால், ஒப்பற்ற ஒரு தலைவனை இழந்து, பலருடைய நிர்வாகத்தில் சிக்கிக் கொண்டிருக்கும் அயோத்திக்கு வனவாசம் முடிந்தபின்னரும்கூடத் திரும்பி வருவதற்கு நான் உடன்படமாட்டேன். (11)

எதிரிகளை வாட்டுபவனே! வனவாச காலம் முடிந்து, நான் அயோத்திக்குத் திரும்பி வந்தால், நமது தந்தையார் காலகதி அடைந்துவிட்ட பிறகு, எனக்கு எவர்தான் நல்லுபதேசம் செய்வார்? (12)

நான், அவருடைய ஏதோ ஒரு (சாமானியக்) கட்டளையை நிறைவேற்றிவிட்டால்கூட, அவர் மனம் மகிழ்ந்து செவிக்கினிய சொற்களால் என்னைப் பாராட்டுவார். அத்தகைய இனிய சொற்களை, இனி எவரிடமிருந்து நான் கேட்கப் போகிறேன்?'' (13)

பரதனை நோக்கி இவ்வாறு கூறிவிட்டு, சோகத்தால் தவித்துக் கொண்டிருந்த இராமன், முழு நிலவைப் போன்று பிரகாசிக்கும் முகத்தினையுடைய மனைவியிடம் வந்து (இவ்வாறு) கூறினார்— (14)

''சீதே! உன் மாமனார் இறந்துவிட்டார். லட்சுமணா! நீ தந்தையற்றவனாகிவிட்டாய். நாடாண்ட மன்னர் மேலுலகம் சென்றுவிட்டார் என்ற துயரச் செய்தியை பரதன் சொல்கிறான்.'' (15)

இவ்வாறு இராமன் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, புகழ்பெற்ற அந்தப் புதல்வர்களின் கண்களிலிருந்து கரகரவென்று கண்ணீர் வழியத் தொடங்கியது. (16)

பின்னர், மற்ற சகோதரர்கள் இராமனுக்குத் தேறுதல் கூறி, சமாதானப்படுத்தி, ''உலக நாயகராக விளங்கிய தந்தைக்குச் செய்ய வேண்டிய நீர்க்கடன்களைச் செய்யுங்கள்'' என்று சொன்னார்கள். (17)

'மாமனாராகிய மன்னர் விண்ணுலகம் சென்றுவிட்டார்' என்று கேள்விப்பட்டதும், சீதையின் இரு கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகி பார்வையை மறைத்ததால், கணவரைப் பார்க்க முடியவில்லை. (18)

அழுது கொண்டிருந்த ஜானகியை சமாதானப்படுத்திவிட்டு, துக்கத்தோடு கூடிய இராமன், இலக்குவனைப் பார்த்து துக்ககரமானச் சொற்களைக் கூறினார்— (19)

''தம்பி! இங்குதிப் பிண்ணாக்கையும், மரவுரி, உத்தரீயம் ஆகியவற்றையும் எடுத்துக் கொண்டு வா. மகாத்மாவான தந்தைக்குத் தர்ப்பணம் செய்வதற்காக (ஆற்றுக்கு)ச் செல்லப் போகிறோம். (20)

சீதை முதலில் செல்லட்டும்; நீ அவளுக்குப் பின்னால் செல்; நான் (உனக்குப்) பின்னால் வருகிறேன். கடுமையான இந்த முறைதான் தர்பணக் காலங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது.'' (21)

அவர்களிடம் பரம்பரையாக பணிசெய்து வருபவரும், ஆத்மஸ்வரூபத்தை அறிந்தவரும், பேரறிவாளரும், இனிய இயல்புடையவரும், புலன்களை வென்றவரும், மன அமைதி பெற்றவரும், இராமனிடத்தில் உறுதியான பக்தியுள்ளவருமான சுமந்திரர், இராமனையும், மாமன்னரின் மற்றப் புதல்வர்களையும் தேற்றி, இராமனுடைய கைகளை(ப் பாசத்துடன்) பிடித்துக் கொண்டு புண்ணியமான மந்தாகினி நதியில் (நீராடும் துறையில்) இறங்கச் செய்தார். (22,23)

கீர்த்தி பெற்றவர்களான அவர்கள், எக்காலத்திலும் கலங்காத தெளிந்த நீரை உடையதும், (இரு கரைகளிலும்) அழகாகப் பூத்துக் குலுங்கும் வனங்களை உடையதும், வேகமாக ஓடும் நீர்ப்பிரவாகத்தை உடையதுமான மந்தாகினி நதியை மனவேதனையுடன் அடைந்து, மாசுகள் அற்றதும் புண்ணியமானதுமான நீரை (இருகைகளிலும்) எடுத்து, 'இது மாமன்னரைப் போய்ச் சேர்வதாகுக' என்று (அதற்குரிய மந்திரங்களைக் கூறியபடி) நீர்க்கடன் செலுத்தினார்கள். (24,25)

ப்ரக்3ருஹ்ய ச மஹீபாலோ ஜலபூரிதமஞ்ஜலிம் ।
தி3ஶம் யாம்யாமபி4முகே2 ருதந்3 வசநமப்3ரவீத் ॥ (26)

ஏதத்தே ராஜஶார்தூ3ல விமலம் தோயமக்ஷயம் ।
பித்ருலோக க3தஸ்யாத்3ய மத்3த3த்தமுபதிஷ்ட2து ॥ (27)

ததோ மந்த்3ராகிநீதீராத் ப்ரத்யுத்தீர்ய ஸ ராக4வ: ।
பிதுஶ்சகார தேஜஸ்வீ நிவாபம் ப்4ராத்ருபி4: ஸஹ ॥ (28)

ஜங்கு3த்3ம் ப3த3ரீமிஶ்ரம் பிண்யாகம் த3ர்ப4ஸம்ஸ்தரே ।
ந்யஸ்ய ராம: ஸுது3:க2ார்தோ ருதந்3 வசநமப்3ரவீத் ॥ (29)

இத3ம் பு4ங்க்ஷ்வ மஹாராஜ ப்ரீதோ யத3ஶநா வயம் ।
யத3ந்ந: புருஷோ ப4வதி ததந்நாஸ்தஸ்ய தே3வதா: ॥ (30)

ததஸ்தேநைவ மார்கே3ண ப்ரத்யுத்தீர்ய நதீ3தடாத் ।
ஆருரோஹ நரவ்யாக்4ரோ ரம்யஸாநும் மஹீத4ரம் ॥ (31)

தத: பர்ணகுடீத்3வாரமாஸாத்3ய ஜக3தீபதி: ।
பரிஜக்3ராஹ ப3ாஹுப்4யாமுபெ4ள ப4ரதலக்ஷ்மணௌ ॥ (32)

தேஷாம் து ருத3தாம் ஶப்3த3ாத் ப்ரதிஶப்3தோ3ாப4வத்3கி3ரௌ ।
ப்4ராத்ரூணாம் ஸஹ வைதே3ஹ்யா ஸிம்ஹாநாமிவ நர்த3தாம் ॥ (33)

மஹாப3லாநாம் ருத3தாம் குர்வதாமுத3கம் பிது: ।
விக்ஞாய துமுலம் ஶப்3த3ம் த்ரஸ்தா ப4ரதஸைநிகா: ॥ (34)

அப்3ருவம்ஶ்சாபி ராமேண ப4ரத: ஸங்க3தோ த்4ருவம் ।
தேஷாமேவ மஹாந்ஶப்3த3: ஶோசதாம் பிதரம் ம்ருதம் ॥ (35)

அத2 வாஸாந் பரித்யஜ்ய தம் ஸர்வேऽபி4முக2ா: ஸ்வநம் ।
அப்யேகமநஸோ ஜக்3முர்யத2ாஸ்த2ாநம் ப்ரத4ாவிதா: ॥ (36)

ஹயைரந்யே க3ஜைரந்யே ரதை2ரந்யே ஸ்வலங்க்ருதை: ।
ஸுகுமாராஸ்ததை2வாந்யே பத்3பி4ரேவ நரா யயு: ॥ (37)

அசிரப்ரோஷிதம் ராமம் சிரவிப்ரோஷிதம் யதா2 ।
த்3ரஷ்டுகாமோ ஜந: ஸர்வோ ஜக3ாம ஸஹஸாஶ்ரமம் ॥ (38)

ப்4ராத்ரூணாம் த்வரிதாஸ்ததத்ர த்3ரஷ்டுகாமா: ஸமாக3மம் ।
யயுர்ப3ஹுவிதை4ர்யாநை: கு2ரநேமிஸ்வநாகுலை: ॥ (39)

ஸா பூ4மிர்ப3ஹுபி4ர்யாநை: கு2ரநேமிஸமாஹதா ।
முமோச துமுலம் ஶப்3த3ம் த்3யௌரிவாப்4ர ஸமாக3மே ॥ (40)

உலகப் பரிபாலகரான அவர், இருகைகளிலும் நீர் எடுத்துக் கொண்டு, தென்திசையை நோக்கி நின்று, அழுதவாறே (பின்வரும்) சொற்களைக் கூறினார்— (26)

"பேராற்றல் படைத்த பேரரசரே! இப்போது நான் அளிக்கும் இந்தத் தூய நீர், பிதிரர் உலகிலிருக்கும் தங்களுக்குக் குறைவில்லாத திருப்தியை அளிக்கட்டும்." (27)

பின்னர், மந்தாகினி நதியிலிருந்து மேலே வந்து, பேரொளி பொருந்திய இராமன் சகோதரர்களோடு கரையில் தந்தைக்குப் பிண்டப் பிரதானம் செய்தார். (28)

தர்பத்தைத் தரையில் பரப்பி, அதன் மேல் இலந்தை கலந்த இங்குதிப் பிண்ணாக்கைப் (பிண்டமாக) வைத்து, பெரும் துக்கத்துடன் அழுது கொண்டு இராமன் (பின்வருமாறு) கூறினார்— (29)

"மாமன்னரே! மனமுவந்து இதனைப் புசிப்பீராக. நாங்கள் இதனையே உணவாகக் கொள்கிறோம். ஒரு மனிதன் எதை உண்கிறானோ, அதே உணவை அவனது தெய்வங்கள் (தெய்வமாகிவிட்ட பிதிரர்கள்) ஏற்றுக் கொள்கிறார்கள் (என்பது தரும விதி)." (30)

பின்னர், புருஷோத்தமரான இராமன், நதியின் கரையிலிருந்து அதே வழியாகவே (முன்பு வந்த பாதையிலேயே) சென்று, அழகியதான உயர்ந்த சிகரங்களையுடைய மலையில் ஏறினார். (31)

உலகநாயகரான அவர் பர்ணசாலையின் வாயிலை வந்தடைந்ததும் (துக்கத்தைத் தாங்க மாட்டாதவராய்) இருகைகளாலும் பரத-லட்சுமணர்களைக் கட்டியணைத்துக் கொண்டார். (32)

வைதேகியும், அந்த சகோதரர்களும் எழுப்பிய அழுகை ஒலி, சிங்கங்களின் கர்ஜனை போல் மலையில் எதிரொலித்தது. (33)

தந்தையாருக்கு நீர்க்கடன் செலுத்திவிட்டு, பெரும் பலசாலிகளான அவர்கள் அழுது புலம்புவதால் உண்டான பேரொலியைக் கேட்டு, (தொலைவில் நின்று கொண்டிருந்த) பரதனுடைய படைவீரர்களுக்கு பயம் உண்டாயிற்று. (34)

"இராமபிரானை பரதர் சந்தித்துவிட்டார் என்பது திண்ணம். தந்தையார் இறந்துவிட்டார் என்பதைக் கேட்டு, மனம் வருந்தி, அவர்கள் எழுப்பும் பேரொலிதான் இது" என்று பேசிக் கொண்டார்கள். (35)

உடனே, அவர்கள் எல்லோரும் தங்கியிருந்த அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டு சப்தம் வந்த திசையை நோக்கி, அந்த இடத்திலேயே கண்ணும் கருத்தும் உடையவர்களாக, ('இராமனைக் கண்ணால் கண்டுவிட வேண்டும்' என்ற) ஒரே நோக்கத்துடன் ஓடிச் சென்றார்கள். (36)

செல்வச் செழிப்போடு செல்லமாக வளர்ந்து விட்டிருந்த சிலர் குதிரைகளிலும், சிலர் யானைகளிலும், மற்றும் சிலர் நன்கு அலங்கரிக்கப்பட்ட தேர்களிலும் சென்றார்கள். மற்ற எல்லோரும் காலால் நடந்தே சென்றார்கள். (37)

இராமன், நாட்டைவிட்டு வெளியேறி இங்கு வந்து சிறிது காலமே ஆகியிருந்தது என்றாலும், ஏதோ நீண்ட காலம் ஆகிவிட்டதுபோல் மக்கள் எல்லோரும் பரிதவித்து, அவரைக் கண்ணால் காண வேண்டும் என்ற பேராவலுடன் பரபரப்புடன் சென்றார்கள். (38)

குளம்பு, சக்கரம் கொண்ட பலவித (குதிரை, தேர் முதலிய) வாகனங்களில், சகோதரர்களுடைய சந்திப்பைக் காணும் அவா கொண்டவர்களாக மிக விரைவாகச் சென்றார்கள். (39)

பலவிதமான அநேக வாகனங்களின் காலோசை, ஆகாயத்தில் மேகக் கூட்டங்கள் மோதிக் கொள்ளும்போது ஏற்படும் இடியின் பெரும் சத்தம் போல, அந்தப் பிரதேசம் பேரொலியை எழுப்பிற்று. (40)

தேந வித்ராஸிதா நாக3ா: கரேணுபரிவாரிதா: ।
ஆவாஸயந்தோ க3ந்தே4ந ஜக்3முரந்யத்3வநம் தத: ॥ (41)

வராஹவ்ருகஸங்க4ாஶ்ச மஹிஷா: ஸர்பவாநரா: ।
வ்யாக்4ர கோ3கர்ண க3வயா வித்ரேஸு: ப்ருஷதை: ஸஹ ॥ (42)

ரத2ாங்க3ாஹ்வா நத்யூஹா ஹம்ஸா: காரண்ட3வா: ப்லவா: ।
தத2ா பும்ஸ்கோகிலா: க்ரௌஞ்சா விஸம்க்ஞா பே4ஜிதே தி3ஶ: ॥ (43)

தேந ஶப்3தே3ந வித்ரஸ்தைராகாஶம் பக்ஷிபி4ர்வ்ருதம் ।
மநுஷ்யைராவ்ருதா பூ4மிருப4யம் ப்ரப3பெ4ள ததா3 ॥ (44)

ததஸ்தம் புருஷவ்யாக்4ரம் யஶஸ்விநமகல்மஷம் ।
ஆஸீநம் ஸ்த2ண்டி3லே ராமம் த3த3ர்ஶ ஸஹஸா ஜந: ॥ (45)

விக3ர்ஹமாண கைகேயீம் ஸஹிதோ மந்த2ராமபி ।
அபி4க3ம்ய ஜநோ ராமம் ப3ாஷ்பபூர்ணமுகோ2ऽப4வத் ॥ (46)

தாந்நராந் ப3ாஷ்பபூர்ணாக்ஷாந் ஸமீக்ஷ்யாத2 ஸுது3:கி2தாந் ।
பர்யஷ்வஜத த4ர்மக்ஞ: பித்ருவந்மாத்ருவச்ச ஸ: ॥ (47)

ஸ தத்ர காம்ஶ்சித்பரிஷஸ்வஜே நராந்–
நராஶ்ச கேசித்து தமப்4யவாத3யந் ।
சகார ஸர்வாந் ஸவயஸ்யப3ாந்த4வாந்
யதா2ர்ஹமாஸாத்3ய ததா3 ந்ருபாத்மஜ: ॥ (48)

ஸ தத்ர தேஷாம் ருத3தாம் மஹாத்மநாம்
பு4வம் ச கா2ம் சாநுநிநாத3யந் ஸ்வந: ।
கு3ஹா கி3ரீணாம் ச தி3ஶஶ்ச ஸந்ததம்
ம்ருத3ங்க3கே4ாஷப்ரதிம: ப்ரஶுஶ்ருவே ॥ (49)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 த்3வ்யதி4கஶததம: ஸர்க3: ॥

த்ர்யதி4கஶததம: ஸர்க3:

மாத்ருத3ர்ஶநம்

வஸிஷ்ட2: புரத: க்ருத்வா த3ாராந் த3ஶரத2ஸ்ய ச ।
அபி4சக்ராம தம் தே3ஶம் ராமத3ர்ஶநதர்ஷித: ॥ (1)

ராஜபத்ந்யஶ்ச க3ச்ச2ந்த்யோ மந்த3ம் மந்த3ாகிநீம் ப்ரதி ।
த3த்3ருஶுஸ்தத்ர தத்தீர்த2ம் ராமலக்ஷ்மணஸேவிதம் ॥ (2)

செவிப்பறையைத் தாக்கும் அந்த ஒலியைக் கேட்டு மிக்க அச்சம் கொண்ட ஆண்யானைகளும், பெண்யானைகளும் மதநீர் வாசனையை நாலா பக்கத்திலும் பரவ விட்டுக் கொண்டு தூரத்திலிருந்த வேறு காட்டுப் பகுதியை நோக்கி ஓடின. (41)

பன்றி, ஓநாய், சிங்கம், எருமை, சர்ப்பம், குரங்கு, புலி, கோகர்ணம் (கோவேறு கழுதை), கவயம் (என்ற ஒரு வகைப் பசு), புள்ளிமான்கள் ஆகிய எல்லாம் பயந்தோடிப் போயின. (42)

சக்ரவாகம், நீர்க்கோழி, அன்னம், நீர்க்காக்கை, கொக்கு, ஆண்குயில், கிரௌஞ்சம் முதலிய பறவைகள் பயத்தால் கதிகலங்கி எல்லாத் திசைகளிலும் பறந்தோடிச் சென்றன. (43)

அந்தப் பெரும் சப்தத்தால் பயந்தோடிய பறவைக் கூட்டங்களால் ஆகாயம் வியாபிக்கப்பட்டதாயிற்று. (அதே போல்) கீழே மண்பிரதேசம் மனிதர்களால் நிரம்பியதால் இரண்டும் ஒன்றுக்கொன்று ஈடு கொடுத்து விளங்கின. (44)

பின்னர், ஓலை வேய்ந்த குடிசையை நெருங்கிய மக்கள் புருஷோத்தமரும், புகழ் பெற்றவரும், குற்றமற்றவருமான ஸ்ரீராமன் வெறும் தரையில் உட்கார்ந்திருந்ததைக் கண்டு திடுக்கிட்டார்கள். (45)

மக்கள், இராமபிரானை நெருங்கிச் சென்றதும் கைகேயியையும் மந்தரையையும் இடித்துரைத்து கண்களில் நீர்வழிய நின்றார்கள். (46)

அப்போது தருமசீலரான அவர் மிக்க மன வேதனையுடன் கண்ணீர் வழியும் கண்களுடனிருந்த அந்தக் குடிஜனங்களை அருகில் அழைத்து, தட்டிக் கொடுத்து தாய்–தந்தையரைப் போல் அமைதிப்படுத்தினார். (47)

அரசகுமாரரான இராமன், அப்போது சிலரை மார்புறத் தழுவிக் கொண்டார்; சிலர், அவர் திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள். அப்போது அங்கு வந்திருந்த நண்பர்களையும் உறவினர்களையும், அவரவருக்கு ஏற்ற முறையில் மரியாதை செய்தார். (48)

அந்த சமயத்தில், கண்ணீர் விட்டு அழுது கொண்டிருந்த பேரன்புடைய குடிமக்களின் அழுகை ஒலி, பூமி–ஆகாயம்–மலைக்குகை–திசைகள் எங்கும் இடைவிடாது எதிரொலித்து மிருதங்க முழக்கம் போல் கேட்கப்பட்டது. (49)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியிரண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

✧✧✧✧✧

ஸர்க்கம் : நூற்று மூன்று

தாய்மார்களைத் தரிசித்தல்

இராமனைக் காண்பதற்குப் பேராவல் கொண்ட வசிஷ்டர், தசரதருடைய மனைவிகளை முன்னிட்டுக் கொண்டு, (இராமனுடைய ஆசிரமம் இருந்த) அந்த இடத்தை நோக்கி நடந்தார். (1)

மந்தாகினி நதியை நோக்கி மெல்லச் சென்ற அரச பத்தினிகள் (நீராடும் ஒரு துறையில் பித்ருக்களுக்காக இங்குதிப் பிண்டம் வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து), இராம–லட்சுமணர்கள் (நாள்தோறும்) நீராடும் அந்த நதித்துறையைப் பார்த்தார்கள். (2)

கௌஸல்யா ப3ாஷ்பபூர்ணேந முகே2ந பரிஷ்வஜ்ய தா ।
ஸுமித்ராமப்3ரவீத்3தீ3நா யாஸ்சாந்யா ராஜயோஷித: ॥ (3)

இத3ம் தேஷாமநாத2ாநாம் க்லிஷ்டமக்லிஷ்டகர்மணாம் ।
வநே ப்ராக்கேவலம் தீர்த2ம் யே தே நிர்விஷயீக்ருதா: ॥ (4)

இத: ஸுமித்ரே புத்ரஸ்தே ஸதா3 ஜலமதந்த்3ரித: ।
ஸ்வயம் ஹரதி ஸௌமித்ரிர் மம புத்ரஸ்ய காரணாத் ॥ (5)

ஜக4ந்யமபி தே புத்ர: க்ருதவாந்ந து கா3ர்ஹித: ।
ப்4ராதுர்யத3ர்த2ஸஹிதம் ஸர்வம் தத்3விஹிதம் கு3ணை: ॥ (6)

அத்3யாயமபி தே புத்ர: க்லேஷாநாமததே2ாசித: ।
நீசாநர்த2ஸமாசாரம் ஸஜ்ஜம் கர்ம ப்ரமுஞ்சது ॥ (7)

த3க்ஷிணாக்3ரேஷு தா3ர்பே4ஷு ஸா த3த3ர்ஶ மஹீதலே ।
பிதுரிங்கு3தி3பிண்யாகம் ந்யஸ்தமாயதலோசநா ॥ (8)

தம் பூ4மௌ பிதுரார்தேந ந்யஸ்தம் ராமேண வீக்ஷ்ய ஸா ।
உவாச தே2வீ கௌஸல்யா ஸர்வா த3ஶரத2ஸ்த்ரிய: ॥ (9)

இத3மிக்ஷ்வாகுநாத2ஸ்ய ராக4வஸ்ய மஹாத்மந: ।
ராக4வேண பிதுர்தத்தம் பஶ்யதைதத்3யத2ாவிதி4 ॥ (10)

தஸ்ய தே3வஸமாநஸ்ய பார்தி2வஸ்ய மஹாத்மந: ।
நைததெ3ளபயிகம் மந்யே பு4க்தபே4ாக3்ய பே3ாஜநம் ॥ (11)

சதுரந்தாம் மஹீம் பு4க்த்வா மஹேந்த்3ரஸத்3ருஶோ பு4வி ।
கத2மிங்கு3தி3பிண்யாகம் ஸ பு4ங்க்தே வஸுதா4தி4ப: ॥ (12)

அதோ து3:க2தரம் லோகே ந கிஞ்சித்ப்ரதிபா4தி மே ।
யத்ர ராம: பிதுர்தத்3யாதி3ங்கு3தீ3க்ஷோத3ம்ருத்3தி4மாந் ॥ (13)

ராமேணேங்கு3தி3பிண்யாகம் பிதுர்தத்தம் ஸமீக்ஷ்ய மே ।
கத2ம் து3:கே2ந ஹ்ருத3யம் ந ஸ்பே2டதி ஸஹஸ்ரதா4 ॥ (14)

ஶ்ருதிஸ்து கல்வியம் ஸத்யா லௌகிகீ ப்ரதிபா4தி மா ।
யத3ந்ந: புருஷோ பு4வதி தத3ந்நாஸ்தஸ்ய தே3வதா: ॥ (15)

ஏவமார்தாம் ஸபத்நயஸ்தா ஜக்3முராஶ்வாஸ்ய தாம் ததா3 ।
தத்3ருஶுஶ்சாஶ்ரமே ராமம் ஸ்வர்க3ச்யுதமிவாமரம் ॥ (16)

கண்ணீர் நிறைந்து வதங்கிய முகத்தோடிருந்த கோசலை, துயரத்தால் இரங்கத்தக்க நிலையிலிருந்த சுமித்திரை, மற்றும் மன்னருடைய பிற மனைவியரையும் பார்த்து(ப் பின்வருமாறு) சொன்னாள்— (3)

"நாடு கடத்தப்பட்டவர்களும், எந்த வேலையையும் எளிதில் செய்து முடிக்க வல்லவர்களும், (இப்போது) ஆதரவற்றவர்களாக இருக்கின்றவர்களுமான அவர்கள், காட்டில் (மந்தாகினியின்) இந்தத் துறையில்தான், சௌகரியமாக ஏறியிறங்குவதற்குப் படிக்கட்டுகள்கூட இல்லாததால் மிகவும் சிரமத்துடன் நீராடுகிறார்கள் (என்று, கால் வழித்தடம் காணப்படுவதால் தோன்றுகிறது). (4)

சுமித்திரே! லட்சுமணன், என் மகனுக்காக சோம்பலில்லாமல் இங்கிருந்துதான், தானே தண்ணீர் எடுத்துச் செல்கிறான். (5)

உன்னுடைய புதல்வன் (தண்ணீர் சுமந்து செல்லுதல் போன்ற) இழிவான சேவைகளைச் செய்தாலும் யாராலும் பழிக்கப்படமாட்டான். தன் மூத்த சகோதரனுக்கு உதவிடும் வகையில் செய்யப்படும் எல்லாக் காரியங்களும் நற்பயனை விளைவிப்பவைதாம். (6)

இம்மாதிரியான உடல் உழைப்புகளுக்கு உசிதமில்லாதவனான உன் புதல்வன், துர்ப்பாக்கியவசமாகச் செய்துவரும் இழிதொழிலை, (இராமன்) இப்போது (நம்மூடன் நாட்டிற்குத் திரும்பியவுடனாவது) விட்டுவிடுவானா?" (7)

நெடுந்தடங்கண்ணாளாகிய அவள் (கோசலை) தரையில், தெற்குப் பார்த்த நுனியையுடைய தர்பங்களின் மேல் தந்தைக்காக வைக்கப்பட்டிருந்த இங்குதிப் பிண்டங்களைப் பார்த்தாள். (8)

(தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு) துக்கமடைந்த இராமனால், தரையில் தந்தைக்கு வைக்கப்பட்டிருந்த அதை (பிண்டத்தை)ப் பார்த்த கோசலை, தசரதருடைய மனைவிமார்கள் எல்லோரையும் நோக்கி(ப் பின்வருமாறு) கூறினாள்— (9)

"பாருங்கள்! மகாத்மாவும், இக்ஷ்வாகு வம்ச திலகரும், தன் தந்தையுமான தசரதருக்கு முறைப்படி கொடுக்கப்பட்டது, இது (இந்தப் பிண்டம்). (10)

தேவர்களுக்கு ஒப்பானவரும், ஏராளமான அரச போகங்களை அனுபவித்தவரும், மாவீரருமான அந்த மன்னருக்கு, இது (இந்த எளிய உணவு) உகந்த உணவில்லை என்று எண்ணுகிறேன். (11)

நான்கு சமுத்திரங்களை எல்லையாகவுடைய இந்தப் பூமண்டலம் முழுவதையும் ஆண்டவரும், மண்ணுலகில் தேவேந்திரன் போல் வாழ்ந்தவருமான மாமன்னர், இந்த இங்குதிப் பிண்ணாக்கை எவ்வாறு ஏற்பார்? (12)

எல்லையற்ற செல்வங்களுக்கு அதிபதியான இராமன், (காலஞ்சென்ற) தன் தந்தைக்கு (காட்டுப் பழமான) இங்குதியின் சதையைப் பிண்டமாகக் கொடுத்தான் என்றால், இதைக் காட்டிலும் மேலான துக்கம் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. (13)

'இராமனால், தன் தந்தைக்கு இங்குதிப் பிண்ணாக்கு உருண்டைதான் பிண்டமாகக் கொடுக்கப்பட்டது' என்பதைக் கண்ணால் பார்த்த பின்னரும், என் இதயம் சுக்குநூறாகப் பிளக்காமல் இருக்கிறதே? (14)

'ஒரு மனிதன் எத்தகைய உணவைப் புசிக்கிறானோ, அதே உணவை அவனது தெய்வங்களுக்கும் படைக்கிறான்' என்ற உலகியல் பழமொழி, நிச்சயமாக உண்மைதான் என்று எனக்குத் தோன்றுகிறது." (15)

சோகத்தால் மேற்கண்டவாறு அழுத அவளை, சக்களத்திமார்கள் ஆறுதல் கூறி அழைத்துச் சென்றார்கள். அவர்கள், ஆசிரமத்தில் தேவலோகத்திலிருந்து விழுந்துவிட்ட தேவதையைப் போன்று வீற்றிருக்கும் இராமனைக் கண்டார்கள். (16)

ஸர்வபே4ாகை3: பரித்யக்தம் ராமம் ஸம்ப்ரேக்ஷ்ய மாதர: ।
ஆர்தா முமுசுரஶ்ரூணி ஸஸ்வரம் ஶோககர்ஶிதா: ॥ (17)

தாஸாம் ராம: ஸமுத்தா2ய ஜக்3ராஹ சரணாம்புஜாந் ।
மாத்ரூணாம் மநுஜவ்யாக்4ர: ஸர்வாஸாம் ஸத்யஸங்க3ர: ॥ (18)

தா: பாணிபி4: ஸுகை2ஸ்பர்ஶைர் ம்ருத்3வங்கு3லிதலை: ஶுபை4: ।
ப்ரமமார்ஜ ரஜ: ப்ரூஷ்டே2ாத்3ராமஸ்யாயதலோசநா: ॥ (19)

லெளமித்ரிரபி தா: ஸர்வா மாத்ரூ: ஸம்ப்ரேக்ஷ்ய து3:கி2த: ।
அப்4யவாத3யதாஸக்தம் ஶநை ராமாத3நந்தரம் ॥ (20)

யதா2 ராமே ததா2 தஸ்மிந் ஸர்வா வவ்ருதிரே ஸ்த்ரிய: ।
வ்ருத்திம் த3ஶரதா2ஜ்ஜாதே லக்ஷ்மணே ஶுப4லக்ஷணே ॥ (21)

ஸீதாபி சரணாம்ஸ்தாஸாமுபஸங்க்3ருஹ்ய து3:கி2தா ।
ஶ்வஶ்ரூணாமஶ்ருபூர்ணாக்ஷீ ஸா ப3பூ4வாக்3ரத: ஸ்தி2தா ॥ (22)

தாம் பரிஷ்வஜ்ய து3:கா2ர்தா மாதா து3ஹிதரம் யதா2 ।
வநவாஸக்ருஶாம் தீ3நாம் கௌஸல்யா வாக்யமப்3ரவீத் ॥ (23)

விதே3ஹராஜஸ்ய ஸுதா ஸ்நுஷா த3ஶரதா2ஸ்ய ச ।
ராமபத்நீ கத2ம் து3:கா2ம் ஸம்ப்ராப்தா நிர்ஜநே வநே ॥ (24)

பத்3மமாதபஸந்தப்தம் பரிக்லிஷ்டமிவோத்பலம் ।
காஞ்சநம் ரஜஸா த்4வஸ்தம் க்லிஷ்டம் சந்த்3ரமிவாம்பு3தை3: ॥ (25)

முகா2ம் தே ப்ரேக்ஷ்ய மாம் ஶோகோ த3ஹத்யக்3நிரிவாஶ்ரயம் ।
ப்4ருஶம் மநஸி வைதே3ஹி வ்யஸநாரணிஸம்ப4வ: ॥ (26)

ப்3ருவந்த்யாமேவமார்தாயாம் ஜநந்யாம் ப4ரதாக்3ரஜ: ।
பாத3ாவாஸாத்3ய ஜக்3ராஹ வஸிஷ்டா2ஸ்ய ச ராக4வ: ॥ (27)

புரோஹிதஸ்யாக்3நிஸமஸ்ய வை ததா3
ப்3ருஹஸ்பதேரிந்த்3ர இவாமராதி4ப: ।
ப்ரக்3ருஹ்ய பாதௌ3 ஸுஸம்ருத்3த4தேஜஸ:
ஸஹைவ தேநோபவிவேஶ ராக4வ: ॥ (28)

ததோ ஜக4ந்யம் ஸஹிதை: ஸமந்த்ரிபி4:
புரப்ரதா4நைஶ்ச ஸஹைவ ஸைநிகை: ।
ஜநேந த4ர்மக்ஞதமேந த4ர்மவா–
நுபோபவிஷ்டோ ப4ரதஸ்ததா3க்3ரஜம் ॥ (29)

உபோபவிஷ்டஸ்து ததா3 ஸ வீர்யவாந்ஸ–
தபஸ்வி வேஷேண ஸமீக்ஷ்ய ராக4வம் ।
ஶ்ரியா ஜ்வலந்தம் ப4ரத: க்ருதாஞ்ஜலிர்–
யதா2 மஹேந்த்3ர: ப்ரயத: ப்ரஜாபதிம் ॥ (30)

தாய்மார்கள், எந்தவிதமான போக-சௌகரியங்களும், சுக சாதனங்களும் இல்லாத இராமனைக் கண்டு மிகவும் துக்கப்பட்டார்கள்; துயரத்தால் தாக்கப்பட்டவர்களாக அழுது புலம்பிக் கொண்டு கண்ணீர் பெருக்கினார்கள். (17)

சத்தியம் தவறாதவரான புருஷோத்தமர் இராமன் தன் இடத்திலிருந்து எழுந்து, அந்தத் தாய்மார்கள் அனைவருடைய புண்ணியத் திருவடிகளிலும் விழுந்து வணங்கினார். (18)

அகன்ற கண்களையுடைய அவர்கள் மிருதுவான விரல்களையும், உள்ளங்கைகளையும், இனிய பரிசத்தை அளிப்பவைகளும், மங்களமானவைகளுமான தங்கள் கைகளால், ஸ்ரீராமனுடைய முதுகில் ஒட்டிக் கொண்டிருந்த தூசுகளைத் துடைத்துவிட்டார்கள். (19)

இலக்குவனும், அந்தத் தாய்மார்கள் எல்லோரையும் ஒருசேரப் பார்த்து மிகவும் துக்கங்கொண்டு, இராமன் வணங்கி எழுந்த பின்னர் மிகவும் பாசத்துடன் மெல்ல மெல்ல வணங்கினான். (20)

அந்த மாதரசிகள் அனைவரும், இராமனிடத்தில் எப்படியோ, அப்படியே தசரதகுமாரனும், சுபலட்சணங்கள் பொருந்தியவனுமான லட்சுமணனிடமும் பாசத்தை வெளிப்படுத்தினார்கள். (21)

துயரத்துடன் சீதையும் மாமியார்களின் பாதங்களில் வணங்கி, கண்ணீர் நிறைந்த கண்களுடன், அவர்களுக்கு முன்னால் வந்து நின்றாள். (22)

துக்கம் தாங்காத கோசலை, பெற்ற தாய் தன் பெண்ணை ஆதரவுடன் அணைத்துக் கொள்வதைப் போல, வனவாசத்தால் மெலிந்திருப்பவளும், இரங்கத்தக்க நிலையிலுள்ளவளுமான அவளைக் கட்டியணைத்துக் கொண்டு (பின்வருமாறு) கூறினாள்— (23)

''விதேக மன்னனுடைய புதல்வி; தசரதருடைய மருமகள்; இராமனுடைய பத்தினி – (இவ்வளவு பெருமை வாய்ந்த நீ) மக்கள் நடமாட்டமே இல்லாத காட்டில் வசிக்கும் துக்கத்தை எவ்வாறு அடைந்தாய்? (24)

வெய்யிலில் வாடிய தாமரை மலர், கசக்கப்பட்ட நீலோத்பலம், மாசு படிந்த சுவர்ணம், மேகங்களால் மறைக்கப்பட்ட முழுநிலவு – இவ்வாறாக உன் முகத்தைப் பார்க்கும் என்னை, துக்கம் என்ற அரணிக்கட்டையில் தோன்றியுள்ள சோகம் என்ற அக்னி, நெருப்பானது தான் இருக்குமிடத்தையே எரிப்பதைப் போல என் உள்ளத்தைத் தகிக்கிறது.'' (25,26)

இப்படியெல்லாம் மனவேதனையுடன் அன்னை பேசிக் கொண்டிருக்கையில், பரதனின் மூத்தவரான இராமன், வசிஷ்ட முனிவரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். (27)

தேவர்கள் வேந்தனான இந்திரன், பிருகஸ்பதியைப் பக்தி-சிரத்தையுடன் வணங்குவதைப் போன்று, அக்னியைப் போன்று ஜொலிக்கும் புரோகிதருடைய பாதங்களில் வணக்கம் செலுத்திவிட்டு, அவர் அருகிலேயே அமர்ந்து கொண்டார் இராமன். (28)

பின்னர், தன்னுடன் வந்திருந்த எல்லா அமைச்சர்கள், நகரப் பிரமுகர்கள், படைத்தலைவர்கள், தருமம் அறிந்த உத்தமர்கள் ஆகியோர்களுடன் அறநெறி தவறாத பரதன், தன் அண்ணனுக்கு அருகில் அவர் பின்னால் சென்றமர்ந்தான். (29)

அப்போது வீரம் மிக்கவனான பரதன், தவசியைப் போன்ற தோற்றத்துடன், தவச்செல்வத்தால் பேரொளி வீசிக் கொண்டிருக்கும் இராமனைப் பார்த்து, கைகளைக் கூப்பிக் கொண்டு, பிரும்மதேவன் எதிரில் தேவேந்திரன் விநயசம்பன்னனாக நிற்பதைப் போன்று வீற்றிருந்தான். (30)

கிமேஷ வாக்யம் ப4ரதோ(அ)த்3ய ராக4வம்
ப்ரணம்ய ஸத்க்ருத்ய ச ஸாது4 வக்ஷ்யதி ।
இதீவ தஸ்யார்யஜநஸ்ய தத்த்வதோ
பா3ஷ்பம் கௌதூஹலமுத்தமம் ததா3 ॥ (31)

ஸ ராக4வ: ஸத்யத்4ருதிஶ்ச லக்ஷ்மணோ
மஹாநுபா4வோ ப4ரதஶ்ச தா4ர்மிக: ।
வ்ருதா: ஸுஹ்ருத்3பி4ஶ்ச விரேஜுரத்4வரே
யதா2 ஸதா3ஸ்யை: ஸஹிதாஸ்த்ரயோ(அ)க்3நய: ॥ (32)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 த்ர்யதி4கஶததம: ஸர்க3: ॥

சதுரதி4கஶததம: ஸர்க3:

ராமப4ரதஸம்வாத3:

தம் து ராம: ஸமாக்ஞாய ப்4ராதரம் கு3ருவத்ஸலம் ।
லக்ஷ்மணேந ஸஹ ப்4ராத்ரா ப்ரஷ்டும் ஸமுபசக்ரமே ॥ (1)

கிமேததி3ச்சே2யமஹம் ஶ்ரோதும் ப்ரவ்யாஹ்ருதம் த்வயா ।
யஸ்மாத் த்வமாக3தோ தே3ஶமிமம் சீரஜடாஜிந: ॥ (2)

யந்நிமித்தமிமம் தே3ஶம் க்ருஷ்ணாஜிநஜடாத4ர: ।
ஹித்வா ராஜ்யம் ப்ரவிஷ்டஸ்த்வம் தத்ஸர்வம் வக்துமர்ஹஸி ॥ (3)

இத்யுக்த: கைகேயீபுத்ர: காகுத்ஸ்தே2ந மஹாத்மநா ।
ப்ரக்ருஹ்ய பலவத் பூய: ப்ராஞ்ஜலிர் வாக்யமப்ரவீத் ॥ (4)

ஆர்யம் தாத: பரித்யஜ்ய க்ருத்வா கர்ம ஸுது3ஷ்கரம் ।
க3த: ஸ்வர்க3ம் மஹாபா3ஹோ புத்ரஶோகாபி4பீடி3த: ॥ (5)

ஸ்த்ரியா நியுக்த: கைகேய்யா மம மாத்ரா பரந்தப ।
சகார ஸுமஹத்பாபமித3மாத்மயஶோஹரம் ॥ (6)

ஸா ராஜ்யப2லமப்ராப்ய வித4வா ஶோககர்ஶிதா ।
பதிஷ்யதி மஹாகோ4ரே நிரயே ஜநநீ மம ॥ (7)

தஸ்ய மே தா3ஸபூ4தஸ்ய ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ।
அபி4ஷிஞ்சஸ்வ சாத்3யைவ ராஜ்யேந மக4வாநிவ ॥ (8)

இமா: ப்ரக்ருதய: ஸர்வா வித4வா மாதரஶ்ச யா: ।
த்வத்ஸகாஶமநுப்ராப்தா: ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ॥ (9)

அந்தச் சமயத்தில், இராகவனை வணங்கி உபசாரங்கள் செய்துவிட்ட பரதன், அவரிடம், 'என்ன பேசப் போகிறான்?' என்பதை அறிய, அங்கிருந்த மேன்மக்கள் மனத்துடிப்புடன் இருந்தார்கள். (31)

அரசவையில் நண்பர்கள் புடைசூழ விளங்குவது போல சத்தியத்தில் உறுதியுள்ள ஸ்ரீராமன், மகானுபாவனான லட்சுமணன், தருமாத்மாவான பரதன் ஆகிய மூவரும், யாகசாலையில் வேதவித்தகர்களால் சூழப்பட்டிருக்கும் மூன்று அக்னிகள் போல் அப்போது பிரகாசித்தார்கள். (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்று மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்று நான்கு

இராம–பரதனிடையே உரையாடல்

தம்பி இலக்குவனுடன் இருந்த இராமன், பெரியோர்களிடம் (குறிப்பாக, தன்னிடம்) மிகவும் மரியாதை கொண்டவனான தம்பியை (பரதனை) நோக்கிப் பேச ஆரம்பித்தார்— (1)

"மரவுரி, ஜடை, மான்தோல் ஆகியவைகளைத் தரித்துக் கொண்டு (அயோத்தியிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் உள்ள கோரமான காடுகள் அடர்ந்த) இந்தப் பிரதேசத்திற்கு நீ ஏன் வந்தாய்? என்று, நீயே சொல்லிக் கேட்க விரும்புகிறேன். (2)

(மன்னனாக முடிசூட்டிக் கொண்டிருக்க வேண்டிய நீ) மான்தோல், ஜடை தரித்து, நாட்டை விட்டு, எந்த நோக்கத்துடன் இங்கே வந்திருக்கிறாய் என்பதை விளக்கமாகச் சொல்." (3)

காகுத்த இராமன் மேற்கண்டவாறு கேட்டவுடன், தன் நெஞ்சில் துக்கத்தை அடக்கிக் கொண்டு, இரு கைகளையும் கூப்பி, கைகேயியின் மைந்தன் (பின்வரும்) சொற்களைக் கூறினான்— (4)

"பெருந்தோளரான நமது தந்தையார், மகா குணசாலியான தங்களைத் துறத்தல் என்ற மிகவும் கொடூரமான ஒரு காரியத்தைச் செய்துவிட்டு, *பின்னர் புதல்வனைப் பிரிந்த சோகத்தைத்* தாங்கமாட்டாமல் விண்ணுலகம் சென்றடைந்தார். (5)

எதிரிகளை வாட்டுபவரே! என் தாய் எனப்படும் ஒரு பெண்ணின் சொற்களுக்குக் கட்டுப்பட்டு, தன்னுடைய பெரும்புகழை அடியோடு ஒழித்துக்கட்டும் மிகப்பெரிய இந்தப் பாவச்செயலை செய்தார். (6)

என்னுடைய தாயார், (தான் விரும்பிய) அரசாட்சி என்ற பயனைப் பெறவில்லை. (மாறாக) கைம்பெண்ணாகி சோகத்தால் தவிக்கிறாள். (தான் செய்த பாவத்தின் பயனாக) மிகவும் பயங்கரமான நரகத்தில் விழப் போகிறாள். (7)

தங்களுடைய அடிமையாகிய எனக்கு அருள்புரிய வேண்டும். தேவலோகத்தில் இந்திரன் பட்டாபிஷேகம் செய்துகொண்டதைப் போல, தாங்கள் கோசல நாட்டை ஏற்று வேந்தர் வேந்தனாக முடிசூட்டிக் கொள்ள வேண்டும். (8)

முக்கியஸ்தர்களான இந்தக் குடிமக்களும், அமங்கலக்கோலம் பூண்டிருக்கும் தாயார்களும் (இந்தப் பிரார்த்தனையைக் கூறவே) தங்களிடம் வந்திருக்கிறார்கள். அவர்கள் வேண்டுகோளை தாங்கள் அங்கீகரிக்க வேண்டும். (9)

ததா3நுபூர்வ்யா யுக்தம் ச யுக்தம் சாத்மநி மாநத3 ।
ராஜ்யம் ப்ராப்நுஹி த4ர்மேண ஸகாமாந் ஸுஹ்ருத3: குரு ॥ (10)

ப4வத்ஸவித4வா பூ4மி: ஸமக்3ரா பதிநா த்வயா ।
ஶஶிநா விமலேநேவ ஶாரதீ3 ரஜநீ யதா2 ॥ (11)

ஏபி4ஶ்ச ஸசிவை: ஸார்த4ம் ஶிரஸா யாசிதோ மயா ।
ப்4ராது: ஶிஷ்யஸ்ய தா3ஸஸ்ய ப்ரஸாத3ம் கர்துமர்ஹஸி ॥ (12)

ததி3த3ம் ஶாஶ்வதம் பித்ர்யம் ஸர்வம் ப்ரக்ருதிமண்ட3லம் ।
பூஜிதம் புருஷவ்யாக்4ர நாதிக்ரமிதுமர்ஹஸி ॥ (13)

ஏவமுக்த்வா மஹாபா3ஹு: ஸபா3ஷ்ப: கைகயீஸுத: ।
ராமஸ்ய ஶிரஸா பாதெ3ள ஜக்3ராஹ விதி4வத்புந: ॥ (14)

தம் மத்தமிவ மாதங்க3ம் நி:ஶ்வஸந்தம் புந: புந: ।
ப்4ராதரம் ப4ரதம் ராம: பரிஷ்வஜ்யேத3மப்3ரவீத் ॥ (15)

குலீந: ஸத்த்வஸம்பந்நஸ் தேஜஸ்வீ சரிதவ்ரத: ।
ராஜ்யஹேதோ: கத2ம் பாபமாசரேந்மத்3விதே4 ஜந: ॥ (16)

ந தே3ஷம் த்வயி பஶ்யாமி ஸுக்ஷ்மமப்யரிஸூத3ந ।
ந சாபி ஜநநீம் பா3ல்யாத் த்வம் விக3ர்ஹிதுமர்ஹஸி ॥ (17)

காமகாரோ மஹாப்ராக்ஞ குஶ்ரூணாம் ஸர்வதா3நக4 ।
உபபந்நேஷு தா3ரேஷு புத்ரேஷு ச விதீ4யதே ॥ (18)

வயமஸ்ய யதா2 லோகே ஸங்க்2யாதா: ஸௌம்ய ஸாது4பி4: ।
பா4ர்யா: புத்ராஶ்ச ஶிஷ்யாஶ்ச த்வமபி ஞாதுமர்ஹஸி ॥ (19)

வநே வா சீரவஸநம் ஸௌம்ய க்ருஷ்ணாஜிநாம்ப3ரம் ।
ராஜ்யே வாபி மஹாராஜோ மாம் வாஸயிதுமீஶ்வர: ॥ (20)

யாவத்பிதரி தி4ர்மக்ஞே கெ3ளரவம் லோகஸத்க்ருதே ।
தாவத்தி3தி4ர்மப்4ருதாம் ஶ்ரேஷ்ட2 ஜநந்யாமபி கெ3ளரவம் ॥ (21)

ஏதாப்4யாம் தி4ர்மஶீலாப்4யாம் வநம் க3ச்சே2தி ராக4வ ।
மாதாபித்ருப்4யாமுக்தோঽஹம் கத2மந்யத்ஸமாசரே ॥ (22)

த்வயா ராஜ்யமயோத்4யாயாம் ப்ராப்தவ்யம் லோகஸத்க்ருதம் ।
வஸ்தவ்யம் த3ண்ட3காரண்யே மயா வல்கலவாஸஸா ॥ (23)

அனைவரையும் கௌரவிக்கும் பெருமையுடையவரே! (மூத்த புதல்வனுக்கே அரசுரிமை என்ற) பரம்பரை வழக்கப்படி சரியானதும், அதனால் நியாயப்படி தங்களுக்கே கிடைக்க வேண்டியதுமான அரசை ஏற்றுக்கொண்டு நண்பர்களையெல்லாம் மனோரதம் கைகூடியவர்களாகச் செய்யுங்கள். (10)

சரத்காலத்தில் (மேக சஞ்சாரமில்லாத ஆகாயத்தில்) மாசற்ற முழுநிலவின் ஒளியால் இரவு நேரம் பிரகாசிப்பது போல, இந்தப் பூமண்டலம் முழுவதும் தங்களைத் தலைவராகப் பெற்று மங்கலமாக விளங்கட்டும். (11)

நான், தங்களுடைய சகோதரன்; சிஷ்யன்; அடிமை. இங்குள்ள அமைச்சர்களோடு தலைவணங்கிப் பிரார்த்திக்கிறேன். எனக்குத் தாங்கள் அருள்புரிய வேண்டும். (12)

ஆண்புலி நிகர் வீரரே! இங்குள்ள ஜீவப் பிராணி, தாவர ராசிகள் எல்லாம் பன்னெடுங்காலமாக நமது முன்னோர்களால் நன்றாக பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளன. அந்த முறையை தாங்கள் மீறிச் செல்லக்கூடாது.'' (13)

இவ்வாறு சொல்லிவிட்டு, மகாவீரனான பரதன் கண்களில் நீர் சொரிய இராமபிரானுடைய திருவடிகளில் (சரணாகதி செய்யும்) முறைப்படி மீண்டும் நமஸ்காரம் செய்தான். (14)

அப்போது மதங்கொண்ட யானைபோல் இடைவிடாது பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்த சகோதரனான பரதனை, இராமன் அன்புடன் அணைத்துக் கொண்டு பின்வருமாறு கூறினார்— (15)

''நற்குடியில் பிறந்த, நற்குணங்கள் நிறைந்த மகாவீரியவானும் அறநெறி வழுவாதவனுமான என்னைப் போன்ற ஒருவன், அரசாட்சியை அடைய வேண்டும் என்ற காரணத்திற்காக (தந்தையின் கட்டளையை மீறுதல் என்ற) பாவத்தைச் செய்யத் துணிவானா? (16)

எதிரிகளை அடக்குபவனே! நான், உன்னிடம் கடுகளவு குற்றத்தையும் பார்க்கவில்லை. (நீ, குற்றமற்றவன் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன்.) மேலும், மதிமயக்கத்தினால் உன் அன்னையை நீ இகழ்ந்து பேசக்கூடாது. (17)

மாசற்றவனே! பேரறிவாளனே! அறநூல்படி, தமக்கு மிகவும் விருப்பமான மனைவி–புதல்வர்களை, தம் இஷ்டப்படி ஆணையிடும் அதிகாரம் தந்தைமார்களுக்கு இருக்கிறது. (18)

சீலத்திருவாளனே! நம் தாய்மார்களும், புத்திரர்களான நாம் எல்லோரும் உலகிலுள்ள சான்றோர்களால், மாமன்னரின் அன்பிற்குரிய மனைவிகள் எனவும், புதல்வர்கள் எனவும், கட்டளைப்படி நடக்கும் சீடர்கள் எனவும் போற்றப்படுகிறோம் என்பதை நீயும் உணர்ந்து கொள்ளவேண்டும். (19)

நற்குணம் நிறைந்தவனே! மரவுரியும் மான்தோலும் உடுத்திக் கொண்டு காட்டில் வசிக்கச் சொல்வதற்கும், அல்லது (சிம்மாசனத்தில் அமர்ந்து) ஆட்சி செலுத்தும்படி கூறுவதற்கும் மாமன்னரான அவருக்கு அதிகாரம் உண்டு. (20)

தருமப்பற்றுடையவர்களில் தலைசிறந்தவனே! உலக மக்கள் அனைவராலும் கௌரவிக்கப்பட்டவரும் அறம் வழுவாதவருமான தந்தையின்பால் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறோமோ, அதே அளவு மதிப்பை, பெற்ற தாயினிடத்தில் வைக்கப்பட வேண்டும். (21)

ரகுநந்தனா! தருமசீலர்களும், தாய்–தந்தையருமான (தசரதர்–கைகேயி ஆகிய) இவ்விருவராலும், 'காட்டிற்குப் போ' என்று ஆணையிடப்பட்ட நான், அதற்கு மாறாக எவ்வாறு நடப்பேன்? (22)

'நீ, உலகத்தோரால் போற்றப்படும் கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியை அடைய வேண்டும்; நான், மரவுரி உடுத்திக் கொண்டு தண்டகாரண்யத்தில் வசிக்கவேண்டும்.' (23)

ஏவம் க்ருத்வா மஹாராஜோ விப4ாக3ம் லோகஸந்நிதெ4ள ।
வ்யாதி3ஶ்ய ச மஹாதேஜா தி3வம் த3ஶரதே2ா க3த: ॥ (24)

ஸ ச ப்ரமாணம்" த4ர்மாத்மா ராஜா லோககு3ருஸ்தவ ।
பித்ரா த3த்தம் யத2ாப4ாக3முபபே4ாக்தும் த்வமர்ஹஸி ॥ (25)

சதுர்த3ஶ ஸமா: ஸௌம்ய த3ண்ட3காரண்யமாஶ்ரித: ।
உபபே4ாக்ஷ்யே த்வஹம் த3த்தம் பா4க3ம் பித்ரா மஹாத்மநா ॥ (26)

யத3ப்3ரவீந்மாம் நரலோகஸத்க்ருத:
பிதா மஹாத்மா விபு3த4ாதி4போபம: ।
ததே3வ மந்யே பரமாத்மநோ ஹிதம்
ந ஸர்வலோகேஶ்வர பா4வமப்யஹம் ॥ (27)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 சதுரதி4கஶததம: ஸர்க3: ॥

பஞ்சாதி4கஶததம: ஸர்க3:

ராமவாக்யம்

தத: புருஷஸிம்ஹாநாம் வ்ருதாநாம் தை: ஸுஹ்ருத்3க3ணை: ।
ஶோசதாமேவ ரஜநீ து3:கே2ந வ்யத்யவர்தத ॥ (1)

ரஜந்யாம் ஸுப்ரபா4தாயாம் ப்4ராதரஸ்தே ஸுஹ்ருத்3வ்ருதா: ।
மந்த்ராகிந்யாம் ஹுதம் ஜப்யம் க்ருத்வா ராமமுபாக3மந் ॥ (2)

தூஷ்ணீம் தே ஸமுபாஸீநா ந கஶ்சித்கிஞ்சித3ப்3ரவீத் ।
ப4ரதஸ்து ஸுஹ்ருந்மத்4யே ராமம் வசநமப்3ரவீத் ॥ (3)

ஸாந்த்விதா மாமிகா மாதா த3த்தம் ராஜ்யமித3ம் மம ।
தத்3த3த்3மி தவைவாஹம் பு4ங்க்ஷ்ய ராஜ்யமகண்டகம் ॥ (4)

மஹதேவாம்பு3வேகே3ந பி4ந்ந: ஸேதூர்ஜலாக3மே ।
து3ராவாரம் த்வதா3ந்யேந ராஜ்யக2ண்ட3மித3ம் மஹத் ॥ (5)

க3திம் க2ர இவாஶ்வஸ்ய தார்க்ஷ்யஸ்யேவ பதத்ரிண: ।
அநுக3ந்தும் ந ஶக்திர்மே க3திம் தவ மஹீபதே ॥ (6)

மகாதேஜஸ்வியான மாமன்னர் தசரதர், மக்களவையில் மேற்கண்டவாறு தனித்தனியே பிரிவினை செய்து ஆணையிட்ட பின்னர் மேலுலகம் சென்றார். (24)

தருமாத்மாவும் உலகத் தலைவருமான அந்த மன்னர்தான், உனக்கு ஆணையிடும் அதிகாரம் படைத்த உச்சநிலை அதிகாரி. எனவே, தந்தையாரால் கொடுக்கப்பட்ட பாகத்தை (அரசு பரிபாலனத்தை) உள்ளபடி அனுபவிப்பதற்கு உரிமையுள்ளவன் நீதான். (25)

புண்ணியாத்மாவே! மகாத்மாவான தந்தையாரால் எனக்கு அளிக்கப்பட்ட தண்டகாரண்யத்தில் இருந்து கொண்டு, நான் பதிநான்கு ஆண்டுகளைக் கழிப்பேன். (26)

உலக மக்களால் மதிக்கப்பட்டவரும், தேவர்கள் தலைவனான இந்திரனுக்கு நிகரானவரும், மகாத்மாவுமான தந்தையார், எனக்கு என்ன உத்திரவிட்டாரோ, அதுதான் எனக்கு நன்மையை அளிப்பது என்று கருதுகிறேன். அதற்குமாறாக, எல்லா உலகங்களுக்கும் தலைவனாக (பிரும்மாவாக) இருக்கும் பதவியைக்கூட நான் (எனக்கு நலன் விளைவிப்பதாக) எண்ணவில்லை." (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்று நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.



ஸர்க்கம் : நூற்றைந்து

இராமன் தருமத்தைக் கூறுவது

நண்பர்களோடு கூடியிருந்த, சிந்தனையில் மூழ்கியிருந்த இராமன் முதலான சகோதரர்களுக்கு அந்த இரவு துக்கத்துடனேயே கழிந்தது. (1)

இரவு கழிந்து, பொழுது புலர்ந்தவுடன் அந்தத் தம்பிகள் (மூவரும்) மந்தாகினி நதியில் நீராடிவிட்டு, ஜப–ஹோமங்களைச் செய்து முடித்து, அன்பர்கள் புடைசூழ இராமனை வந்தடைந்தார்கள். (2)

மௌனமாகவே உட்கார்ந்திருந்த அவர்களில் யாரும் எதுவும் பேசவில்லை. நண்பர்கள் கூடியிருக்கும் அந்த நேரத்தில் பரதன், இராமனைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்— (3)

"என்னுடைய தாய், (தந்தையிடமிருந்து) தருமநெறிப்படி (வரதானத்தைப் பெற்று) திருப்தி செய்விக்கப்பட்டாள். இந்த அரசாட்சி, என்னுடைய தாயாரால் எனக்குக் கொடுக்கப்பட்டது. (எனவே, இந்த ராஜ்யத்தின் மீது முழு உரிமையும் என்னுடையதே என்பது நிச்சயம்.) அதை, நானாகவே தங்களுக்குக் காணிக்கை ஆக்குகிறேன். (இந்த ஏற்பாட்டில் தரும விரோதம் எதுவும் காணப்படவில்லையே?) தாங்கள், இந்த ராஜ்யம் முழுவதையும் ஏற்றுப் பரிபாலனம் செய்ய வேண்டும். (4)

மழைக்காலத்தில் பெரும் வெள்ளத்தினால் உடைந்துபோன அணையை செப்பனிட முடியாதது போல, விசாலமான (கோசல) நாட்டுப் பிரதேசத்தைத் தங்களைத் தவிர வேறு எவராலும் நிர்வகிக்க முடியாது. (வெள்ளம் வடிந்த பின்னர்தான் அணையைக் கட்ட முடியும்; அதுபோல, தாங்கள் வந்து அரசாட்சியை ஏற்றுக் கொண்டால்தான் அயோத்தியின் கட்டுக்கோப்பு குலையாதிருக்கும்.) (5)

உலகாளும் மன்னரே! வேகமாக ஓடும் குதிரைக்கு ஈடாகுமா, கழுதை? கருடனுடைய மகாவேகத்துடன் ஒரு சின்னஞ்சிறு பறவையை ஒப்பிட முடியுமா? (தாங்கள் கருடன்; நான் ஒரு குருவி.) தங்களுடைய ஈடு–இணையற்ற நிர்வாகத் திறனை அனுசரித்துச் செல்லும் சக்தி எனக்கு இல்லை. (6)

ஸுஜீவம் நித்யஶஸ்தஸ்ய ய: பரைருபஜீவ்யதே ।
ராம தேந து து3ர்ஜீவம் ய: பராநுபஜீவதி ॥ (7)

யத2ா து ரோபிதோ வ்ருக்ஷ: புருஷேண விவர்தி4த: ।
ஹ்ரஸ்வகேந து3ராரோஹோ ரூட4ஸ்கந்தே4ா மஹாத்3ரும: ॥ (8)

ஸ யத2ா புஷ்பிதோ பூ4த்வா ப2லாநி ந நித3ர்ஶயேத் ।
ஸ தாம் நாநுப4வேத்ப்ரீதிம் யஸ்ய ஹேதோ: ப்ரரோபித: ॥ (9)

ஏஷோபமா மஹாப3ாஹோ தமர்த2ம் வேத்துமர்ஹஸி ।
யதி3 த்வமஸ்மாந் வ்ருஷபே4ா ப4ர்தா ப்4ருத்யாந்ந ஶாதி4 ஹி ॥ (10)

ஶ்ரேணயஸ்த்வாம் மஹாராஜ பஶ்யந்த்வக்3ர்யாஶ்ச ஸர்வஶ: ।
ப்ரதபந்தமிவாதி3த்யம் ராஜ்யே ஸ்தி2தமரிந்த3மம் ॥ (11)

தவாநுயாநே காகுத்ஸ்த2 மத்தா நர்த3ந்து குஞ்ஜரா: ।
அந்த:புரக3தா நார்யோ நந்த3ந்து ஸுஸமாஹிதா: ॥ (12)

தஸ்ய ஸாத்4வித்யமந்யந்த நாக3ரா விவித4ா ஜநா: ।
ப4ரதஸ்ய வச: ஶ்ருத்வா ராமம் ப்ரத்யநுயாசத: ॥ (13)

தமேவம் து3:கி2தம் ப்ரேக்ஷ்ய விலபந்தம் யஶஸ்விநம் ।
ராம: க்ருதாத்மா ப4ரதம் ஸமாஶ்வாஸயத3ாத்மவாந் ॥ (14)

நாத்மந: காமகாரோऽஸ்தி புருஷோऽயமநீஶ்வர: ।
இதஶ்சேதரதஶ்சைநம் க்ருதாந்த: பரிகர்ஷதி ॥ (15)

ஸர்வே க்ஷயாந்தா நிசயா: பதநாந்தா: ஸமுச்ச்2ரயா: ।
ஸம்யோக3ா விப்ரயோக3ாந்தா மரணாந்தம் ச ஜீவிதம் ॥ (16)

யத2ா ப2லாநாம் பக்வாநாம் நாந்யத்ர பதநாத்3ப4யம் ।
ஏவம் நரஸ்ய ஜாதஸ்ய நாந்யத்ர மரணாத்3ப4யம் ॥ (17)

யத2ாக3ாரம் த்3ருட4ஸ்தூ2ணம் ஜீர்ணம் பூ4த்வாவஸீத3தி ।
தத3ாவஸீத3ந்தி நரா ஜராம்ருத்யுவஶம் க3தா: ॥ (18)

அத்யேதி ரஜநீ யா து ஸா ந ப்ரதிநிவர்ததே ।
யாத்யேவ யமுநா பூர்ணா ஸமுத்3ரம் லவணார்ணவம் ॥ (19)

அஹோராத்ராணி க3ச்ச2ந்தி ஸர்வேஷாம் ப்ராணிநாமிஹ ।
ஆயூம்ஷி க்ஷபயந்த்யாஶு க்3ரீஷ்மே ஜலமிவாம்ஶவ: ॥ (20)

இராமா! எவனுடைய உதவியை நாடிவந்து மக்கள் வாழ்க்கை நடத்துகிறார்களோ, அவனுடைய வாழ்க்கையே உத்தமமானது; எவனொருவன் பிறருடைய ஆதரவில் வாழ்க்கை நடத்துகிறானோ, அவனுடைய வாழ்வு கஷ்டமானது. (7)

மாபெரும் வீரரே! பழத்தில் விருப்பம் கொண்ட ஒரு மனிதன் விதை விதைக்கிறான்; அது செழித்து வளர்ந்து பல கிளைகள் உடையதான பெரிய மரமாக உயர்ந்து நிற்கிறது; ஒரு குள்ள மனிதனால் அதில் ஏற முடியாது. அந்த மரத்தில் பூக்கள் மலர்ந்தன; ஆனால், காய்–பழம் தோன்றவேயில்லை என்றால், எந்தக் காரணத்திற்காக மரம் வளர்க்கப்பட்டதோ, அந்த விருப்பம் நிறைவேறாமற்போகிறது. (தாங்கள் செய்கையும் இதுபோலவே இருக்கிறது?) (தாங்கள் ராஜ்யத்தை ஆளவேண்டும் என்பது அரசரின் விருப்பம். அந்த விருப்பம் நிறைவேறாமற்போனால், தங்களைப் புதல்வனாக அடைந்ததன் பயனே இல்லாமல் போய்விடும்.) நான் சொல்கிற இந்த உதாரணத்தைத் தாங்கள் புரிந்து கொள்வீர்கள். ஆணேறு போன்ற தாங்கள் பணியாளர்களான எங்களுடைய போஷகர்; தலைவர். தாங்கள் எங்களை ஆட்சி செய்ய இசையவில்லை என்றால் முன்னர் கூறிய உதாரணங்கள் தங்கள் விஷயத்திலும் பொருத்தமாகிவிடும். (8–10)

பேரரசரே! எதிரிகளை அடக்கும் தாங்கள் செஞ்சுடர்விட்டுப் பிரகாசிக்கும் சூரியனைப் போல, அரசு கட்டிலில் வீற்றிருந்து ஆட்சி செய்வதை எல்லா வகுப்பு மக்களும் பிரமுகர்களும் கண்டு களிக்கட்டும். (11)

காகுத்தரே! தாங்கள் பவனி வரும்போது உற்சாகங்கொண்ட யானைகள், உரத்த குரலில் பிளிறட்டும்; அந்தப்புரத்து நாரீமணிகள் முக மலர்ச்சியோடு வாழ்த்தி வரவேற்கட்டும்." (12)

இராமனை மன்றாடிப் பிரார்த்திக்கும் பரதனுடைய சொற்களைக் கேட்டுக் கொண்டிருந்த, பட்டணத்திலிருந்து வந்திருந்த பலதரப்பட்ட மக்களும், 'ரொம்ப சரி' என்று எண்ணி மகிழ்ந்தார்கள். (13)

மிகவும் மனத்தூய்மையுடையவரும் புலன்களை வென்றவருமான இராமன், புகழ்பெற்ற பரதன் இவ்வாறு துக்கத்துடன் புலம்பிக் கொண்டிருப்பதைப் பார்த்து(ப் பின்வருமாறு கூறி) தேற்றியருளினார்— (14)

"எந்த மனிதனும் தன் இஷ்டம் போல் நடக்க முடியாது; அவனுக்கு அந்த உரிமை இல்லை. வினைப்பயன் அவனை இங்குமங்குமாகத் துரத்தி அலைக்கழிக்கிறது. (15)

சேர்த்து வைக்கப்பட்ட செல்வங்கள் எல்லாம் முடிவில் அழிந்துதான் போகும்; பெரும் பதவியில் இருப்பவர்கள் கீழே விழுகிறார்கள்; சேர்க்கை (மனைவி–மக்கள்–நட்பு–உறவு) எல்லாம் இறுதியில் பிரிந்துதான் போகும்; உயிரின் முடிவு மரணம். (16)

மரத்தில் நன்றாக பழுத்துவிட்ட பழங்களுக்கு, 'தாம் விழுந்துவிடுவோமோ?' என்பதைத் தவிர வேறு பயமில்லை; அதுபோல பிறவி எடுத்துவிட்ட மனிதனுக்கு, 'மரணம் வந்துவிடுமே?' என்பதைக் காட்டிலும் வேறு பயமில்லை. (17)

உறுதியான தூண்களையுடைய ஒரு கட்டிடம் நாட்கள் செல்லச் செல்ல, தன் வலிமையிழந்து இடிந்து விழுகிறது. அவ்விதமே, மனிதர்கள் முதுமை–மரணங்களுக்கு ஆட்பட்டவர்களாகி அழிந்து போகிறார்கள். (18)

கழிந்து போன இரவு எப்படியும் திரும்பி வருவதில்லை; உப்புக் கடலை சென்றடையும் யமுனை நதியின் தூய நீர் கடலுடன் கலந்தேவிடுகிறது. (திரும்பவும் யமுனையின் தூய நீராக ஆவதில்லை.) (19)

கோடைக் காலத்தில் சூரியனின் வெம்மைக் கிரணங்கள் வேகமாகத் தண்ணீரை உறிஞ்சிவிடுவதைப் போல, இவ்வுலகில் எல்லாப் பிராணிகளுக்கும் வாழ்நாளை குறைத்துக் கொண்டு இரவு–பகல்கள் கழிந்து கொண்டிருக்கின்றன. (20)

ஆத்மாநாமநுஶோச த்வம் கிமந்யமநுஶோசஸி ।
ஆயுஸ்தே ஹ்ரியதே யஸ்ய ஸ்தி2தஸ்ய ச க3தஸ்ய ச ॥ (21)

ஸஹைவ ம்ருத்யுர்வ்ரஜதி ஸஹ ம்ருத்யுர்நிஷீத3தி ।
க3த்வா ஸுதீ3ர்க4மத்4வாநம் ஸஹம்ருத்யுர்நிவர்ததே ॥ (22)

க3த்ரேஷு வலய: ப்ராப்தா: ஶ்வேதாஶ்சைவ ஶிரோருஹா: ।
ஜரயா புருஷோ ஜீர்ண: கிம் ஹி க்ருத்வா ப்ரப4வயேத் ॥ (23)

நந்த3ந்த்யுதி3த ஆதி3த்யே நந்த3ந்த்யஸ்தமிதே ரவௌ ।
ஆத்மநோ நாவபு3த்4யந்தே மநுஷ்யா ஜீவிதக்ஷயம் ॥ (24)

ஹ்ருஷ்யந்த்யர்துமுக2ம் த்3ருஷ்ட்வா நவம் நவமிஹாக3தம் ।
ருதூநாம் பரிவர்தேந ப்ராணிநாம் ப்ராணஸம்க்ஷய: ॥ (25)

ய2தா காஷ்ட2ம் ச காஷ்ட2ம் ச ஸமேயாதாம் மஹார்ணவே ।
ஸமேத்ய ச வ்யபேயாதாம் காலமாஸாத்3ய கஞ்சந ॥ (26)

ஏவம் ப4ார்யாஶ்ச புத்ராஶ்ச க்ஞாதயஶ்ச த3நாநி ச ।
ஸமேத்ய வ்யவத4ாவந்தி த்4ருவோ ஹ்யேஷாம் விநாப4வ: ॥ (27)

நாத்ர கச்சித்3யத2ாப4ாவம் ப்ராணீ ஸமபி4வர்ததே ।
தேந தஸ்மிந்ந ஸாமர்த்2யம் ப்ரேதஸ்யாஸ்த்யநுஶோசத: ॥ (28)

யத2ா ஹி ஸார்த2ம் க3ச்ச2ந்தம் ப்3ரூயாத்கஶ்சித்பதி2 ஸ்தி2த: ।
அஹமப்யாக3மிஷ்யாமி ப்ருஷ்ட2தோ ப4வதாமிதி ॥ (29)

ஏவம் பூர்வைர்க3தோ மார்க3: பித்ருபைதாமஹோ த்4ருவ: ।
தமாபந்ந: கத2ம் ஶோசேத்3யஸ்ய நாஸ்தி வ்யதிக்ரம: ॥ (30)

வயஸ: பதமாநஸ்ய ஸ்ரோதஸோ வாऽநிவர்திந: ।
ஆத்மா ஸுகே2 நியோக்தவ்ய: ஸுக2ப4ாஜ: ப்ரஜா: ஸம்ருதா: ॥ (31)

த4ர்மாத்மா ஸ ஶுபை4: க்ருத்ஸ்ந: க்ரதுபி4ஶ்சாப்ததா3க்ஷிண: ।
தூ4தபாபோ க3த: ஸ்வர்க3ம் பிதா ந: ப்ருதி2வீபதி: ॥ (32)

ப்4ருத்யாநாம் ப4ரணாத்ஸம்யக் ப்ரஜாநாம் பரிபாலநாத் ।
அர்த2ாத்3நாச்ச த4ர்மேண பிதா நஸ்த்ரிதி3வம் க3த: ॥ (33)

உன் வாழ்நாள் குறைந்து கொண்டே இருக்கிறது. எனவே, நீ, உன்னைப் பற்றியே நினைத்துப் பார்; இங்கே உயிருடன் இருப்பவன், அல்லது, போய்விட்ட பிறரைப் பற்றி ஏன் வருத்தப்படுகிறாய்? (21)

காலன், (பிராணிகளின்) கூடவே நடக்கிறான்; காலன், கூடவே உட்காருகிறான்; காலன், கூடவே வெகுதூரம் வரை சென்று திரும்புகிறான். (22)

சரீரத்தில் சுருக்கங்கள் உண்டாகிவிட்டன; தலைமுடி நரைத்துப் போய்விட்டது; முதுமையினால் மனிதன் பலம் இழக்கிறான்! உண்மையான நிலை இப்படி இருக்கும்போது, அவன் எந்த உபாயத்தின் மூலம் சாவிலிருந்து தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியும்? (23)

சூரியன் உதயமானவுடன் மனிதன் மகிழ்ச்சி அடைகிறான்; சூரியன் மறைந்த பின்னும் மகிழ்கிறான். ஆனால், (அந்தோ, பரிதாபம்!) தம் வாழ்வின் ஒரு நாள் குறைந்துவிட்டதை மனிதர்கள் உணர்ந்து கொள்வதில்லை. (24)

ஒவ்வொரு பருவ காலமும் தோன்றும்போது, அப்போதுதான் முதன்முறையாகத் தோன்றியதைப் போன்று மனிதன் மனம் துள்ளுகிறான்; (உலகம் தோன்றிய நாளிலிருந்து ஏற்படும்) பருவ காலங்களின் மாறுதலால் ஜீவன்களுக்கு வாழ்நாள் குறைந்து கொண்டே வருகிறது (என்பதை உணர்வதில்லை). (25)

பெருங்கடலில் (தனித்தனியே மிதந்து கொண்டிருக்கும்) இரண்டு மரக்கட்டைகள் ஒரு சமயத்தில் ஒன்று சேரும்; கொஞ்ச நேரத்தில் கூடியிருந்த அவை பிரிந்து சென்றுவிடும். அதுபோலவே, மனைவி–புதல்வர்–உறவினர்–செல்வங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்திருந்து பிரிந்துவிடுகின்றன. இந்தப் பிரிவு நிச்சயம் நடைபெறவே செய்கிறது. (26,27)

இந்த உலகில் எந்தவொரு பிராணியும் தன் வினைப்பயனை மாற்றவே முடியாது என்பதால், இறந்துபோனவனுக்காக (உயிரோடிருக்கும்) ஒருவன் அதிக சோகத்தில் மூழ்குவதால், அவனுக்கு எந்தப் பயனும் உண்டாவதில்லை. (அவன் தன்னுடைய கடைசி நாளை தள்ளிப்போட இயலாது.) (28)

பாதையோரத்தில் நிற்கும் ஒருவன், அந்தச் சாலையில் சென்று கொண்டிருக்கும் ஒரு கூட்டத்தினரைப் பார்த்து, 'நான் உங்கள் பின்னாலேயே வருகிறேன்' என்று கூறி, (மன நிம்மதியுடன்) அவர்களுடன் செல்கிறான். அவ்வாறே, நமது முன்னோர்களான தந்தை–பாட்டன்மார் சென்று காட்டிய அறநெறி உறுதியானது. (தவறான இடத்திற்குக் கொண்டு போய் விடுமோ? என்ற சந்தேகத்திற்கு இடமளிக்காதது.) அதை மீறி நடக்காமல், அதன் வழியே செல்பவன் எவ்வாறு வருத்தப்படுவான்? (29,30)

நதியின் நீரோட்டம் பின்னோக்கி இயங்குவதில்லை; (கழிந்துபோன நாட்கள் திரும்புவதில்லை.) ஆயுட்காலம் குறைந்துகொண்டே போகிறபடியால், ஆத்மாவை மோட்சம் என்ற பேரானந்தப் பெருவெள்ளத்தை நோக்கிச் செலுத்தவேண்டும். (அறநெறியை உறுதியாகப் பின்பற்றுவதில் மனத்தைச் செலுத்தவேண்டும்.) ஏனென்றால், மக்கள் பேரின்பத்தைப் பெறும் உரிமை பெற்றவர்கள். (31)

உலகாண்ட மன்னரான நமது தந்தையார் அறத்தையே மூச்சாகக் கொண்டவர்; ஏராளமான தட்சிணை கொடுத்து, எல்லா வகையான சுபமான வேள்விகளையும் நடத்தி பாவமற்றவராக விண்ணுலகம் சென்றுவிட்டார். (32)

நமது தந்தையார், தன் பணியாளர்களை நன்றாகப் போஷித்தார்; குடிமக்களைப் பரிபாலித்தார்; எல்லோருக்கும் செல்வங்களை வாரி வழங்கினார். இந்தத் தருமானுஷ்டானத்தின் பயனாக தேவருலகம் சென்றடைந்தார். (33)

கர்மபி4ஸ்து ஶுபை4ரிஷ்டை: க்ரதுபி4ஶ்சாப்ததை3ரக்ஷிணை: ।
ஸ்வர்கம்3 த3ஶரத2: ப்ராப்த: பிதா ந: ப்ருதி2வீபதி: ॥ (34)

இஷ்ட்வா ப3ஹுவிதை4ர்யக்ஞைர்பே4காந்3ஶ்சாவாப்ய புஷ்கலாந் ।
உத்தமம் சாயுராஸாத்3ய ஸ்வர்க3த: ப்ருதி2வீபதி: ॥ (35)

ஆயுருத்தமமாஸாத்3ய பே4காந்3நபி ச ராக4வ: ।
ஸ ந ஶோச்ய: பிதா தாத ஸ்வர்க3த: ஸத்க்ருத: ஸதாம் ॥ (36)

ஸ ஜீர்ணம் மாநுஷம் தே3ஹம் பரித்யஜ்ய பிதா ஹி ந: ।
தை3வீம்ருத்3தி4மநுப்ராப்தோ ப்3ரஹ்மலோகவிஹாரிணீம் ॥ (37)

தம் து நைவம்வித4: கஶ்சித்ப்ராக்ஞ: ஶோசிதுமர்ஹதி ।
தத்3விதே4 யத்3வித4ஶ்சாஸி ஶ்ருதவாந் பு3த்3தி4மத்தர: ॥ (38)

ஏதே ப3ஹுவித4ா: ஶோகா விலாபருதி3தே ததா2 ।
வர்ஜநீயா ஹி தீ4ரேண ஸர்வாவஸ்தா2ஸு தீ4மதா ॥ (39)

ஸ ஸ்வஸ்தோ2 ப4வ மா ஶோகா யாத்வா சாவஸ தாம் புரீம் ।
ததா2 பித்ரா நியுக்தோऽஸி வஶிநா வத3தாம் வர ॥ (40)

யத்ராஹமபி தேநைவ நியுக்த: புண்யகர்மணா ।
தத்ரைவாஹம் கரிஷ்யாமி பிதுரார்யஸ்ய ஶாஸநம் ॥ (41)

ந மயா ஶாஸநம் தஸ்ய த்யக்தும் ந்யாய்யமரிந்த3ம ।
ஸ த்வயாபி ஸதா3 மாந்ய: ஸ வை ப3ந்து4: ஸ ந: பிதா ॥ (42)

தத்3வச: பிதுரேவாஹம் ஸம்மதம் த4ர்மசாரிணாம் ।
கர்மணா பாலயிஷ்யாமி வநவாஸேந ராக4வ ॥ (43)

த4ார்மிகேணாந்ருஶம்ஸேந நரேண கு3ருவர்திநா ।
ப4விதவ்யம் நரவ்யாக்4ர பரலோகம் ஜிகீ3ஷதா ॥ (44)

ஆத்மாநமநுதிஷ்ட2 த்வம் ஸ்வப4ாவேந நரர்ஷப4 ।
நிஶாம்ய து ஶுப4ம் வ்ருத்தம் பிதுர்த3ஶரத2ஸ்ய ந: ॥ (45)

இத்யேவமுக்த்வா வசநம் மஹாத்மா பிதுர்நிதே3ஶப்ரதிபாலநார்த2ம் ।
யவீயஸம் ப்ர4ாதரமர்த2வச்ச ப்ரபு4முஹூர்தாத்3விரராம ராம: ॥ (46)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 பஞ்சாதி4கஶததம: ஸர்க3: ॥

நம்முடைய பிதாவான தசரத சக்கரவர்த்தி உரிய தட்சிணைகளை வழங்கி யாகங்கள் செய்தார்; மிக்க நல்ல பயன்களை அளிக்கும் பொதுநலப் பணிகளைச் செய்தார். இவற்றின் விளைவாக சுவர்க்கத்தை அடைந்தார். (34)

பூமண்டலநாயகர் (தசரதர்), பல்வகை விருப்பங்களைப் பூர்த்தி செய்யக்கூடிய யாகங்களைச் செய்து, அளவிட முடியாத போகங்களைப் பெற்று, நீண்டகாலம் நல்வாழ்க்கை வாழ்ந்துவிட்டு மேலுலகம் சென்றுவிட்டார். (35)

குழந்தாய்! (மாமன்னர் ரகுவின் வழித்தோன்றலான நமது) தந்தை மிக நீண்டகாலம் உயிர் வாழ்ந்து, எல்லா போகங்களையும் அனுபவித்துவிட்டு, சான்றோர்களால் போற்றப்பட்டு விண்ணுலகம் ஏகியுள்ளார்; அவரைப் பற்றி வருத்தப்பட வேண்டாம். (36)

நலிவடைந்துவிட்ட மானுட தேகத்தைத் துறந்து, பிரும்மலோகத்தில் இருப்பதற்கான தேவ சரீரத்தைப் பெற்றிருக்கிறார், நமது தந்தை – என்பது திண்ணம். (37)

(நற்கதியையே அடைந்திருக்கும்) அவர் விஷயத்தில் எந்தவொரு புத்திமானும் துக்கப்பட மாட்டான். நல்ல கேள்வி ஞானமுடையவனும், அறிவாளிகளில் சிறந்தவனுமான நீ, அதற்கேற்ப நடக்க வேண்டுமே தவிர, இப்படி (சோகப்பட்டுக் கொண்டு) இருக்கிறாயே? (38)

தீரமும் அறிவும் பொருந்தியவன், பலவகையான சோகங்கள்–புலம்புதல்–கண்ணீர்விடுதல் ஆகிய சோக வெளிப்பாடுகள் அனைத்தையும் அறவே நீக்கிவிடவேண்டும். (39)

பேச்சில் வல்லவனே! மன அமைதியை அடைவாயாக; துக்கப்படவேண்டாம். நீ, அந்த நகரத்திற்கே (அயோத்திக்கே) சென்று வசிக்கவேண்டும். புலன்களை கட்டுப்பாட்டில் வைத்திருந்த தந்தையினால் அவ்வாறு ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கிறாய். (அவர் ஏதோ காமவசப்பட்டு தவறான இந்த முடிவிற்கு வந்தார் என்று எண்ணாதே.) (40)

புண்ணிய கர்மானுஷ்டானங்கள் செய்த அவரால், நான், எவ்விடத்தில் இருக்கும்படி கட்டளையிடப்பட்டேனோ, அவ்விடத்திலேயே (காட்டிலேயே) இருந்து மகா உத்தமரான நமது தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவேன். (41)

எதிரிகளை அடக்குபவனே! அவருடைய கட்டளையை மீறுவது என்பது என்னால் ஆகாதது. அவருடைய கட்டளை உன்னாலும் மதிக்கத்தக்கதே. ஏனென்றால், அவர் நம்முடைய நலன் விரும்பி; உயிர் கொடுத்த தந்தையும்கூட. (42)

ரகுநந்தனா! தந்தையின் சொற்களை (காட்டில் வசிப்பதை) நான் நடத்திக் காட்டுவேன். அப்படிச் செய்வதுதான் அறநெறியாளர்களின் ஒப்புதலைப் பெற்றதாகும். (43)

ஆண்புலியே! சுவர்க்கம் போன்ற நல்லுலகங்களை அடைய விரும்பும் மனிதன் தார்மிகனாகவும், பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்காதவனாகவும், ஆசார்யர் போன்ற பெரியோர்களின் சொற்படி நடப்பவனாகவும் இருக்கவேண்டும். (44)

புருஷோத்தமா! நமது தந்தை தசரதரின் சீலம் மிகுந்த ஒழுக்கத்தை நினைவுபடுத்திப் பார்த்து, உனக்கு இயல்பான நல்ல குணங்களோடு இணைத்து மேன்மை அடைவாயாக." (45)

இவ்வாறு, மாட்சிமை மிக்கவரும் மகாத்மாவுமான இராமன், தந்தையின் ஆக்ஞையை உள்ளபடியே நிறைவேற்றுவதற்காக, பொருள் நிறைந்த உத்தம உபதேசங்களை இளைய சகோதரனிடம் கூறிவிட்டு, சிறிது நேரம் மௌனமாக இருந்தார். (46)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
நூற்றைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஷட$_3$தி$_4$கஶததம: ஸர்க$_3$:

ப$_4$ரதவசநம்

ஏவமுக்த்வா து விரதே ராமே வசநமர்த$_2$வத் ।
ததோ மந்த$_3$ாகிநீதீரே ராமம் ப்ரக்ருதிவத்ஸலம் ॥ (1)

உவாச ப$_4$ரதஶ்சித்ரம் த$_4$ார்மிகோ த$_4$ார்மிகம் வச: ।
கோ ஹி ஸ்யாதீ$_3$த்$_3$ருஶோ லோகே யாத்$_3$ருஶஸ்த்வமரிந்த$_3$ம ॥ (2)

ந த்வாம் ப்ரவ்யத$_2$யேத்$_3$து$_3$:க$_2$ம் ப்ரீதிர்வா ந ப்ரஹர்ஷயேத் ।
ஸம்மதஶ்சாஸி வ்ருத்$_3$த$_4$ாநாம் தாம்ஶ்ச ப்ருச்ச$_2$ஸி ஸம்ஶயாந் ॥ (3)

யத$_2$ா ம்ருதஸ்தத$_2$ா ஜீவந் யத$_2$ாஸதி தத$_2$ா ஸதி ।
யஸ்யைஷ பு$_3$த்$_3$தி$_4$லாப$_4$: ஸ்யாத்பரிதப்யேத கேந ஸ: ॥ (4)

பராவரக்ஞோ யஶ்ச ஸ்யாத்தத$_2$ா த்வம் மநுஜாதி$_4$ப ।
ஸ ஏவம் வ்யஸநம் ப்ராப்ய ந விஷீதி$_3$துமர்ஹதி ॥ (5)

அமரோபமஸத்த்வஸ்த்வம் மஹாத்மா ஸத்யஸங்க$_3$ர: ।
ஸர்வக்ஞ: ஸர்வத$_3$ர்ஶீ ச பு$_3$த்$_3$தி$_4$மாந்ஶ்சாஸி ராக$_4$வ ॥ (6)

ந த்வாமேவம்கு$_3$ணைர்யுக்தம் ப்ரப$_4$வாப$_4$வகோவித$_3$ம் ।
அவிஷஹ்யதமம் து$_3$:க$_2$மாஸாத$_3$யிதுமர்ஹதி ॥ (7)

ஏவமுக்த்வா து ப$_4$ரதோ ராமம் புநரத$_2$ாப்$_3$ரவீத் ।
ப்ரோஷிதே மயி யத்பாபம் மாத்ரா மத்காரணாத்க்ருதம் ॥
க்ஷுத்$_3$ரயா தத$_3$நிஷ்டம் மே ப்ரஸீத$_3$து ப$_4$வாந் மம ॥ (8)

த$_4$ர்மப$_3$ந்தே$_4$ந ப$_3$த்$_3$தே$_4$ாऽஸ்மி தேநேமாம் நேஹ மாதரம் ।
ஹந்மி தீவ்ரேண த$_3$ண்டே$_3$ந த$_3$ண்ட$_3$ார்ஹாம் பாபகாரிணீம் ॥ (9)

கத$_2$ம் த$_3$ஶரத$_2$ாஜ்ஜாத: ஶுத்$_3$த$_4$ாபி$_4$ஜநகர்மண: ।
ஜாநந் த$_4$ர்மமத$_4$ர்மிஷ்ட$_2$ம் குர்யாம் கர்ம ஜுகு$_3$ப்ஸிதம் ॥ (10)

கு$_3$ரு: க்ரியாவாந் வ்ருத்$_3$த$_4$ஶ்ச ராஜா ப்ரேத: பிதேதி ச ।
தாதம் ந பரிக$_3$ர்ஹேயம் தை$_3$வதம் சேதி ஸம்ஸதி$_3$ ॥ (11)

ஸர்க்கம் : நூற்றியாறு

பரதன் வேண்டுகோள்

மந்தாகினி நதிக்கரையில் மேற்கண்டவாறு அறம் நிறைந்த சொற்களைக் கூறிவிட்டு, இராமன் சற்றே ஓய்ந்ததும், மக்களிடம் பேரன்பு பூண்டவரும் தார்மிகருமான அவரைப் பார்த்து, தருமாத்மாவான பரதன், ஒப்புயர்வற்ற அரிய சொற்களைக் கூறினான்— "எதிரிகளை அடக்குபவரே! இந்த உலகில் தாங்கள் அனுசரிக்கும் மிக உயர்ந்த நெறியை பின்பற்றக் கூடிய வேறு ஒருவர் இருக்கவே முடியாது. (1,2)

தங்களை துக்கம் (தரக்கூடிய கஷ்டம்) மனவேதனைக்கு உள்ளாக்காது; மகிழ்ச்சிக்குரிய விஷயமும் ஆனந்தத்தில் மூழ்கடித்துவிடாது. (அறிவு சார்ந்த) மூத்தவர்கள், தங்களை (தங்கள் அறிவுத்திறனை) மதிக்கிறார்கள்; என்றாலும், தாங்கள் அவர்களிடம் சந்தேக விளக்கம் கேட்டுத் தெளிவு பெறுகிறீர்கள். (3)

மரணமடைந்து விட்டவனுக்கு, (தான் முன்பு பெற்றிருந்த) உயிரோடிருந்த சரீரத்துடன் எவ்வாறு எந்தத் தொடர்பும் இல்லையோ, அதுபோலவே உயிரோடிருக்கும் போதும் சம்பந்தம் இல்லை என்ற (ஞானத்தை) அடைந்துவிட்டவன்; மற்றும், இல்லவே இல்லாத ஒரு பொருளின்மேல் ஆசையோ, வெறுப்போ தோன்றாததைப் போன்று, அதுபோலவே இருக்கும் பொருள்களின் மேலும் ஆசையோ, வெறுப்போ கொள்ளாதவன் எவனோ, அந்த விவேகியான புருஷனுக்கு (துயரம்) மனக்கவலை என்பது எவ்வாறு ஏற்படும்? (4)

மக்கள் தலைவரே! (ஸத்-அஸத் என்ற விவேகத்தைக் கொண்டுள்ள) தங்களைப் போன்று (காட்டில் வசிக்கும்) இதுபோன்ற துன்பத்தை அடைந்தாலும், ஞானிக்கு ஒப்பானவர்கள் மனம் வருந்தமாட்டார்கள். (5)

இராகவனே! தாங்கள் தேவதைகளைப் போன்று நற்குணம் நிறைந்தவர்; மகாத்மா; சத்தியம் தவறாதவர்; எல்லாம் அறிந்தவர்; நடப்பவைகளுக்கெல்லாம் சாட்சியாக இருப்பவர்; தலைசிறந்த புத்திமான். (6)

இவ்வாறான நற்குணங்களோடு விளங்குபவரும், தோற்றம்-அழிவுகளின் ரகசியத்தை அறிந்தவருமான தாங்கள், தாங்கமுடியாத இந்தக் கஷ்டத்தை அனுபவிக்கத்தக்கவரல்லர்." (7)

பரதன் இவ்வாறு கூறிவிட்டு, பின்னர் தொடர்ந்து இராமனை நோக்கிப் பேசினான்— "நான் வெளிநாட்டில் இருந்தபோது அற்பத்தனமான என் தாயாரால் என் பொருட்டு எந்தப் பாவச்செயல் செய்யப்பட்டதோ, அதில் எனக்கு சம்மதம் இல்லை. தாங்கள், என்மேல் கருணை கொண்டு அதை மன்னித்தருள வேண்டும். (8)

தருமம் என்ற கயிற்றால் நான் கட்டப்பட்டிருக்கிறேன். அதனால்தான் தண்டனைக்குரிய பாவத்தை செய்த தாயாரான இவரை, கொடிய தண்டனை கொடுத்து கொல்லாமல் விட்டு வைத்திருக்கிறேன். (9)

பரம்பரை, தருமானுஷ்டானம் ஆகிய இரு வகையாலும் உத்தமரான தசரதருக்குப் பிறந்த நான் தருமத்தை அறிந்தவன். (அப்படிப்பட்ட நான்) அற ஒழுக்கத்திற்குப் புறம்பானதும், உலகத்தோரால் இகழத்தக்கதுமான ஒரு செயலை (பெற்ற தாயாரைக் கொல்வது என்ற பாவத்தை) எவ்வாறு செய்வேன்? (10)

மாமன்னர், எனக்கு (பிரும்மோபதேசம் செய்த) குரு; பெரிய வேள்விகளை நடத்தியவர்; வயது முதிர்ந்தவர்; நாட்டின் அரசர்; தந்தை; தெய்வத்திற்குச் சமமானவர்; தற்சமயம் மேலுலகம் அடைந்துவிட்டவர் என்பதால், பெருமக்கள் நிறைந்த இந்தக் கூட்டத்தில் அவரை இகழாதிருக்கிறேன். (11)

கோ ஹி த4ர்மார்த2யோர்ஹீநமீத்3ருஶம் கர்ம கில்பி3ஷம் ॥
ஸ்த்ரியா: ப்ரியம் சிகீர்ஷு: ஸந் குர்யாத்3த4ர்மக்ஞ த4ர்மவித் ॥ (12)

அந்தகாலே ஹி பூ4தாநி முஹ்யந்தீதி புராஶ்ருதி: ।
ராக்ஷஸ்வம் குர்வதா லோகே ப்ரத்யக்ஷம் ஸா ஶ்ருதி: க்ருதா ॥ (13)

ஸாத்4வர்த2மபி4ஸந்த4ாய க்ரோத4ாந்மோஹாச்ச ஸாஹஸாத் ।
தாதஸ்ய யத3திக்ராந்தம் ப்ரத்யாஹரது தத்3ப4வாந் ॥ (14)

பிதுர்ஹி ஸமதிக்ராந்தம் புத்ரோ ய: ஸாது4 மந்யதே ।
தத்3பத்யம் மதம் லோகே விபரீதமதோঽந்யதா2 ॥ (15)

தத்3பத்யம் ப4வாநஸ்து மா ப4வாந் து3ஷ்க்ருதம் பிது: ।
அபி4பத்தா க்ருதம் கர்ம லோகே தீ4ரவிக3ர்ஹிதம் ॥ (16)

கைகேயீம் மாம் ச தாதம் ச ஸுஹ்ருதோ3 ப3ாந்த4வாம்ஶ்ச ந: ।
பௌரஜாநபத3ாந் ஸர்வாந்ஸ் த்ராது ஸர்வமித3ம் ப4வாந் ॥ (17)

க்வ சாரண்யம் க்வ ச க்ஷாத்ரம் க்வ ஜடா: க்வ ச பாலநம் ।
ஈத்3ருஶம் வ்யாஹதம் கர்ம ந ப4வாந் கர்துமர்ஹதி ॥ (18)

ஏஷ ஹி ப்ரத2மோ த4ர்ம: க்ஷத்ரியஸ்யாபி4ஷேசநம் ।
யேந ஶக்யம் மஹாப்ராக்ஞ ப்ரஜாநாம் பரிபாலநம் ॥ (19)

கஶ்ச ப்ரத்யக்ஷமுத்ஸ்ருஜ்ய ஸம்ஶயஸ்த2மலக்ஷணம் ।
ஆயதிஸ்த2ம் சரேத்3த4ர்மம் க்ஷத்ரப3ந்து4ரநிஶ்சிதம் ॥ (20)

அத2 க்லேஶஜமேவ த்வம் த4ர்மம் சரிதுமிச்ச2ஸி ।
த4ர்மேண சதுரோ வர்ணாந் பாலயந் க்லேஶமாப்நுஹி ॥ (21)

சதுர்ணாமாஶ்ரமாணாம் ஹி க3ார்ஹஸ்த்2யம் ஶ்ரேஷ்ட2மாஶ்ரமம் ।
ப்ராஹுர்த4ர்மக்ஞாஸ்தம் கத2ம் த்யக்துமர்ஹஸி ॥ (22)

ஶ்ருதேந ப3ால: ஸ்தா2நேந ஜந்மநா ப4வதோ ஹ்யயஹம் ।
ஸ கத2ம் பாலயிஷ்யாமி பூ4மிம் ப4வதி திஷ்ட2தி ॥ (23)

தருமத்தை நன்றாக அறிந்த இராகவனே! ஒரு பெண்மணியின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக, அறநெறி அறிந்த எவர்தான் தருமம்–அர்த்தம் இரண்டிற்கும் புறம்பான இத்தகைய இழிசெயலைச் செய்வார்? (12)

வாழ்க்கையின் இறுதிக் காலத்தில் உயிர்ப் பிராணிகள் மதிமயக்கத்தை அடைகின்றன என்று ஒரு பழமொழி உண்டு. அந்தப் பழமொழி, மன்னரின் இவ்விதச் செய்கையால் உலகில் கண்கூடாக உறுதியாக்கப்பட்டுவிட்டது. (13)

கோபம், மோகம், அல்லது துணிச்சல் காரணமாக நமது தந்தை, தருமத்திற்குப் புறம்பாக செய்துவிட்டதை, அதனால் ஏற்படும் விளைவுகளையும் மனத்தில் நன்றாக ஆலோசனை செய்து, (தந்தை செய்துவிட்ட தவற்றைத் திருத்தி) நல்வழிக்குத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். (14)

அறநெறியிலிருந்து வழுவி, தந்தை செய்ததை எந்தப் புதல்வன், உரிய நடவடிக்கை எடுத்து தருமநெறிக்குக் கொண்டு வருகிறானோ, அவனே நல்ல புதல்வன் என்று உலகத்தாரால் மதிக்கப்படுகிறான். அப்படிச் செய்யாத புத்திரன் வேறுவிதமாக (அதருமத்திற்கு ஆதரவு அளிப்பவனாகக்) கருதப்படுவான். (15)

ஆகையால், தாங்கள் அவருக்கு சத்புத்திரனாக இருக்க வேண்டும். (அவர் செய்துவிட்ட தவற்றைத் திருத்த வேண்டும்.) உலகத்தோரால் இகழ்ந்து பேசப்படக்கூடியதும், அறநெறிக்கு மாறாகச் செய்யப்பட்டுவிட்டதுமான காரியத்தை, தாங்கள் மேலானதாக எண்ணி நிறைவேற்ற வேண்டியதில்லை. (16)

கைகேயி, நான், தந்தை, நண்பர்கள், உற்றார்–உறவினர், நகரத்தார்கள், புறநகர்வாசிகள் ஆகிய எல்லோரையும் தாங்கள்தான் அரசாட்சியை ஏற்றுக் காப்பாற்ற வேண்டும். (17)

வனவாசம் என்பது க்ஷத்திரிய தருமமா? சடாமுடி தரித்து நாடாளும் எந்த மன்னராவது இதுவரை இருந்ததுண்டா? இவ்வாறு ஒன்றுக்கொன்று எதிரான காரியத்தைத் தாங்கள் செய்யக்கூடாது. (18)

க்ஷத்திரியன் வேந்தனாக முடிசூட்டிக் கொள்வதுதான், அவனுடைய முதன்மையான தருமம். பேரறிவாளரே! பட்டம் சூட்டிக் கொண்டு ஆட்சி செய்வதன் மூலம் குடிமக்களைக் காப்பாற்ற முடியும். (19)

கண்களால் காணக்கூடியதை விட்டுவிட்டு (நல்லாட்சி செய்து மக்கள் சுகமாக இருப்பதைக் கண்ணால் கண்டு மனத்திருப்தி அடைவதைவிட்டு), (இந்த தருமத்தை இப்படிச் செய்வது சரியா, தவறா? என்ற) சந்தேகத்திற்கு இடமளிப்பதும், தற்சமயம் தேவையில்லாததும், 'எதிர்காலத்தில் நல்ல பயனைக் கொடுக்கும்' என்று கூறப்படுவதும், உறுதியாகப் பின்பற்றவே வேண்டும் என்றும் விதிக்கப்படாத ஒரு வழியை (காட்டு வாழ்க்கை, சடாமுடி–மான்தோல் அணிவது) பாமரனான ஒரு க்ஷத்திரியன்கூட அனுஷ்டிக்கத் துணியமாட்டான். (20)

உடலை வருத்திக் கொண்டுதான் தருமத்தை அனுசரிக்கத் தாங்கள் விரும்பினீர்களேயானால், சரி – நான்கு வருணத்தார்களையும் (அவரவர் கடமைகளில் ஈடுபடச் செய்து) அறநெறிப்படி பரிபாலிக்கும் கஷ்டத்தை ஏற்றுக் கொள்ளுங்கள். (21)

நான்கு வகையான வாழ்க்கை நிலைகளில் (ஆசிரமங்களில்) கிருஹஸ்த தருமம் (விவாகம் செய்து கொண்டு மனைவி–மக்களுடன் வாழும் நிலை) தான் உயர்ந்தது என்று அறநூல் வல்லுநர்கள் கூறுகிறார்கள். தாங்கள் தருமம் அறிந்தவர். எனவே, (குடும்ப வாழ்க்கை என்னும்) அந்த தருமத்தைத் தாங்கள் துறக்கலாகாது. (ஒரு முனிவரைப் போல தவ வாழ்க்கையை ஏற்கக் கூடாது.) (22)

கல்வி–கேள்வியினாலும் பிறப்பு வரிசையாலும் நான் தங்களுக்கு இளையவன்; அவ்வளவு எளியவனான நான், (என்னைக் காட்டிலும் எல்லாவிதத்திலும் மேன்மையான) தாங்கள் இருக்கும்போது இந்தப் பூமண்டலத்தை எவ்வாறு பரிபாலிப்பேன்? (23)

ஹீநபு3த்3தி4கு3ணோ ப3ாலோ ஹீந: ஸ்த2ாநேந சாப்யஹம் ।
ப4வதா ச விநாபூ4தோ ந வர்தயிதுமுத்ஸஹே ॥ (24)

இத3ம் நிகி2லமவ்யக்3ரம் ராஜ்யம் பித்ர்யமகண்டகம் ।
அநுஶாதி4 ஸ்வத4ர்மேண த4ர்மக்ஞ ஸஹ ப3ாந்த4வை: ॥ (25)

இஹைவ த்வாபி4ஷிஞ்சந்து ஸர்வா: ப்ரக்ருதய: ஸஹ ।
ருத்விஜ: ஸவஸிஷ்ட2ாஶ்ச மந்த்ரவந்மந்த்ரகோவித3ா: ॥ (26)

அபி4ஷிக்தஸ்த்வமஸ்மாபி4ரயோத்4யாம் பாலநே வ்ரஜ ।
விஜித்ய தரஸா லோகாந் மருத்3பி4ரிவ வாஸவ: ॥ (27)

ருணாநி த்ரீண்யபாகுர்வந் து3ர்ஹ்ருத3: ஸாது4 நிர்த3ஹந் ।
ஸுஹ்ருத3ஸ்தர்பயந் காமைஸ் த்வமேவாத்ராநுஶாதி4 மாம் ॥ (28)

அத்3யார்ய முதி3தா: ஸந்து ஸுஹ்ருத3ஸ்தேऽபி4ஷேசநே ।
அத்3ய பீ4தா: பலாயந்தாம் து3ர்ஹ்ருத3ஸ்தே தி3ஶோ த3ஶ ॥ (29)

ஆக்ரோஶம் மம மாதுஶ்ச ப்ரம்ருஜ்ய புருஷர்ஷப4 ।
அத்3ய தத்ரப4வந்தம் ச பிதரம் ரக்ஷ கில்பி3ஷாத் ॥ (30)

ஶிரஸா த்வாபி4யாசேऽஹம் குருஷ்வ கருணாம் மயி ।
ப3ாந்த4வேஷு ச ஸர்வேஷு பூ4தேஷ்விவ மஹேஶ்வர: ॥ (31)

அதை2தத்ப்ருஷ்ட2த: க்ருத்வா வநமேவ ப4வாநித: ।
க3மிஷ்யதி க3மிஷ்யாமி ப4வதா ஸார்த4மப்யஹம் ॥ (32)

ததோ2 ஹி ராமோ ப4ரதேந தாம்யதா
ப்ரஸாத்3யமாந: ஶிரஸா மஹீபதி: ।
ந சைவ சக்ரே க3மநாய ஸத்த்வவாந்
மதிம் பிதுஸ்தத்3வசநே வ்யவஸ்தி2த: ॥ (33)

ததத்3பு4தம் ஸ்தை2ர்யமவேக்ஷ்ய ராக4வே
ஸமம் ஜநோ ஹர்ஷமவாப து3:கி2த: ।
ந யாத்யயோத்4யாமிதி து3:கி2தோऽப4வத்
ஸ்தி2ரப்ரதிக்ஞத்வமவேக்ஷ்ய ஹர்ஷித: ॥ (34)

தம்ருத்விஜோ நைக3மயூத2வல்லப4ா–
ஸ்ததோ2 விஸம்க்ஞாஶ்ருகலாஶ்ச மாதர: ।
ததோ2 ப்3ருவாணம் ப4ரதம் ப்ரதுஷ்டுவு:
ப்ரணம்ய ராமம் ச யயாசிரே ஸஹ ॥ (35)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 ஷட3தி4கஶததம: ஸர்க3: ॥

சிற்றறிவும் இழிகுணங்களும் உடையவன்; சிறுவன்; தாழ்ந்த ஒருநிலையில் இருப்பவன், நான், தங்களைப் பிரிந்து உயிர்வாழ்வதிலும் விருப்பம் இல்லாதவன். (24)

அறம் அறிந்தவரே! பரம்பரையாக வந்த இந்த நாடு முழுவதும் மிகவும் செழிப்பானது; இடையூறுகள் இல்லாதது. தாங்கள் நம்முடைய குலமுறைப்படி உற்றார்–உறவினர்களோடு (ஆட்சியை ஏற்று நாட்டைப்) பரிபாலித்தருள வேண்டும். (25)

அமைச்சர்கள், படைத்தலைவர்கள், குடிமக்கள், மற்றும் வசிஷ்டர் உள்ளிட்ட வேதவித்தகர்களான ரித்விக்குகள் இங்கு உள்ளார்கள். அவர்கள், தங்களுக்கு இங்கேயே, இப்பொழுதே முறைப்படிப் பட்டாபிஷேகம் செய்விக்கட்டும். (26)

மருத்துக்களால் பட்டாபிஷேகம் செய்விக்கப்பட்ட தேவேந்திரன் போல, தாங்கள், எங்களால் அபிஷேகம் செய்விக்கப்பட்டு, உலகம் முழுவதையும் விரைவில் வென்று, மக்களைப் பரிபாலிப்பதற்காக அயோத்திக்கு எழுந்தருள வேண்டும். (27)

அங்கு, தேவ–ரிஷி–பிதிரர்களுக்கு செலுத்த வேண்டிய மூன்று கடன்களையும் போக்கிக் கொண்டு, நண்பர்கள் விரும்பும் பொருட்களை அளித்து, அவர்களை மகிழ்வுறச் செய்து கொண்டு, அவ்விடத்தில் எனக்கு நல்லுபதேசங்கள் செய்து கொண்டிருக்க வேண்டும். (28)

தொழுந்தகையீர்! தங்களது பட்டாபிஷேகத்தைப் பார்த்து நண்பர்கள் பெருமகிழ்ச்சி அடையட்டும்; தீய எண்ணங்கொண்ட எதிரிகள் அச்சமடைந்து பத்துத்திசைகளிலும் ஓடி ஒளியட்டும். (29)

புருஷோத்தமரே! தாங்கள், என் தாயாருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கி, மதிப்பிற்குரிய தந்தையையும் உலக அபவாதத்திலிருந்து காப்பாற்ற வேண்டும். (30)

நான், தங்கள் திருவடிகளில் தலை வைத்து வேண்டிக் கொள்கிறேன். எல்லா உயிர்ப் பிராணிகளிடமும் பரமேசுவரன் அருளைச் செலுத்துவதைப் போல, தாங்கள், என்னிடமும் எல்லா உற்றார்–உறவினர்களிடமும் கருணை காட்டவேண்டும். (31)

இல்லையென்றால், தாங்கள் இங்கிருந்து தண்டகாரண்யத்திற்கே போவதாக நிச்சயித்தால், நானும் தங்களுடன் வருவேன்." (32)

துயரத்தில் ஆழ்ந்த பரதன், இராமபிரானை சிரம் தாழ்த்தி வேண்டிக் கொண்டான். ஆனால், உலகநாயகரும் தருமவீரருமான இராமன், தந்தையின் கட்டளையை நிறைவேற்றுவதில் உறுதியாக நின்றதால், (அயோத்திக்குத்) திரும்பிச் செல்வதில் மனம் செலுத்தவில்லை. (33)

இராமசந்திரனின் ஒப்புவமையில்லாத உறுதியைக் கண்டு, எல்லா மக்களும் ஒரே சமயத்தில் துக்கத்தையும் சந்தோஷத்தையும் அடைந்தார்கள். 'இராமன் அயோத்திக்கு வரப்போவதில்லை' என்பதால் துயரம்; (எந்த நிலையிலும் மனம் மாறாமல்) தந்தையின் வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் தளர்வில்லாத பிடிப்பு – அதனால் மகிழ்ச்சி. (34)

அப்போது, வேதவித்தகர்களும் நகரப் பிரமுகர்களும் தாய்மார்களும் தன்வசமிழந்து கண்ணீர் பெருக்கினார்கள்; பரதனுடைய உத்தமமான குணத்தை வெகுவாகப் போற்றினார்கள்; இராமனுடைய திருவடித் தாமரைகளில் தலைதாழ்த்தி வணங்கிப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். (35)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
நூற்றியாறாவது ஸர்க்கம் முற்றிற்று.



ஸப்தாதி$_4$கமஃததம: ஸர்க$_3$:

ராமப்ரதிவசநம்

புநரேவம் ப்$_3$ருவாணம் தம் ப$_4$ரதம் லக்ஷ்மணாக்$_3$ரஜ: ।
ப்ரத்யுவாச தத: ஸ்ரீமாந்ஞாதிமத்$_4$யேঽபி$_4$ஸத்க்ருத: ॥ (1)

உபபந்நமித$_3$ம் வாக்யம் யத்த்வமேவமப$_4$ாஷத$_2$ா: ।
ஜாத: புத்ரோ த$_3$ஶரத$_2$ாத் கைகேய்யாம் ராஜஸத்தமாத் ॥ (2)

புரா ப்$_4$ராத: பிதா ந: ஸ மாதரம் தே ஸமுத்$_3$வஹந் ।
மாதாமஹே ஸமாஶ்ரௌஷீத்$_3$ ராஜ்யஶுல்கமநுத்தமம் ॥ (3)

தை$_3$வாஸுரே ச ஸங்க்$_3$ராமே ஜநந்யை தவ பார்தி$_2$வ: ।
ஸம்ப்ரஹ்ருஷ்டோ த$_3$தௌ$_3$ள ராஜா வரமாராதி$_4$த: ப்ரபு$_4$: ॥ (4)

தத: ஸா ஸம்ப்ரதிஶ்ராவ்ய தவ மாதா யஶஸ்விநீ ।
அயாசத நரஶ்ரேஷ்ட$_2$ம் த்$_3$வௌள வரௌள வரவர்ணிநீ ॥ (5)

தவ ராஜ்யம் நரவ்யாக்$_4$ர மம ப்ரவ்ராஜநம் தத$_2$ா ।
தௌள ச ராஜா தத$_3$ா தஸ்யை நியுக்த: ப்ரத$_3$தௌ$_3$ள வரௌள ॥ (6)

தேந பித்ராஹமப்யத்ர நியுக்த: புருஷர்ஷப ।
சதுர்த$_3$ஶ வநே வாஸம் வர்ஷாணி வரத$_3$ாநிகம் ॥ (7)

ஸோঽஹம் வநமித$_3$ம் ப்ராப்தோ நிர்ஜநம் லக்ஷ்மணாந்வித: ।
ஸீதயா சாப்ரதித்$_3$வந்த்$_3$வ: ஸத்யவாதே$_3$ ஸ்தி$_2$த: பிது: ॥ (8)

ப$_4$வாநபி ததே$_2$த்யேவ பிதரம் ஸத்யவாதி$_3$நம் ।
கர்துமர்ஹதி ராஜேந்த்$_3$ர ஶிப்ரமேவாபி$_4$ஷேசநாத் ॥ (9)

ருணாந்மோசய ராஜாநம் மத்க்ருதே ப$_4$ரத ப்ரபு$_4$ம் ।
பிதரம் த்ராஹி த$_4$ர்மக்ஞம் மாதரம் சாபி$_4$நந்த$_3$ய ॥ (10)

ஶ்ரூயதே ஹி புரா தாத ஶ்ருதிர்கீ$_3$தா யஶஸ்விநா ।
க$_3$யேந யஜமாநேந க$_3$யேஷ்வேவ பித்ரூந் ப்ரதி ॥ (11)

புந்நாம்நோ நரகாத்$_3$யஸ்மாத்பிதரம் த்ராயதே ஸுத: ।
தஸ்மாத்புத்ர இதி ப்ரோக்த: பித்ரூந் ய: பாதி ஸர்வத: ॥ (12)

ஏஷ்டவ்யா ப$_3$ஹவ: புத்ரா கு$_3$ணவந்தோ ப$_3$ஹுஶ்ருதா: ।
தேஷாம் வை ஸமவேதாநாமபி கஶ்சித்$_3$க$_3$யாம் வ்ரஜேத் ॥ (13)

ஸர்க்கம் : நூற்றியேழு

இராமன் பதில் கூறுதல்

அப்போது, உற்றார்–உறவினர்கள் மத்தியில் மிகுந்த கௌரவத்துடன் அமர்ந்திருந்தவரும், சீமானும், இலக்குவன் தமையனாருமான அவர், மீண்டும் இவ்வாறு (இராமன் அயோத்திக்குத் திரும்பவேண்டும் என்று) வேண்டிக் கொண்ட பரதனுக்குப் பின்வருமாறு பதில் கூறினார்— (1)

''சிறந்த வேந்தராகிய தசரதருக்கு, கைகேயியிடம் பிறந்த புதல்வனான நீ, முன்பு கூறியதெல்லாம் சரியானதே. (2)

தம்பி! நம்முடைய தகப்பனார், முன்பு உன் தாயாரைத் திருமணம் செய்துகொண்ட காலத்தில், உன் பாட்டனாரிடம், தன் ராஜ்யத்தை வதுதட்சிணையாகக் கொடுக்க ஒப்புக்கொண்டார். (கைகேயிக்குப் பிறக்கும் குமாரனுக்கே அரசாட்சியைக் கொடுப்பதாக வாக்களித்தார்.) (3)

பின்னர் ஒரு சமயம், தேவாசுரர்களிடையே நடந்த போரில், (தேவர்களுக்கு உதவுவதற்காகச் சென்ற) நமது தந்தையாரின் உயிரை, உன் தாயார் காப்பாற்றியதால் மனம் மகிழ்ந்து, அவருக்கு வரம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார். (4)

கீர்த்திமிக்கவரான உன் தாயார், பின்னொரு சந்தர்ப்பம் வாய்த்தபோது, ('வரம் கொடுப்பதாக முன்பு கூறியதை மீறமாட்டீர்களே?' என்று) தருமம் தவறாதவரான அவரிடம் வாக்குறுதி பெற்று, இரண்டு வரங்களை வேண்டினார். (5)

புருஷோத்தமா! 'உனக்கு ராஜ்யம்; எனக்கு வனவாசம்' என்ற இரு வரங்களையும், முன்பு கொடுத்த வாக்குறுதியினால் கட்டுப்பட்ட மன்னர், அவருக்குக் கொடுத்தார். (6)

மாவீரனே! இவ்விதம் வரதானம் என்ற பெயரில், 'நான், பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வசிக்கவேண்டும்' என்று தந்தையார் கட்டளையிட்டிருக்கிறார். (7)

ஆகவேதான், சீதையோடும் லட்சுமணனோடும் மனித சஞ்சாரமில்லாத இந்தக் காட்டிற்கு வந்திருக்கிறேன். என்னுடைய இந்த முடிவில் எந்தவித மாற்றத்திற்கும் இடமில்லை. ஏனென்றால், தந்தையின் சொற்களுக்குக் கட்டுப்பட்டவன், நமது தந்தை கொடுத்த வரத்தை சத்தியமாக்கிக் கொண்டு, நான் இங்கே இருக்கிறேன். (8)

ராஜேந்திரா! நீயும் சத்தியசந்தரான தந்தையின் சொற்களை ஏற்றுக்கொண்டு விரைவில் பட்டாபிஷேகம் செய்துகொள்ளக் கடவாய்! அதனால், அவர் சத்தியவிரதத்தைக் காப்பாற்றியவன் ஆவாய். (9)

பரதனே! நமக்குத் தலைவரும் மன்னரும் அறம் அறிந்தவரும் தந்தையுமான அவரை (கைகேயியிடம் அவர் பட்டிருக்கும்) கடனிலிருந்து விடுவிப்பாயாக. உன் தாயாரையும் சந்தோஷப்படுத்து. (10)

செல்வனே! முன்னொரு காலத்தில் புகழ்பெற்ற கயர் என்பவர் கயா க்ஷேத்திரத்தில், தன் முன்னோர்களுடைய திருப்தியின் பொருட்டு சிராத்தம் செய்தபோது கூறிய ஒரு நீதிவாக்கியம் எல்லோரும் அறிந்ததே. (11)

புதல்வன் என்பவன், புத் என்னும் நரகத்திலிருந்து தந்தையைக் காப்பாற்றுவதாலும், முன்னோர்களை எல்லாவிதத்திலும் பாதுகாப்பதாலும், அவன் 'புத்திரன்' என்று அழைக்கப்படுகிறான். (12)

குணசாலிகளான, பல்கலை அறிவு பெற்ற அநேக மைந்தர்களைப் பெறவேண்டும் என்று ஆசைப்பட வேண்டும். பெற்றெடுத்த பல புத்திரர்களில் எவனேனும் ஒருவனாவது கயைக்குச் செல்லமாட்டானா? (அங்கே, பிதிரர் கடன்களை நிறைவேற்ற மாட்டானா?) (13)

ஏவம் ராஜர்ஷய: ஸர்வே ப்ரதீதா ராஜநந்த3ந ।
தஸ்மாத்த்வாஹ்ரி நரஸ்ரேஷ்ட2 பிதரம் நரகாத்ப்ரபே4 ॥ (14)

அயோத்4யாம் க3ச்ச2 ப4ரத ப்ரக்ருதீரநுரஞ்ஜய ।
ஸத்ருக்4நஸஹிதோ வீர ஸஹ ஸர்வைர் த்3விஜாதிபி4: ॥ (15)

ப்ரவேக்ஷ்யே த3ண்ட3காரண்யமஹமப்யவிலம்ப3யந் ।
ஆப்4யாம் து ஸக்ஷிதோ ராஜந் வைதே3ஹ்யா லக்ஷ்மணேந ச ॥ (16)

த்வம் ராஜா ப4ரத ப4வ ஸ்வயம் நராணாம்
வந்யாநாமஹமபி ராஜராண்ம்ருக3ாணாம் ।
க3ச்ச2 த்வம் புரவரமத்3ய ஸம்ப்ரஹ்ருஷ்ட:
ஸம்ஹ்ருஷ்டஸ்த்வஹமபி த3ண்ட3காந் ப்ரவேக்ஷ்யே ॥ (17)

ச2ாயாம் தே தி3நகரப4ா: ப்ரப3ாத4மாநம்
வர்ஷத்ரம் ப4ரத கரோது மூர்த்4நி ஸீதாம் ।
ஏதேஷாமஹமபி காநநத்3ருமாணாம்
ச2ாயாம் தாமதிஸயிநீம் ஸுகீ2 ஸ்ரயிஷ்யே ॥ (18)

ஸத்ருக்4ந: குஸலமதிஸ்து தே ஸஹாய:
ஸௌமித்ரிர்மம விதி3த: ப்ரத4ாநமித்ரம் ।
சத்வாரஸ்தநயவரா வயம் நரேந்த்3ரம்
ஸத்யஸ்த2ம் ப4ரத சராம மா விஷீத3 ॥ (19)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 ஸப்தாதி4கஸததம: ஸர்க3: ॥

அஷ்டாதி4கஸததம: ஸர்க3:

ஜாப3ாலிவாக்யம்

ஆஸ்வாஸயந்தம் ப4ரதம் ஜாப3ாலிர்ப்3ராஹ்மணோத்தம: ।
உவாச ராமம் த4ர்மக்ஞம் த4ர்மாபேதமித3ம் வச: ॥ (1)

ஸாது4 ராக4வ மா பூ4த்தே பு3த்3தி4ரேவம் நிரார்தி2கா ।
ப்ராக்ருதஸ்ய நரஸ்யேவ ஹ்யார்யபு3த்3தே4ர்மநஸ்விந: ॥ (2)

க: கஸ்ய புருஷோ ப3ந்து4: கிம் கார்யம் கஸ்ய கேநசித் ।
யதே3கோ ஜாயதே ஜந்துரேக ஏவ விநஸ்யதி ॥ (3)

தஸ்மாந்மாதா பிதா சேதி ராம ஸஜ்ஜேத யோ நர: ।
உந்மத்த இவ ஸ ஜ்ஞேயோ நாஸ்தி கஸ்சித்3தி4 கஸ்யசித் ॥ (4)

அரசருக்கு மனமகிழ்வளிக்கும் மைந்தனே! நான் மேலே சொல்லியதை எல்லா ராஜரிஷிகளும் ஆமோதித்திருக்கிறார்கள். ஆகவே, மனிதருள் மாணிக்கமே! நமது தந்தையை நரகத்திலிருந்து காப்பாற்று. (14)

தருமவீரனே! பரதா! (இங்கே வந்திருக்கும்) இரு பிறப்பாளர்கள் (வேதியர், வேந்தர், வணிகர்) அனைவருடனும், சத்ருக்னனோடும் அயோத்திக்குச் செல்வாயாக. (அங்கே நல்லாட்சி புரிந்து) குடிமக்களை மகிழ்விப்பாயாக. (15)

மன்னரே! (இராமன், பரதனை இவ்வாறு அழைத்ததன் மூலம், 'பரதனே அயோத்தியின் மன்னன்' என்பதை இராமனே உறுதி செய்து, அங்கிருந்த அனைவருக்கும் உணர்த்திவிட்டார் என்ற நுட்பம் சுவைக்கத்தக்கது.) இனியும் காலதாமதம் செய்யாமல் நானும் சீதை–லட்சுமணனோடு தண்டகாரண்யத்திற்குள் புகப்போகிறேன். (16)

பரதனே! நீயே மனிதர்களுக்கு மன்னனாக ஆகுக. (மன்னனாக முடிசூட்டிக் கொள்.) நான், காட்டு விலங்குகளுக்கு சிறந்த மன்னனாக ஆவேன்! மனத்திருப்தியோடு இப்போது தலைநகரத்திற்குச் செல்; நானும் மனநிம்மதியுடன் தண்டகாரண்யத்திற்குள் செல்வேன். (17)

பரதா! (அரச சின்னமான) வெண்கொற்றக்குடை, உன் தலையின்மேல் சூரிய கிரணங்கள் படாமல் குளிர்ந்த நிழலை அளிக்கட்டும். நானும், இந்தக் காட்டு மரங்களின் அடர்த்தியான நிழலின்கீழ் சுகமாகத் தங்குவேன். (18)

பரதா! மனம் வருந்தாதே. எனக்கு சுமித்திரையின் மைந்தன் லட்சுமணன் முக்கியமான நண்பன் என்பது தெரிந்த விஷயம். சிறந்த அறிவாளியான சத்ருக்னன் (சுமித்திரையின் இன்னொரு புதல்வன்) உனக்கு உறுதுணையாக இருப்பான். நற்புதல்வர்களான நாம் நால்வரும் (மாமன்னரின் கட்டளைப்படியே நடந்து,) அவரை சத்தியத்தில் நிலைபெற்றவராகச் செய்வோம்." (19)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
நூற்றியேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியெட்டு

ஜாபாலியின் கூற்று

அற விதிகளை அறிந்த இராமன், பரதனுக்கு ஆறுதல் கூறி மேற்கண்டவாறு பேசியதை கேட்டுக் கொண்டிருந்த வேதவித்தகரான ஜாபாலி என்பவர், அறத்திற்குப் புறம்பான வாதங்களை அப்போது சொன்னார்— (1)

"இராகவனே! உன் பேச்சு நன்றாக இருந்தது. உயர்ந்த நோக்கமுடையவனும், நல்லிதயம் கொண்டவனுமான நீ, பாமர மக்களைப் போன்று எவ்விதப் பயனையும் தராத வாதங்களைக் கூறக் கூடாது. (2)

எவன், (வேறு) எந்த மனிதனுக்கு உறவு? யாரால், யாருக்கு என்ன காரியம் ஆகவேண்டும்? எப்படி ஒரு பிராணி தனியாகப் பிறக்கிறதோ, அவ்வாறே தனியாக (தான் ஒன்றியாக) நசித்துப் போகிறது. (3)

ஆகவே, இராமா! தாய்–தந்தை என்று எவனொருவன் பாசம் வைக்கிறானோ, அவனை மதிகலங்கிய பித்தன் என்று அறிந்து கொள்ளவேண்டும். ஏனென்றால், யாரும் யாருடனும் சம்பந்தப்பட்டவர் அல்லர். (4)

யத$_{2}$ா க்$_{3}$ராமாந்தரம் க$_{3}$ச்ச$_{2}$ந்நர: கஶ்சித் க்வசித்$_{3}$வஸேத் ।
உத்ஸ்ருஜ்ய ச தமாவாஸம் ப்ரதிஷ்டே$_{2}$தாபரேঽஹநி ॥ (5)

ஏவமேவ மநுஷ்யாணாம் பிதா மாதா க்$_{3}$ருஹம் வஸு ।
ஆவாஸமாத்ரம் காகுத்ஸ்த$_{2}$ ஸஜ்ஜந்தே நாத்ர ஸஜ்ஜநா: ॥ (6)

பித்ர்யம் ராஜ்யம் பரித்யஜ்ய ஸ நார்ஹஸி நரோத்தம ।
ஆஸ்த$_{2}$ாதும் காபத$_{2}$ம் து$_{3}$:க$_{2}$ம் விஷமம் ப$_{3}$ஹுகண்டகம் ॥ (7)

ஸம்ருத்$_{3}$த$_{4}$ாயாமயோத்$_{4}$யாயாமாத்மாநமபி$_{4}$ஷேசய ।
ஏகவேணீத$_{4}$ரா ஹி த்வாம் நக$_{3}$ரீ ஸம்ப்ரதீக்ஷதே ॥ (8)

ராஜபே$_{4}$க$_{3}$ாநநுப$_{4}$வந் மஹார்ஹாந் பார்தி$_{2}$வாத்மஜ ।
விஹர த்வமயோத்$_{4}$யாயாம் யத$_{2}$ா ஸுக்ரஸ்த்ரிவிஷ்டபே ॥ (9)

ந தே கஶ்சித்$_{3}$த$_{3}$ுரத$_{3}$ஸ்த்வம் ச தஸ்ய ந கஶ்சந ।
அந்யோ ராஜா த்வமந்ய: ஸ தஸ்மாத்குரு யது$_{3}$ச்யதே ॥ (10)

பீ$_{3}$ஜமாத்ரம் பிதா ஜந்தோ: ஸுக்லம் ஸோணிதமேவ ச ।
ஸம்யுக்தம்ருதுமந்மாத்ரா புருஷஸ்யேஹ ஜந்ம தத் ॥ (11)

க$_{3}$த: ஸ நந்ருபதிஸ்தத்ர க$_{3}$ந்தவ்யம் யத்ர தேந வை ।
ப்ரவ்ருத்திரேஷா மர்த்யாநாம் த்வம் து மித்$_{2}$யா விஹந்யஸே ॥ (12)

அர்த$_{2}$த$_{4}$ர்மபரா யே யே தாந்ஸ்தாஞ்ஶோசாமி நேதராந் ।
தே ஹி து$_{3}$:க$_{2}$மிஹ ப்ராப்ய விநாஶம் ப்ரேத்ய பே$_{4}$ஜிரே ॥ (13)

அஷ்டகா பித்ருதை$_{3}$வத்யமித்யயம் ப்ரஸ்ருதோ ஜந: ।
அந்நஸ்யோபத்$_{3}$ரவம் பஶ்ய ம்ருதோ ஹி கிமஶிஷ்யதி ॥ (14)

யதி$_{3}$ பு$_{4}$க்தமிஹாந்யேந தே$_{3}$ஹமந்யஸ்ய க$_{3}$ச்ச$_{2}$தி ।
த$_{3}$த்$_{3}$யாத்ப்ரவஸத: ஶ்ராத்$_{3}$த$_{4}$ம் ந தத்பத்$_{2}$யஶநம் ப$_{4}$வேத் ॥ (15)

த$_{3}$ாநஸம்வநநா ஹ்யேதே க்$_{3}$ரந்த$_{2}$ா மேத$_{4}$ாவிபி$_{4}$: க்ருதா: ।
யஜஸ்வ தே$_{3}$ஹி தீ$_{3}$க்ஷஸ்வ தபஸ்தப்யஸ்வ ஸந்த்யஜ ॥ (16)

ஸ நாஸ்தி பரமித்யேவ குரு பு$_{3}$த்$_{3}$தி$_{4}$ மஹாமதே ।
ப்ரத்யக்ஷம் யத்தத$_{3}$ாதிஷ்ட$_{2}$ பரோக்ஷம் ப்ருஷ்ட$_{2}$த: குரு ॥ (17)

காகுத்தனே! ஒரு மனிதன் வேறோர் ஊருக்குப் போகும் வழியில், ஏதோ ஓர் இடத்தில் இரவில் தங்குகிறான்; மறுநாளே, அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டுவிடுகிறான். (அப்படிப் பிரிந்து செல்வதில் அவனுக்கு எந்த வருத்தமும் ஏற்படுவதில்லை.) இதைப் போலவேதான் மனிதர்களுக்கு தாய்–தந்தை–வீடு–செல்வம் ஆகியன எல்லாம் வெறும் தங்குமிடம் போன்றவையே. அறிவாளிகள் இவற்றின்மேல் பற்றுக்கொள்ள மாட்டார்கள். (5,6)

ஆகவே, நரோத்தமனே! நீ, வம்ச பரம்பரையாக வந்த நாட்டைத் துறந்து, துக்கம் தருவதும், மேடு–பள்ளமானதும், பற்பல இடைஞ்சல்களைக் கொடுப்பதுமான இந்தத் தவறான வழியில் செல்லக்கூடாது. (7)

செல்வச் செழிப்புள்ள அயோத்தியில் மன்னனாக உன்னை அபிஷேகம் செய்வித்துக் கொள். (வெளியூர் சென்றிருக்கும் கணவரின் விரக தாபத்தால்) ஒற்றைப் பின்னலுடன் விளங்கும் பெண்மணியைப் போல, (நீ இல்லாமல் களையிழந்து கிடக்கும்) அந்த நகரம் முழுவதும் உன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. (8)

மன்னர் மைந்தனே! தேவலோகத்தில் இந்திரன் சகல சௌக்கியங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பதைப் போல, விலைமதிக்க முடியாத அரச போகங்களை அனுபவித்துக் கொண்டு அயோத்தியில் நீ உலா வருவாயாக. (9)

தசரதர் உனக்கு ஒருவருமல்லர்; நீயும் அவருக்கு எந்த உறவும் உடையவனல்லன். மன்னர் வேறு; நீ வேறு. ஆகையால், (எங்களால்) என்ன சொல்லப்படுகிறதோ, அவ்வாறே செய். (நாட்டிற்குத் திரும்பி வந்து முடிசூட்டிக் கொள்.) (10)

இவ்வுலகில் தந்தை என்பவர் ஒரு ஜீவன் பிறப்பதற்கு நிமித்த காரணம் மட்டுமே; உண்மையில் ருது நீராடியுள்ள தாயின் கர்ப்பாசயத்தில் சோணித–சுக்லங்களின் இணைப்பே முதன்மையான காரணம். (11)

அந்த மன்னர் எந்த இடத்திற்குப் போக வேண்டுமோ, அங்கே போய்ச் சேர்ந்துவிட்டார். இதுதான் மனிதர்களுக்கு இயல்பு. நீயோ, ('அவர் என் தந்தை' என்ற) பொய்யான பாசத்தினால் உருகிக் கொண்டிருக்கிறாய். (12)

எந்தெந்த மனிதர்கள் தமக்குக் கிடைத்த செல்வங்களைத் துறந்து, தருமானுஷ்டானம் என்ற பெயரில் உடலை வருத்திக் கொள்கிறார்களோ, அவர்களை நினைத்துத்தான் நான் வருந்துகிறேன்; மற்றவர்களைப் பற்றி அல்ல. அவர்கள், இவ்வுலகில் தருமம் என்று கூறிக் கொண்டு, பற்பல கஷ்டங்களையும் அனுபவித்துவிட்டு, கடைசியில் உயிரைவிட்டபின் காணாமல் போய்விடுகிறார்கள். (அவர்களுக்கு நல்ல கதி கிடைத்ததா? என்பது நமக்குத் தெரியாது.) (13)

பாமர மனிதன், அஷ்டகா சிராத்தம், பித்ரு சிராத்தம் என்ற சடங்குகளில் பெரிதும் ஈடுபடுகிறான். உண்மையில், இந்தச் சிராத்தங்கள் உணவுப் பண்டங்களை வீணாக்கும் செயலே ஆகும். யோசித்துப் பார்! செத்துப் போய்விட்ட மனிதன் உணவு உண்பானா? (14)

இங்கு ஒரு மனிதனால் புசிக்கப்பட்ட உணவு, வேறோர் இடத்திலுள்ள வேறொரு சரீரத்திற்குப் போய்ச் சேருமா? (சேரும் என்றால்) நெடுந்தூரம் பயணம் செய்யும் ஒருவனுக்கு இங்கேயே சிராத்தம் செய்துவிட்டால், வழியில் அவனுக்கு அந்த உணவு போய்ச் சேர்ந்துவிட வேண்டுமே? (கட்டுச்சாதம் சுமந்துகொண்டு போக வேண்டியதில்லையே?) (15)

வேள்வி செய்; தானம் செய்; மந்திர உபதேசம் பெற்றுக் கொள்; தவம் செய்; வீட்டையும் பொருட்களையும் துறந்துவிடு – என்றெல்லாம் கூறும் நூல்கள், மகா புத்திமான்களால் தானத்தின் சிறப்பை வலியுறுத்துவதற்காகச் செய்யப்பட்டன. (16)

மேதாவியே! (கண்ணுக்குப் புலனாகாத) மேலுலகம் இல்லை என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொள். எது கண்ணுக்குத் தெரிகிறதோ, அதையே ஏற்றுக் கொள். கண்ணுக்குப் புலப்படாதவைகளைப் பின்னுக்குத் தள்ளிவிடு. (17)

ஸதாம் பு3த்3தி4ம் புரஸ்க்ருத்ய ஸர்வலோகநித3ர்ஶிநீம் ।
ராஜ்யம் த்வம் ப்ரதிக்3ருஹ்ணீஷ்வ ப4ரதேந ப்ரஸாதி3த: ॥ (18)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 அஷ்டாதி4கஶததம: ஸர்க3: ॥

நவாதி4கஶததம: ஸர்க3:

ஸத்யப்ரஶம்ஸா

ஜாப3ாலேஸ்து வச: ஶ்ருத்வா ராம: ஸத்யவதாம் வர: ।
உவாச பரயா ஸூக்த்யா ஸ்வபு3த்3த்4யா சாவிபந்நயா ॥ (1)

ப4வாந் மே ப்ரியகாமார்த2ம் வசநம் யதி3ஹோக்தவாந் ।
அகார்யம் கார்யஸங்காஶமபத்2யம் பத்2யஸம்மிதம் ॥ (2)

நிர்மர்யாத3ஸ்து புருஷ: பாபாசாரஸமந்வித: ।
மாநம் ந லப4தே ஸத்ஸு பி4ந்நசாரித்ரத3ர்ஶந: ॥ (3)

குலீநமகுலீநம் வா வீரம் புருஷமாநிநம் ।
சாரித்ரமேவ வ்யாக்2யாதி ஶுசிம் வா யதி3 வாஶுசிம் ॥ (4)

அநார்யஸ்த்வார்யஸங்காஶ: ஸௌஸாத்3 தீ3நஸ்ததா2 ஶுசி: ।
லக்ஷ்மண்யவத்3லக்ஷ்மண்யோ து3:ஶீல: ஶீலவாநிவ ॥ (5)

அத4ர்மம் த4ர்மவேஷேண யதீ3மம் லோகஸங்கரம் ।
அபி4பத்ஸ்யே ஶுப4ம் ஹித்வா க்ரியாம் விதி4விவர்ஜிதாம் ॥ (6)

கஶ் சேதயாந: புருஷ: கார்யாகார்ய விசக்ஷண: ।
பஶ்யந் மம்ஸ்யதி மாம் லோகே து3ர்வ்ருத்தம் லோகதூ3ஷணம் ॥ (7)

கஸ்ய யாஸ்யாம்யஹம் வ்ருத்தம் கேந வா ஸ்வர்க3மாப்நுயாம் ।
அநயா வர்தமாநோঽஹம் வ்ருத்த்யா ஹீநப்ரதிக்ஞயா ॥ (8)

சான்றோர்களின் சொற்கள், எல்லா மக்களுக்கும் நல்வழியைக் காட்டுவதால் பிரமாணமாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, பரதனுடைய பிரார்த்தனைக்குச் செவிசாய்த்து, ராஜ்யத்தை நீ ஏற்றுக் கொள்ள வேண்டும்." (18)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றியெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றியொன்பது

இராமன் சத்தியத்தின் மேன்மையை விளக்குவது

ஜாபாலியின் சொற்களைக் கேட்டபின், சத்திய நெறியை கடைப்பிடிப்பவர்களுள் தலையாயவரும், சந்தேகத்திற்கு இடமில்லாமல் தன் வழியில் நிச்சயமான பிடிப்பு உள்ளவரும், வேத–சாஸ்திர–மெய்ஞானிகளின் உபதேச வாயிலாக அறியப்பட்டதுமான நீதிகளின் அடிப்படையில் இராமன் சொன்னார்— (1)

"தாங்கள், எனக்கு நன்மை செய்யக் கருதி, இப்போது சொன்ன சொற்கள் (கேட்பதற்கு இனிமையாக இருப்பதால்), 'செய்யத்தக்க செயல் இதுவே' என்பது போல் தோற்றமளித்தாலும், (உண்மையில்) செய்யத்தகாத, தருமத்திற்கு ஒவ்வாத செயலே ஆகும். நல்ல வழி என்பது போல் தோன்றினும் தவறான பாதையே ஆகும். (2)

அறநூல்களின் உபதேசங்களுக்கு ஒப்ப நடக்காதவன், ஒழுக்கம்–சிந்தனைகளில் வேறுபட்டு பாவங்களைச் செய்கிறான். (நல்ல ஒழுக்கமும் நல்ல சிந்தனைகளும் இல்லாமல் போகிறான்.) இப்படிப்பட்டவன் சான்றோர்களால் மதிக்கப்படுவதில்லை. (3)

ஒருவனுடைய ஒழுக்கம்தான் அவன் நற்குலத்தில் பிறந்தவனா? இல்லை, இழிகுலத்தில் பிறந்தவனா? என்பதையும், அவன் சிறந்த வீரனா? அல்லது, வெறும் ஆண் தோற்றமுடையவன் மட்டும்தானா? என்பதையும், அவன் மனத்தூய்மை உடையவனா? அல்லது, அழுக்கடைந்த மனம் உடையவனா? என்பதையும் விளக்கமாகக் காட்டிக் கொடுக்கும். (4)

[(வெளித் தோற்றத்தை (செவிக்கு இனிய சொற்களை)க் கொண்டு ஒருவனை எடை போட முடியாது.] தீய நடத்தையுடையவனோ நன்னடத்தை உடையவன் போல் காணப்படுவான்; அந்தரங்க சுத்தமில்லாதவனோ நற்குணங்கள் உள்ளவன் போலும்; வைதிக ஆசார–அனுஷ்டானங்களில் ஈடுபட்டவன் போல் பேசித் திரியும் ஒருவன், அவற்றை அனுஷ்டிக்காமலும் இருப்பான்; தீயகுணங்கள் உடையவனோ ஆத்ம குணங்களைக் கொண்டவன் போல் காணப்படுவான். (5)

உலகத்தைக் கெடுக்கக்கூடியதும், தருமம் என்ற தோற்றத்தில் தாங்கள் கூறியதுமான அதருமமான உபதேசங்களை நான் ஏற்றுக் கொண்டேனேயானால், செம்மையான நீதி நெறியைத் துறந்து, அதருமமான காரியங்களைச் செய்வேனாகில், உலகில் செய்யத்தக்கது–தகாதது என்று பகுத்தறியும் நல்லறிவுடைய சான்றோர் எவரேனும் மக்களால் இகழத்தக்க தீயநெறியைக் கடைப்பிடித்த என்னை மதிப்பாரா? (6,7)

கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றாமல் விடுவது என்ற செயல், (இதற்குமுன்) எந்தச் சான்றோர் காட்டிய வழி எனப் பின்பற்றுவேன்? (நீங்கள் கூறியபடி, இதற்கு முன்பு எங்கள் முன்னோர்களில் யாரும் – சத்தியம் தவறுதல் பாவமில்லை என்று – நடந்து காட்டவில்லையே?) இப்போது நான் கொடுத்த வாக்குறுதியைக் கைவிட்டால், எந்த மார்க்கத்தால் நான் சுவர்க்கத்தை அடைவேன்? (சத்தியத்தை மீறிய பாவிக்கு சுவர்க்கம் எப்படிக் கிடைக்கும்?) (8)

காமவ்ருத்தஸ் த்வயம் லோக: க்ருத்ஸ்ந: ஸமுபவர்ததே ।
யத்3வ்ருத்தா: ஸந்தி ராஜானஸ் தத்3வ்ருத்தா: ஸந்தி ஹி ப்ரஜா: ॥ (9)

ஸத்யமேவாந்ருஶம்ஸம் ச ராஜவ்ருத்தம் ஸநாதநம் ।
தஸ்மாத்ஸத்யாத்மகம் ராஜ்யம் ஸத்யே லோக: ப்ரதிஷ்டி2த: ॥ (10)

ருஷயஶ்சைவ தே3வாஶ்ச ஸத்யமேவ ஹி மேநிரே ।
ஸத்யவாதீ3 ஹி லோகேঽஸ்மிந் பரமம் க3ச்ச2தி க்ஷயம் ॥ (11)

உத்3விஜந்தே யதா2 ஸர்பாந் நராத3ந்ருதவாதி3ந: ।
த4ர்ம: ஸத்யம் பரோ லோகே மூலம் ஸர்வஸ்ய சோச்யதே ॥ (12)

ஸத்யமேவேஶ்வரோ லோகே ஸத்யே பத்3மா ப்ரதிஷ்டி2தா ।
ஸத்யமூலாநி ஸர்வாணி ஸத்யாந்நாஸ்தி பரம் பத3ம் ॥ (13)

த3த்தமிஷ்டம் ஹுதம் சைவ தப்தாநி ச தபாம்ஸி ச ।
வேத3ா: ஸத்யப்ரதிஷ்ட2நாஸ் தஸ்மாத் ஸத்யபரோ ப4வேத் ॥ (14)

ஏக: பாலயதே லோகமேக: பாலயதே குலம் ।
மஜ்ஜத்யேகோ ஹி நிரய ஏக: ஸ்வர்கே3 மஹீயதே ॥ (15)

ஸோঽஹம் பிதுர்நியோக3ம் து கிமர்த2ம் நாநுபாலயே ।
ஸத்யப்ரதிஶ்ரவ: ஸத்யம் ஸத்யேந ஸமயீக்ருத: ॥ (16)

நைவ லோப4ாந்ந மோஹாத்3வா ந ஹ்யக்ஞாநாத் தமோঽந்வித: ।
ஸேதும் ஸத்யஸ்ய பே4த்ஸ்யாமி கு3ரோ: ஸத்யப்ரதிஶ்ரவ: ॥ (17)

அஸத்யஸந்த4ஸ்ய ஸதஶ்சலஸ்யாஸ்தி2ரசேதஸ: ।
நைவ தே3வா ந பிதர: ப்ரதீச்ச2ந்தீதி ந: ஶ்ருதம் ॥ (18)

ப்ரத்யக்3ாத்மமிமம் த4ர்மம் ஸத்யம் பஶ்யாம்யஹம் த்4ருவம் ।
ப4ர: ஸத்புருஷைஶ்சீர்ணஸ் ததா3ர்த2மபி4மந்யதே ॥ (19)

க்ஷாத்ரம் த4ர்மமஹம் த்யக்ஷ்யே ஹ்யத4ர்மம் த4ர்மஸம்ஹிதம் ।
க்ஷுத்3ரைர் ந்ருஶம்ஸைர் லுப்3தை4ஶ்ச ஸேவிதம் பாபகர்மபி4: ॥ (20)

மன்னர்கள் எவ்வழி நடக்கிறார்களோ, அவ்வழியையே மக்கள் பின்பற்றி நடக்கிறார்கள். (தாங்கள் உபதேசித்த வழியை நான் பின்பற்றினால் மக்களும் தைரியமாக தவறான பாதைகளில் செல்லத் தொடங்குவார்கள்.) அந்த நிலையில், இந்த உலகம் முழுவதும் தத்தம் விருப்பப்படி (நீதி–நியாயங்களைக் காற்றில் பறக்க விட்டுவிட்டு) நடக்க ஆரம்பித்துவிடும். (9)

உயிர்ப் பிராணிகளிடம் கருணையோடு விளங்கும் பண்பு, சத்தியம்; தொன்மைக் காலத்திலிருந்து மன்னர்களால் கைக்கொள்ளப்பட்ட நெறி. அரசு நிர்வாகம் என்பது சத்தியமே வடிவானது; உலகம் சத்தியத்தில் நிலைபெற்றிருக்கிறது. (10)

முனிவர்களும் தேவர்களும் சத்தியத்தையே முழுமையாக மதித்துப் போற்றினார்கள்; மேலும், சத்தியம் பேசுகிறவன் இவ்வுலகில் உயர்ந்த இடத்திற்குப் போகிறான். (உன்னதமான பதவியை அடைகிறான்.) (11)

உசுப்பிவிடப்பட்ட பாம்பைக் கண்டு மனிதன் அஞ்சுவதைப் போல, பொய் பேசுபவனைக் கண்டும் மக்கள் பயப்படுகிறார்கள். உலகத்தில் தருமத்தின் எல்லையாக இருப்பது சத்தியமே. அனைத்திற்கும் (அனைத்து நன்மைகளுக்கும்) அதுவே மூலகாரணம் என்றும் சொல்லப்படுகிறது. (12)

உலகத்தில் சத்தியம்தான் ஈசுவரன் (அனைத்திற்கும் மேலாக இருப்பது); சத்தியத்தில்தான் திருமகள் வசிக்கிறாள்; எல்லா நற்செயல்களுக்கும் சத்தியமே ஆணிவேர்; சத்தியத்தைக் காட்டிலும் உயர்ந்த ஸ்தானம் இல்லவே இல்லை. (13)

தானம், வேள்வி, ஹோமம், கடுமையான கட்டுப்பாடுகளுடன் செய்யப்பட்ட தவம், மற்றும் வேதங்களும் சத்தியத்தின் மேல் நிற்கின்றன. ஆகவே, மனிதன் சத்தியத்தையே முற்றிலுமாக அனுசரிக்கக் கடவன். (14)

ஒரு மனிதன், உலகத் தலைவனாகிப் பாதுகாக்கிறான். இன்னொரு மனிதன், தன் பரம்பரைப் பெருமைகளைக் காப்பாற்றுகிறான். வேறொருவன், நரகத்தில் வீழ்ந்து மூழ்கிப் போகிறான். வேறொருவன், சுவர்க்கலோகத்தில் போற்றப்படுகிறான். (15)

இவ்விதம் சத்தியத்தின் மேன்மையில் உறுதியுடைய நான், வாக்குத் தவறாதவன்; தந்தை கொடுத்த வரங்களை நிறைவேற்றுவதாகச் சபதம் செய்திருக்கிறேன். ஆகவே, இப்போது (தந்தையின் முன் செய்த சபதத்தை) கொடுத்த வாக்குறுதியை எப்படிக் கடைப்பிடிக்காமல் இருப்பேன்? (16)

தந்தைக்கு அளித்த வாக்கை பேராசையாலோ, மதிமயக்கத்தாலோ, தெள்ளிய அறிவின்மையாலோ, அறியாமையால் மதியிழந்தோ சத்திய வரம்பை மீறி நடக்க மாட்டேன். (17)

அசத்தியம் பேசுகிறவனும், நிலையான அறச்சிந்தனை இல்லாதவனும், நற்செயல்களில் தடுமாற்றமுடையவனுமான ஒருவனால் அளிக்கப்படும் நைவேத்யம், பிண்டம் ஆகியவற்றை முறையே தேவதைகளும் பிதிரர்களும் ஏற்கமாட்டார்கள் என்று, நாங்கள் (குருமுகமாகக்) கேட்டிருக்கிறோம். (18)

நான், சத்தியம் கூறுதல் என்ற தருமத்தைத்தான் எல்லாப் பிராணிகளுக்கும் நன்மை செய்யும் வழியாகவும், எல்லா தருமங்களைக் காட்டிலும் உயர்ந்ததாகவும் நிச்சயமாகக் கருதுகிறேன். ஆகவே, சான்றோர்களால் அணியப்படும் ஜடாபாரம், மரவுரி ஆகியன கொண்டாடப்படுகின்றன. (இவ்வாறு, தம் உடலை வருத்திக் கொள்பவர்கள் சத்தியம் தவறமாட்டார்கள் என்பது திண்ணம்.) (19)

பாவச்செயல்கள் புரியும் அற்பர்களும், கொடியவர்களும், பேராசை கொண்டவர்களாலும் ஏற்கப்படுவதும், அறநெறி போல் தோற்றம் தரும் அதருமமான இந்த க்ஷத்திரிய நெறியை நான் துறக்கிறேன். (அரசாள்வது க்ஷத்திரிய தருமம். ஆனால், அதுவே சத்தியவாக்கிற்கு எதிராக இருக்கும் நிலையில் கைவிடத்தக்கதே.) (20)

காயேந குருதே பாபம் மநஸா ஸம்ப்ரத$_4$ார்ய ச ।
அந்ருதம் ஜிஹ்வயா சாஹ த்ரிவித$_4$ம் கர்ம பாதகம் ॥ (21)

பூ$_4$மி: கீர்திர்யஶோ லக்ஷ்மீ: புருஷம் ப்ரார்த$_2$யந்தி ஹி ।
ஸத்யம் ஸமநுவர்தந்தே ஸத்யமேவ ப$_4$ஜேத்தத: ॥ (22)

ஶ்ரேஷ்ட$_2$ம் ஹ்யநார்யமேவ ஸ்யாத்$_3$யத்$_3$ப$_4$வாநவத$_4$ார்ய மாம் ।
ஆஹ யுக்திகரைர்வாக்யைரித$_3$ம் ப$_4$த்$_3$ரம் குருஷ்வ ஹ ॥ (23)

கத$_2$ம் ஹ்யஹம் ப்ரதிக்ஞாய வநவாஸமிமம் கு$_3$ரௌ ।
ப$_4$ரதஸ்ய கரிஷ்யாமி வசோ ஹித்வா கு$_3$ரோர்வச: ॥ (24)

ஸ்தி$_2$ரா மயா ப்ரதிக்ஞாதா ப்ரதிக்ஞா கு$_3$ருஸந்நிதெ$_2$ள ।
ப்ரஹ்ருஷ்யமாணா ஸா தே$_3$வீ கைகேயீ சாப$_4$வத்தத$_3$ா ॥ (25)

வநவாஸம் வஸந்நேவம் ஶுசிர் நியதபே$_4$ாஜந: ।
மூலை: புஷ்பை: ப$_2$லை: புண்யை: பித்ரூந் தே$_3$வாம்ஶ்ச தர்பயந் ॥ (26)

ஸந்துஷ்டபஞ்சவர்கே$_3$ாऽஹம் லோகயாத்ராம் ப்ரவர்தயே ।
அகுஹ: ஶ்ரத்$_3$த$_4$த$_4$ாந: ஸந் கார்யாகார்யவிசக்ஷண: ॥ (27)

கர்மபூ$_4$மிமிமாம் ப்ராப்ய கர்தவ்யம் கர்ம யச்சு$_2$ப$_4$ம் ।
அக்$_3$நிர்வாயுஶ்ச ஸோமஶ்ச கர்மணாம் ப$_2$லப$_3$ாகி$_3$ந: ॥ (28)

ஶதம் க்ரதூநாமாஹ்ருத்ய தே$_3$வராட் த்ரிதி$_3$வம் க$_3$த: ।
தபாம்ஸ்யுக்$_3$ராணி சாஸ்த$_2$ாய தி$_3$வம் யாதா மஹர்ஷய: ॥ (29)

அம்ருஷ்யமாண: புநருக்$_3$ரதேஜா
நிஶம்ய தந்நாஸ்திக ஹேதுவாக்யம் ।
அத$_2$ாப்$_3$ரவீத்தம் ந்ருபதேஸ்தநூஜோ
விக$_3$ர்ஹமாணோ வசநாநி தஸ்ய ॥ (30)

ஸத்யம் ச த$_4$ர்மம் ச பராக்ரமம் ச
பூ$_4$தாநுகம்பாம் ப்ரியவாதி$_3$தாம் ச ।
த்$_3$விஜாதி தே$_3$வாதிதி$_2$பூஜநம் ச
பந்த$_2$ாநமாஹுஸ் த்ரிதி$_3$வஸ்ய ஸந்த: ॥ (31)

தேநைவமாக்ஞாய யத$_2$ாவத$_3$ர்த$_2$–
மேகோத$_3$யம் ஸம்ப்ரதிபத்$_3$ய விப்ரா: ।
த$_4$ர்மம் சரந்த: ஸகலம் யத$_2$ாவத்–
காங்க்ஷந்தி லோகாக$_3$மமப்ரமத்தா: ॥ (32)

உடலினால் பாவத்தைச் செய்யும் மனிதன், முதலில் அதை மனதில் தீர்மானிக்கிறான்; நாவினால் பொய் பேசுகிறான். ஆக, பாவச்செயல் என்பது (மனம், வாக்கு, காயம் என்ற) மூன்று வகையாலும் செய்யப்படுகிறது. (21)

பூதேவி, இகலோகப் புகழ், மறைந்த பின் நிலைத்து நிற்கும் புகழ், செல்வத் திருமகள் – இவையெல்லாம் சத்தியம் பேசும் புருஷனையே அடைய விரும்புகின்றன. மேலும், சான்றோர்கள் சத்தியத்தையே கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, மனிதன் எப்போதும் சத்தியத்தையே அனைத்திலும் மேலானதாகக் கொள்ளவேண்டும். (22)

தாங்கள், எனக்கு நல்லது செய்யும் நோக்கத்துடன் அதற்கு ஏற்ற மாதிரியான தர்க்கவாதங்களைக் கொண்டு, 'நல்ல ஆலோசனைகளை ஏற்றுக்கொள். நாட்டிற்குத் திரும்பி வந்து ஆட்சி செலுத்து' என்று சொன்னீர்களே. அது நற்குடிப் பிறந்தோர் ஏற்கும் சொற்கள் அல்லவே? (23)

நான், தந்தையின் எதிரில், 'இவ்வாறு வனவாசம் செய்வேன்' என்று வாக்களித்திருக்கிறேன். இப்போது, அவருடைய கட்டளையை மீறி, பரதனுடைய வேண்டுகோளை எவ்வாறு ஏற்க முடியும்? (24)

தந்தையின் முன்னிலையில் செய்யப்பட்ட சபதம் உறுதியானது; அசைக்க முடியாதது. அப்போது (நான் காட்டிற்குப் போகிறேன்; பரதன் இளவரசுப்பட்டம் சூட்டிக் கொள்ளட்டும் என்று நான் சபதம் செய்தபோது) கைகேயிதேவி மனக் களிப்படைந்தார். (25)

பரிசுத்தனாக இருந்து கொண்டு விரத காலத்திற்குரிய உணவை உண்டு, புனிதமான கிழங்கு–பழம்–மலர்களால் பிதிரர்களையும் தேவர்களையும் திருப்தி செய்வேன். (26)

உள்ளும் புறமும் ஒரே மாதிரியாக இருந்து, செய்ய வேண்டியது–செய்ய வேண்டாதது என்பதை நன்றாகப் பகுத்துணர்ந்து, ஐம்புலன்களின் இயக்கங்களிலும் திருப்தி அடைந்தவனாக மிகவும் நம்பிக்கையோடு உலக வாழ்க்கையை நடத்தி வருவேன். (27)

கர்மபூமியான இந்த நாட்டில் பிறந்திருக்கும் நாம் புண்ணிய கர்மங்களையே செய்ய வேண்டும். ஏனென்றால், அக்னி, வாயு, சந்திரன் ஆகியோர் தத்தம் கர்மாக்களின் பயனையே, (அந்தந்தப் பதவியை அடைந்ததன் மூலம்) அனுபவித்து வருகிறார்கள். (28)

தேவராஜன், நூறு யாகங்கள் இயற்றி (அவற்றின் பயனாக) தேவலோக தலைமைப் பதவியை அடைந்தான்; கடுமையான நியமங்களோடு தவம் புரிந்த முனிவர்கள் சுவர்க்கலோகம் சென்றார்கள்.'' (29)

மகாதேஜஸ்வியும் அரசகுமாரருமான இராமன், நாத்திகத்தைத் தூண்டும் (பரலோகம் இல்லை; வேத–சாஸ்திரம் தவறு – என்பது முதலான) சொற்களைக் கேட்டு, அவைகளை சகித்துக் கொள்ள முடியாமல், அவருடைய வாதங்களைக் கண்டிக்கும் நோக்கத்துடன் அவரைப் பார்த்து மேலும் கூறினார்— (30)

''சத்தியம், தருமம், போரில் புறமுதுகு காட்டாத வீரம், அனைத்துப் பிராணிகளிடத்திலும் கருணை, அந்தணர்களையும் தேவதைகளையும் விருந்தினர்களையும் வணங்கிப் போற்றுதல் – இவைகளே ஒருவனை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் வழிகள் என்று மகான்கள் சொல்லியிருக்கிறார்கள். (31)

அதனால்தான், சான்றோர்களின் இந்தச் சொற்களின்படியும், நியாயமான வாதங்களாலும் தருமத்தின் நுட்பத்தை ஆராய்ந்து, திண்ணமான முடிவிற்கு வந்து, அதன்படி சிரத்தையுடன் மனச்சஞ்சலம் அடையாதவர்களாக அறநெறியைக் கடைப்பிடித்து, உத்தமமான விண்ணுலகங்களை அடைவதில் அந்தணர்கள் விருப்பம் கொண்டுள்ளார்கள். (32)

நிந்த்3யாம்யஹம் கர்ம பிது: க்ருதம் தத்3–
யஸ்த்வாமக்3ருஹ்ணாத்3 விஷமஸ்த2பு3த்3தி4ம் ।
பு3த்3த்4யாநயைவம்வித4யா சரந்தம்
ஸுநாஸ்திகம் த4ர்மபத2ாத3பேதம் ॥ (33)

யத2ா ஹி சோர: ஸ தத2ா ஹி பு3த்3த4ஸ்–
தத2ாக3தம் நாஸ்திகமத்ர வித்3தி4 ।
தஸ்மாத்3தி4 ய: ஸங்க்யதம: ப்ரஜாநாம்
ந நாஸ்திகேநாபி4முகே2ா பு3த4: ஸ்யாத் ॥ (34)

த்வத்தோ ஜநா: பூர்வதரேঽவராஶ்ச
ஸுபா4நி கர்மாணி ப3ஹூநி சக்ரு: ।
ஜித்வா ஸதே3மம் ச பரம் ச லோகம்
தஸ்மாத்3த்3விஜா: ஸ்வஸ்தி ஹுதம் க்ருதம் ச ॥ (35)

த4ர்மே ரதா: ஸத்புருஷை: ஸமேதாஸ்–
தேஜஸ்விநோ தா3நகு3ணப்ரதா4நா: ।
அஹிம்ஸகா வீதமலாஶ்ச லோகே
ப4வந்தி பூஜ்யா முநய: ப்ரதா4நா: ॥ (36)

இதி ப்3ருவந்தம் வசநம் ஸரோஷம்
ராமம் மஹாத்மாநமதீ3நஸத்த்வம் ।
உவாச தத்2யம் புநராஸ்திகம் ச
ஸத்யம் வச: ஸாநுநயம் ச விப்ர: ॥ (37)

ந நாஸ்திகாநாம் வசநம் ப்3ரவீம்யஹம்
ந நாஸ்திகோঽஹம் ந ச நாஸ்தி கிஞ்சந ।
ஸமீக்ஷ்ய காலம் புநராஸ்திகோঽப4வம்
ப4வேய காலே புநரேவ நாஸ்திக: ॥ (38)

ஸ சாபி காலோঽயமுபாக3த: ஸுநைர்–
யத2ா மயா நாஸ்திகவாகு3தீ3ரிதா ।
நிவர்தநார்த2ம் தவ ராம காரணாத்–
ப்ரஸாத3நார்த2ம் ச மயைததீ3ரிதம் ॥ (39)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 நவாதிகஶததம: ஸர்க3: ॥

தங்கள் அறிவு, தவறான வழியில் நிலைபெற்றிருக்கிறது; தாங்கள் (தெய்வம், வேதம், தருமம் ஆகியவைகளில் நம்பிக்கையில்லாத) நாஸ்திகர்; தாங்கள் தரும வழியிலிருந்து வெகுதூரத்திற்கப்பால் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட தங்களை, (தான் செய்யும் யக்ஞ காரியங்களில் ஒரு வேள்வியாளராக) என் தந்தை ஏற்றுக்கொண்ட அந்தச் செயலை நான் நிந்திக்கிறேன். (என் தந்தையின் இந்தச் செயலை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.) (33)

அறிவாளியானவன் நாத்திகவாதத்திற்கு இடம் கொடுப்பானாகில், அதாவது வேதத்திற்குப் புறம்பான வழியில் செல்வானாகில், அவன் திருடனைப் போன்றவனாவான். அவ்வாறு சந்தேகிக்கத் தக்கவர்களை நல்லறிஞர்கள் முகம் கொடுத்தும் பேசுவதில்லை. (இதுவே, அவர்களுக்குப் பெரிய தண்டனை ஆயிற்று.) (34)

ஆகையால்தான், தங்களைக் காட்டிலும் பெரியோர்களும், வயதில் சிறியவர்களுமான மக்கள், மங்களகரமான அநேக கர்மாக்களைச் செய்தார்கள். தவம், கொடை, யாகம் முதலிய நற்கர்மங்களை மறை ஒழுக்கப்படி செய்து, இவ்வுலகிலும் மேலுலகிலும் வெற்றியை நிலைநாட்டி, அந்தணர்கள் மேன்மை அடைந்தார்கள். (35)

தருமத்தில் உறுதியான நம்பிக்கை உடையவர்கள், மெய்ஞானிகளுடன் உறவு கொண்டிருப்பவர்கள், ஆன்ம ஒளி மிக்கவர்கள், ஈகைக் குணத்தை முக்கியமாகக் கொண்டவர்கள், எந்த ஜீவனையும் துன்புறுத்தாதவர்கள், மனமாசுகள் நீங்கியவர்கள் – இப்படிப்பட்ட உத்தமமான முனிவர்கள்தாம், உலகத்தில் பூஜிக்கத்தக்கவர்கள் ஆகின்றார்கள்." (36)

இவ்வாறு, தாழ்ந்து போகாத மனஉறுதி படைத்த இராமன், கோபத்துடன் பேசியதைக் கேட்ட அந்தணர் (ஜாபாலி), மறுபடியும் பேசத் தொடங்கி, தெய்வம்–வேதம் முதலியவைகளில் நம்பிக்கையுடைய ஆஸ்திகமான, சத்தியமான, நன்மை அளிக்கக்கூடிய சொற்களைப் பணிவுடன் உரைத்தார்— (37)

"(இராமா!) நான் நாஸ்திக வாதத்தை உயர்வாகப் பேசவில்லை; நான் நாஸ்திகனும் அல்லன்; பரலோகம் முதலானவை இல்லை என்று சொல்பவனும் அல்லன். இப்போது, சந்தர்ப்பத்தை அனுசரித்து நான் ஆஸ்திகனாகிவிட்டேன்! அவசியம் ஏற்பட்டால் பின்னொரு சமயத்தில் நான் நாத்திகனாகவும் மாறுவேன்! (38)

நாத்திகவாதம் செய்ய வேண்டிய சந்தர்ப்பம், இப்போது எவ்வாறோ ஏற்பட்டிருந்தது. இராமா! உன்னை எப்படியாவது சமாதானப்படுத்தி (அயோத்திக்குத்) திரும்பவும் அழைத்துப் போவது என்ற காரணத்தால், என்னால் (வேத விரோதமான) நாத்திகம் பேசப்பட்டது." (ஆகவே, நான் இப்படிப் பேசியதற்காக, நீ என்னை மன்னிக்க வேண்டும்.) (39)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்யா காண்டத்தில்
நூற்றியொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

த$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$:

இக்ஷ்வாகுவம்ஶகீர்தநம்

க்ருத்$_3$த$_4$மாக்ஞாய ராமம் து வஸிஷ்ட$_2$: ப்ரத்யுவாச ஹ ।
ஜாப$_3$ாலிரபி ஜாநீதே லோகஸ்யாஸ்ய க$_3$தாக$_3$திம் ॥ (1)

நிவர்தயிதுகாமஸ்து த்வாமேதத்$_3$வாக்யமுக்தவாந் ।
இமாம் லோகஸமுத்பத்திம் லோகநாத$_2$ நிபே$_3$ாத$_4$ மே ॥ (2)

ஸர்வம் ஸலிலமேவாஸீத் ப்ருதி$_2$வீ யத்ர நிர்மிதா ।
தத: ஸமப$_4$வத்$_3$ப்$_3$ரஹ்மா ஸ்வயம்பூ$_4$ர்தை$_3$வத: ஸஹ ॥ (3)

ஸ வராஹஸ்ததோ பூ$_4$த்வா ப்ரோஜ்ஜஹார வஸுந்த$_4$ராம் ।
அஸ்ருஜச்ச ஜக$_3$த்ஸர்வம் ஸஹ புத்ரை: க்ருதாத்மபி$_4$: ॥ (4)

ஆகாஶப்ரப$_4$வோ ப்$_3$ரஹ்மா ஶாஶ்வதோ நித்ய அவ்யய: ।
தஸ்மாந்மரீசி: ஸம்ஜக்ஞே மரீசே: கஶ்யப: ஸுத: ॥ (5)

விவஸ்வாந் கஶ்யபாஜ்ஜக்ஞே மநுர்வைவஸ்வத: ஸுத: ।
ஸ து ப்ரஜாபதி: பூர்வமிக்ஷ்வாகுஸ்து மநோ: ஸுத: ॥ (6)

யஸ்யேயம் ப்ரத$_2$மம் த$_3$த்தா ஸம்ருத்$_3$த$_4$ா மநுநா மஹீ ।
தமிக்ஷ்வாகுமயோத்$_4$யாயாம் ராஜாநம் வித்$_3$தி$_4$ பூர்வகம் ॥ (7)

இக்ஷ்வாகோஸ்து ஸுத: ஶ்ரீமாந் குக்ஷிரித்யேவ விஶ்ருத: ।
குக்ஷேரத$_2$ாத்மஜோ வீரோ விகுக்ஷிருத$_3$பத்$_3$யத ॥ (8)

விகுக்ஷேஸ்து மஹாதேஜா ப$_3$ாண: புத்ர: ப்ரதாபவாந் ।
ப$_3$ாணஸ்ய து மஹாப$_3$ாஹுரநரண்யோ மஹாயஶா: ॥ (9)

நாநாவ்ருஷ்டிர் ப$_3$பூ$_4$வாஸ்மிந் ந து$_3$ர்பி$_4$க்ஷம் ஸதாம் வரே ।
அநரண்யே மஹாராஜே தஸ்கரோ நாபி கஶ்சந ॥ (10)

அநரண்யாந் மஹாப$_3$ாஹு: ப்ருதூ$_2$ ராஜா ப$_3$பூ$_4$வ ஹ ।
தஸ்மாத்ப்ருதே$_2$ார் மஹாராஜஸ் த்ரிஶங்குருத$_3$பத்$_3$யத ॥ (11)

ஸ ஸத்யவசநாத்$_3$வீர: ஸஶரீரோ தி$_3$வம் க$_3$த: ।
த்ரிஶங்கோரப$_4$வத்ஸூநுர் து$_3$ந்து$_4$மாரோ மஹாயஶா: ॥ (12)

து$_3$ந்து$_4$மாராந்மஹாதேஜா யுவநாஶ்வோ வ்யஜாயத ।
யுவநாஶ்வஸுத: ஶ்ரீமாந் மாந்த$_4$ாதா ஸமபத்$_3$யத ॥ (13)

மாந்த$_4$ாதுஸ்து மஹாதேஜா: ஸுஸந்தி$_4$ருத$_3$பத்$_3$யத ।
ஸுஸந்தே$_4$ரபி புத்ரௌ த்$_3$வௌ த$_4$ ருவஸந்தி$_4$: ப்ரஸேநஜித் ॥ (14)

ஸர்க்கம் : நூற்றுப் பத்து

இக்ஷ்வாகு பரம்பரையைப் புகழ்தல்

இராமன், இன்னமும் கோபத்தோடு இருப்பதை அறிந்து கொண்ட வசிஷ்டர், "ஜாபாலியும் இந்த உலகில் உயிர்கள் தோன்றுவதையும் மறைவதையும் (உடலைத் துறந்து மேலுலகம் சென்று, பின் மறுபிறவி எடுப்பதை) அறிவார்" என்று பதில் சொன்னார். (அவர் நாஸ்திகர் அல்லர்.) (1)

"ஜகதீசுவரா! உன்னைத் திரும்ப அழைத்துப் போகும் ஆசையில், அவர் இவ்வாறு தாறுமாறாகப் பேசினார். அவ்வளவுதான், இந்த உலகம் தோன்றியவிதத்தை நான் விரிவாகச் சொல்கிறேன், கேள். (2)

முதலில், எல்லாம் (எல்லாவிடத்திலும்) ஜலமயமாகவே இருந்தது; அதன் மத்தியில் பூமண்டலம் நிலைநிறுத்தப்பட்டது. பின்னர், தான்தோன்றியான பிரும்மா தேவதைகளோடு தோன்றினார். (3)

பிறகு, மகாவிஷ்ணு ஸ்வரூபமான பிரும்மா வராகமூர்த்தியாக வெளிப்பட்டு, இந்தப் பூமியை மேலே இழுத்துக் கொண்டு வந்தார். குணசாலிகளான புதல்வர்களுடன் இவ்வுலகமனைத்தையும் படைத்தார். (4)

நித்திய நிரந்தரமாக அழிவில்லாமல் இருக்கும் பிரும்மா, ஆகாயத்தில் (வெட்டவெளியில்) தோன்றியவர்; அவரிடமிருந்து மரீசி (என்ற பிரஜாபதி) தோன்றினார்; மரீசியின் புதல்வர் கசியபர். (5)

கசியபரிடமிருந்து விவஸ்வான் தோன்றினார்; விவஸ்வானுடைய குமாரர் வைவஸ்வத மனு; அவர்தான் முதலாவது பிரஜாபதி. மனுவின் புதல்வர் இக்ஷ்வாகு. (6)

எல்லா வளங்களையும் உடைய இந்த பூமி முதன்முதலாக மனுவினால் யாருக்குக் கொடுக்கப்பட்டதோ, அந்த இக்ஷ்வாகுதான் அயோத்தியின் முதலாவது மன்னன். (7)

இக்ஷ்வாகுவின் புதல்வன் குக்ஷி என்பவன் சகல ஐசுவரியங்களையும் பெற்றுப் புகழோடு விளங்கினான். பின்னர், வீரனான விகுக்ஷி என்பவன் குக்ஷியின் குமாரனாகத் தோன்றினான். (8)

விகுக்ஷியிடமிருந்து மகாதேஜோவானும் பராக்கிரமம் மிக்கவனுமான பாணன் என்பவன் புத்திரனாகப் பிறந்தான்; பெருந்தோளனும், பெரும்புகழ் கொண்டவனுமான அநரண்யன் பாணனின் புதல்வன். (9)

நற்குணங்கள் பொருந்தியவர்களில் முதன்மையானவரான அநரண்யன் ஆட்சி செலுத்துகையில், நாட்டில் மாரி பொய்த்ததில்லை; பஞ்சம் ஏற்பட்டதில்லை; ஒரு திருடன்கூட இல்லை. (10)

அநரண்யனுக்குப் பிறகு, (அவர் மைந்தர்) மகாவீரரான ப்ருது மன்னரானார். அந்த ப்ருது மன்னரிடமிருந்து திரிசங்கு தோன்றினார். (11)

வீரரான திரிசங்கு (விசுவாமித்திர மகரிஷியின்) சத்தியமான வார்த்தைகளால் இந்த உடலுடனேயே தேவலோகம் சென்றார். பெரும்புகழ் கொண்ட துந்துமாரன், திரிசங்குவின் புதல்வனாகத் தோன்றினான். (12)

துந்துமாரனிடமிருந்து மகாதேஜஸ்வியான யுவநாஸ்வன் பிறந்தான்; யுவநாஸ்வனுடைய மகன் திருவுடை செல்வனான மாந்தாதா உண்டானார். (13)

மாந்தாதாவிற்கு மகாதேஜஸ்வியான ஸுஸந்தி என்பவன் மகனாகப் பிறந்தான்; ஸுஸந்திக்கு துருவஸந்தி, ப்ரஸேனஜித் என்ற இரண்டு குமாரர்கள். (14)

யஜ்ஞஸ்வீ த்ருவஸந்தே4ஸ்து ப4ரதோ ரிபுஸூத3ந: ।
ப4ரதாத்து மஹாப3ாஹோரஸிதோ நாம ஜாயத ॥ (15)

யஸ்யைதே ப்ரதிராஜாந உத3பத்3யந்த ஜத்ரவ: ।
ஹைஹயாஸ் தாலஜங்கா4ஶ்ச ஶூராஶ்ச ஶஶிபி3ந்த3வ: ॥ (16)

தாம்ஸ்து ஸர்வாந் ப்ரதிவ்யூஹ்ய யுத்3தே4 ராஜா ப்ரவாஸித: ।
ஸ ச ஶைலவரே ரம்யே ப3பூ4வாபி4ரதோ முநி: ॥ (17)

த்3வே சாஸ்ய பா4ர்யே கா3ர்பி4ண்யௌ ப3பூ4வதுரிதி ஶ்ருதி: ।
ஏகா கா3ர்ப4விநாஶாய ஸபத்ந்யை கா3ரளம் த3தே3 ॥ (18)

பா4ர்க3வஶ்ச்யவநோ நாம ஹிமவந்தமுபாஶ்ரித: ।
தம்ருஷிம் ஸமுபாக3ம்ய காளிந்தீ3 த்வப்4யவாத3யத் ॥ (19)

ஸ தாமப்4யவத3த்3விப்ரோ வரேப்ஸும் புத்ரஜந்மநி ।
புத்ரஸ்தே ப4விதா தே3வி மஹாத்மா லோகவிஶ்ருத: ॥ (20)

தா4ர்மிகஶ்ச ஸுஶீலஶ்ச வம்ஶகர்தாரிஸூத3ந: ।
க்ருத்வா ப்ரத3க்ஷிணம் ஸா து முநிம் தமநுமாந்ய ச ॥ (21)

பத்3மபத்ரஸமாநாக்ஷம் பத்3மகா3ர்ப4ஸமப்ரப4ம் ।
தத: ஸா க்3ருஹமாக3ம்ய தே3வீ புத்ரம் வ்யஜாயத ॥ (22)

ஸபத்ந்யா து கா3ரஸ்தஸ்யை தத்தோ கா3ர்ப4ஜிகா4ம்ஸயா ।
கா3ரேண ஸஹ தேநைவ ஜாத: ஸ ஸகா3ரோऽப4வத் ॥ (23)

ஸ ராஜா ஸகா3ரோ நாம ய: ஸமுத்3ரமகா2நயத் ।
இஷ்ட்வா பர்வணி வேகே3ந த்ராஸயந்தமிமா: ப்ரஜா: ॥ (24)

அஸமஞ்ஜஸ்து புத்ரோऽபூ4த் ஸகா3ரஸ்யேதி ந: ஶ்ருதம் ।
ஜீவந்நேவ ஸ பித்ரா து நிரஸ்த: பாபகர்மக்ருத் ॥ (25)

அம்ஶுமாநிதி புத்ரோऽபூ4த்3ஸமஞ்ஜஸ்ய வீர்யவாந் ।
தி3லீபோம்ஶுமத: புத்ரோ தி3லீபஸ்ய ப4கீ3ரத2: ॥ (26)

ப4கீ3ரதா2த் ககுத்ஸ்த2ஸ்து காகுத்ஸ்தா2 யேந விஶ்ருதா: ।
ககுத்ஸ்த2ஸ்ய ச புத்ரோऽபூ4த்3 ரகு4ர்யேந து ராக4வா: ॥ (27)

ரகே4ஸ்து புத்ரஸ்தேஜஸ்வீ ப்ரவ்ருத்3த4: புருஷாத3க: ।
கல்மாஷபாத3: ஸௌத3ாஸ இத்யேவம் ப்ரதி2தோ பு4வி ॥ (28)

கல்மாஷபாத3புத்ரோऽபூ4ச் ச2ங்க2ணஸ்த்விதி விஶ்ருத: ।
யஸ்து தத்3வீர்யமாஸாத்3ய ஸஹஸைந்யோ வ்யநீநஶத் ॥ (29)

புகழ்பெற்ற துருவஸந்திக்கு எதிரிகளை அடக்குபவனான பரதன் மகனாகப் பிறந்தான்; பெருந்தோளனான பரதனிடமிருந்து அஸிதன் என்ற புத்திரன் உண்டானான். (15)

அவனுக்கு எதிரிகளாக ஹைஹயர்களும் தாலஜங்கர்களும், சூரர்களான சசி–பிந்துக்களும் தோன்றினார்கள். (16)

அவர் (அஸிதர்), அவர்கள் எல்லோருக்கும் எதிராக வியூகம் அமைத்துப் போரிட்டாலும், தோற்றுப் போனதால் நாட்டைவிட்டு ஓடினார். மிகச்சிறந்ததான இமயமலையில் மனம் அமைதி அடைந்தவராக முனிவராகிக் காலம் கழித்தார். (17)

இவருடைய மனைவிகள் இருவரும் அந்தச் சமயத்தில் கருத்தரித்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்களில் ஒருத்தி, தன் சக்களத்திக்கு (வயிற்றிலுள்ள கருவை அழிப்பதற்காக) விஷத்தைக் கொடுத்தாள். (18)

பிருகு வம்சத்தில் தோன்றிய சியவனர் என்ற முனிவர், அப்போது இமயமலையில் இருந்தார். (அஸிதரின் இருமனைவியரில் ஒருத்தியான) காளிந்தி, அந்த முனிவரிடம் வந்து வணங்கி நின்றாள். (19)

புத்திரனை அடைவதற்கு வரம் கோரி நிற்கும் அவளைப் பார்த்து, அந்த அந்தணர் சொன்னார்— 'தேவி! உனக்கு விசாலமனம் படைத்தவனும், உலகப் புகழ் பெறுபவனும், அறநெறி தவறாதவனும், சால்பு மிக்கவனும், வம்சத்தைத் தொடரச் செய்பவனும், எதிரிகளை மாய்ப்பவனுமான ஒரு புதல்வன் பிறப்பான்.' (இதைக் கேட்டதும்) தாமரைத் தடங்கண்ணாளாகிய அரசி உள்ளம் மகிழ்ந்து, அந்த முனிவரை வலம் வந்து நமஸ்காரம் செய்துவிட்டு, வீட்டிற்கு வந்ததும், தாமரை மலரின் நடுத்தளத்தையொத்த நிறமுடைய ஒரு ஆண் சிசுவைப் பெற்றாள். (20–22)

அவளுடைய வயிற்றிலிருந்த கருவைச் சிதைக்கவேண்டும் என்பதற்காகச் சக்களத்தியால் கொடுக்கப்பட்ட விஷத்துடனேயே (கரம்) அவன் பிறந்ததால், சகரன் என்று பெயர் சூட்டப்பட்டான். (23)

அசுவமேத யாகம் செய்யத் தொடங்கி, நடுவில் குதிரை காணாமல் போய்விட்டதால், அதைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சியில், எவர் பருவகாலங்களில் சீறியெழும் அலைகளால் எல்லா மக்களையும் அச்சமடையச் செய்கிற கடலை தோண்டச் செய்தாரோ, அவர்தான் இந்த சகரன் என்ற மன்னர். (24)

சகரனுக்கு அசமஞ்ஜன் என்ற பிள்ளை பிறந்ததாக நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம். அவன் பாவச்செயல்களில் ஈடுபட்டதால் உயிருடன் இருக்கும்போதே நாட்டிலிருந்து துரத்தப்பட்டான். (25)

அசமஞ்ஜனுக்கு வீரம் மிக்கவனான அம்சுமான் என்பவன் புத்திரனாகப் பிறந்தான். திலீபன் அம்சுமானின் புதல்வன். திலீபனுடைய குமாரன் பகீரதன். (26)

பகீரதனிடமிருந்து ககுத்ஸ்தர் தோன்றினார். அதனால் அந்தப் பரம்பரையினர் காகுத்ஸ்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். காகுத்ஸ்தருடைய மைந்தன் ரகு. அதனால் அவன் வம்சாவளியினர் ராகவர் என்று கூறப்பட்டார்கள். (27)

ரகுவினுடைய புதல்வன் மகாதேஜஸ்வியான கல்மாஷபாதன். இவன் ஒரு சாபத்தின் காரணமாக மனிதர்களைப் புசிக்கும் ராக்ஷஸனாக சில காலம் இருந்தான். இவனுக்கு பிரவ்ருத்தன், ஸௌதாஸன் என்ற பெயர்களும் உலகில் உண்டு. (28)

கல்மாஷபாதனுடைய புத்திரன் சங்கணன் என்று பெயர் பெற்றவன்; போர்க்களத்தில் மிகுந்த வீரத்தோடு சண்டையிட்டாலும், தன் படையினருடன் அழிந்து போனான். (29)

ஶங்க$_2$ணஸ்ய ச புத்ரோऽபூ$_4$ச்சூ$_2$ர: ஸ்ரீமாந் ஸுத$_3$ர்ஶந: ।
ஸுத$_3$ர்ஶநஸ்யாக்$_3$நிவர்ண அக்$_3$நிவர்ணஸ்ய ஶீக்$_4$ரக:$_3$ ॥ (30)

ஶீக்$_4$ரக$_3$ஸ்ய மரு: புத்ரோ மரோ: புத்ர: ப்ரஶுஶ்ருக: ।
ப்ரஶுஶ்ருகஸ்ய புத்ரோऽபூ$_4$த$_3$ம்ப$_3$ரீஷோ மஹாத்$_3$யுதி: ॥ (31)

அம்ப$_3$ரீஷஸ்ய புத்ரோऽபூ$_4$ந் நஹுஷ: ஸத்யவிக்ரம: ।
நஹுஷஸ்ய ச நாப$_4$ாக$_3$: புத்ர: பரமத$_4$ார்மிக: ॥ (32)

அஜஶ்ச ஸுவ்ருதஶ்சைவ நாப$_4$ாக$_3$ஸ்ய ஸுதாவுபெ$_4$ள ।
அஜஸ்ய சைவ த$_4$ர்மாத்மா ராஜா த$_3$ஶரத$_2$: ஸுத: ॥ (33)

யோ ஜித்வா வஸுத$_4$ாம் க்ருத்ஸ்நாம் தி$_3$வம் ஶாஸதி ஸ ப்ரபு$_4$: ।
தஸ்ய ஜ்யேஷ்டே$_2$ாऽஸி த$_3$ாயாதே$_3$ா ராம இத்யபி$_4$விஶ்ருத: ॥ (34)

தத்$_3$க்$_3$ருஹாண ஸ்வகம் ராஜ்யமவேக்ஷஸ்வ ஜநம் ந்ருப ।
இக்ஷ்வாகூணாம் ஹி ஸர்வேஷாம் ராஜா ப$_4$வதி பூர்வஜ: ॥
பூர்வஜே நாவர: புத்ரோ ஜ்யேஷ்டே$_2$ா ராஜ்யேऽபி$_4$ஷிச்யதே ॥ (35)

ஸ ராக$_4$வாணாம் குலத$_4$ர்மமாத்மந:
ஸநாதநம் நாத்$_3$ய விஹந்துமர்ஹஸி ।
ப்ரபூ$_4$த ரத்நாமநுஶாதி$_4$ மேதி$_3$நீம்
ப்ரபூ$_4$தராஷ்ட்ராம் பித்ருவந்மஹாயஶ: ॥ (36)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே அயோத்$_4$யாகாண்டே$_3$ த$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

ஏகாத$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$:

ப$_4$ரதபரிஸாந்த்வநம்

வஸிஷ்ட$_2$ஸ்து தத$_3$ா ராமமுக்த்வா ராஜபுரோஹித: ।
அப்$_3$ரவீத்$_3$த$_4$ர்மஸம்யுக்தம் புநரேவாபரம் வச: ॥ (1)

புருஷஸ்யேஹ ஜாதஸ்ய ப$_4$வந்தி கு$_3$ரவஸ்த்ரய: ।
ஆசார்யஶ்சைவ காகுத்ஸ்த$_2$ பிதா மாதா ச ராக$_4$வ ॥ (2)

பிதா ஹ்யேநம் ஜநயதி புருஷம் புருஷர்ஷப$_4$ ।
ப்ரக்ஞாம் த$_3$த$_3$ாதி சாசார்யஸ் தஸ்மாத்ஸ கு$_3$ருருச்யதே ॥ (3)

ஸோऽஹம் தே பிதுராசார்யஸ் தவ சைவ பரந்தப ।
மம த்வம் வசநம் குர்வந்நாதிவர்தே: ஸதாம் க$_3$திம் ॥ (4)

இமா ஹி தே பரிஷத$_3$: ஶ்ரேணயஶ்ச த்$_3$விஜாதய: ।
ஏஷு தாத சரந் த$_4$ர்மம் நாதிவர்தே: ஸதாம் க$_3$திம் ॥ (5)

சங்கணனுடைய புத்திரன் சுதர்சனன். இவன் மகாசூரன்; திருவுடைசெல்வன். சுதர்சனனுடைய புத்திரன் அக்னிவர்ணன். அக்னிவர்ணனுடைய மைந்தன் சீக்ரகன். (30)

சீக்ரகனுடைய புத்திரன் மரு; மருவின் மைந்தன் ப்ரசுச்ருவன்; ப்ரசுச்ருவனுடைய புதல்வனான அம்பரீஷன். இவன் மகாமேதாவி. (31)

அம்பரீஷனுக்கு வீண்போகாத பராக்கிரமமுடைய நகுஷன் மகனாகப் பிறந்தான். நகுஷனுடைய புதல்வன் நாபாகன், பெருங்கொடையாளன். (32)

அஜன், சுவ்ரதன் ஆகிய இருவரும் நாபாகனின் இரு புதல்வர்கள்; அஜனுடைய மைந்தன் தருமாத்மாவான தசரத மன்னர். (33)

அவர் இந்த பூமண்டலம் முழுவதையும் வென்று (சகல சுக–போகங்களையும் அனுபவித்துவிட்டு), இப்போது அந்தத் தலைவர் விண்ணுலகில் ஆட்சி செலுத்துகிறார் (மரணமடைந்துவிட்டார்). அவருடைய மூத்த புதல்வனான நீ, ஸ்ரீராமன் என்ற பெயரால் போற்றப்படுகிறாய். (34)

ஆகவே, சக்கரவர்த்தித் திருமகனே! உன்னுடையதேயான இந்த நாட்டை ஏற்றுக்கொண்டு குடிமக்களைப் பரிபாலிப்பாயாக. இதுவரையில் இக்ஷ்வாகு பரம்பரையில் மூத்த புதல்வனே மன்னனாக முடிசூட்டப்பட்டிருக்கிறான். மூத்தவன் இருக்கும்போது இளையவன் அரசனாக முடிசூட்டப்படுவதில்லை. (35)

பெரும்புகழ் பெற்றவனே! ரகுவம்சத்தில் நெடுங்காலமாக இருந்து வரும் ஒரு குலதருமத்தை (சம்பிரதாயத்தை) நீ இப்போது கைவிடக்கூடாது. அநேக சிறு நாடுகளை உடையதும், ஏராளமான செல்வங்களையுடையதுமான இந்த உலகை, ஒரு தந்தையைப் போல் (பொறுப்பு–பாசத்துடன்) ஆண்டு வருவாயாக.'' (36)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பத்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினொன்று

பரதனைச் சமாதானப்படுத்துவது

அரசகுல புரோகிதரான வசிஷ்டர், இராமனைப் பார்த்து மேற்கண்டவாறு சொல்லிய பின்னர், மறுபடியும் தருமத்தோடு பொருந்திய மேலும் சில வார்த்தைகளைக் கூறினார்— (1)

''காகுத்தனே! இராகவனே! இவ்வுலகில் பிறந்தவனுக்கு, ஆசார்யன்–தந்தை–தாய் என்று மூன்று குருமார்கள் இருக்கிறார்கள். (2)

ஆண்மைமிக்க வீரனே! தந்தை, ஒரு புருஷன் பிறப்பதற்கு விதையாக இருக்கிறான். ஆனால், ஆசார்யன் என்பவன் பிறவி எடுத்த ஜீவனுக்கு (வாழ்வாங்கு வாழ்ந்து இறுதியில் நல்லுலகங்களையடையத் தேவையான) ஞானத்தை அளிக்கிறான். அதனால்தான், அவன் குரு (பெரியவன்) என்று அழைக்கப்படுகிறான். (3)

எதிரிகளை வாட்டி வதைக்கும் வீரனே! நான், உனக்கும் உன் தந்தைக்கும் ஆசார்யன். எனவே, என்னுடைய பேச்சைக் கேட்டு நடந்தால், நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாக மாட்டாய். (4)

இங்கு, உன்னுடைய அவையோர்கள், முக்கியத் தலைவர்கள், மற்றும் இருபிறப்பாளர்கள் வந்திருக்கிறார்கள். குழந்தாய்! இவர்கள் எதிர்பார்க்கும் அறநெறியைக் கைக்கொள்வதால், நீ நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாக மாட்டாய். (5)

வ்ருத்₃த₄யா த₄ர்மஶீலாயா மாதுர்நார்ஹஸ்யவர்திதும் ।
அஸ்யாஸ்து வசநம் குர்வந்நாதிவர்தே: ஸதாம் க₃திம் ॥ (6)

ப₄ரதஸ்ய வச: குர்வந் யாசமாநஸ்ய ராக₄வ ।
ஆத்மாநம் நாதிவர்தேஸ்த்வம் ஸத்யத₄ர்மபராக்ரம ॥ (7)

ஏவம் மது₄ரமுக்தஸ்து கு₃ருணா ராக₄வ: ஸ்வயம் ।
ப்ரத்யுவாச ஸமாஸீநம் வஸிஷ்ட₂ம் புருஷர்ஷப₄: ॥ (8)

யந்மாதாபிதரௌ வ்ருத்தம் தநயே குருத: ஸதா₃ ।
ந ஸுப்ரதிகரம் தத்து மாத்ரா பித்ரா ச யத்க்ருதம் ॥ (9)

யதா₂ஶக்தி ப்ரதா₃நேந ஸ்நாபநாச்ச₂ாத₃நேந ச ।
நித்யம் ச ப்ரியவாதே₃ந ததா₂ ஸம்வர்த₄நேந ச ॥ (10)

ஸ ஹி ராஜா ஜநயிதா பிதா த₃ஶரதே₂ா மம ।
ஆக்ஞாதம் யந்மயா தஸ்ய ந தந்மித்₂யா ப₄விஷ்யதி ॥ (11)

ஏவமுக்தஸ்து ராமேண ப₄ரத: ப்ரத்யநந்தரம் ।
உவாச பரமோத₃ார: ஸுதம் பரமது₃ர்மநா: ॥ (12)

இஹ மே ஸ்த₂ண்டி₃லே ஶீக்₄ரம் குஶாநாஸ்தர ஸாரதே₂ ।
ஆர்யம் ப்ரத்யுபவேக்ஷ்யாமி யாவந்மே ந ப்ரஸீத₃தி ॥ (13)

அநாஹாரோ நிராலோகோ த₄நஹீநோ யதா₂ த்₃விஜ: ।
ஶேஷ்யே புரஸ்தாச் ச₂ாலாயாம் யாவந்மாம் ப்ரதியாஸ்யதி ॥ (14)

ஸ து ராமமவேக்ஷ்யந்தம் ஸுமந்த்ரம் ப்ரேக்ஷ்ய து₃ர்மநா: ।
குஶோத்தரமுபஸ்தீ₂ர்ய பூ₄மாவேவாஸ்தி₂த: ஸ்வயம் ॥ (15)

தமுவாச மஹாதேஜா ராமோ ராஜர்ஷிஸத்தம: ।
கிம் மாம் ப₄ரத குர்வாணம் தாத ப்ரத்யுபவேக்ஷ்யஸி ॥ (16)

ப்₃ராஹ்மணோ ஹ்யேகபார்ஶ்வேந நராந் ரோத்₃து₄மிஹார்ஹதி ।
ந து மூர்த₄ாபி₄ஷிக்தாநாம் விதி₄: ப்ரத்யுபவேஶநே ॥ (17)

உத்திஷ்ட₂ நரஶார்தூ₃ல ஹித்வைதத்₃தா₃ருணம் வ்ரதம் ।
புரவர்யாமித: க்ஷிப்ரமயோத்₄யாம் யாஹி ராக₄வ ॥ (18)

ஆஸீநஸ்த்வேவ ப₄ரத: பௌரஜாநபத₃ம் ஜநம் ।
உவாச ஸர்வத: ப்ரேக்ஷ்ய கிமார்யம் நாநுஶாஸத₂ ॥ (19)

முதுமை அடைந்துவிட்டவளும், தருமம் ஒன்றிலேயே ஊன்றியிருப்பவளுமான உன் தாயாரின் விருப்பத்தை, நீ ஒதுக்கிக் தள்ளிவிடக்கூடாது. அவளுடைய சொற்படி நடப்பதால், நல்லோர்கள் நடந்து சென்ற வழியிலிருந்து வழுவியவனாக கருத மாட்டாய். (6)

சத்தியத்திலும் தருமத்திலும் ஒன்றிப்போயிருக்கும் இராகவனே! மனமுருகிப் பிரார்த்திக்கும் பரதனுடைய வேண்டுகோளை ஏற்று நடப்பதால், உன் இயல்பான சத்திய–தருமத்திலிருந்து வழுவியவனாக மாட்டாய்.'' (7)

புருஷோத்தமனான இராமன், மேற்கண்டவாறு செவிக்கினிய சொற்களை ஆசார்யரிடமிருந்து கேட்ட பின்னர், நடுநாயகமாக அங்கு வீற்றிருந்த வசிஷ்டரைப் பார்த்துப் பதில் சொன்னார்— (8)

''தாய்–தந்தையர் புதல்வனிடம் அன்புடன் பேசிப் பழகுகிறார்கள்; அவனுக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடியவைகளைச் செய்கிறார்கள்; அவன் விரும்பிக் கேட்டவைகளில், தங்களால் இயன்றதைக் கொடுக்கிறார்கள்; அவனை நீராட்டி ஆடை அணிவிக்கிறார்கள்; எப்போதும் பாசத்தோடு பேசுகிறார்கள்; ஊட்டி வளர்க்கிறார்கள். இவற்றிற்குக் கைம்மாறாக எக்காலத்திலும் எதையும் செய்து தீர்க்க முடியாது. (9,10)

என்னைப் பெற்றெடுத்த தசரதர், மன்னர், அவரால் கட்டளையிடப்பட்டதை நான் ஒருக்காலும் பொய்யாக்க மாட்டேன்.'' (11)

இவ்வாறு இராமனால் கூறப்பட்டதும், மகாமனஸ்வியான பரதன் மிகவும் மனம் வருந்தி, அருகில் அமர்ந்திருந்த தேரோட்டியான சுமந்திரரைப் பார்த்து (பின்வருமாறு) சொன்னான்— (12)

''சாரதியே! இங்கே தரையில் தர்பங்களைப் பரப்புங்கள், என் தமையனார் என் வேண்டுகோளுக்கு இணங்காத வரையில், இங்கேயே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்வேன். (அவர் செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்துவேன்.) (13)

வறுமையில் வாடும் அந்தணன், உணவு கொள்ளாமல் கண்களை மூடிக்கொண்டு (உயிர்போகும் வரையில் பிராயோபவேசமாக)க் கிடப்பதைப் போல, என் வேண்டுகோளை ஏற்று, இவர் (அயோத்திக்குத்) திரும்பி வராத வரையில், இந்தக் குடிசையின் முன் படுத்துக் கிடப்பேன்.'' (14)

மனவேதனையுடனிருந்த பரதன், சுமந்திரர் இவ்விஷயத்தில் இராமனின் ஒப்புதலை எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்து, தர்பப் படுக்கையைத் தானே கொண்டு வந்து தரையில் விரித்து, அதன்மேல் உட்கார்ந்து கொண்டான். (15)

மகாதேஜஸ்வியும் ராஜரிஷிகளில் சிறந்தவருமான இராமன், பரதனை நோக்கிக் கூறினார்— ''என் செல்வமே! பரதா! நான் உனக்கு என்ன கெடுதல் செய்தேன்? என்பதற்காக, என்னை இப்படி அடக்கி வைக்கிறாய். (16)

அந்தணர், ஒருபுறமாகவே படுத்திருந்து தனக்கு அநியாயமிழைத்துவிட்ட மனிதர்களை இவ்வாறு தடை செய்யலாம்; ஆனால், முடிசூட்டிக் கொள்ளும் உரிமை பெற்ற க்ஷத்திரியர்களுக்கு இது விதிக்கப்படவில்லை. (17)

இந்தக் கொடிய விரதத்தைக் கைவிட்டு எழுந்திராய். ஆண்புலி நிகர் வீரனே! இவ்விடத்திலிருந்து விரைவாக அயோத்திக்குப் போ, இராகவனே!'' (18)

பரதன் தர்ப விரிப்பில் உட்கார்ந்தவாறே பட்டணத்தார்களையும், புறநகர் மக்கள் எல்லோரையும் பார்த்து, ''ஏன் நீங்களெல்லோரும் என் தமையனாருக்கு நல்ல வார்த்தை சொல்லாதிருக்கிறீர்கள்?'' என்று கேட்டான். (19)

தே தமூசுர்மஹாத்மாநம் பௌரஜாநபத3ா ஜநா: ।
காகுத்ஸ்த2மபி4ஜாநீம: ஸம்யக்3வத3தி ராக4வ: ॥ (20)

ஏஷோऽபி ஹி மஹாப4ாக3: பிதுர்வசஸி திஷ்ட2தி ।
அத ஏவ ந ஶக்தா: ஸ்மோ வ்யாவர்தயிதுமஞ்ஜஸா ॥ (21)

தேஷாமாக்ஞாய வசநம் ராமோ வசநமப்3ரவீத் ।
ஏதந்நிபே3ாத4 வசநம் ஸுஹ்ருத3ாம் த4ர்மசக்ஷுஷாம் ॥ (22)

ஏதச்சைவோப4யம் ஶ்ருத்வா ஸம்யக்ஸம்பஶ்ய ராக4வ ।
உத்திஷ்ட2 த்வம் மஹாப3ாஹோ மாம் ச ஸ்ப்ருஶ தோ3ாத3கம் ॥ (23)

அதோ2த்த2ாய ஜலம் ஸ்ப்ருஷ்ட்வா ப4ரதோ வாக்யமப்3ரவீத் ।
ஶ்ருண்வந்து மே பரிஷதோ3ா மந்த்ரிண: ஶ்ரேணயஸ்ததா2 ॥ (24)

ந யாசே பிதரம் ராஜ்யம் நாஶுஶ்ரூஷாமி மாதரம் ।
ஆர்யம் பரமதர்மக்ஞம் நாநுஜாநாமி ராக4வம் ॥ (25)

யதி3 த்வவஶ்யம் வஸ்தவ்யம் கர்தவ்யம் ச பிதுர்வச: ।
அஹமேவ நிவத்ஸ்யாமி சதுர்த3ஶ ஸமா வநே ॥ (26)

த4ர்மாத்மா தஸ்ய தத்2யேந ப்4ராதுர்வாக்யேந விஸ்மித: ।
உவாச ராம: ஸம்ப்ரேக்ஷ்ய பௌரஜாநபத3ம் ஜநம் ॥ (27)

விக்ரீதமாஹிதம் க்ரீதம் யத்பித்ரா ஜீவதா மம ।
ந தல்லோபயிதும் ஶக்யம் மயா வா ப4ரதேந வா ॥ (28)

உபதி4ர்ந மயா கார்யோ வநவாஸே ஜுகு3ப்ஸித: ।
யுக்தமுக்தம் ச கைகேய்யா பித்ரா மே ஸுக்ருதம் க்ருதம் ॥ (29)

ஜாநாமி ப4ரதம் க்ஷாந்தம் கு3ருஸத்காரகாரிணம் ।
ஸர்வமேவாத்ர கல்யாணம் ஸத்யஸந்தே4 மஹாத்மநி ॥ (30)

அநேந த4ர்மஶீலேந வநாத்ப்ரத்யாக3த: புந: ।
ப்4ராத்ரா ஸஹ ப4விஷ்யாமி ப்ருதி2வ்யா: பதிருத்தம: ॥ (31)

வ்ருதோ3 ராஜா ஹி கைகேய்யா மயா தத்3வசநம் க்ருதம் ।
அந்ருதாந்மோசயாநேந பிதரம் தம் மஹீபதிம் ॥ (32)

இத்யார்ஷே ஶ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 ஏகாத3ஶாதி4கஶததம: ஸர்க3: ॥

நகர மக்களும் கிராமவாசிகளுமான அவர்கள், மகாத்மாவான அவனை (பரதனை)ப் பார்த்துச் சொன்னார்கள்— "நாங்கள் இராமப்பிரபுவை நன்றாக அறிந்திருக்கிறோம். இராமன் சொல்வது நியாயமே. (20)

பெரும்பேறு பெற்றவரான இராமன், தன் தகப்பனாரின் கட்டளையைக் காப்பாற்றுவதில் உறுதியாக இருக்கிறார். அதனால்தான், அந்த (நேரான) பாதையிலிருந்து சடாரென்று அவரைத் திருப்ப முடியாமல் இருக்கிறோம்." (21)

அவர்களுடைய சொற்களைக் கேட்ட இராமன் இவ்வாறு சொன்னார்— "தருமத்தையே கண்ணும் கருத்துமாகவுடைய நண்பர்களுடைய இந்தப் பேச்சைக் கேட்பாயாக. (22)

பரதா! என் சொற்களையும், இவர்கள் கூறியதையும் நன்றாக ஆராய்ந்து பார். புருஷோத்தமனே! நீ எழுந்திரு; என்னைத் தொடு. அவ்வண்ணமே தண்ணீரையும் தொட்டுக் கையை அலம்பு." (23)

உடனே, பரதன் எழுந்திருந்து நீரைத் தொட்டு பின்னர் கூறினான்— "சபையோர்களும், அமைச்சர்களும், நகரப் பிரமுகர்களும் நான் சொல்லப் போவதைக் கேளுங்கள். (24)

நான், என் தந்தையாரிடத்தில் அரசாட்சியை எனக்குக் கொடுக்கும்படி வேண்டிக் கொள்ளவில்லை; என் தாயாரையும் தூண்டிவிடவில்லை; அறநெறி வல்லுநரும் உத்தமருமான இராமன் காட்டில் வசிப்பதற்கு சம்மதிக்கவும் மாட்டேன். (25)

தந்தையின் கட்டளைப்படி காட்டில் வசிப்பது என்பது கட்டாயமாக அனுசரிக்கப்பட வேண்டியதே என்றால், பதினான்கு ஆண்டுகள் நானே காட்டில் வசிக்கிறேன்." (26)

தருமாத்மாவான இராமன், சகோதரனுடைய மனப்பூர்வமான வாதத்தில் ஆச்சரியமடைந்து நாட்டு-நகர மக்களைப் பார்த்துச் சொன்னார்— (27)

"என் தந்தையார் உயிருடன் இருக்கும்போது விற்றுவிட்ட-வாங்கிய-அடகு வைக்கப்பட்ட பொருளை, என்னாலோ, பரதனாலோ மாற்றியமைக்க முடியாது. (28)

வனவாசத்தில் வெறுப்புக் கொண்டு, (அதைத் தவிர்ப்பதற்காக) ஏமாற்று வேலை ஒன்றை என்னால் செய்ய முடியாது. கைகேயித் தாயார் நியாயமாகவே வரம் கேட்டார். (தந்தை, முன்பு கொடுத்த வாக்குறுதியைத்தானே கேட்டார். அது எப்படித் தவறாகும்?) என் தந்தை செய்ததும் சரியானதுதான். (29)

பரதன் மிகவும் பொறுமையுடையவன்; ஆசார்யர்களை வழிபடுகிறவன் என்பதை நான் அறிவேன். சத்தியம் தவறாத மகாத்மாவான அவனிடம் எல்லா நற்குணங்களும் உள்ளன. (30)

வனவாசம் முடிந்து மீண்டும் திரும்பி வந்து, தருமநெறி தவறாத இந்தச் சகோதரன் பரதனுடன் இந்தப் பூமண்டலத்திற்குச் சிறந்த தலைவனாவேன். (31)

கைகேயி, மன்னரிடம் வரம் கோரினார். நான், அந்த ஆக்ஞைப்படி நடப்பதாக வாக்குக் கொடுத்துவிட்டேன். இப்படிச் செய்வதால் (என் சொல்லைக் கேட்டு நடப்பதால்) மட்டுமே, தந்தையை (கொடுத்த வாக்கை மீறிய) பாவத்திலிருந்து விடுவிக்க முடியும்." (32)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினோராவது ஸர்க்கம் முற்றிற்று.

த்3வாத3ஶாதி4கஶததம: ஸர்க3:

பாது3காப்ரத3ாநம்

தமப்ரதிமதேஜோப்4யாம் ப்4ராத்ருப்4யாம் ரோமஹர்ஷணம் ।
விஸ்மிதா: ஸங்க3மம் ப்ரேக்ஷ்ய ஸமவேதா மஹர்ஷய: ॥ (1)

அந்தர்ஹிதாஸ்த்வ்ருஷிக3ணா: ஸித்3த4ாஶ்ச பரமர்ஷய: ।
தெள ப்4ராதரௌ மஹாத்மாநௌ காகுத்ஸ்தௌ2 ப்ரஶஶம்ஸிரே ॥ (2)

ஸ த4ந்யோ யஸ்ய புத்ரௌ த்3வௌ த4ர்மக்ஞௌ த4ர்மவிக்ரமௌ ।
ஶ்ருத்வா வயம் ஹி ஸம்ப4ாஷாமுப4ாப்4யாம் ஸ்ப்ருஹயாமஹே ॥ (3)

ததஸ்த்வ்ருஷிக3ணா: க்ஷிப்ரம் த3ஶக்3ரீவ வதை4ஷிண: ।
ப4ரதம் ராஜஶார்தூ3லமித்யூசு: ஸங்க3தா வச: ॥ (4)

குலேஜாத மஹாப்ராக்ஞ மஹாவ்ருத்த மஹாயஶ: ।
க்3ராஹ்யம் ராமஸ்ய வாக்யம் தே பிதரம் யத்3யவேக்ஷஸே ॥ (5)

ஸத்3ாந்ருணமிமம் ராமம் வயமிச்ச2ாமஹே பிது: ।
அந்ருணத்வாச்ச கைகேய்யா: ஸ்வர்க3ம் த3ஶரதே2ா க3த: ॥ (6)

ஏதாவது3க்த்வா வசநம் க3ந்த4ர்வா: ஸமஹர்ஷய: ।
ராஜர்ஷயஶ்சைவ ததா3 ஸர்வே ஸ்வாம் ஸ்வாம் க3திம் க3தா: ॥ (7)

ஹ்லாதி3தஸ்தேந வாக்யேந ஶுபே4ந ஶுப4த3ர்ஶந: ।
ராம: ஸம்ஹ்ருஷ்டவத3நஸ் தாந்ருஷீநப்4யபூஜயத் ॥ (8)

த்ரஸ்த க3ாத்ரஸ்து ப4ரத: ஸ வாசா ஸஜ்ஜமாநயா ।
க்ருதாஞ்ஜலிரித3ம் வாக்யம் ராக4வம் புநரப்3ரவீத் ॥ (9)

ராஜத4ர்மமநுப்ரேக்ஷ்ய குலத4ர்மாநுஸந்ததிம் ।
கர்துமர்ஹஸி காகுத்ஸ்த2 மம மாதுஶ்ச யாசநாம் ॥ (10)

ரக்ஷிதும் ஸுமஹத்3ராஜ்யமஹமேகஸ்து நோத்ஸஹே ।
பௌரஜாநபத3ாம்ஶ்சாபி ரக்தாந் ரஞ்ஜயிதும் ததா2 ॥ (11)

க்ஞாதயஶ்ச ஹி யோத4ாஶ்ச மித்ராணி ஸுஹ்ருதஶ்ச ந: ।
த்வாமேவ ப்ரதிகாங்க்ஷந்தே பர்ஜந்யமிவ கர்ஷகா: ॥ (12)

இத3ம் ராஜ்யம் மஹாப்ராக்ஞ ஸ்தா2பய ப்ரதிபத்3ய ஹி ।
ஶக்திமாநஸி காகுத்ஸ்த2 லோகஸ்ய பரிபாலநே ॥ (13)

இத்யுக்த்வா ந்யபதத்3ப்4ராது: பாத3யோர்ப4ரதஸ்ததா3 ।
ப்4ருஶம் ஸம்ப்ரார்த2யாமாஸ ராமமேவ ப்ரியம்வத3: ॥ (14)

ஸர்க்கம் : நூற்றுப் பன்னிரண்டு

பாதுகைகளை அளித்தல்

அங்கு கூடியிருந்த மாமுனிவர்கள், ஒப்புயர்வற்ற தேஜஸ்விகளான சகோதரர்கள் இருவருடைய மெய்ச்சிலிர்ப்பை உண்டாக்கும் சந்திப்பைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். (1)

ஆகாயத்தில் கண்களுக்குப் புலப்படாதவாறு நின்று பார்த்துக் கொண்டிருந்த முனிவர் கூட்டங்களும், ஸித்தர்களும், மற்றும் அவ்விடத்திலேயே இருந்த மாமுனிவர்களும் காகுத்தர்களும் மகாத்மாக்களுமான இரு சகோதரர்களையும் வெகுவாகப் புகழ்ந்தார்கள். (2)

அறம் அறிந்தவர்கள், அறத்தையே உறுதியாகக் கடைப்பிடிப்பவர்களான இவ்விரு புதல்வர்களையும் பெற்றெடுத்தவர், மகா பாக்கியசாலி. இருவருடைய உரையாடல்களையும் நாம் மேலும் கேட்க விரும்புகிறோம்! (அவ்வளவு பொருள் பொதிந்த, தருமமான வாதங்களை அடுக்கடுக்காகப் பேசுகிறார்கள்.) (3)

அரசர்களுள் புலி போன்ற பரதன் முன்பாக, தசக்ரீவனான இராவணனுடைய வதத்தில் நோக்கமுடைய முனிவர்கள் கூட்டமாக வந்து, பின்வரும் சொற்களைச் சொன்னார்கள்— (4)

"உத்தம குலத்தில் பிறந்தவனே! பேரறிவாளனே! போற்றத்தக்க ஒழுக்கம் உடையவனே! பெரும்புகழ் பெற்றவனே! உன் தந்தைக்கு நல்லது செய்ய விரும்புவாயேயானால், இராமன் சொல்வதை ஏற்றுக் கொள். (5)

இராமன், தன் தந்தைக்குப்பட்டிருக்கும் கடனைத் தீர்த்து, கடன் இல்லாதவராக இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். (அந்தக் கடன், இராமனே பதிநான்கு ஆண்டுகள் காட்டில் வசித்தால்தான் தீர்ந்துபோகும்.) கைகேயியிடம் பட்டிருந்த கடனைத் தீர்த்ததால்தானே, தசரதர் (சகல சௌக்கியங்களும் நிறைந்த) சுவர்க்கலோகத்தை அடைந்தார்? (கைகேயியிக்குக் கொடுத்த வரங்களை அவர் ஏற்காமல் விட்டிருந்தால் சொன்ன சொல் தவறிய பாவத்திற்காக, நரகத்தில் அல்லவா உழன்று கொண்டிருப்பார்?)" (6)

இவ்வாறு கூறிவிட்டு, கந்தர்வர்களும் மாமுனிவர்களும் ராஜரிஷிகளுமான அவர்கள் எல்லோரும் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். (7)

இனிய தோற்றமுடைய இராமன், மகரிஷிகளின் நியாயமான உரையினால் மிகவும் மனமகிழ்ந்து, அவர்களை(த் தன் மனத்திற்குள்) வணங்கினார். (8)

ஆனால், அந்த வார்த்தையைக் கேட்டதும் பரதனின் சரீரம் நடுங்கிற்று; சொற்கள் தடுமாறின. இரு கைகளையும் கூப்பிக்கொண்டு இராமனைப் பார்த்து, மீண்டும் இவ்வாறு கூறினான்— (9)

"காகுத்தரே! தாங்கள் அரச நீதியையும், இடையறாது வரும் குலதருமத்தையும் நன்கு சிந்தித்துப் பார்த்து, என்னுடையவும் என் தாயாருடையவும் வேண்டுகோளை ஏற்றருள வேண்டும். (10)

மிகப்பெரிய இந்த ராஜ்யத்தை நான் ஒருவனாகக் காப்பாற்ற முடியாது. அத்துடன் தங்களிடம் மிகவும் பற்றுக் கொண்டிருக்கும் நாட்டு–நகரத்தார்களையும் மகிழ்ச்சியுடையவர்களாக வைத்திருக்க என்னால் முடியாது. (11)

விவசாயிகள் மழையை மிகவும் எதிர்பார்ப்பதைப் போல, நமது உற்றார்–உறவினரும், படைவீரர்களும், நண்பர்களும், பாசம் கொண்டவர்களும் தங்களையே ஆவலுடன் வேண்டி விரும்புகிறார்கள். (12)

மகாமேதாவியே! தாங்கள் இந்த நாட்டினை ஏற்று வலிமையுள்ளதாகச் செய்யவேண்டும். காகுத்தரே! தாங்கள், இந்த உலகம் முழுவதையும் பரிபாலிக்கும் சக்தி பெற்றவர்." (13)

இவ்வாறு கூறிவிட்டு, சகோதரரின் திருவடிகளில் வீழ்ந்தான், பரதன். இனிமையாகப் பேசும் அவன், இராமனை மிகவும் இரக்கம் தோன்றும் வகையில் பிரார்த்தித்தான். (14)

தமங்கே ப்₄ராதரம் க்ருத்வா ராமோ வசநமப்₃ரவீத் ।
ஶ்யாமம் நளிநபத்ராக்ஷம் மத்தஹம்ஸஸ்வர: ஸ்வயம் ॥ (15)

ஆக₃தா த்வாமியம் பு₃த்₃தி₄: ஸ்வஜா வைநயிகீ ச யா ।
ப்₄ருஶமுத்ஸஹஸே தாத ரக்ஷிதும் ப்ருதி₂வீமபி ॥ (16)

அமாத்யைஶ்ச ஸுஹ்ருத்₃பி₄ஶ்ச பு₃த்₃தி₄மத்₃பி₄ஶ்ச மந்த்ரிபி₄: ।
ஸர்வகார்யாணி ஸம்மந்த்ர்ய ஸுமஹாந்த்யபி காரய ॥ (17)

லக்ஷ்மீஶ்சந்த்₃ராத்₃பேயாத்₃வா ஹிமவாந் வா ஹிமம் த்யஜேத் ।
அதீயாத்ஸாக₃ரோ வேலாம் ந ப்ரதிக்ஞாமஹம் பிது: ॥ (18)

காமாத்₃வா தாத லோப₄ாத்₃வா மாத்ரா துப்₄யமித₃ம் க்ருதம் ।
ந தந்மநஸி கர்தவ்யம் வர்திதவ்யம் ச மாத்ருவத் ॥ (19)

ஏவம் ப்₃ருவாணம் ப₄ரத: கௌஸல்யாஸுதமப்₃ரவீத் ।
தேஜஸாதி₃த்யஸங்காஶம் ப்ரதிபச்சந்த்₃ரத₃ர்ஶநம் ॥ (20)

அதி₄ரோஹார்ய பாத₃ாப்₄யாம் பாது₃கே ஹேமபூ₄ஷிதே ।
ஏதே ஹி ஸர்வலோகஸ்ய யோக₃க்ஷேமம் வித₄ாஸ்யத: ॥ (21)

ஸோऽதி₄ருஹ்ய நரவ்யாக்₄ர: பாது₃கே வ்யவமுச்ய ச ।
ப்ராயச்ச₂த் ஸுமஹாதேஜா ப₄ரதாய மஹாத்மநே ॥ (22)

ஸ பாது₃கே ஸம்ப்ரணம்ய ராமம் வசநமப்₃ரவீத் ।
சதுர்த₃ஶ ஹி வர்ஷாணி ஜடாசீரத₄ரோ ஹ்யஹம் ॥ (23)

ப₂லமூலாஶநோ வீர ப₄வேயம் ரகு₄நந்த₃ந ।
தவாக₃மநமாகாங்க்ஷந் வஸந் வை நக₃ராத்₃ப₃ஹி: ॥
தவ பாது₃கயோர்ந்யஸ்ய ராஜ்யதந்த்ரம் பரந்தப ॥ (24)

சதுர்த₃ஶே ஹி ஸம்பூர்ணே வர்ஷேऽஹநி ரகூ₄த்தம ।
ந த்₃ரக்ஷ்யாமி யதி₃ த்வாம் து ப்ரவேக்ஷ்யாமி ஹுதாஶநம் ॥ (25)

ததே₂தி ச ப்ரதிக்ஞாய தம் பரிஷ்வஜ்ய ஸாத₃ரம் ।
ஶத்ருக்₄நம் ச பரிஷ்வஜ்ய ப₄ரதம் சேத₃மப்₃ரவீத் ॥ (26)

மாதரம் ரக்ஷ கைகேயீம் மா ரோஷம் குரு தாம் ப்ரதி ।
மயா ச ஸீதயா சைவ ஶப்தோऽஸி ரகு₄ஸத்தம ॥
இத்யுக்த்வாஶ்ருபரீதாக்ஷோ ப்₄ராதரம் விஸஸர்ஜ ஹ ॥ (27)

ஸ பாது₃கே தே ப₄ரத: ப்ரதாபவாந்
ஸ்வலங்க்ருதே ஸம்பரிக்₃ருஹ்ய த₄ர்மவித் ।
ப்ரத₃க்ஷிணம் சைவ சகார ராக₄வம்
சகார சைவோத்தமநாக₃மூர்த₄நி ॥ (28)

கருமை நிறமுடையவனும், தாமரையிதழ் போல் விரிந்த கண்களுள்ளவனுமான பரதனை எழுப்பி, தன் மடியில் வைத்துக் கொண்டு மதங்கொண்ட அன்னப்பறவையின் குரலில், தானே பேசினார்— (15)

"குழந்தாய்! பணிவு என்ற இந்த இயல்பான எண்ணம் உன்னுடன் கூடவே பிறந்தது. அதனால், இந்த உலகத்தையே காப்பாற்றும் அபார வலிமை உன்னிடம் இருக்கிறது. (16)

எவ்வளவு பெரியதாக இருந்தாலும், எல்லாக் காரியங்களையும் அமைச்சர்களுடனும், நல்லியல்பு கொண்டவர்களுடனும், சிறந்த அறிஞர்களான அரசியல் ஆலோசகர்களுடனும் ஆலோசித்து நடப்பித்துக்கொள். (17)

சந்திரனிடமிருந்து அதனுடைய ஒளி நீங்கிப் போனாலும் போகலாம்; இமயமலை பனிக்கட்டிகளை விட்டும் விடலாம்; பெருங்கடல் கரையைக் கடக்கவும் செய்யலாம். ஆனால், தந்தைக்குக் கொடுத்த வாக்கை நான் காப்பாற்றாமல் இருக்கமாட்டேன். (18)

செல்வமே! உன்னுடைய தாயார், உன் மீதுள்ள பேரன்பினாலோ, பேராசையினாலோ உன் பொருட்டு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார். இதை (ஒரு பெரிய குற்றமாக) மனத்தில் வைத்துக் கொள்ளாதே. (அவரிடம் வெறுப்படையாதே.) நன்மை செய்த ஒரு தாயாரிடம் தனயன் நடந்து கொள்வதைப் போலவே, அவரிடம் மிக்க கௌரவத்துடன் நடந்துகொள்ள வேண்டும்." (19)

சூரியனைப் போல் (கண்களைக் கூசும்) ஒளி வீசுபவரும், பிரதமை திதி சந்திரனைப் போல் கண்ணுக்குக் குளிர்ச்சியான எழில் தோற்றமுடையவருமான கோசலையின் மைந்தன் இராமன், இவ்வாறு கூறியதைக் கேட்டதும் பரதன் சொன்னான்— (20)

"அண்ணா! பொன்னால் அலங்கரிக்கப்பட்ட இந்தப் பாதுகைகளின்மேல் திருவடி சார்த்தி அருள்வீராக. இந்தப் பாதுகைகள்தாம், எல்லா உலகங்களின் யோக-க்ஷேமங்களை நிர்வகிக்கப் போகின்றன." (21)

மிகுந்த தேஜஸ் உடையவரும், மனிதர்களுள் உத்தமருமான அவர் பாதுகைகளில் ஏறி, (சிறிது நேரம் நின்று, பின்) இறங்கி, மகாத்மாவான பரதனிடம் அளித்தார். (22)

அவன், பாதுகைகளை வணங்கிய பின், இராமனை நோக்கிக் கூறினான்— "ரகுநந்தனா! வீரரே! எதிரிகளை வாட்டுபவரே! ஜடை-மரவுரி தரித்துக் கொண்டு, பழங்களையும் கிழங்குகளையும் உணவாகக் கொண்டு, தங்கள் பாதுகைகளிடம் அரசு நிர்வாகத்தை ஒப்படைத்துவிட்டு, தங்கள் வரவை எதிர்பார்த்துக் கொண்டு, நகரத்தின் வெளியிலேயே பதிநான்கு ஆண்டுகள் தங்கியிருக்கப் போகிறேன். (23,24)

ரகுநாயகரே! பதிநான்கு ஆண்டுகள் முடிந்த மறுநாளில், நான் தங்களைக் காணாவிட்டால் நெருப்பில் விழுவேன்." (25)

அவனை அன்புடன் தழுவிக் கொண்டு, 'அப்படியே ஆகட்டும்' (பதிநான்கு ஆண்டுகள் முடிந்த மறுநாள், நான் உன்னைச் சந்திக்கிறேன்) என்று உறுதி கூறி, சத்ருக்ணனையும் கட்டியணைத்து, பின்னர் பரதனிடம் பின்வருமாறு கூறினார்— (26)

"ரகுகுலத்தில் பிறந்த உத்தமனே! என்மேலும், சீதைமேலும் ஆணையிட்டுச் சொல்கிறேன், அன்னை கைகேயியை நன்றாக கவனித்துக் கொள். அவரிடம் ஒருபோதும் கோபம் கொள்ளாதே." இவ்வாறு சொல்லிவிட்டுக் கண்களில் கண்ணீர் ததும்ப தம்பிக்கு விடைகொடுத்தனுப்பினார். (27)

அறம் அறிந்தவனும் பராக்கிரமசாலியுமான பரதன், நன்றாக அலங்கரிக்கப்பட்ட அந்தப் பாதுகைகளை பக்திப்பெருக்குடன் பெற்றுக்கொண்டு, இராகவனை வலம் வந்து, மன்னர் பவனிக்கான உத்தம யானையின் தலையில், அவைகளை மிக்க மரியாதையுடன் வைத்தான். (28)

அத$_2$நுபூர்வ்யாத்ப்ரதிநந்த்$_3$ய தம் ஜநம்
குஹ$_3$ம்ஶ்ச மந்த்ரிப்ரக்ருதீஸ் தத$_2$நுஜ்ஞ ।
வ்யஸர்ஜயத்$_3$ ராக$_4$வவம்ஶவர்த$_4$ந:
ஸ்தி$_2$ர: ஸ்வத$_4$ர்மே ஹிமவாநிவாசல: ॥ (29)

தம் மாதரோ ப$_3$ாஷ்பக$_3$ருஹீதகண்ட$_2$யோ
து$_3$:கே$_2$ந நாமந்த்ரயிதும் ஹி ஶேகு: ।
ஸ த்வேவ மாத்ரூரபி$_4$வாத்$_3$ய ஸர்வா
ருத$_3$ந் குடும் ஸ்வாம் ப்ரவிவேஶ ராம: ॥ (30)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ த்$_3$வாத$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

த்ரயோத$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$:

பாது$_3$கார்க$_3$ரஹணம்

தத: ஶிரஸி க்ருத்வா து பாது$_3$கே ப$_4$ரதஸ்தத$_3$ா ।
ஆருரோஹ ரத$_2$ம் ஹ்ருஷ்ட: ஶத்ருக்$_4$நேந ஸமந்வித: ॥ (1)

வஸிஷ்டே$_2$ா வாமதே$_3$வஶ்ச ஜாப$_3$ாலிஶ்ச த்$_3$ருட$_4$வ்ரத: ।
அக்$_3$ரத: ப்ரயயு: ஸர்வே மந்த்ரிணோ மந்த்ரபூஜிதா: ॥ (2)

மந்த$_3$ாகிநீம் நதீ$_3$ம் புண்யாம் ப்ராங்முக$_2$ாஸ்தே யயுஸ்தத$_3$ா ।
ப்ரத$_3$க்ஷிணம் ச குர்வாணாஶ் சித்ரகூடம் மஹாகி$_3$ரிம் ॥ (3)

பஶ்யந் த$_4$ாதுஸஹஸ்ராணி ரம்யாணி விவித$_4$ாநி ச ।
ப்ரயயௌ தஸ்ய பார்ஶ்வேந ஸஸைந்யோ ப$_4$ரதஸ்தத$_3$ா ॥ (4)

அதூ$_3$ராச்சித்ரகூடஸ்ய த$_3$த$_3$ர்ஶ ப$_4$ரதஸ்தத$_3$ா ।
ஆஶ்ரமம் யத்ர ஸ முநிர்ப$_4$ரத்$_3$வாஜ: க்ருதாலய: ॥ (5)

ஸ தமாஶ்ரமமாக$_3$ம்ய ப$_4$ரத்$_3$வாஜஸ்ய புத்$_3$தி$_4$மாந் ।
அவதீர்ய ரத$_2$ாத்பாதௌ$_3$ வவந்தே$_3$ குலநந்த$_3$ந: ॥ (6)

ததோ ஹ்ருஷ்டோ ப$_4$ரத்$_3$வாஜோ ப$_4$ரதம் வாக்யமப்$_3$ரவீத் ।
அபி க்ருத்யம் க்ருதம் தாத ராமேண ச ஸமாக$_3$தம் ॥ (7)

ஏவமுக்தஸ்து ப$_4$ரதோ ப$_4$ரத்$_3$வாஜேந தீ$_4$மதா ।
ப்ரத்யுவாச ப$_4$ரத்$_3$வாஜம் ப$_4$ரதோ ப்$_4$ராத்ருவத்ஸல: ॥ (8)

ஸ யாச்யமாநோ கு$_3$ருணா மயா ச த்$_3$ருட$_4$விக்ரம: ।
ராக$_4$வ: பரமப்ரீதோ வஸிஷ்ட$_2$ம் வாக்யமப்$_3$ரவீத் ॥ (9)

அவ்வமயம், தன்னுடைய தருமத்தில் இமயமலை போன்று நிலைகுலையாது நிற்கும் இராமன், அங்கு வந்திருந்த நாட்டு–நகர மக்கள், ஆசார்யர்கள், அமைச்சர்கள், மற்றும் இரண்டு சகோதரர்களையும் அவரவர்க்குரிய முறைப்படி கௌரவித்து விடைகொடுத்து அனுப்பினார். (29)

தாய்மார்கள் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருக்கி தொண்டை அடைக்க, அவரிடம் விடைபெற்றுக் கொள்ளவும் முடியாதிருந்தார்கள். இராமன், தானே எல்லா தாய்மார்களையும் வணங்கிவிட்டு, அழுது கொண்டே தன் குடிலுக்குள் புகுந்தார். (30)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பன்னிரெண்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதின்மூன்று

பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு திரும்புதல்

பின்னர், ஸ்ரீராமசந்திரனுடைய இரு பாதுகைகளையும் பரதன், தன் தலையில் மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டு, சத்ருக்னனோடு தேரில் ஏறினான். (1)

வசிஷ்டர், வாமதேவர், உறுதியான விரதமுடைய ஜாபாலி, மற்றும் ஆலோசனை சொல்வதில் சிறந்தவர்களான அமைச்சர்கள் ஆகிய எல்லோரும் முன்னால் சென்றார்கள். (2)

அவர்கள், மனத்திற்கினிய மந்தாகினி நதியை அடைந்தார்கள்; பின், சித்திரகூடம் என்னும் அந்த மாமலையை வலம் வந்து கிழக்கு நோக்கிச் சென்றார்கள். (3)

அழகிய, பலவகையான, ஆயிரக்கணக்கான தாதுக்களைப் பார்த்துக் கொண்டு, சைன்னியங்களோடு மலையை ஒட்டினாற்போலவே பரதன் சென்றான். (4)

சித்திரகூடத்திலிருந்து சிறிது தூரத்திலேயே, பரத்வாஜ முனிவர் வசிக்கும் ஆசிரமத்தைப் பரதன் பார்த்தான். (5)

தன் குலத்தின் பெருமையை வளர்க்கும் புத்திமானாகிய அவன், பரத்வாஜருடைய அந்த ஆசிரமத்தை அடைந்து, தேரிலிருந்து இறங்கி, அவருடைய திருவடிகளை வணங்கினான். (6)

அவனுடைய வருகையால் மகிழ்ச்சியடைந்த பரத்வாஜர், பரதனைப் பார்த்து, 'குழந்தாய்! இராமனை சந்தித்தாயா? உன் விருப்பம் கைகூடிற்றா?' என்று கேட்டார். (7)

மேதாவியான பரத்வாஜரால் இவ்வாறு கேட்கப்பட்டதும், சகோதர பாசம் கொண்ட பரதன் (பின்வருமாறு) பதிலளித்தான்— (8)

''ஆசார்யராலும் என்னாலும் மிகவும் வேண்டிக் கொள்ளப்பட்டாலும், உறுதியான சத்திய பராக்கிரமமுடைய ஸ்ரீராமன் மிகவும் மனங்குளிர்ந்து, வசிஷ்டரைப் பார்த்துச் சொன்னார்— (9)

பிது: ப்ரதிக்ஞாம் தாமேவ பாலயிஷ்யாமி தத்த்வத: ।
சதுர்த$_{3}$ஶ ஹி வர்ஷாணி யா ப்ரதிக்ஞா பிதுர்மம ॥ (10)

ஏவமுக்தோ மஹாப்ராக்ஞோ வஸிஷ்ட$_{2}$: ப்ரத்யுவாச ஹ ।
வாக்யக்ஞோ வாக்யகுஶலம் ராக$_{4}$வம் வசநம் மஹத் ॥ (11)

ஏதே ப்ரயச்ச$_{2}$ ஸம்ஹ்ருஷ்ட: பாது$_{3}$கே ஹேமபூ$_{4}$ஷிதே ।
அயோத்$_{4}$யாயாம் மஹாப்ராக்ஞ யோக$_{3}$க்ஷேமகரே தவ ॥ (12)

ஏவமுக்தோ வஸிஷ்டே$_{2}$ந ராக$_{4}$வ: ப்ராங்முக$_{2}$: ஸ்தி$_{2}$த: ।
பாது$_{3}$கே அதி$_{4}$ருஹ்யைதே மம ராஜ்யாய வை த$_{3}$தெ$_{3}$ள ॥ (13)

நிவ்ருத்தோঽஹமநுக்ஞாதோ ராமேண ஸுமஹாத்மநா ।
அயோத்$_{4}$யாமேவ க$_{3}$ச்ச$_{2}$ாமி க்$_{3}$ருஹீத்வா பாது$_{3}$கே ஶுபே$_{4}$ ॥ (14)

ஏதச்ச்$_{2}$ருத்வா ஶுப$_{4}$ம் வாக்யம் ப$_{4}$ரதஸ்ய மஹாத்மந: ।
ப$_{4}$ரத்$_{3}$வாஜ: ஶுப$_{4}$தரம் முநிர் வாக்யமுவாச தம் ॥ (15)

நைதச்சித்ரம் நரவ்யாக்$_{4}$ரே ஶீலவ்ருத்தவித$_{3}$ாம் வரே ।
யத$_{3}$ார்யம் த்வயி திஷ்டே$_{2}$த்து நிம்நோத்ஸ்ருஷ்டமிவோத$_{3}$கம் ॥ (16)

அந்ருண: ஸ மஹாப$_{3}$ாஹு: பிதா த$_{3}$ஶரத$_{2}$ஸ்தவ ।
யஸ்ய த்வமீத்$_{3}$ருஶ: புத்ரோ த$_{4}$ர்மக்ஞோ த$_{4}$ர்மவத்ஸல: ॥ (17)

தம்ருஷிம் து மஹாத்மாநமுக்தவாக்யம் க்ருதாஞ்ஜலி: ।
ஆமந்த்ரயிதுமாரேபே$_{4}$ சரணாவுபக்$_{3}$ருஹ்ய ச ॥ (18)

தத: ப்ரத$_{3}$க்ஷிணம் க்ருத்வா ப$_{4}$ரத்$_{3}$வாஜம் புந: புந: ।
ப$_{4}$ரதஸ்து யயௌ ஶ்ரீமாநயோத்$_{4}$யாம் ஸஹ மந்த்ரிபி$_{4}$: ॥ (19)

யாநைஶ்ச ஶகடைஶ்சைவ ஹயைர்நாகை$_{3}$ஶ்ச ஸா சமூ: ।
புநர்நிவ்ருத்தா விஸ்தீர்ணா ப$_{4}$ரதஸ்யாநுயாயிநீ ॥ (20)

ததஸ்தே யமுநாம் தி$_{3}$வ்யாம் நதீ$_{3}$ம் தீர்த்வோர்மிமாலிநீம் ।
த$_{3}$த்$_{3}$ருஶுஸ்தாம் புந: ஸர்வே க$_{3}$ங்க$_{3}$ாம் ஶுப$_{4}$ஜலாம் நதீ$_{3}$ம் ॥ (21)

தாம் புண்யஜலஸம்பூர்ணாம் ஸந்தீர்ய ஸஹப$_{3}$ாந்த$_{4}$வ: ।
ஶ்ருங்கி$_{3}$பே$_{3}$ரபுரம் ரம்யம் ப்ரவிவேஶ ஸஸைநிக: ॥
ஶ்ருங்கி$_{3}$பே$_{3}$ரபுராத்$_{3}$பூ$_{4}$யஸ்த்வயோத்$_{4}$யாம் ஸந்த$_{3}$த$_{3}$ர்ஶ ஹ ॥ (22)

அயோத்$_{4}$யாம் ச ததோ த்$_{3}$ருஷ்ட்வா பித்ரா ப்$_{4}$ராதா விவர்ஜிதாம் ।
ப$_{4}$ரதோ து$_{3}$:க$_{2}$ஸந்தப்த: ஸாரதி$_{2}$ம் சேத$_{3}$மப்$_{3}$ரவீத் ॥ (23)

'என் தந்தையின் கட்டளையை, அதன் உட்பொருளுக்குச் சிதைவு ஏற்படாத வகையில், அப்படியே காப்பாற்றுவேன். பதிநான்கு ஆண்டுகள் (காட்டில் வசிக்க வேண்டும்) என்று என் தந்தையால் பிரதிக்ஞை செய்யப்பட்டது.' (10)

இவ்வாறு கூறப்பட்டதும், சொல் நுட்பம் அறிந்த பெரும் அறிஞரான வசிஷ்டர், பேசுவதில் நிபுணரான இராமனைப் பார்த்து, மேலான சொற்களைக் கூறினார்— (11)

'பேரறிவாளனே! பொன்னால் அலங்கரிக்கப்பட்ட, அயோத்தியின் யோக-க்ஷேமங்களைப் பாதுகாக்கும் உன்னுடைய இந்தப் பாதுகைகளை மனம் மகிழ்ந்து கொடுப்பாய்.' (12)

இவ்வாறு வசிஷ்டர் கூறியதும், கிழக்கு நோக்கி பாதுகைகளில் ஏறி நின்று, பின் அரசு நிர்வாகத்தைச் செய்வதற்காக என்னிடம் கொடுத்தார். (13)

பின்னர், மகாத்மாவான இராமனிடம் விடைபெற்று, மங்களமான இரு பாதுகைகளைப் பெற்றுக் கொண்டு, திரும்பவும் அயோத்திக்கே செல்கிறேன்." (14)

மகாத்மா பரதனின் இனிய சொற்களைக் கேட்ட பரத்வாஜ முனிவர், அவனை நோக்கி மிகவும் மங்களகரமான சொற்களை மொழிந்தார்— (15)

"(பரதா!) மனிதர்களுள் நீ சிங்கம் நிகர் வீரன்; நற்குண-நல்லொழுக்க ஞானமுடையவர்களில் தலையாயவன். பள்ளத்தை நோக்கித் தண்ணீர் ஓடுவது எவ்வளவு இயல்பானதோ, அப்படியே உன்னிடம் நற்குணங்கள் நிரம்பியிருக்கின்றன என்பது வியக்கத்தக்க விஷயமல்ல. (16)

உன்னுடைய தந்தையான பெருந்தோளர் தசரதர், எல்லாக் கடன்களிலிருந்தும் விடுபட்டு விட்டார் – உன்னைப் போன்ற தருமப்பற்றுள்ள, தருமானுஷ்டானமுள்ள மகனைப் பெற்றதனால்!" (17)

மகாத்மாவான அந்த முனிவர் இவ்வாறு கூறியதும், பரதன் இரு கைகளையும் கூப்பி, பாதங்களில் விழுந்து வணங்கி, விடைபெற்றுச் செல்வதில் ஆர்வம் காட்டினான். (18)

உடனே, பலதடவைகள் பரத்வாஜரை வலம் வந்து (விடைபெற்றுக் கொண்டு), பாதுகா லட்சுமியைப் பெற்று தேஜஸையுடைய பரதன், அமைச்சர்களோடு அயோத்திக்குச் சென்றான். (19)

வாகனங்கள், வண்டிகள், குதிரைகள், யானைகள் அடங்கிய அந்தப் பெரிய பட்டாளம், பரதனைப் பின்தொடர்ந்து மீண்டும் (அயோத்திக்குத்) திரும்பியது. (20)

அவர்கள் எல்லோரும் அலைவரிசைகளை அழகாகவுடைய, தெய்விகம் பொருந்திய நதியான யமுனையைக் கடந்து, புனிதமான தண்ணீரையுடைய கங்கையை மறுபடியும் கண்டார்கள் (கங்கைக் கரையை அடைந்தார்கள்). (21)

புனித நீரால் நிரம்பிய அந்த நதியைக் கடந்து, உற்றார்-உறவினரோடும், படைவீரர்களோடும் கண்ணுக்கினிய சிருங்கிபேரபுரத்திற்குள் நுழைந்தான். (பரதன்) சிருங்கிபேரபுரத்திலிருந்து புறப்பட்டு தொலைவிலிருந்து அயோத்தியைக் கண்டான். (22)

தந்தையும் தமையனாரும் இல்லாத அயோத்தியைப் பார்த்ததும், துக்கத்தைத் தாங்க முடியாமல் தேரோட்டியான சுமந்திரரைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னான்— (23)

ஸாரதே$_2$ பஶ்ய வித்$_4$வஸ்தா ஸாயோத்$_4$யா ந ப்ரகாஶதே ।
நிராகாரா நிராநந்த$_3$ா தீ$_3$நா ப்ரதிஹதஸ்வநா ॥ (24)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ த்ரயோத$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

சதுர்த$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$:

அயோத்$_4$யாப்ரவேஶ:

ஸ்நிக்$_3$த$_4$க$_3$ம்பீ$_4$ரகோ$_4$ஷேண ஸ்யந்த$_3$நேநோபயாந் ப்ரபு$_4$: ।
அயோத்$_4$யாம் பு$_4$ர: க்ஷிப்ரம் ப்ரவிவேஶ மஹாயஶா: ॥ (1)

பி$_3$ட$_3$ாலோலூகசரிதாமாலீநநரவாரணாம் ।
திமிராப்$_4$யாஹதாம் காலீமப்ரகாஶாம் நிஶாமிவ ॥ (2)

ராஹுஶத்ரோ: ப்ரியாம் பத்நீம் ஶ்ரியா ப்ரஜ்வலிதப்ரப$_4$ாம் ।
க்$_3$ரஹோணாப்$_4$யுதி$_3$தைநைகாம் ரோஹிணீமிவ பீடி$_3$தாம் ॥ (3)

அநிலோத்க்ஷுப்$_3$த$_4$ஸலிலாம் க$_4$ர்மோத்தப்தவிஹங்க$_3$மாம் ।
லீநமீநஜுஷக்$_3$ராஹாம் க்ருஶாம் கி$_3$ரிநதீ$_3$மிவ ॥ (4)

விதூ$_4$மாமிவ ஹோமாப$_4$ாமத்$_4$வராக்$_3$நே: ஸமுத்தி$_2$தாம் ।
ஹவிரப்$_4$யுக்ஷிதாம் பஶ்சாச்சி$_2$க$_2$ாம் ப்ரவிலயம் க$_3$தாம் ॥ (5)

வித்$_4$வஸ்தகவசாம் ருக்$_3$ண க$_3$ஜவாஜிரத$_2$த்$_4$வஜாம் ।
ஹதப்ரவீராமாபந்நாம் சமூமிவ மஹாஹவே ॥ (6)

ஸபே$_2$நாம் ஸஸ்வநாம் பூ$_4$த்வா ஸாக$_3$ரஸ்ய ஸமுத்தி$_2$தாம் ।
ப்ரஶாந்தமாருதோத்$_3$தூ$_4$தாம் ஜலோர்மிமிவ நி:ஸ்வநாம் ॥ (7)

த்யக்தாம் யக்ஞாயுதை$_4$: ஸர்வைரபி$_4$ரூபைஶ்ச யாஜுகை: ।
ஸுத்யாகாலே விநிர்வ்ருத்தே வேதி$_3$ம் க$_3$தரவாமிவ ॥ (8)

கோ$_3$ஷ்ட$_2$மத்$_4$யே ஸ்தி$_2$தாமார்தாமசரந்தீம் த்ருணம் நவம் ।
கோ$_3$வ்ருஷேண பரித்யக்தாம் க$_3$வாம் பத்நீமிவோத்ஸுகாம் ॥ (9)

ப்ரப$_4$ாகராத்$_3$யை: ஸுஸ்நிக்$_3$தை$_4$: ப்ரஜ்வலத்$_3$பி$_4$ரிவோத்தமை: ।
வியுக்தாம் மணிபி$_4$ர்ஜாத்யைர் நவாம் முக்தாவலீமிவ ॥ (10)

ஸஹஸா சலிதாம் ஸ்த$_2$ாநாந் மஹீம் புண்யக்ஷயாத்$_3$க$_3$தாம் ।
ஸம்ஹ்ருதத்$_3$யுதிவிஸ்தாராம் தாராமிவ தி$_3$வஶ்ச்யுதாம் ॥ (11)

"சாரதியே! அயோத்தி நகரம் தன் உருவிழந்து, ஆனந்தம் இழந்து, வலிமை குன்றி, ஒலி அடங்கி, களையிழந்து, பிரகாசமில்லாமல் இருக்கிறது என்பதை நீங்களும் பாருங்கள்." (24)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதின்மூன்றாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதின்நான்கு

அயோத்தியில் பிரவேசித்தல்

செவிக்கினிய கம்பீரமான ஒலியுடன் கூடிய தேரில், பெரும் புகழ் கொண்டவனும், பிரபுவுமான பரதன், வழியில் தடையேதுமில்லாமல் அயோத்தி நகருக்குள் பிரவேசித்தான். (1)

அந்தச் சமயத்தில், பூனைகளும் கோட்டான்களும் அங்கே அலைந்து கொண்டிருந்தன; மனிதர்கள் சோர்வடைந்திருந்தனர்; யானைகளும் சோர்ந்து கிடந்தன; இருளால் ஆக்கிரமிக்கப்பட்டு ஒளியிழந்த, கரிய இருட்டான இரவைப் போலும்; (2)

சந்திரனின் அன்புக்குரிய மனைவியும், தன் இயல்பான பேரொளியினால் பிரகாசிப்பவளுமான ரோகிணிதேவி, வெகுவேகமாகத் தோன்றிய ராகு கிரகத்தால் கணவன் பீடிக்கப்பட்டதும் தனியாக இருந்து தவிப்பது போலவும்; (3)

மலையில் தோன்றிய நதியின் நீர் கோடைக்கால சூரிய வெப்பத்தால் வற்றியதும், அதிலிருந்த சிறுமீன், பெரியமீன், முதலை போன்றவைகள் ஆழமான இடத்திற்குச் சென்று மறைந்து கொண்டது போலவும்; வெட்பம் தாங்காமல் அங்கிருந்த பறவைகள் தவிப்பது போலவும்; (4)

வேள்விக்குண்ட அக்னி, முதலில் (நெய் ஆகுதி செய்யப்படும்போது) புகையில்லாமல் சுவர்ணமயமான சுவாலைகளுடன் விளங்கி, பின், தயிர்–பால் ஆகுதி செய்யப்பட்டதும் அக்னிச் சுவாலைகள் அடங்கிவிட்டது போலவும்; (5)

பெரும்போரில் ஒரு பக்கத்துப் படையினர் எதிரிகளால் முறியடிக்கப்பட்டதால் கவசங்கள் சிதறியும்; யானை, குதிரை, தேர்க்கொடி முதலியன சின்னபின்னமாக்கப்பட்டுக் கிடப்பது போலவும்; முக்கிய படைத்தலைவர்கள் அழிக்கப்பட்டு தோல்வியைத் தழுவித் தவிப்பது போலவும்; (6)

காற்றின் வேகத்தினால் நுரையுடனும், பெரும் கர்ஜனை ஒலியுடனும் உயரமாக எழுந்த அலைவரிசை காற்றின் வேகம் குறைந்தவுடன் அலை ஓய்ந்து சப்தமில்லாமல் அமைதியாக இருப்பது போலவும்; (7)

வேள்விச்சாலையில் வேள்வி முடிந்தவுடன் ரித்விக்குகளும், ஏனையோரும் வெளியே சென்ற பின், யாகத்தில் உபயோகிக்கப்பட்ட உபகரணங்கள் சீண்டுவாரின்றிக் கிடப்பது போலவும்; மந்திர ஒலி இல்லாமல் இருக்கும் யாகசாலை போலவும்; (8)

பசுத்தொழுவத்திலிருந்து தனக்கு இஷ்டமான காளையிடமிருந்து பிரிக்கப்பட்டு, அதையே நினைத்து வருந்தி பசும்புல்லைத் தின்னாமல் நின்று கொண்டிருக்கும் பசுவைப் போல் இருப்பதுவும்; (9)

மிக்க ஒளிவீசும் பத்மராகம் முதலிய ரத்தினங்களால் கவினுற விளங்கும் முத்துமாலை, (அவைகளை எடுத்துவிட்டால்) அவைகள் இல்லாமல் அழகு குறைந்து காணப்படுவது போலவும்; (10)

ஒரு தாரகை, தான் செய்த புண்ணியம் முற்றிலும் அனுபவித்துத் தீர்ந்து போய்விட்டதால் புண்ணியத்தின் பயனாக அடைந்த பதவியை இழந்து, ஒளி இழந்து பூமியில் விழுந்ததைப் போலவும்; (11)

புஷ்பஹத்₃த₄ாம் வஸந்தாந்தே மத்தப்₄ரமரநாதி₃தாம் ।
த்₃ருத த₃ாவாக்₃நி விப்லுஷ்டாம் க்லாந்தாம் வநலதாமிவ ॥ (12)

ஸம்மூட₄நிக₃மாம் ஸ்தப்₃த₄ாம் ஸம்க்ஷிப்தவிபணாபணாம் ।
ப்ரச்ச₂ந்ந ஸ்ரீநிக்ஷத்ராம் த்₃யாமிவாம்பு₃த₄ரைர் வ்ருதாம் ॥ (13)

க்ஷீணபாநோத்தமைர்பி₄ந்நை: ஸராவைரபி₄ஸம்வ்ருதாம் ।
க₃தஸௌண்ட₃ாமிவ த்₄வஸ்தாம் பாநபூ₄மிமஸம்ஸ்க்ருதாம் ॥ (14)

வ்ருக்ணபூ₄மிதளாம் நிம்நாம் வ்ருக்ணபாத்ரை: ஸமாவ்ருதாம் ।
உபயுக்தோத₃காம் ப₄க்₃நாம் ப்ரபாம் நிபதிதாமிவ ॥ (15)

விபுலாம் விததாம் சைவ யுக்தபாஸ்ராம் தரஸ்விநாம் ।
பூ₄மௌ ப₃ாணைர்விநிஷ்க்ருத்தாம் பதிதாம் ஜ்யாமிவாயுத₄ாத் ॥ (16)

ஸஹஸா யுத்₃த₄ஸௌண்டே₃ந ஹயாரோஹேண வாஹிதாம் ।
நிக்ஷிப்த ப₄ாண்ட₃ாமுத்ஸ்ருஷ்டாம் கிஸோரீமிவ து₃ர்ப₃லாம் ॥ (17)

ஸுஷ்கதோயாம் மஹாமத்ஸ்யை: கூர்மைஸ்ச ப₃ஹுபி₄ர்வ்ருதாம் ।
ப்ரபி₄ந்ந தடவிஸ்தீர்ணாம் வாபீமிவ ஹ்ருதோத்பலாம் ॥ (18)

புருஷஸ்யாப்ரஹ்ருஷ்டஸ்ய ப்ரதிஷித்₃த₄ாநுலேபநாம் ।
ஸந்தப்தாமிவ ஸோகேந க₃ாத்ரயஷ்டிமபூ₄ஷணாம் ॥ (19)

ப்ராவ்ருஷி ப்ரவிக₃ாட₄ாயாம் ப்ரவிஷ்டஸ்யாப்₄ரமண்ட₃லம் ।
ப்ரச்ச₂ந்நாம் நீலஜீமூதைர் ப₄ாஸ்கரஸ்ய ப்ரப₄ாமிவ ॥
நிஹதாம் ப்ரதிஸைந்யேந ப₃ட₃ப₃₃ாமிவ பாலிதாம் ॥ (20)

ப₄ரதஸ்து ரத₂ஸ்த₂: ஸந் ஸ்ரீமாந் த₃ஸ்ரத₂ாத்மஜ: ।
வாஹயந்தம் ரத₂ம் ஸ்ரேஷ்ட₂ம் ஸாரதி₂ம் வாக்யமப்₃ரவீத் ॥ (21)

கிம் நு க₂ல்வத்₃ய க₃ம்பீ₄ரோ மூர்ச்சி₂தோ ந நிஸம்யதே ।
யத₂ாபுரமயோத்₄யாயாம் கீ₃தவாதி₃த்ரநி:ஸ்வந: ॥ (22)

வாருணீமத₃க₃ந்த₄ஸ்ச மால்யக₃ந்த₄ஸ்ச மூர்ச்சி₂த: ।
தூ₄பிதாக₃ருக₃ந்த₄ஸ்ச ந ப்ரவாதி ஸமந்தத: ॥ (23)

யாநப்ரவரகே₄ாஷஸ்ச ஸ்நிக்₃த₄ஸ்ச ஹயநி:ஸ்வந: ।
ப்ரமத்தக₃ஜநாத₃ஸ்ச மஹாம்ஸ்ச ரத₂நி:ஸ்வந: ॥
நேத₃ாநீம் ஸ்ரூயதே புர்யாமஸ்யாம் ராமே விவாஸிதே ॥ (24)

சந்த₃நாக₃ருக₃ந்த₄ாஸ்ச மஹார்ஹாஸ்ச நவஸ்ரஜ: ।
க₃தே ஹி ராமே தருணா: ஸந்தப்தா நோபபு₄ஞ்ஜதே ॥ (25)

ப₃ஹிர்யாத்ராம் ந க₃ச்ச₂ந்தி சித்ரமால்யத₄ரா நரா: ।
நோத்ஸவா: ஸம்ப்ரவர்தந்தே ராமஸோகார்தி₃தே புரே ॥ (26)

கோடை வருவதற்கு முன்னர், வசந்த ருதுவில் ஏராளமான மலர்கள் பூத்து, மதங்கொண்ட வண்டுகள் மொய்த்து ரீங்காரம் செய்யப்பட்ட காட்டுக்கொடி, திடீரென்று தோன்றிப் பரவிய காட்டுத் தீயினால் கருகிப் போனது போலவும்; (12)

மக்கள் போக்குவரத்து இல்லாததால் கூச்சல் சப்தம் இல்லாமலும், வாங்குதல்–விற்றல் என்ற வாணிபம் இல்லாமலும், மேகங்களால் சூழப்பட்டு கண்ணுக்குப் புலப்படாமல் மறைக்கப்பட்ட சந்திரன்–நட்சத்திரங்களுடன் கூடிய ஆகாயம் போலவும்; (13)

உயர்ந்த, பலவகையான மதுபானங்களைக் குடிப்பதற்கான குடுவைகள் உடைந்து சிதறிக் கிடப்பதும், குடிப்பவர்கள் இல்லாததால் சுத்தம் செய்யப்படாத மதுபானக்கடை சிதைந்து காணப்படுவது போலவும்; (14)

பாளம்பாளமாகத் தரை வெடித்து பள்ளமாகிவிட்டது போலவும்; நீர் குடிக்கும் பாத்திரங்கள் உடைந்து சிதறிக்கிடப்பது போலவும்; தண்ணீர் முற்றிலும் அற்றுப் போய் தூண்கள் இடிந்து கீழே விழுந்துவிட்ட தண்ணீர்த் தொட்டியைப் போலவும்; (15)

உயர்ந்த, நீண்ட வில்லில் பூட்டப்பட்டிருந்த நாண் கயிறு எதிரிகளின் பாணங்களால் அறுக்கப்பட்டு பூமியில் கிடப்பது போலவும்; (16)

போர்க்களத்தில் குதிரை வீரனால் சேணம் முதலியவைகளால் அலங்கரிக்கப்பட்டு வேகமாகச் செலுத்தப்பட்ட, (எதிரிகளால் தாக்கப்பட்டு, அதனால்) பின் கைவிடப்பட்ட வலிமை இழந்த பெண்குதிரை போல் இருப்பதுவும்; (17)

பலவகையான பெரிய மீன்களாலும் ஆமைகளாலும் நிரம்பியிருந்ததும், தற்சமயம் நீர் வற்றி, நீலோத்பல மலர்கள் அழிந்து, இடிந்த கரைகளையுடைய பொய்கையைப் போல் இருப்பதுவும்; (18)

மகிழ்ச்சியில்லாத ஒருவனுடைய சரீரம் சந்தனப்பூச்சு இல்லாமலும், அணிகலன்களால் அலங்கரிக்கப்படாமல் இருப்பதைப் போலவும்; (19)

தீவிரமான மாரிக்காலத்தில், மேகமண்டலத்திற்குள் புகுந்த கருத்த மேகங்களால் மறைக்கப்பட்ட (மங்கிய) ஒளி போலிருப்பதுவும்; நன்றாகப் பராமரிக்கப்பட்ட பெண்குதிரை எதிரிப்படைகளால் வீழ்த்தப்பட்டது போலிருப்பதுவுமான (அயோத்திக்குள் பிரவேசித்தான்.) (20)

அழியா செல்வமுடையவனும், தசரத குமாரனுமான பரதன், தான் தேரில் உட்கார்ந்திருந்தபடி உத்தமமான ரதத்தைச் செலுத்தும் சாரதியைப் பார்த்து, (இவ்வாறு) சொன்னான்— (21)

"இப்பொழுது (முன்புபோல்) வாய்பாட்டு–தாளவாத்தியங்களின் கம்பீரமான இசையொலி அயோத்தியில் கேட்கப்படவில்லை. இது எவ்வளவு வருந்தத்தக்க விஷயம்! (22)

நாலா பக்கங்களிலும் பரவி வீசும் வாருணி (என்ற மதுவகை)யின் வாசனையும், மலர்மாலைகளின் நறுமணமும், அகில்புகையின் வாசனையும் காற்றில் மிதந்து வரவில்லையே? (23)

சிறந்த வண்டிகள் போய் வருவதால் உண்டாகும் சப்தமும், குதிரைகளின் மனங்கவரும் கனைப்பு ஒலியும், மதங்கொண்ட யானைகளின் பிளிறலும், ரதங்களின் போக்குவரத்தால் ஏற்படும் பேரொலியும், ஸ்ரீராமன் நாடு கடத்தப்பட்டுவிட்டபடியால், இந்த நகரத்தில் இப்போது கேட்கப்படவில்லை. (24)

இராமப்பிரபு நகரத்தை விட்டுச் சென்றுவிட்டதால் எப்போதும் இனிமையாகப் பொழுதைக் கழிக்கும் மக்கள், மனவேதனைப்பட்டு, விலையுயர்ந்த புதிய மாலைகளை அணியாமலும், சந்தனம்–அகில் போன்றவைகளின் நறுமணத்தை நுகராமலும் இருக்கிறார்கள். (25)

இராமனைப் பிரிந்ததால் துயரத்தில் வாடும் நகரமக்கள், அழகிய மாலைகளை அணிந்து கொண்டு வெளியில் உலாவுவதற்குச் செல்லாமலிருக்கிறார்கள்; (மக்கள் கூடிக்களிக்கும்) திருவிழாக்களும் நடைபெறவில்லை. (26)

ஸஹ நூநம் மம ப்4ராத்ரா புரஸ்யாஸ்ய த்3யுதிர்க3தா ।
ந ஹி ராஜ்யயோத்4யேயம் ஸாஸாரேவார்ஜூநீ க்ஷபா ॥ (27)

கதா3 நு க2லு மே ப்4ராதா மஹோத்ஸவ இவாக3த: ।
ஜநயிஷ்யத்யயோத்4யாயாம் ஹர்ஷம் க்3ரீஷ்ம இவாம்பு3த3: ॥ (28)

தருணஶ்சாருவேஷஶ்ச நரைருந்நதகா3மிபி4: ।
ஸம்பதத்3பி4ரயோத்4யாயாம் நாபி4ப4ந்தி மஹாபதா2: ॥ (29)

ஏவம் ப3ஹுவித4ம் ஜல்பந் விவேஶ வஸதிம் பிது: ।
தேந ஹீநாம் நரேந்த்3ரேண ஸிம்ஹஹீநாம் கு3ஹாமிவ ॥ (30)

ததா3 ததா3ந்த:புரமுஜ்ஜிதப்ரப4ம்
ஸுரைரிவோத்ஸ்ருஷ்டமப4ாஸ்கரம் தி3நம் ।
நிரீக்ஷ்ய ஸர்வம் து விவிக்தமாத்மவாந்
முமோச ப3ாஷ்பம் ப4ரத: ஸுது3:கி2த: ॥ (31)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 சதுர்த3ஶாதி4கஶததம: ஸர்க3: ॥

பஞ்சத3ஶாதி4கஶததம: ஸர்க3:

நந்தி3க்3ராமநிவாஸ:

ததோ நிக்ஷிப்ய மாத்ரு: ஸ அயோத்4யாயாம் த்3ருட4வ்ரத: ।
ப4ரத: ஶோகஸந்தப்தோ கு3ருநித3மதா2ப்3ரவீத் ॥ (1)

நந்தி3க்3ராமம் க3மிஷ்யாமி ஸர்வாநாமந்த்ரயேऽத்3ய வ: ।
தத்ர து3:க2மித3ம் ஸர்வம் ஸஹிஷ்யே ராக4வம் விநா ॥ (2)

க3தஶ்ச ஹி தி3வம் ராஜா வநஸ்தா2ஶ்ச கு3ருர்மம ।
ராமம் ப்ரதீக்ஷே ராஜ்யாய ஸ ஹி ராஜா மஹாயஶா: ॥ (3)

ஏதச்ச்2ருத்வா ஶுப4ம் வாக்யம் ப4ரதஸ்ய மஹாத்மந: ।
அப்3ருவந் மந்த்ரிண: ஸர்வே வஸிஷ்டா2ஶ்ச புரோஹித: ॥ (4)

ஸத்3ருஶம் ஶ்லாக4நீயம் ச யது3க்தம் ப4ரத த்வயா ।
வசநம் ப்4ராத்ருவாத்ஸல்யாத3நுரூபம் ததை2வ தத் ॥ (5)

நித்யம் தே ப3ந்து4லுப்3த4ஸ்ய திஷ்டா2தோ ப்4ராத்ருஸௌஹ்ருதே3 ।
ஆர்யமார்க3ம் ப்ரபந்நஸ்ய நாநுமந்யேத க: புமாந் ॥ (6)

மந்த்ரிணாம் வசநம் ஶ்ருத்வா யதா2பி4லஷிதம் ப்ரியம் ।
அப்3ரவீத்ஸாரதி2ம் வாக்யம் ரதே2ா மே யுஜ்யதாமிதி ॥ (7)

என்னுடைய தமையனாருடன் இந்த நகரத்தின் (மனத்தைக் கொள்ளை கொள்ளும்) சோபையும் போய்விட்டது என்பது திண்ணம். இந்த அயோத்தி, மேகக் கூட்டம் நிறைந்த, மிக வேகமாகக் கொட்டும் மழைக்கால இரவுபோல் ஒளிவீசாதிருக்கிறது. (27)

வெப்பம் மிகுந்த கோடைக்காலத்தில் தண்ணீருக்கு ஏங்கித் தவிக்கும் மக்கள், வானத்தில் கரிய மேகங்களைக் கண்டதும் பெருமகிழ்ச்சி கொள்வார்களே, அது போன்ற கோலாகல மகிழ்ச்சிப் பெருக்கை எப்போதுதான் என் தமையனார் திரும்பி வந்து உண்டாக்கப் போகிறாரோ? (28)

அயோத்தியின் ராஜவீதிகளில், எழில்மிகு ஆடை–அணிகலன்கள் அணிந்து, கம்பீரமாக நடந்து செல்லும் யௌவன புருஷர்களைக் காணவில்லையே?'' (29)

இவ்வாறு பலவிதமாகப் புலம்பிக் கொண்டு, புருஷோத்தமர் (தசரதர்) இல்லாததால், சிங்கம் இல்லாத குகை போல் (முற்றிலும் சூன்யமாகக்) காணப்பட்ட, தந்தையின் மாளிகைக்குள் (பரதன்) புகுந்தான். (30)

அப்போது, (முன்பு) தேவாசுர யுத்தத்தில் தேவர்கள் தோற்றுப்போன ஒரு சந்தர்ப்பத்தில், சூரியனை ராகு இழுத்துச் சென்றுவிட்டதால், சூரியன் இல்லாத பகல் போல் அந்தப்புரம் ஒளியிழந்து காணப்பட்டது; மனித நடமாட்டமில்லாமல் பயங்கரமாக இருந்ததைக் கண்டு, மகா தைரியசாலியான பரதன் துக்கம் தாங்காமல் கண்ணீர் பெருக்கினான். (31)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதின்நான்காவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினைந்து

பாதுகா பட்டாபிஷேகம்

ஒழுக்கத்தில் உறுதியுடைய பரதன், அயோத்தியில் தாய்மார்களை தங்கச் செய்து, மனவேதனையால் தவித்து, பெரியோர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) சொன்னான்— (1)

''நான் நந்திக்கிராமம் செல்லப் போகிறேன். உங்கள் எல்லோரிடமும் விடைபெற்றுக் கொள்கிறேன். இராமன் இல்லாததால் ஏற்பட்டுள்ள இந்தத் துக்கத்தையெல்லாம் அங்கே சகித்துக் கொண்டிருப்பேன். (2)

நம்மையெல்லாம் ஆண்ட மன்னர் தசரதர் விண்ணுலகம் சென்றுவிட்டார்; என்னுடைய தமையனார் காட்டிலிருக்கிறார்; நான், நந்திக்கிராமத்தில் இருந்து கொண்டு, தானே நாட்டை ஆள்வதற்கு வருகைபுரியும் ஸ்ரீராமனை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். பெரும்புகழ் கொண்ட அவர்தான் (இந்த நாட்டிற்கு) அரசர்.'' (3)

மகாத்மா பரதனுடைய, தருமசம்மதமான இந்த வார்த்தைகளைக் கேட்டு, புரோகிதரான வசிஷ்டரும், எல்லா அமைச்சர்–ஆலோசகர்களும் (பின்வருமாறு) கூறினார்கள்— (4)

''பரதா! சகோதரனிடம் மிக்க அன்புடைய உன்னால் கூறப்பட்ட விஷயம் மேன்மையான உன் இயல்பிற்கு ஒத்தது; புகழத்தக்கது; உனக்கே ஏற்றது. (5)

உன் தமையன் வரவையே நீ எப்போதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாய்; அவர் நலனில் முழு அக்கறை கொண்டிருக்கிறாய். சரியான பாதையைத் தேர்தெடுத்துவிட்ட உனக்கு எவர்தான் அனுமதி கொடுக்காமலிருப்பார்?'' (6)

தன் விருப்பத்திற்கு ஆதரவான இனிய சொற்களை அமைச்சர்களிடமிருந்து கேட்டவுடன், 'என்னுடைய ரதத்தை ஆயத்தப்படுத்துங்கள்' என்று சாரதியான சுமந்திரரைப் பார்த்துச் சொன்னான். (7)

ப்ரஹ்ருஷ்டவத3ந: ஸர்வா மாத்ரூ: ஸமபி4வாத்3ய ஸ: ।
ஆருரோஹ ரத2ம் ஸ்ரீமாஞ் ஶத்ருக்4நேந ஸமந்வித: ॥ (8)

ஆருஹ்ய ச ரத2ம் ஶீக்4ரம் ஶத்ருக்4நப4ரதாவுபெ4ள ।
யயது: பரமப்ரீதௌ வ்ருதௌ மந்த்ரிபுரோஹிதை: ॥ (9)

அக்3ரதோ கு3ரவஸ்தத்ர வஸிஷ்ட2ப்ரமுகா2 த்3விஜா: ।
ப்ரயயு: ப்ராங்முகா2: ஸர்வே நந்தி3க்3ராமோ யதோ3ப4வத் ॥ (10)

ப3லம் ச தத3நாஹூதம் க3ஜாஶ்வரத2ஸங்குலம் ।
ப்ரயயௌ ப4ரதே யாதே ஸர்வே ச புரவாஸிந: ॥ (11)

ரத2ஸ்த2: ஸ ஹி த4ர்மாத்மா ப4ரதோ ப்4ராத்ருவத்ஸல: ।
நந்தி3க்3ராமம் யயௌ தூர்ணம் ஶிரஸ்யாத4ாய பாது3கே ॥ (12)

ததஸ்து ப4ரத: க்ஷிப்ரம் நந்தி3க்3ராமம் ப்ரவிஶ்ய ஸ: ।
அவதீர்ய ரத2ாத்தூர்ணம் கு3ரூந்தி3முவாச ஹ ॥ (13)

ஏதத்3ராஜ்யம் மம ப்4ராத்ரா த3த்தம் ஸந்ந்யாஸவத் ஸ்வயம் ।
யோக3க்ஷேமவஹே தஸ்ய பாது3கே ஹேமபூ4ஷிதே ॥ (14)

ப4ரத: ஶிரஸா க்ருத்வா ஸந்ந்யாஸம் பாது3கே தத: ।
அப்3ரவீத்3 து3:க2ஸந்தப்த: ஸர்வம் ப்ரக்ருதிமண்ட3லம் ॥ (15)

ச2த்ரம் த4ாரயத க்ஷிப்ரமார்யபாதா3விமௌ மதௌ ।
ஆப்4யாம் ராஜ்யே ஸ்தி2தோ த4ர்ம: பாது3காப்4யாம் கு3ரோர்மம ॥ (16)

ப்4ராத்ரா ஹி மயி ஸந்ந்யாஸோ நிக்ஷிப்த: ஸௌஹ்ருதா3த்3யம் ।
தமிமம் பாலயிஷ்யாமி ராக4வாக3மநம் ப்ரதி ॥ (17)

க்ஷிப்ரம் ஸம்யோஜயித்வா து ராக4வஸ்ய புந: ஸ்வயம் ।
சரணௌ தௌ து ராமஸ்ய த்3ரக்ஷ்யாமி ஸஹபாது3கௌ ॥ (18)

ததோ நிக்ஷிப்தப4ாரோ3ஹம் ராக4வேண ஸமாக3த: ।
நிவேத்3ய கு3ரவே ராஜ்யம் ப4ஜிஷ்யே கு3ருவர்திதாம் ॥ (19)

ராக4வாய ச ஸந்ந்யாஸம் த3த்த்வேமே வரபாது3கே ।
ராஜ்யம் சேத3மயோத்4யாம் ச தூ4தபாபோ ப4வாம்யஹம் ॥ (20)

அபி4ஷிக்தே து காகுத்ஸ்தே2 ப்ரஹ்ருஷ்டமுதி3தே ஜநே ।
ப்ரீதிர்மம யஶஶ்சைவ ப4வேத்3ராஜ்யாச் சதுர்கு3ணம் ॥ (21)

ஏவம் து விலபந் தீ3நோ ப4ரத: ஸ மஹாயஶா: ।
நந்தி3க்3ராமேঽகரோத்3ராஜ்யம் து3:கி2தோ மந்த்ரிபி4: ஸஹ ॥ (22)

ஸ வல்கலஜடாத4ாரீ முநிவேஷத4ர: ப்ரபு4: ।
நந்தி3க்3ராமேঽவஸத்3வீர: ஸஸைந்யோ ப4ரதஸ்ததா3 ॥ (23)

முகமலர்ச்சியுடன் எல்லா தாய்மார்களையும் வணங்கிவிட்டு, ஸ்ரீமானான பரதன் சத்ருக்னனுடன் தேரில் ஏறினான். (8)

மிகவும் சந்தோஷத்துடன் ரதத்தில் ஏறிய பரத–சத்ருக்னர்களாகிய அவ்விருவரும், அமைச்சர்–புரோகிதர்கள் புடைசூழ, அவ்விடத்திலிருந்து உடனே புறப்பட்டார்கள். (9)

வசிஷ்டர் முதலான ஆசார்யர்களும் அந்தணர்களும் முன் செல்ல, நந்திக்கிராமம் இருக்கும் கிழக்கு திசைநோக்கி எல்லோரும் சென்றார்கள். (10)

பரதன் புறப்பட்டதும் உத்திரவு செய்யப்படாவிட்டாலும்கூட, யானை–குதிரை–தேர் அடங்கிய அனைத்துப் படைகளும் நகரவாசிகளும் அவனுடன் சென்றார்கள். (11)

தருமாத்மாவும், சகோதரரிடம் பேரன்பு கொண்டவனுமான பரதன், ஸ்ரீராமனுடைய திவ்ய பாதுகைகளைத் தன் சிரசில் சுமந்தபடியே ரதத்தில் இருந்துகொண்டு விரைவில் நந்திக்கிராமத்தை அடைந்தான். (12)

பின்னர், நந்திக்கிராமத்திற்குள் நுழைந்ததும் ரதத்திலிருந்து உடனே இறங்கி, ஆசார்யர்களைப் பார்த்து(ப் பின்வருமாறு) கூறினான்— (13)

"இந்த அரசு, ஒப்படைக்கப்பட்ட ஒரு பொருள்போல, என்னுடைய சகோதரராலேயே என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பொன்னால் அலங்கரிக்கப்பட்ட அவருடைய இந்த இரு பாதுகைகள்தாம் அரசு நிர்வாகம் செய்யப்போகின்றன." (14)

பின்னர், ஒப்படைக்கப்பட்ட பாதுகைகளுக்குத் தலைகுனிந்து வணங்கி, துயரத்தால் மனம் தவித்து, அங்கிருந்த எல்லோரையும் பார்த்துப் பரதன் கூறினான்— (15)

மகாபுருஷராகிய ஸ்ரீராமனுடைய திருவடிகளே எனக் கருதத்தக்க, இந்தப் பாதுகைகளுக்கு (அரச சின்னமாகிய) வெண்கொற்றக் குடையைப் பிடியுங்கள். என்னுடைய சகோதரருடைய திருப்பாதுகைகளான இவை இரண்டினால்தான் நாட்டில் தருமம் நிலையாக நிற்கப் போகிறது. (16)

என்னிடம் கொண்டுள்ள நன்னம்பிக்கையால், என் தமையனாரால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதை, ஸ்ரீராமன் திரும்பிவரும் காலம் வரையில், இதனை நல்லமுறையில் பரிபாலனம் செய்வேன். ('இதனை' என்று ஒருமையில் கூறப்பட்டிருப்பதால், 'என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த நாட்டை நல்லமுறையில் பரிபாலனம் செய்வேன்' என்றும் பொருள் கொள்ளலாம்.) (17)

ஸ்ரீராமன் திரும்பி வந்தவுடனேயே, நானே இவைகளை அவருடைய திருவடிகளில் சேர்த்து, திருப்பாதுகைகளுடன் கூடியவைகளாக, அவருடைய திருவடிகளைக் காண்பேன். (18)

பின்னர், அவர் திரும்பி வந்து சந்தித்தவுடனேயே, தமையனாரிடம் அரசாட்சியை ஒப்புவித்துவிட்டு, (அரசுச்) சுமை நீங்கியவனாக (பொறுப்பு ஏதும் இல்லாதவனாக), அவருக்குப் பணிவிடை செய்வதில் ஈடுபடப் போகிறேன். (19)

பிரதிநிதியாக என்னிடம் கொடுக்கப்பட்டுள்ள, வணக்கத்திற்குரிய இரு பாதுகைகளையும், இந்த அயோத்தி அரசையும் இராமபிரானிடம் சமர்ப்பித்துப் பழி நீங்கியவன் ஆவேன். (20)

காகுத்தவம்ச திலகமான இராமனுக்குப் பட்டாபிஷேகம் ஆகி, மக்கள் மனம் களிப்புற்று விளங்கும்போது, ராஜ்யத்தை ஆட்சி செய்வதைக் காட்டிலும், நான்கு மடங்கு மகிழ்ச்சியும் புகழும் எனக்கு ஏற்படும்." (21)

பெரும்புகழ் கொண்ட பரதன், இவ்வாறு மனம் நொந்து, வருந்தி, புலம்பிவிட்டு, அமைச்சர்களுடன் நந்திக்கிராமத்தில் வசித்துக் கொண்டு ஆட்சி புரியத் தொடங்கினான். (22)

மகிமை பொருந்தியவனும் வீரனுமான பரதன் மரவுரி–ஜடை தரித்து, முனிவர்போல் வேஷம் தாங்கி, படைகளுடன் நந்திக்கிராமத்தில் வசித்தான். (23)

ராமாக$_3$மநமாகாங்க்ஷந் ப$_4$ரதோ ப்$_4$ராத்ருவத்ஸல: ।
ப்$_4$ராதுர்வசநகாரீ ச ப்ரதிக்ஞாபாரக$_3$ஸ்தத$_2$ா ॥
பாது$_3$கே த்வபி$_4$ஷிச்யாத$_2$ நந்தி$_3$க்$_3$ராமேऽவஸத்தத$_3$ா ॥ (24)

ஸவாலவ்யஜநம் ச$_2$த்ரம் த$_4$ாரயாமாஸ ஸ ஸ்வயம் ।
ப$_4$ரத: ஶாஸநம் ஸர்வம் பாது$_3$காப்$_4$யாம் ந்யவேத$_3$யத் ॥ (25)

ததஸ்து ப$_4$ரத: ஸ்ரீமாநபி$_4$ஷிச்யார்யபாது$_3$கே ।
தத$_3$தீ$_4$நஸ்தத$_3$ா ராஜ்யம் காரயாமாஸ ஸர்வத$_3$ா ॥ (26)

யத$_3$ா ஹி யத்கார்யமுபைதி கிஞ்சி–
து$_3$பாயநம் சோபஹ்ருதம் மஹார்ஹம் ।
ஸ பாது$_3$காப்$_4$யாம் ப்ரத$_2$மம் நிவேத்$_3$ய
சகார பஶ்சாத்$_3$ப$_4$ரதோ யத$_2$ாவத் ॥ (27)

இத்யார்ஷே ஸ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ பஞ்சத$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

ஷோட$_3$ஶாதி$_4$கஶததம: ஸர்க$_3$:

க$_2$வீப்ரகரணகத$_2$நம்

ப்ரதிப்ரயாதே ப$_4$ரதே வஸந் ராமஸ்தபோவநே ।
லக்ஷயாமாஸ ஸோத்$_3$வேக$_3$மதை$_2$ளத்ஸுக்யம் தபஸ்விநாம் ॥ (1)

யே தத்ர சித்ரகூடஸ்ய புரஸ்தாத் தாபஸாஶ்ரமே ।
ராமமாஶ்ரித்ய நிரதாஸ் தாநலக்ஷயது$_3$த்ஸுகாந் ॥ (2)

நயநைர்ப்$_4$ருகுடீபி$_4$ஶ்ச ராமம் நிர்தி$_3$ஶ்ய ஶங்கிதா: ।
அந்யோந்யமுபஜல்பந்த: ஶநைஶ் சக்ருர்மித$_2$: கத$_2$ா: ॥ (3)

தேஷாமௌத்ஸுக்யமாலக்ஷ்ய ராமஸ்த்வாத்மநி ஶங்கித: ।
க்ருதாஞ்ஜலிருவாசேத$_3$ம்ருஷிம் குலபதிம் தத: ॥ (4)

ந கச்சித்$_3$ப$_4$க$_3$வந் கிஞ்சித்பூர்வவ்ருத்தமித$_3$ம் மயி ।
த்$_3$ருஶ்யதே விக்ருதம் யேந விக்ரியந்தே தபஸ்விந: ॥ (5)

ப்ரமாத$_3$ாச்சரிதம் கச்சித் கச்சிந்நாவரஜஸ்ய மே ।
லக்ஷ்மணஸ்யர்ஷிபி$_4$ர்த்$_3$ருஷ்டம் நாநுரூபமிவாத்மந: ॥ (6)

கச்சிச்சு$_2$ஶ்ரூஷமாணா வ: ஶுஶ்ரூஷணபரா மயி ।
ப்ரமத$_3$ாப்$_4$யுசிதாம் வ்ருத்திம் ஸீதா யுக்தாம் ந வர்ததே ॥ (7)

சகோதரரிடம் பேரன்புடையவனும், சகோதரரின் சொற்படி நடப்பவனும், வாக்குறுதியைக் கடக்க விரும்பாதவனுமான பரதன், இராமபிரானுடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டு திருப்பாதுகைகளுக்கு திருவபிஷேகம் செய்து, அப்போது முதல் நந்திக்கிராமத்தில் வசிக்கத் தொடங்கினான். (24)

திருப்பாதுகைகளுக்குத் தானே குடையைப் பிடித்தான்; கவரி வீசினான். அரசு செயல்பாடுகள் முழுவதையும் பரதன் பாதுகைகளிடம் விண்ணப்பித்தான். (25)

தமையனாரின் பாதுகைகளுக்குப் பட்டம் சூட்டிய பின்னர், தொண்டுச் செல்வனாகிய பரதன், எப்போதும் அவற்றின் அதிகாரத்திற்குட்பட்டவராக இருந்து, (அமைச்சர் முதலியோரைக் கொண்டு) அரசு நிர்வாகத்தை நடப்பித்துக் கொண்டிருந்தான். (26)

அதுமுதற்கொண்டு, பரதன் எந்தச் சிறு செயலானாலும், விலையுயர்ந்த காணிக்கைப் பொருள் கொண்டு வரப்பட்டாலும் முதலில் அவைகளைப் பாதுகைகளுக்குத் தெரிவித்துவிட்டு, அதன் பின்னர் முறைப்படியான ஏற்பாடுகளைச் செய்தான். (27)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினைந்தாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினாறு

கரன் தரும் தொல்லைகளைக் கூறுதல்

பரதன் திரும்பிச் சென்றதும், தபோவனத்தில் வசித்துக் கொண்டிருந்த இராமன், அங்குள்ள தவசிகள் மனம் புழுங்கி, வேறு ஏதோ ஒன்றில் உள்ளம் கொண்டவர்களாக இருப்பதைப் பார்த்தார். (1)

சித்திரகூடத்தில் அந்தத் தபோதனர்களின் ஆசிரமப் பிரதேசத்தில் முன்பிருந்தே வசித்து வந்தவர்கள், இராமனுடைய பாதுகாப்பில் கவலையில்லாமல் இருந்தவர்கள், இப்போது கலலையோடு இருப்பதை அவர் கண்ணுற்றார். (2)

கண்களாலும், புருவங்களின் அசைவுகளாலும் இராமனை நோக்கி சமிக்ஞை காட்டி, மனத்திற்குள் சந்தேகப்பட்டுக் கொண்டு தங்களுக்குள் மெல்லப் பேசி, ஒருவருக்கொருவர் செய்திகளைத் தெரிவித்துக் கொண்டார்கள். (3)

அவர்களுடைய கவலைதோய்ந்த முகத்தைப் பார்த்து இராமன், 'தான் தவறாக நடந்து கொண்டுவிட்டோமோ?' என்று சந்தேகப்பட்டு, (முனிவர்களில் மூத்தவரான) குலபதி என்ற முனிவரிடம் சென்று, இரு கைகளையும் கூப்பிக் கொண்டுச் சொன்னார்— (4)

''பகவானே! நான் இங்கு வந்தபோது நடந்துகொண்ட விதத்திலிருந்து மாறுபட்டிருக்கிறேனா? (எல்லா தவசிகளிடமும் எப்போதும்போல் பணிவுடன்தானே நடந்து கொள்கிறேன்?) பின் ஏன் தவசிகள் என்னை ஒருவித மாற்றத்துடன் பார்க்கிறார்கள்? (அவர்கள் பார்வையில் அன்பு காணப்படவில்லையே?) (5)

என்னுடைய தம்பி லட்சுமணனின் நடத்தை, ஏதோ தவறுதலாக, அவன் உயர் குணத்திற்கு ஒவ்வாததாக முனிவர்களால் காணப்பட்டதா? (லட்சுமணன் அஜாக்கிரதையாக முனிவர்களுக்கு ஏதேனும் அபசாரம் செய்துவிட்டானா?) (6)

தங்களைப் போன்ற முனிவர்களுக்கு சேவை செய்து வரும் சீதை, எனக்குப் பணிவிடை செய்வதில் முழுவதும் ஈடுபட்டதால், ஒரு குடும்பப் பெண் முனிவர்களுக்குச் செய்ய வேண்டிய உபசாரங்களை முறைப்படி செய்யாமல் விட்டுவிட்டாளா?'' (7)

அத$_2$ர்ஷிஜரயா வ்ருத்$_3$த$_4$ஸ்தபஸா ச ஜராம் க$_3$த: ।
வேபமாந இவோவாச ராமம் பூ$_4$தத$_3$யாபரம் ॥ (8)

க்ருத: கல்யாணஸத்த்வாயா: கல்யாணாபி$_4$ரதேஸ்தத$_2$ா ।
சலநம் தாத வைதே$_3$ஹ்யாஸ்தபஸ்விஷு விஶேஷத: ॥ (9)

த்வந்நிமித்தமித$_3$ம் தாவத்தாபஸாந் ப்ரதி வர்ததே ।
ரக்ஷோப்$_4$யஸ்தேந ஸம்விக்$_3$நா: கத$_2$யந்தி மித$_2$: கத$_2$ா: ॥ (10)

ராவணவரஜ: கஶ்சித்க$_2$ரோ நாமேஹ ராக்ஷஸ: ।
உத்பாட்ய தாபஸாந் ஸர்வாஞ்ஜநஸ்த$_2$ாநநிகேதநாந் ॥ (11)

த்$_4$ருஷ்டஶ்ச ஜிதகாசீ ச ந்ருஶம்ஸ: புருஷாத$_3$க: ।
அவலிப்தஶ்ச பாபஶ்ச த்வாம் ச தாத ந ம்ருஷ்யதே ॥ (12)

த்வம் யத$_3$ாப்ரப்$_4$ருதி ஹ்யஸ்மிந்நாஶ்ரமே தாத வர்தஸே ।
தத$_3$ாப்ரப்$_4$ருதி ரக்ஷாம்ஸி விப்ரகுர்வந்தி தாபஸாந் ॥ (13)

த$_3$ர்ஶயந்தி ஹி பீ$_3$ப$_4$த்ஸை: க்ரூரைர் பீ$_4$ஷணகைரபி ।
நாநாரூபைர் விரூபைஶ்ச ரூபைர்விக்ருத த$_3$ர்ஶநை: ॥ (14)

அப்ரஶஸ்தைரஶுசிபி$_4$: ஸம்ப்ரயோஜ்ய ச தாபஸாந் ।
ப்ரதிக்$_4$நந்த்யபராந் க்ஷிப்ரம் மாயயா புரத: ஸ்தி$_2$தாந் ॥ (15)

தேஷு தேஷ்வாஶ்ரமஸ்த$_2$ாநேஷ்வபு$_3$த்$_3$த$_4$மவலீய ச ।
ரமந்தே தாபஸாந்ஸ்தத்ர நாஶயந்தோऽல்பசேதஸ: ॥ (16)

அபக்ஷிபந்தி ஸ்ருக்$_3$ப$_4$ாண்ட$_3$ாநக்$_3$நீந் ஸிஞ்சந்தி வாரிணா ।
கலஶாம்ஶ்ச ப்ரம்ருத்$_3$க$_3$ந்தி ஹவநே ஸமுபஸ்தி$_2$தே ॥ (17)

தைர்து$_3$ராத்மபி$_4$ராம்ருஷ்டாநாஶ்ரமாந் ப்ரஜிஹாஸவ: ।
க$_3$மநாயாந்யதே$_3$ஶஸ்ய சோத$_3$யந்த்ய்ருஷயோऽத்$_3$ய மாம் ॥ (18)

தத்புரா ராம ஶாரீராமுபஹிம்ஸாம் தபஸ்விஷு ।
த$_3$ர்ஶயந்தி ஹி து$_3$ஷ்டாஸ்தே த்யக்ஷ்யாம இமமாஶ்ரமம் ॥ (19)

ப$_3$ஹுமூலப$_2$லம் சித்ரமவிதூ$_3$ராதி$_3$தோ வநம் ।
புராணாஶ்ரமமேவாஹம் ஶ்ரயிஷ்யே ஸக$_3$ண: புந: ॥ (20)

க$_2$ரஸ்த்வய்யபி சாயுக்தம் புரா தாத ப்ரவர்ததே ।
ஸஹாஸ்மாபி$_4$ரிதோ க$_3$ச்ச$_2$ யதி$_3$ பு$_3$த்$_3$தி$_4$: ப்ரவர்ததே ॥ (21)

ஸகலத்ரஸ்ய ஸந்தே$_3$ஹோ நித்யம் யத்தஸ்ய ராக$_4$வ ।
ஸமர்த$_2$ஸ்யாபி ஹி ஸதோ வாஸோ து$_3$:க$_2$மிஹாத்$_3$ய தே ॥ (22)

வயதாலும் தவத்தாலும் மூப்படைந்திருந்த முனிவர் உடல் நடுங்கினாற்போல், அனைத்துப் பிராணிகளிடமும் கருணையுள்ள இராமனைப் பார்த்துக் கூறினார்— (8)

"குழந்தாய்! பிறவியிலேயே நல்ல குணம் உடையவளும், அவ்வாறே நன்மைகளைச் செய்வதில் மிகவும் அக்கறை கொண்டவளுமான வைதேகி தவறிழைப்பாளா? அதிலும் குறிப்பாக முனிவர்களை அலட்சியப்படுத்துவாளா? (9)

உன் காரணமாகத்தான் தபஸ்விகளுக்கு அரக்கர்களிடமிருந்து பயம் தோன்றியிருக்கிறது. அதனால், மனக்கவலை அடைந்த முனிவர்கள், தங்களுக்குள் ரகசியமாக ஏதேதோ பேசிக் கொள்கிறார்கள். (10)

இராவணனுடைய இளையவன்; கரன் என்ற பெயருடையவன்; ராக்ஷஸன்; கர்வமுள்ளவன்; வெற்றித்திமிர் கொண்டவன்; குரூரன்; மனிதர்களைப் புசிப்பவன்; கொழுப்படைந்தவன்; மகாபாவி. அவன் ஜனஸ்தானத்தில் ஆசிரமம் அமைத்துக் கொண்டு வாழும் தபஸ்விகளைத் தூக்கி எறிந்து கொண்டிருக்கிறான்; உன்னையும் விட்டுவைக்க மாட்டான். (11,12)

குழந்தாய்! நீ இந்த ஆசிரம வளாகத்தில் வசிக்கத் தொடங்கிய நாளிலிருந்து அரக்கர்கள் தவம் செய்பவர்களுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (13)

வெறுப்பு உண்டாக்குவதும், பார்ப்பதற்குப் பயங்கரமானதும் குரூரமானதும் விகாரமானதுமான பலவகையான கொடிய உருவங்களை எடுத்துக் கொண்டு (தவம் செய்யும் முனிவர் எதிரில்) தோன்றுகிறார்கள். (14)

விலக்கப்பட்ட அசுத்தமான பொருள்களால் தபஸ்விகளைத் தொட்டு, அவர்களுடைய தூய்மையைக் கெடுக்கிறார்கள்; மற்றும் சிலர் எதிரில் தோன்றி மாயையினால் அவர்களைக் கொன்றுவிடுகிறார்கள். (15)

அவர்கள் ஆசிரமங்களில் தந்திரமாகப் புகுந்து கண்ணில் படாமல் மறைந்து கொள்கிறார்கள். தவசிகள் சற்று கவனக்குறைவாக இருக்கும்போது அவர்களை அவ்விடத்திலேயே அழித்துவிட்டு ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். (16)

ஹோமம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, யாக உபகரணங்களை எடுத்து வீசுகிறார்கள்; தண்ணீரைக் கொட்டி அக்னியை அணைக்கிறார்கள்; புனித நீர் நிரம்பிய கலசங்களை உடைத்துத் தள்ளுகிறார்கள். (17)

அந்தத் தீயவர்களால் தீண்டப்பட்ட குடில்களை முற்றிலுமாகத் துறந்துவிட்டு, வேறு ஒரு பிரதேசத்திற்குச் செல்வதற்கு முனிவர்கள் என்னைத் தூண்டுகிறார்கள். (18)

இராமா! அந்தத் துஷ்டர்கள் தபஸ்விகளின் சரீரத்திற்கும் துன்பம் கொடுப்பார்கள். (அவர்கள் கர்மாக்களுக்கு இடைஞ்சல் செய்வது முன்பே கூறப்பட்டது.) அதனால், அந்த நிலை வருவதற்கு முன்பாகவே, இந்தத் தவபூமியை விட்டுவிட்டு சௌகரியமான வேறு ஓர் இடம் செல்லப் போகிறோம். (19)

இவ்விடத்திற்கு அருகிலேயே ஏராளமான கிழங்கு–பழங்களைக் கொண்ட வனம் இருக்கிறது. பழமையான அந்த ஆசிரமத்திற்கே இந்த முனிவர் கூட்டத்துடன் மீண்டும் சென்று வாசம் செய்யப் போகிறேன். (20)

கரன், உனக்கும் தொல்லை கொடுப்பான். அவ்விதம் நேரிடுவதற்குமுன், உனக்கு விருப்பமிருந்தால் நீயும் எங்களுடன் வரலாம். (21)

முயற்சியுடையவனாகவும், சாமர்த்தியம் உடையவனாகவும் நீ இருந்தாலும் மனைவியோடு இருக்கிறாய். நீ சாதுவாக இருப்பதால், இங்கே இப்போது உனக்குத் துன்பம் ஏற்படத்தான் செய்யும்; அபாயம் ஏற்படவே செய்யும்." (22)

இத்யுக்தவந்தம் ராமஸ்தம் ராஜபுத்ரஸ்தபஸ்விநம் ।
ந ஶஶாகோத்தரோ வாக்யை ரவரோத்₃து₄ம் ஸமுத்ஸஹே ॥ (23)

அபி₄நந்த்₃ய ஸமாப்ருச்ச்₂ய ஸமாத₄ாய ச ராக₄வம் ।
ஸ ஜக₃ாமாஶ்ரமம் த்யக்த்வா குலை: குலபதி: ஸஹ ॥ (24)

ராம: ஸம்ஸாத்₄ய த்வ்ருஷிக₃ணமநுக₃மநாத்₃–
தே₃ஶாத்தஸ்மாத் குலபதிமபி₄வாத்₃ய ருஷிம் ।
ஸம்யக்ப்ரீதைஸ் தைரநுமத உபதி₃ஷ்டார்த₂:
புண்யம் வாஸாய ஸ்வநிலயமபி₄ஸம்பேதே₃ ॥ (25)

ஆஶ்ரமாத் ருஷிவிரஹிதம் ப்ரபு₄:
க்ஷணமபி ந விஜஹ்ரெள ஸ ராக₄வ: ।
ராக₄வம் ஹி ஸததமநுக₃தாஸ்–
தாபஸாஶ்சார்ஷசரித த்₄ருதகு₃ணா: ॥ (26)

இத்யார்ஷே ஸ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
அயோத்₄யாகாண்டே₃ ஷோட₃ஶாதி₄கஶததம: ஸர்க₃: ॥

ஸப்ததத₃ஶாதி₄கஶததம: ஸர்க₃:

ஸீதாபாதிவ்ரத்யப்ரஶம்ஸா

ராக₄வஸ்த்வத₂ யாதேஷு தபஸ்விஷு விசிந்தயந் ।
ந தத்ராரோசயத்₃வாஸம் காரணைர்ப₃ஹுபி₄ஸ்ததா₃ ॥ (1)

இஹ மே ப₄ரதோ த்₃ருஷ்டோ மாதரஶ்ச ஸநாக₃ரா: ।
ஸா ச மே ஸ்ம்ருதிரந்வேதி தாந்நித்யமநுஶோசத: ॥ (2)

ஸ்கந்தா₄வாரநிவேஶேந தேந தஸ்ய மஹாத்மந: ।
ஹயஹஸ்திகரீஷைஶ்ச உபமர்த₃: க்ருதோ ப₄ருஶம் ॥ (3)

தஸ்மாத₃ந்யத்ர க₃ச்சா₂ம இதி ஸஞ்சிந்த்ய ராக₄வ: ।
ப்ராதிஷ்டா₂த ஸ வைதே₃ஹ்யா லக்ஷ்மணேந ச ஸங்க₃த: ॥ (4)

ஸோऽத்ரேராஶ்ரமமாஸாத்₃ய தம் வவந்தே₃ மஹாயஶா: ।
தம் சாபி ப₄க₃வாநத்ரி: புத்ரவத்ப்ரத்யபத்₃யத ॥ (5)

ஸ்வயமாதித்₂யமாதி₃ஶ்ய ஸர்வமஸ்ய ஸுஸத்க்ருதம் ।
ஸௌமித்ரிம் ச மஹாப₄ாக₃ாம் ஸீதாம் ச ஸமஸாந்த்வயத் ॥ (6)

பத்நீம் ச ஸமநுப்ராப்தாம் வ்ருத்₃த₄ாமாமந்த்ர்ய ஸத்க்ருதாம் ।
ஸாந்த்வயாமாஸ த₄ர்மக்ஞ: ஸர்வபூ₄தஹிதே ரத: ॥ (7)

அநஸூயாம் மஹாப₄ாக₃ாம் தாபஸீம் த₄ர்மசாரிணீம் ।
ப்ரதிக்₃ருஹ்ணீஷ்வ வைதே₃ஹீமப்₃ரவீத்₃ருஷிஸத்தம: ॥ (8)

இவ்வாறு கூறிவிட்டு, வேறு இடத்திற்குச் செல்வதிலேயே குறியாக இருந்த அவரை, அரசகுமாரரான இராமன் சமாதானப்படுத்தும் பதிலால் தடுத்து நிறுத்த முடியவில்லை. (23)

பிறகு, முனிவர் குலபதி இராமப்பிரபுவைப் போற்றிப் புகழ்ந்து, அவரிடம் விடைபெற்றுக் கொண்டு, அவரை சமாதானப்படுத்திவிட்டு, அந்த ஆசிரமப் பிரதேசத்தைத் துறந்து, (தன்னுடைய சகாக்களான) முனிவர் கூட்டத்தோடுகூடச் சென்றுவிட்டார். (24)

இராமன், அந்த முனிவர் கூட்டத்தைப் பின்தொடர்ந்து சென்று விடைகொடுத்தார்; முனிவர் குலபதியின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார்; மனம் மகிழ்ந்த அவர்களால் தெளிவாகக் கூறப்பட்ட உபதேசங்களை ஏற்று, அவர்களிடம் அனுமதி பெற்றுக்கொண்டு, புண்ணியமான தன் இருப்பிடத்திலேயே தொடர்ந்து வசிப்பதற்காகத் திரும்பி வந்து சேர்ந்தார். (25)

அந்த ஆசிரமத்திலிருந்து பல முனிவர்கள் வேறிடத்திற்குச் சென்றுவிட்டாலும், பிரபு ஸ்ரீராமன் அந்த இடத்தைவிட்டு ஒரு விநாடிகூடப் பிரிந்திருக்கவில்லை. இராமனுடைய உயர்குணங்களால் வசீகரிக்கப்பட்டு, அவரையே பின்பற்றி நடக்கும் சில முனிவர்கள், 'எப்படியும் இராமன் நம்மைக் காப்பாற்றுவான்' என்ற நம்பிக்கையுடன், அங்கேயே தங்கிவிட்டார்கள். (26)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினாறாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினேழு

பதிவிரதையின் தருமம்

முனிவர்கள் போனபின்னர், அது விஷயமாகப் பல தடவைகள் சிந்தனை செய்து, பல காரணங்களைக் கொண்டு, இனிமேல் தானும் அவ்விடத்தில் வசிப்பது சரியல்ல என்று இராமன் எண்ணினார். (1)

''நகரத்தார்களோடும், தாய்மார்களோடும் பரதன் இங்கே வந்து என்னைச் சந்தித்தான். அவர்களைப் பற்றிய நினைவு இடைவிடாமல் என்னைச் சோகத்தில் ஆழ்த்துகிறது. (2)

மகாத்மா பரதனுடைய பெரும்படை இங்கே தங்கியதால், யானை–குதிரை முதலியவற்றின் சாணத்தால் இந்தப் புண்ணிய பூமி அசுத்தமாகியிருக்கிறது. (3)

அதனால், நாம் வேறு ஓர் இடத்திற்குச் சென்றுவிடுவோம்'' என்று தீர்மானித்த இராமன், சீதை–லட்சுமணனோடு அங்கிருந்து புறப்பட்டார். (4)

பெரும்புகழ் கொண்ட அவர், அத்ரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்து அவரை வணங்கி நின்றார். பகவான் அத்ரியும் அவரைத் தன் புதல்வன் போலவே கருதி ஆசீர்வதித்தார். (5)

முனிவர், மிக நல்ல முறையில், தானே இராமனுக்கு உபசாரங்கள் செய்து, இலக்குவனையும் சீதையையும் வரவேற்று உபசரித்தார். (6)

அனைத்துப் பிராணிகளுக்கும் நன்மை செய்வதில் நோக்கங்கொண்டவரும், தருமம் அறிந்தவருமான அவர், அப்போது அங்கு வந்து நின்ற மரியாதைக்குரியவளும் மூதியவளுமான தன் மனைவியைப் பார்த்து அன்பொழுகக் கூறினார். (7)

தன் இல்லக்கிழத்தியும், தவம் செய்பவளும், மகாபாக்கியசாலியுமான அநஸூயையைப் பார்த்து, 'வைதேகியை வரவேற்று நன்றாக உபசாரம் செய்' என்று சொன்னார். (8)

ராமாய சாசசக்ஷே தாம் தாபஸீம் த4ர்மசாரிணீம் ।
த3ஶ வர்ஷாண்யநாவ்ருஷ்ட்யா த3க்3தே4 லோகே நிரந்தரம் ॥ (9)

யயா மூலப2லை(ஃ)ஸ்ருஷ்டே ஜாஹ்நவீ ச ப்ரவர்திதா ।
உக்3ரேண தபஸா யுக்தா நியமைஶ்சாப்யலங்க்ருதா ॥ (10)

த3ஶ வர்ஷஸஹஸ்ராணி யயா தப்தம் மஹத்தப: ।
அநஸூயா வ்ரதை: ஸ்நாத்வா ப்ரத்யூஹாஶ்ச நிவர்திதா: ॥ (11)

தே3வகார்யநிமித்தம் ச யயா ஸந்த்வரமாணயா ।
த3ஶராத்ரம் க்ருதா ராத்ரி: ஸேயம் மாதேவ தே3நக4 ॥ (12)

தாமிமாம் ஸர்வபூ4தாநாம் நமஸ்கார்யாம் யஶஸ்விநீம் ।
அபி4க3ச்ச2து வைதே3ஹீ வ்ருத்3த4ாமக்ரோத4நாம் ஸதா3 ॥
அநஸூயேதி யா லோகே கர்மபி4: க்2யாதிமாக3தா ॥ (13)

ஏவம் ப்3ருவாணம் தம்ருஷிம் ததே2த்யுக்த்வா ஸ ராக4வ: ।
ஸீதாமுவாச த4ர்மக்ஞாமித3ம் வசநமுத்தமம் ॥ (14)

ராஜபுத்ரி ஶ்ருதம் த்வேதந்முநேரஸ்ய ஸமீரிதம் ।
ஶ்ரேயோऽர்த2மாத்மந: ஶீக்4ரமபி4க3ச்ச2 தபஸ்விநீம் ॥ (15)

ஸீதா த்வேதத்3வச: ஶ்ருத்வா ராக4வஸ்ய ஹிதைஷிண: ।
தாமத்ரிபத்நீம் த4ர்மக்ஞாமபி4சக்ராம மைதி2லீ ॥ (16)

ஶிதி2லாம் வலிதாம் வ்ருத்3த4ாம் ஜராபாண்ட3ரமூர்த4ஜாம் ।
ஸததம் வேபமாநாங்கீ3ம் ப்ரவாதே கத3லீம் யதா2 ॥ (17)

தாம் து ஸீதா மஹாப4ாக3ாமநஸூயாம் பதிவ்ரதாம் ।
அப்4யவாத3யத3்வயக்3ரா ஸ்வம் நாம ஸமுதா3ஹரத் ॥ (18)

அபி4வாத்3ய ச வைதே3ஹீ தாபஸீம் தாமநிந்தி3தாம் ।
ப3த்3த4ாஞ்ஜலிபுடா ஹ்ருஷ்டா பர்யப்ருச்ச2த3்நாமயம் ॥ (19)

தத: ஸீதாம் மஹாப4ாக3ாம் த்3ருஷ்ட்வா தாம் த4ர்மசாரிணீம் ।
ஸாந்த்வயந்த்யப்3ரவீத்3த்4ருஷ்டா தி3ஷ்ட்யா த4ர்மமவேக்ஷஸே ॥ (20)

த்யக்த்வா ஞாதிஜநம் ஸீதே மாநம்ருத்3தி4ம் ச பா4மிநி ।
அவருத்3த4ம் வநே ராமம் தி3ஷ்ட்யா த்வமநுக3ச்ச2ஸி ॥ (21)

நக3ரஸ்தே2ா வநஸ்தே2ா வா ஶுபே4ா வா யதி3 வாஶுப4: ।
யாஸாம் ஸ்த்ரீணாம் ப்ரியோ ப4ர்தா தாஸாம் லோகா மஹோத3யா: ॥ (22)

து3:ஶீல: காமவ்ருத்தோ வா த4நைர்வா பரிவர்ஜித: ।
ஸ்த்ரீணாமார்யஸ்வப4ாவாநாம் பரமம் தை3வதம் பதி: ॥ (23)

இராமனிடமும், தன் மனைவியும் தபஸ்வியுமான அவளைப் பற்றிய விவரங்களைக் கூறினார்— "ஒரு காலத்தில் பத்தாண்டுகள் தொடர்ந்தாற்போல் மழை இல்லாததால் மக்கள் உணவிற்காகத் தவித்துப் போனார்கள். அப்போது கிழங்குகளும் கனிகளும் இவளால் உண்டாக்கிக் கொடுக்கப்பட்டன. கங்கையின் நீரோட்டம் தடையின்றி நடைபெறச் செய்தாள். இவள் கடுமையான தவங்களைச் செய்தவள். கட்டுப்பாடான வாழ்க்கை முறையால் சிறப்புப் பெற்றவள். இவள் பத்தாயிரம் ஆண்டுகள் தவம் இயற்றியிருக்கிறாள். அநஸூயை எல்லாவிதமான இடையூறுகளையும் விலக்கி, விரதங்களை முழுமையாகச் செய்து முடித்தவள். (9–11)

தேவர்களுடைய காரியத்தைச் செய்து கொடுப்பதில் சிரத்தை கொண்ட இவளால், பத்து இரவுகள் ஓர் இரவாகச் செய்யப்பட்டன. மாசற்றவனே! அவ்வளவு பெருமைக்குரிய இவள், உனக்கு அன்னை போன்றவள். (12)

எல்லாப் பிராணிகளாலும் வணங்கத்தக்கவள்; கீர்த்தி பெற்றவள்; முதியவள்; கோபம் என்பதையே ஒருபோதும் அறியாதவள். அன்பு நிறைந்த தன் நற்கர்மங்களால் அநஸூயா (பொறாமை இல்லாதவள்) என்று உலகத்தாரால் புகழப் பெற்ற இவளிடம் சீதை சென்று மனதாரப் பேசிக் கொண்டிருக்கட்டும்." (13)

இவ்வாறு கூறிய முனிவரிடம், 'அப்படியே ஆகுக' என்று சொல்லிவிட்டு, இராமன் தருமமறிந்த சீதாப்பிராட்டியைப் பார்த்து பின்வரும் நன்மொழிகளைப் புகன்றார்— (14)

"மன்னர் புதல்வியே! முனிவர் இப்போது கூறியவைகளை நீயும் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா? உனது மேன்மையின் பொருட்டு தபஸ்வினியை உடனே சென்று சந்திப்பாயாக." (15)

தன் நலனை விரும்பும் இராகவனுடைய இந்த வார்த்தைகளைக் கேட்ட சீதை, அத்ரி முனிவரின் பத்தினியும் அறவல்லுநருமான அநஸூயா தேவியின் அருகே சென்றாள். (16)

உடல் தளர்ந்து, சுருக்கங்கள் தோன்றி, மூப்படைந்து, முதுமையால் நரைத்துப் போன கூந்தலையுடையவரும், பெருங்காற்று வீசும்போது அசைந்தாடும் வாழைமரத்தைப் போல் எப்போதும் நடுங்கும் சரீரத்தை உடையவரும், பெரும்பேறு பெற்றவரும், கற்புக்கரசியுமான அந்த அநஸூயையை மிகவும் வணக்கத்துடன் நமஸ்கரித்து, தன் பெயரையும் சொன்னாள், சீதை. (17,18)

மனமாசுகளற்றவரும் தவசியுமான அவரை மீண்டும் நமஸ்காரம் செய்து, மனமகிழ்ச்சியுடன் இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, அவருடைய உடல்நலம் பற்றி விசாரித்தாள். (19)

தருமத்தை அனுஷ்டிப்பவளும் பெரும்பேறு பெற்றவளுமான சீதையைப் பார்த்து, பாராட்டிக் கூறும் முறையில் பின்வருமாறு கூறினார்— "நீ தருமத்திலேயே பற்றுடையவளாக இருக்கிறாய் என்பது பெருமைக்குரிய செயல். (20)

பேரழகியான சீதையே! உற்றார்–உறவினர்களையும் கௌரவத்தையும் சுகபோகங்களையும் புறக்கணித்துவிட்டு, காட்டில் இருக்கும்படி கட்டளையிடப்பட்ட இராமனைப் பின்பற்றி வந்திருக்கிறாய் என்பது மிகவும் கொண்டாடத்தக்க தருமம். (21)

தன்னுடைய கணவர், நாட்டில் இருந்தாலும் காட்டில் இருந்தாலும் நல்லவரோ–கெட்டவரோ, அவரிடம் அன்பு பாராட்டும் மனைவிகளுக்கு (பிற்காலத்தில்) சௌக்கியமான உலகங்கள் கிடைக்கும். (22)

கணவன், தீய நடத்தையுடையவனாக இருந்தாலும், காமாதுரனாக இருந்தாலும், செல்வம் இல்லாதவனாக இருந்தாலும் மேன்மையான குணங்கள் கொண்ட பெண்களுக்கு கணவனே மிக உயர்ந்த தெய்வம். (23)

நாதோ விஶிஷ்டம் பஶ்யாமி ப₃ாந்த₄வம் விம்ருஶந்த்யஹம் ।
ஸர்வத்ர யோக்₃யம் வைதே₃ஹி தப: க்ருதமிவாவ்யயம் ॥ (24)

ந த்வேவமவக₃ச்ச₂ந்தி கு₃ணதோ₃ஷமஸத்ஸ்த்ரிய: ।
காமவக்தவ்ய ஹ்ருத₃யா ப₄ர்த்ருநாதா₂ஸ் சரந்தி யா: ॥ (25)

ப்ராப்நுவந்த்யயஶஶ்சைவ த₄ர்மப₄ரம்ஶம் ச மைதி₂லி ।
அகார்யவஶமாபந்நா: ஸ்த்ரியோ யா: கு₂லு தத்₃விதா₄: ॥ (26)

த்வத்₃விதா₄ஸ்து கு₃ணைர்யுக்தா த்₃ருஷ்டலோகபராவரா: ।
ஸ்த்ரிய: ஸ்வர்கே₃ சரிஷ்யந்தி யதா₂ தா₄ர்மக்ருதஸ்ததா₂ ॥ (27)

ததே₃வமேநம் த்வமநுவ்ரதா ஸதீ
பதிவ்ரதாநாம் ஸமயாநுவர்திநீ ।
ப₄வஸ்வ ப₄ர்து: ஸஹதா₄ர்மசாரிணீ
யஶஶ்ச தா₄ர்மம் ச தத: ஸமாப்ஸ்யஸி ॥ (28)

இத்யார்ஷே ஶ்ரீமத்₃ராமாயணே வால்மீகீயே ஆதி₃காவ்யே
அயோத்₄யாகாண்டே₃ ஸப்தத₃ஶாதி₄கஶததம: ஸர்க₃: ॥

அஷ்டாத₃ஶாதி₄கஶததம: ஸர்க₃:

தி₃வ்யாலங்காரக்₃ரஹணம்

ஸா த்வேவமுக்தா வைதே₃ஹீ த்வநஸூயாநஸூயயா ।
ப்ரதிபூஜ்ய வசோ மந்த₃ம் ப்ரவக்துமுபசக்ரமே ॥ (1)

நைதத₃ாஶ்சர்யமார்யாயா யந்மாம் த்வமநுப₄ாஷஸே ।
விதி₄தம் து மயாப்யேதத்₃யதா₂ நார்யா: பதிர்கு₃ரு: ॥ (2)

யத்₃யப்யேஷ ப₄வேத்₃ப₄ர்தா மமார்யே வ்ருத்தவர்ஜித: ।
அத்₃வைத₄முபசர்தவ்யஸ் ததா₂ப்யேஷ மயா ப₄வேத் ॥ (3)

கிம் புநர்யோ கு₃ணஶ்லாக்₄ய: ஸாநுக்ரோஶோ ஜிதேந்த்₃ரிய: ।
ஸ்தி₂ராநுராகே₃ா தா₄ர்மாத்மா மாத்ருவத்பித்ருவத்ப்ரிய: ॥ (4)

யாம் வ்ருத்திம் வர்ததே ராம: கௌஸல்யாயாம் மஹாப₃ல: ।
தாமேவ ந்ருபநாரீணாமந்யாஸாமபி வர்ததே ॥ (5)

ஸக்ருத்₃த்₃ருஷ்டாஸ்வபி ஸ்த்ரீஷு ந்ருபேண ந்ருபவத்ஸல: ।
மாத்ருவத்₃வர்ததே வீரோ மாநமுத்ஸ்ருஜ்ய தா₄ர்மவித் ॥ (6)

வைதேகி! நான் தீவிரமாகச் சிந்தித்துப் பார்த்துவிட்டேன் – கணவரைவிட நெருக்கமான ஓர் உறவை நான் காண்கிலேன். செய்த தவத்தின் அழிவற்ற (பொய்க்காத) பலன்போல, எவ்விடத்திலும் (இவ்வுலகிலும் மேலுலகிலும்), அவரே நமக்கு உறுதுணையாக இருப்பவர். (24)

கணவனை அடக்கி ஆள்பவர்களும், காமத்தில் ஈடுபட்ட மனமுடையவர்களான தீயவொழுக்கம் உடைய பெண்கள், நல்லது–கெட்டதுகளை அறியமாட்டார்கள். (25)

மைதிலி! இப்படிப்பட்ட பெண்கள் செய்யத்தகாத காரியங்களில் சிக்கிக் கொள்கிறார்கள். நேரான வழியிலிருந்து வழுவிச் சென்று இகழ்ச்சியை அடைகிறார்கள். (26)

ஆனால், உன்னைப் போன்று உத்தம குணங்களோடு கூடிய பெண்மணிகள், உலகத்தில் உயர்வு–தாழ்வுகளை உணர்ந்து கொண்டு (கணவன் அனுஷ்டிக்கும் தரும காரியங்களில் அனுகூலமாக இருந்து), புண்ணியத்தை ஏராளமாகச் சம்பாதித்தவர்கள் சென்றடையும் சுவர்க்கத்தையே சென்றடைவார்கள். (27)

ஆகவே, இதைப் போலவே கணவருக்குப் பணிவிடை செய்வதில் ஆர்வத்துடன் இரு; கற்புடைய மாதர்களின் தருமத்தை கடைப்பிடி; தன் கணவரின் தருமானுஷ்டானங்களில் உறுதுணையாக இரு. அதனால், (இவ்வுலகில்) நற்புகழையும், (மேலுலகில்) தருமங்களின் பயனான சுக–சௌக்கியங்களையும் அடைவாய் என்பது திண்ணம்." (28)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினேழாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பதினெட்டு

அணிகலன்களைப் பெறுதல்

அநஸூயையால் மேற்கண்டவாறு உபதேசிக்கப்பட்ட வைதேகி, அவர் கூறியதை உன்னிப்பாகக் கேட்டு, அவற்றைக் கொண்டாடி, மெதுவாகப் பதில் சொல்லத் தொடங்கினாள்— (1)

"மிகச்சிறந்த குணங்களைக் கொண்ட தாங்கள் எனக்குச் செய்த உபதேசங்கள், தங்கள் உயர்நிலைக்கு ஏற்றதேயானதால், இதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை. 'பெண்டிர்க்குக் கணவனே கண்கண்ட தெய்வம்' என்பது எனக்கும் தெரியும். (2)

தாயே! எனது கணவரான இவர், நடத்தை தவறியவராக இருப்பாரேயானாலும்கூட, மனத்தில் எவ்வித சஞ்சலமுமின்றி, நான் அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருப்பேன். (3)

ஆனால், இவரோ எல்லோராலும் புகழத்தக்க குணங்கள் உடையவர்; கருணைமிக்கவர்; புலன்களை வென்றவர்; நிலையான அன்பு வைத்திருப்பவர்; தருமாத்மா; ஒரு தாயைப் போலும், தந்தையைப் போலும் மனப்பூர்வமான நேசமுள்ளவர். இப்படிப்பட்ட உத்தமபுருஷருக்கு நான் பணிவிடை செய்வதிலும், அவரை அனுசரித்துப் போவதிலும் ஆச்சரியம் என்ன? (4)

பேராற்றலுடைய இராமன், (தன்னைப் பெற்ற தாயாரான) கௌசல்யா தேவியாரிடம் எவ்வளவு பாசம் வைத்திருக்கிறாரோ, அவ்வளவு பாசம் அரசரின் மற்ற பத்தினிகளிடமும் வைத்திருக்கிறார். (5)

மன்னர் (தசரதர்), எந்தப் பெண்ணையாவது ஒரு தடவை பிரேமையுடன் பார்த்திருந்தாலும், மன்னரிடம் மரியாதை வைத்துள்ள, தருமத்தை அறிந்துள்ள வீரராமன், (தன் அன்னைக்குப் போட்டியாக வந்துவிட்டாளே? என்ற) பொறாமை இல்லாமல், தன் தாயாரிடம் நடந்து கொள்வதைப் போலவே, அந்தப் பெண்ணிடமும் நடந்து கொள்கிறார். (6)

ஆக3ச்ச2ந்த்யாஶ்ச விஜ்ஞம் வநமேவம் ப4யாவஹம் ।
ஸமாஹிதம் மே ஶ்வஶ்ர்வா ச ஹ்ருத3யே தத்3த்4ருதம் மஹத் ॥ (7)

பாணிக்3ரஹணகாலே ச யத்புரா த்வக்3நிஸந்நிதெ4ள ।
அநுஶிஷ்டா ஜநந்யாஸ்மி வாக்யம் தத3பி மே த்4ருதம் ॥ (8)

நவீக்ருதம் ச தத்ஸர்வம் வாக்யைஸ்தே த4ர்மசாரிணி ।
பதிஶுஶ்ரூஷணாந்நார்யாஸ் தபோ நாந்யத்3விதீ4யதே ॥ (9)

ஸாவித்ரீ பதிஶுஶ்ரூஷாம் க்ருத்வா ஸ்வர்கே3 மஹீயதே ।
தத2ாவ்ருத்திஶ்ச யாதா த்வம் பதிஶுஶ்ரூஷயா தி3வம் ॥ (10)

வரிஷ்ட2ா ஸர்வநாரீணாமேஷா ச தி3வி தே3வதா ।
ரோஹிணீ ந விநா சந்த்3ரம் முஹூர்தமபி த்3ருஶ்யதே ॥ (11)

ஏவம்விதா4ஶ்ச ப்ரவரா: ஸ்த்ரியோ ப4ர்த்ரு த்3ருட4வ்ரதா: ।
தே3வலோகே மஹீயந்தே புண்யேந ஸ்வேந கர்மணா ॥ (12)

ததோ:நஸூயா ஸம்ஹ்ருஷ்டா ஶ்ருத்வோக்தம் ஸீதயா வச: ।
ஶிரஸ்யாக்4ராய சோவாச மைதி2லீம் ஹர்ஷயந்த்யுத ॥ (13)

நியமைர்விவிதை4ராப்தம் தபோ ஹி மஹத3ஸ்தி மே ।
தத்ஸம்ஶ்ரித்ய ப3லம் ஸீதே ச2ந்த3யே த்வாம் ஶுசிஸ்மிதே ॥ (14)

உபபந்நம் மநோக்ஞும் ச வசநம் தவ மைதி2லி ।
ப்ரீதா சாஸ்ம்யுசிதம் கிம் தே கரவாணி ப்3ரவீஹி மே ॥ (15)

தஸ்யாஸ்தத்3வசநம் ஶ்ருத்வா விஸ்மிதா மந்த3விஸ்மயா ।
க்ருதமித்யப்3ரவீத்ஸீதா தபோப3லஸமந்விதாம் ॥ (16)

ஸா த்வேவமுக்தா த4ர்மக்ஞா தயா ப்ரீததராப4வத் ।
ஸப2லம் ச ப்ரஹர்ஷம் தே ஹந்த ஸீதே கரோம்யஹம் ॥ (17)

இத3ம் தி3வ்யம் வரம் மால்யம் வஸ்த்ரமாப4ரணாநி ச ।
அங்க3ராக3ம் ச வைதே3ஹி மஹார்ஹம் சாநுலேபநம் ॥ (18)

மயா த3த்தமித3ம் ஸீதே தவ கா3த்ராணி ஶோப4யேத் ।
அநுரூபமஸங்க்லிஷ்டம் நித்யமேவ ப4விஷ்யதி ॥ (19)

அங்க3ராகே3ண தி3வ்யேந லிப்தாங்கீ3 ஜநகாத்மஜே ।
ஶோப4யிஷ்யஸி ப4ர்தாரம் யதா2 ஶ்ரீர்விஷ்ணுமவ்யயம் ॥ (20)

ஸா வஸ்த்ரமங்க3ராக3ம் ச பூ4ஷணாநி ஸ்ரஜஸ்ததா2 ।
மை2திலீ ப்ரதிஜக்3ராஹ ப்ரீதித3ாநமநுத்தமம் ॥ (21)

ப்ரதிக்3ருஹ்ய ச தத்ஸீதா ப்ரீதித3ாநம் யஶஸ்விநீ ।
ஶ்லிஷ்டாஞ்ஜலிபுடா தத்ர ஸமுபாஸ்த தபோத4நாம் ॥ (22)

மிகவும் அச்சத்தை விளைவிக்கக் கூடியதும், மனித சஞ்சாரமில்லாததுமான காட்டிற்கு நான் புறப்பட்டபோது, என் மாமியார் கூறிய மேலான மொழிகளை (அறிவுரைகளை), என் இதயத்தில் வைத்துக் கொண்டிருக்கிறேன். (7)

என்னை விவாகம் செய்து கொடுத்த காலத்தில், அக்னியின் முன்பாக, என் தாயார் செய்த நல்லுரைகளும் என் மனத்தில் நிற்கின்றன. (8)

தருமத்தை அனுஷ்டிப்பவரே! 'கணவருக்குப் பணிவிடை செய்வதைத் தவிர, வேறு எந்தத் தவமும் பெண்களுக்கு விதிக்கப்படவில்லை' என்பது முதலான பெண் தருமங்கள் அனைத்தும் எனக்கு, தங்களால் நினைவூட்டப்பட்டன. (9)

சாவித்திரி, கணவர் சத்தியவானுக்கு சேவை செய்ததாலேயே சுவர்க்கலோகத்தில் மதிப்புடன் விளங்குகிறாள். அதேபோன்று அனுஷ்டானமுடைய தாங்கள், கணவருக்குப் பணிவிடை செய்வதன் காரணமாகவே சுவர்க்கத்தை அடையப் போகிறீர்கள். (10)

எல்லாப் பெண்டிரைக் காட்டிலும் சிறந்தவளான ஆகாயத்தில் விளங்கும் ரோகிணிதேவி, சந்திரனைவிட்டு ஒரு முகூர்த்தகாலம்கூடப் பிரிந்ததில்லை. (11)

இவ்விதம் கணவருக்குப் பணிவிடை செய்வதில் உறுதியாக இருக்கும் உத்தமப்பெண்டிர், தங்கள் புண்ணிய கர்மத்தின் பயனாக தேவலோகத்தில் பெருமையோடு இருந்து கொண்டிருக்கிறார்கள்." (12)

சீதையின் சொற்களைக் கேட்டு மனமகிழ்ந்த அநஸூயை, அவளை உச்சிமுகர்ந்து, மைதிலியை மேலும் சந்தோஷப்படுத்தும் விதமாகக் கூறினார்— (13)

"சீதே! பலவகையான நியமங்களாலும் கடுமையான தவத்தாலும் என்னிடம் எத்தனையோ சக்திகள் பெறப்பட்டுள்ளன. அழகாகச் சிரிப்பவளே! அந்தத் தெய்விக ஆற்றலைப் பெற்றிருப்பதால், 'உனக்கு வேண்டியதைக் கேள்' என்கிறேன். (14)

மைதிலி! உன் பேச்சு உயர்தரமாகவும் தர்க்கத்திற்கு ஒத்ததாகவும் இருப்பதால், நான் மிகவும் பிரீதி அடைந்துள்ளேன். உனக்குப் பிரியமானது எதுவோ, அதைக் கேள், நான் செய்வேன்." (15)

அவருடைய அந்தப் பேச்சைக் கேட்டு, ஆச்சரியமடைந்த சீதை மெல்லப் புன்னகை செய்து, தவமகிமையுடைய அநஸூயையைப் பார்த்து, 'தங்கள் அன்பான பேச்சினாலேயே என் விருப்பங்கள் நிறைவேறிவிட்டன' என்று சொன்னாள். (16)

சீதை இவ்வாறு கூறியதும், தருமம் அறிந்தவரான அநஸூயைக்கு அவள் மேல் இன்னும் அதிக மதிப்பு உண்டாயிற்று. "சீதே! பேராசைப்படாத உன்னைக் கண்டு என் மகிழ்ச்சி மேலும் அதிகமாகிறது. அந்த ஆனந்தத்தை நான் நிச்சயம் பலனுள்ளதாகச் செய்வேன். (17)

வைதேகி! திவ்வியமான இந்த மாலை, வஸ்திரம், அணிகலன்கள், வாசனைத் திரவியம், விலைமதிக்க முடியாத உடற்பூச்சு முதலியவைகளை உனக்குக் கொடுக்கிறேன். இவை, உன் உடல் எழிலை அதிகப்படுத்திக் காட்டும். இவைகள் உனக்கு ஏற்றவை; எப்போதும் கசங்காமலும் மாசு அடையாமலும் இருக்கும். (18,19)

ஜனகன் புதல்வியே! அழிவில்லாத மகாவிஷ்ணுவை அவர் மார்பில் விளங்கும் ஸ்ரீதேவி விளக்கமுறச் செய்வதைப் போல, திவ்யமான இந்த வாசனைத் திரவியங்களை நீ உடலில் பூசிக் கொண்டு, உன் கணவரை அழகுறச் செய்வாய்." (20)

எல்லையில்லாத அன்பினால் கொடுக்கப்பட்ட ஆடை, நறுமணப்பூச்சு, அணிகலன்கள், மாலைகள் ஆகியவைகளை மைதிலி பெற்றுக் கொண்டாள். (21)

பேரன்பினால் கொடுக்கப்பட்ட அவைகளைப் பெற்றுக் கொண்ட புகழ்மிக்க சீதை, இரு கைகளையும் கூப்பிக்கொண்டு, தவச்செல்வியான அநஸூயையின் அருகில் அமர்ந்து கொண்டாள். (22)

ததா$_2$ ஸீதாமுபாஸீநாமநஸூயா த்$_3$ருட$_4$வ்ரதா ।
வசநம் ப்ரஷ்டுமாரேபே$_4$ கதா$_2$ம் காஞ்சித$_3$நுப்ரியாம் ॥ (23)

ஸ்வயம்வரே கில ப்ராப்தா த்வமநேந யஶஸ்விநா ।
ராக$_4$வேணேதி மே ஸீதே கதா$_2$ ஶ்ருதிமுபாக$_3$தா ॥ (24)

தாம் கதா$_2$ம் ஶ்ரோதுமிச்ச$_2$மி விஸ்தரேண ச மைதி$_2$லி ।
யதா$_2$நுபூ$_4$தம் கார்த்ஸ்ந்யேந தந்மே த்வம் வக்துமர்ஹஸி ॥ (25)

ஏவமுக்த்வா து ஸா ஸீதா தாம் ததோ த$_4$ர்மசாரிணீம் ।
ஶ்ரூயதாமிதி சோக்த்வா வை கதா$_2$யாமாஸ தாம் கதா$_2$ம் ॥ (26)

மிதி$_2$லாதி$_4$பதிர்வீரோ ஜநகோ நாம த$_4$ர்மவித் ।
க்ஷேத்ரத$_4$ர்மே ஹ்யபி$_4$ரதோ ந்யாயத: ஶாஸ்தி மேதி$_3$நீம் ॥ (27)

தஸ்ய லாங்க$_3$லஹஸ்தஸ்ய க்ருஷத: க்ஷேத்ரமண்ட$_3$லம் ।
அஹம் கிலோத்தி$_2$தா பி$_4$த்த்வா ஜக$_3$தீம் நரபதே: ஸுதா ॥ (28)

ஸ மாம் த்$_3$ருஷ்ட்வா நரபதிர் முஷ்டிவிக்ஷேபதத்பர: ।
பாம்ஸுகுண்டி$_2$தஸர்வாங்கீ$_3$ம் ஜநகோ விஸ்மிதோऽப$_4$வத் ॥ (29)

அநபத்யேந ச ஸ்நேஹாத$_3$ங்கமாரோப்ய ச ஸ்வயம் ।
மமேயம் தநயேத்யுக்த்வா ஸ்நேஹோ மயி நிபாதித: ॥ (30)

அந்தரிக்ஷே ச வாகு$_3$க்தா ப்ரதிமாமாநுஷீ கில ।
ஏவமேதத்நரபதே த$_4$ர்மேண தநயா தவ ॥ (31)

தத: ப்ரஹ்ருஷ்டோ த$_4$ர்மாத்மா பிதா மே மிதி$_2$லாதி$_4$ப: ।
அவாப்தோ விபுலாம்ருத்$_3$தி$_4$ம் மாமவாப்ய நராதி$_4$ப: ॥ (32)

த$_3$த்தா சாஸ்மீஷ்டவத்$_3$தே$_3$வ்யை ஜ்யேஷ்ட$_2$ாயை புண்யகர்மணா ।
தயா ஸம்ப$_4$ாவிதா சாஸ்மி ஸ்நிக்$_3$த$_4$யா மாத்ருஸௌஹ்ருத$_3$ாத் ॥ (33)

பதிஸம்யோக$_3$ஸுலப$_4$ம் வயோ த்$_3$ருஷ்ட்வா து மே பிதா ।
சிந்தாமப்$_4$யக$_3$மத்$_3$தீ$_3$நோ வித்தநாஶாதி$_3$வாத$_4$ந: ॥ (34)

ஸத்$_3$ருஶாச்சாபக்ருஷ்டாச்ச லோகே கந்யாபிதா ஜநாத் ।
ப்ரத$_4$ர்ஷணாமவாப்நோதி ஶக்ரேணாபி ஸமோ பு$_4$வி ॥ (35)

தாம் த$_4$ர்ஷணாமதூ$_3$ரஸ்த$_2$ாம் த்$_3$ருஷ்ட்வா சாத்மநி பார்தி$_2$வ: ।
சிந்தார்ணவக$_3$த: பாரம் நாஸஸாத$_3$ாப்லவோ யதா$_2$ ॥ (36)

அயோநிஜாம் ஹி மாம் ஞாத்வா நாத்$_4$யக$_3$ச்ச$_2$த்$_3$விசிந்தயந் ।
ஸத்$_3$ருஶம் சாநுரூபம் ச மஹீபால: பதிம் மம ॥ (37)

பிறகு, சீதை வந்து அருகில் உட்கார்ந்து கொண்டிருப்பதைக் கண்ட விரதங்களை உறுதியுடன் கடைப்பிடிக்கும் அநஸூயை சில சல்லாபமான விஷயங்களைக் கேட்க விரும்பியவராக, தானே பேச ஆரம்பித்தார்— (23)

"சீதே! புகழ்பெற்ற இந்த இராமனால், சுயம்வரத்தில் நீ அடையப்பட்டாய் என்று, ஒரு கதை என் செவிகளுக்கு எட்டியது. (24)

மைதிலி! நான் அந்த நிகழ்ச்சியை விஸ்தாரமாகக் கேட்க விரும்புகிறேன். எனவே, எது எப்படி நடந்ததோ, அதை அப்படியே முழுமையாக எனக்குக் கூறுவாய்." (25)

இவ்வாறு கூறப்பட்ட சீதை, தருமானுஷ்டானமுள்ள அவரைப் பார்த்து, 'கேளுங்கள்' என்று சொல்லிவிட்டு, அந்தக் கதையைச் சொல்ல ஆரம்பித்தாள்— (26)

"ஜனகர் என்று பெயர் பெற்ற மிதிலையின் அரசர், வீரர்; தருமம் அறிந்தவர்; க்ஷத்திரிய தருமத்தில் மிகவும் ஈடுபாடு உடையவர். அவர், தன் தேசத்தை முறைப்படி ஆண்டு வந்தார். (27)

ஒரு சமயம், யாகபூமியை அவர் தன் கலப்பையால் உழுது கொண்டிருந்தபோது, பூமியைப் பிளந்து கொண்டு நான் வெளிப்பட்டேன்; அதனால், அந்த மன்னரின் மகள் ஆனேன். (28)

அவர், அவ்விடத்திலிருந்த செடி-கொடிகளைப் பிடுங்கி எறிவதில் முனைந்திருந்தபோது என்னைப் பார்த்தார். உடல் முழுவதும் புழுதி படிந்திருந்த என்னைப் பார்த்து ஜனகர் ஆச்சரியமடைந்தார். (29)

அவருக்குக் குழந்தைகள் இல்லை. எனவே, பாசத்துடன் என்னைத் தன் மடியில் வைத்துக் கொண்டு, 'இவள் என்னுடைய மகள்' என்று கூறி, என்மீது அன்பைப் பொழிந்தார். (30)

அப்போது, ஆகாயத்தில் ஓர் அசரீரி எழுந்தது— 'மன்னனே! மானுடம் சாராத இவள், நீர் கூறியபடியே உமது தருமபுத்திரிதான்.' (31)

தருமாத்மாவும் தந்தையும் மிதிலை மன்னருமான அவர் மிகவும் மனமகிழ்ந்தார். அரசர் என்னை (மகளாக) அடைந்ததும், எல்லையில்லாத செல்வச் செழிப்பைப் பெற்றுவிட்டதுபோல் மகிழ்ந்தார். (32)

புண்ணியச் செயல்களைச் செய்பவரும், தனக்கு மிகவும் பிரியமானவருமான மூத்த அரசியிடம் என்னை ஒப்படைத்தார். அவர், என்னைப் பெற்ற தாயைப்போல பேரன்புடன் சீராட்டி, வளர்த்தார். (33)

தன் செல்வம் முழுவதையும் இழந்து ஏழையாகிவிட்டவன் துயரப்படுவதைப்போல, எனக்கு விவாக வயது வந்துவிட்டதை அறிந்து என் தந்தை, மனம் தளர்ந்து கவலை கொண்டார். (34)

உலகத்தில், தேவேந்திரனுக்கு நிகராக இருந்தாலும், பெண்ணைப் பெற்ற எந்தவொரு தகப்பனாரும் தனக்கு இணையான அல்லது கீழான மக்களிடமிருந்து வரும் இகழ்ச்சியை அனுபவிக்கிறார்கள். (35)

நடுக்கடலில் தத்தளிக்கும் ஒருவன், படகு இல்லாமல் கரையை அடையமுடியாதது போல, அந்த இகழ்ச்சியை எதிர்கொள்ளும் காலம் தனக்கு நெருங்கிவிட்டதைப் பார்த்து, மன்னர் சோகக்கடலில் மூழ்கினார். (36)

புவியாளும் அரசர், நான் ஒரு தாயின் வயிற்றில் தோன்றாததால் (மானுட இயல்பிற்கு மேம்பட்டு இருந்ததால்) எனக்கு இணையான குணமும், அழகும் பொருந்திய கணவரைக் கண்டுபிடிக்க முயன்றும், எவ்வித முடிவிற்கும் வரமுடியாதவராக இருந்தார். (37)

தஸ்ய பு3த்3தி4ரியம் ஜாதா சிந்தயாநஸ்ய ஸந்ததம் ।
ஸ்வயம்வரம் தநூஜாயா: கரிஷ்யாமீதி தீ4மத: ॥ (38)

மஹாயக்ஞே ததா3 தஸ்ய வருணேந மஹாத்மநா ।
த3த்தம் த4நுர்வரம் ப்ரீத்யா தூணீ சாக்ஷயஸாயகௌ ॥ (39)

அஸஞ்சால்யம் மநுஷ்யைஶ்ச யத்நேநாபி ச கை3ரவாத் ।
தந்ந ஶக்தா நமயிதும் ஸ்வப்நேஷ்வபி நராதி4பா: ॥ (40)

தத்3த4நு: ப்ராப்ய மே பித்ரா வ்யாஹ்ருதம் ஸத்யவாதி3நா ।
ஸமவாயே நரேந்த்3ராணாம் பூர்வமாமந்த்ர்ய பார்தி2வாந் ॥ (41)

இத3ம் ச த4நுருத்3யம்ய ஸஜ்யம் ய: குருதே நர: ।
தஸ்ய மே து3ஹிதா பா4ர்யா ப4விஷ்யதி ந ஸம்ஶய: ॥ (42)

தச்ச த்3ருஷ்ட்வா த4நு:ஶ்ரேஷ்ட2ம் கை3ரவாத்3கி3ரிஸந்நிப4ம் ।
அபி4வாத்3ய நரூபா ஜக்3முரஶக்தாஸ்தஸ்ய தோலநே ॥ (43)

ஸுதீ3ர்க4ஸ்யாத2 காலஸ்ய ராக4வோऽயம் மஹாத்3யுதி: ।
விஶ்வாமித்ரேண ஸஹிதோ யக்ஞம் த்3ரஷ்டும் ஸமாக3த: ॥ (44)

லக்ஷ்மணேந ஸஹ ப்4ராத்ரா ராம: ஸத்யபராக்ரம: ।
விஶ்வாமித்ரஸ்து த4ர்மாத்மா மம பித்ரா ஸுபூஜித: ॥ (45)

ப்ரோவாச பிதரம் தத்ர ப்4ராதரௌ ராமலக்ஷ்மணௌ ।
ஸுதௌ தா3ஶரதி2ஸ்யேமௌ த4நுர்தா3ர்ஶநே காங்க்ஷிணௌ ॥ (46)

த4நுர்தா3ர்ஶய ராமாய ராஜபுத்ராய தை3விகம் ।
இத்யுக்தஸ்தேந விப்ரேண தத்3த4நு: ஸமுபாநயத் ॥ (47)

நிமேஷாந்தரமாத்ரேண ததா3நம்ய ஸ வீர்யவாந் ।
ஜ்யாம் ஸமாரோப்ய ஜடிதி பூரயாமாஸ வீர்யவாந் ॥ (48)

தேந பூரயதா வேகா3ந் மத்4யே ப4க்3நம் த்3விதா4 த4நு: ।
தஸ்ய ஶப்3தோ3ऽப4வத்3பீ4ம: பதிதஸ்யாஶநேரிவ ॥ (49)

ததோऽஹம் தத்ர ராமாய பித்ரா ஸத்யாபி4ஸந்தி4நா ।
நிஶ்சிதா தா3துமுத்3யம்ய ஜலப4ாஜநமுத்தமம் ॥ (50)

தீ3யமாநாம் ந து ததா3 ப்ரதிஜக்3ராஹ ராக4வ: ।
அவிக்ஞாய பிதுஶ்ச2ந்த3மயோத்4யாதி4பதே: ப்ரபோ4: ॥ (51)

தத: ஶ்வஶுரமாமந்த்ர்ய வ்ருத்3த4ம் த3ஶரத2ம் நரூபம் ।
மம பித்ரா த்வஹம் த3த்தா ராமாய விதி3தாத்மநே ॥ (52)

மம சைவாநுஜா ஸாத்4வீ ஊர்மிளா ப்ரியத3ர்ஶநா ।
பா4ர்யார்தே2 லக்ஷ்மணஸ்யாபி த3த்தா பித்ரா மம ஸ்வயம் ॥ (53)

புத்திமானான அவருக்கு, எப்போதும் இதை(என் விவாகத்தை)ப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கையில், 'என் மகளுக்கு சுயம்வரம் ஏற்பாடு செய்யலாம்' என்ற கருத்து உண்டாயிற்று. (38)

முன்பு ஒரு சமயம், பெருவேள்வி நடந்தபோது மகாத்மாவான வருணனால், அவருக்கு அருள்புரியும் நோக்கத்துடன், (பரமேசுவரன் உபயோகித்த) அம்புகள் குறையாத இரண்டு அம்பறாத்தூணிகளும், மிகச்சிறந்த வில்லும் கொடுக்கப்பட்டன. (39)

அதன் தெய்விகத் தன்மையாலும் கனத்தாலும் மிகவும் முயற்சி செய்தால்கூட, மனிதர்களால் அசைக்க முடியாதிருந்தது. அரசகுமாரர்கள், அந்த வில்லை எடுத்து வளைக்கும் ஆற்றலை கனவில்கூட பெறமுடியாதவர்களாக இருந்தார்கள். (40)

அவ்வளவு மகிமை பொருந்திய வில் தன்னிடம் இருப்பதை நினைவுகூர்ந்து, மன்னர்களை அழைப்பித்து, அவர்கள் சபையில் சத்தியவாதியான என் தகப்பனார் (பின்வருமாறு) பிரகடனம் செய்தார்— (41)

'எவனொருவன் இந்த வில்லை எடுத்து நாணேற்றுகிறானோ, அவனுக்கு என் புத்திரி மனைவியாவாள். இதில் சந்தேகமில்லை.' (42)

மலைபோல அசைக்க முடியாததான அந்தத் தெய்விக வில்லைப் பார்த்ததும், அதைக் கையால் தூக்கக்கூட சக்தியற்றவர்களான மன்னர்கள், அதை வணங்கிவிட்டுத் திரும்பிச் சென்றார்கள். (43)

வெகுநாட்களுக்குப் பிறகு, மகா பராக்கிரமசாலியான சத்தியம் தவறாத இந்த இராகவன், (மிதிலையில் நடந்து கொண்டிருந்த) வேள்வியைப் பார்ப்பதற்காக விசுவாமித்திரருடனும், சகோதரன் லட்சுமணனோடும் வந்தார். தருமாத்மாவான விசுவாமித்திரர் என் தந்தையால் நன்கு உபசரிக்கப்பட்டார். அப்போது, அவர் என் தந்தையைப் பார்த்து, 'இவர்கள் இருவரும் தசரதருடைய குமாரர்கள்; இராமன்–லட்சுமணன் என்ற சகோதரர்கள்; வில்லைப் பார்ப்பதில் விருப்பம் உடையவர்கள்' என்று சொன்னார். (44–46)

'தெய்விகமான அந்த வில்லை, அரசகுமாரனான இராமனுக்குக் காட்டுவாயாக' என்று அந்த முனிவரால் சொல்லப்பட்டதும், அந்த வில்லைக் கொண்டுவரச் செய்தார், (ஜனகர்). (47)

மகாவீரம் பொருந்திய, பேராற்றல் மிக்க அவர், இமைகொட்டும் நேரத்தில் அதை வளைத்து, நாண் கயிற்றை எடுத்து, உடனே நாணேற்றி டங்காரம் செய்தார். (48)

அழுத்தமாக வில்லை வளைத்து நாணேற்றும்போது, அது நடுவில் (தானாகவே) முறிந்து இரண்டு துண்டுகளாயிற்று. கீழே விழுந்தபோது ஏற்பட்ட பயங்கரமான சப்தம் இடியோசைபோல் கேட்டது. (49)

சொன்ன சொல் தவறாத என் தந்தை, உத்தமமான தீர்த்த பாத்திரத்தைக் கையில் எடுத்து, அப்போதே, இராமனுக்கு என்னைத் தாரை வார்த்துக் கொடுப்பதாக நிச்சயித்தார். (50)

உடனே, என் தந்தை என்னைக் கொடுக்க வந்தபோது, அயோத்தியாதிபதியான தன்னுடைய தந்தையாரின் சம்மதத்தைப் பெறாமல், என்னை ஏற்றுக்கொள்ள மறுத்தார், அவர். (51)

பின்னர், வயோதிகமடைந்த மன்னரான என் மாமனாரை வரவழைத்து, ஆத்மஞானம் பெற்றவரான இராமனுக்கு என்னை விவாகம் செய்து கொடுத்தார். (52)

என் இளைய சகோதரி; அழகிய தோற்றமுள்ளவள்; பண்பு நிறைந்தவளுமான ஊர்மிளையை லட்சுமணனுக்குப் பத்தினியாக, என் தந்தை தானே கொடுத்தார். (53)

ஏவம் த3த்தாஸ்மி ராமாய தத3 தஸ்மிந் ஸ்வயம்வரே ।
அநுரக்தாஸ்மி த4ர்மேண பதிம் வீர்யவதாம் வரம் ॥ (54)

இத்யார்ஷே ஸ்ரீமத்3ராமாயணே வால்மீகீயே ஆதி3காவ்யே
அயோத்4யாகாண்டே3 அஷ்டாத3ஶாதி4கஶததம: ஸர்க3: ॥

ஏகோநவிம்ஶத்யதி4கஶததம: ஸர்க3:

த3ண்ட3காரண்யப்ரவேஶ:

அநஸூயா து த4ர்மக்ஞா ஶ்ருத்வா தாம் மஹதீம் கத2ாம் ।
பர்யஷ்வஜத பா3ஹூப்4யாம் ஶிரஸ்யாக்4ராய மைதி2லீம் ॥ (1)

வ்யக்தாக்ஷரபத3ம் சித்ரம் பா4ஷிதம் மது4ரம் த்வயா ।
யதா2 ஸ்வயம்வரம் வ்ருத்தம் தத்ஸர்வம் ஹி ஶ்ருதம் மயா ॥ (2)

ரமேऽஹம் கத2யா தே து த்3ருட4ம் மது4ரபா4ஷிணி ।
ரவிரஸ்தம் க3த: ஶ்ரீமாநுபோஹ்ய ரஜநீம் ஶிவாம் ॥ (3)

தி3வஸம் ப்ரதிகீர்ணாநாமாஹாரார்த2ம் பதத்ரிணாம் ।
ஸந்த்4யாகாலே நிலீநாநாம் நித்3ரார்த2ம் ஶ்ரூயதே த்4வநி: ॥ (4)

ஏதே சாப்யபி4ஷேகார்த்3ரா முநய: கலஶோத்3யதா: ।
ஸஹிதா உபவர்தந்தே ஸலிலாப்லுதவல்கலா: ॥ (5)

ருஷிணாமக்3நிஹோத்ரேஷு ஹூதேஷு விதி4பூர்வகம் ।
கபோதாங்கா3ருணோ தூ4மோ த்3ருஶ்யதே பவநோத்3த4த: ॥ (6)

அல்பபர்ணா ஹி தரவோ க்3நீஷ்வ4தா: ஸமந்தத: ।
விப்ரக்ருஷ்டேऽபி தே3ஶேऽஸ்மிந் ந ப்ரகாஶந்தி வை தி3ஶ: ॥ (7)

ரஜநீசர ஸத்த்வாநி ப்ரசரந்தி ஸமந்தத: ।
தபோவநம்ருகா3 ஹ்யேதே வேதி3தீர்தே2ஷு ஶேரதே ॥ (8)

ஸம்ப்ரவ்ருத்தா நிஶா ஸீதே நக்ஷத்ரஸமலங்க்ருதா ।
ஜ்யோத்ஸ்நா ப்ராவரணஶ்ச சந்த்3ரோ த்3ருஶ்யதேऽப்4யுதி3தோऽம்ப3ரே ॥ (9)

க3ம்யதாமநுஜாநாமி ராமஸ்யாநுசரீ ப4வ ।
கத2யந்த்யா ஹி மது4ரம் த்வயாஹம் பரிதோஷிதா ॥ (10)

அலங்குரு ச தாவத்த்வம் ப்ரத்யக்ஷம் மம மைதி2லி ।
ப்ரீதிம் ஜநய மே வத்ஸே தி3வ்யாலங்காரஶோபி4தா ॥ (11)

இவ்வாறாக, அப்போது அந்த சுயம்வரத்தில் நான் ஸ்ரீராமனுக்குக் கொடுக்கப்பட்டேன். ஆற்றல்மிக்கவர்களில் முதன்மையானவரான அவரிடம் அறநெறிப்படி நான் சஞ்சலமில்லாத அன்புடையவளாக இருக்கிறேன்.'' (54)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பதினெட்டாவது ஸர்க்கம் முற்றிற்று.

ஸர்க்கம் : நூற்றுப் பத்தொன்பது

தண்டகாரண்யத்தில் புகுதல்

போற்றற்குரிய அந்தக் கதையைக் கேட்டு, தருமமறிந்தவரான அநஸூயா, மைதிலியைத் தன் இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு உச்சிமுகர்ந்தார். (1)

தெளிவான, அழகான, இனிமையான சொற்களால் நீ கூறிய சுயம்வரக் கதையை நான் முன்பே கேட்டிருக்கிறேன். (2)

இனிமையாகப் பேசுகிறவளே! நீ கூறிய கதையில் என் மனம் ஆழ்ந்திருக்கிறது. மங்களமான இரவு வேளைக்கு இடம் கொடுத்து, ஒளிச்செல்வனான சூரியன் மறைந்து விட்டான். (3)

பகலில் உணவைத் தேடி வெளியே பறந்து சென்ற பறவைகள், அந்திவேளையில் உறங்குவதற்காகக் கூடுகளில் புகுந்து கொண்டு சப்தமிடும் ஒலி கேட்கப்படுகிறது. (4)

முனிவர்கள் ஈரமான மரவுரி அணிந்து கொண்டு, குளித்ததால் நீர்சொட்டும் உடலுடன் கையில் ஜலபாத்திரம் ஏந்தியவர்களாக ஒன்றாகத் திரும்பி வருகிறார்கள். (5)

அக்னிஹோத்ர குண்டத்தில் முறைப்படி முனிவர்களால் ஆகுதி செய்யப்பட்டு, காற்றினால் எங்கும் பரவிய புகை, புறாவின் அங்கத்தைப் போல சாம்பல் நிறத்துடன் காணப்படுகிறது. (6)

அடர்த்தியான காட்டுப் பிரதேசங்களுக்குத் தொலைவில் இருக்கும் இந்த இடத்திலும், கொஞ்சமாக இலைகளையுடைய மரங்கள் இருளினால் மூடப்பட்டு, திக்கு-திசை தெரியாமல், எங்கும் மிக்க அடர்த்தியானதுபோல் காணப்படுகின்றது. (7)

இரவு வேளையில் திரியும் பிராணிகள், நாலாபக்கத்திலும் சுற்றித் திரிகின்றன. இந்தத் தபோவனத்தைச் சேர்ந்த விலங்குகள் (மான், பசு, கன்று போன்றவை) புண்ணியமான வேள்விக்கூடம் போன்ற இடங்களில் படுத்துக் கிடக்கின்றன. (8)

சீதே! தாரகைகளால் அழகுற்று விளங்கும் இரவு வந்துவிட்டது; ஆகாயத்தில் சந்திரன் தோன்றி நிலா கிரணங்களைப் போர்த்திக் கொண்டு விளங்குகிறான். (9)

நீ இப்போது செல்வாய்; நான் அனுமதி கொடுக்கிறேன்; சென்று இராமனுக்குச் சேவை செய்வதில் ஈடுபடுவாய். இனிமையான உன் பேச்சினால் நானும் மகிழ்ந்திருக்கிறேன். (10)

என் செல்வகுமாரி மைதிலி! திவ்யமான இந்த ஆடை-ஆபரணங்களால் உன்னை நீயே அலங்காரம் செய்து கொள். நீ, அலங்காரம் செய்து கொண்டு பேரழகுடன் விளங்குவதை நான் கண்ணாரக் கண்டு மகிழ விரும்புகிறேன். (11)

ஸா ததா$_2$ ஸமலங்க்ருத்யா ஸீதா ஸுரஸுதோபமா ।
ப்ரணம்ய ஶிரஸா தஸ்யை ராமம் த்வபி$_4$முகீ$_2$ யயௌ ॥ (12)

ததா$_2$ விஷ்$_4$ஷிதாம் ஸீதாம் த$_3$தா$_3$ர்ஶ வத$_3$தாம் வர: ।
ராக$_4$வ: ப்ரீதித$_3$ாநேந தபஸ்விந்யா ஜஹர்ஷ ச ॥ (13)

ந்யவேத$_3$யத்தத: ஸர்வம் ஸீதா ராமாய மைதி$_2$லீ ।
ப்ரீதித$_3$ாநம் தபஸ்விந்யா வஸநாப$_4$ரணஸ்ரஜாம் ॥ (14)

ப்ரஹ்ருஷ்டஸ்த்வப$_4$வத்$_3$ராமோ லக்ஷ்மணஶ்ச மஹாரத$_2$: ।
மைதி$_2$ல்யா: ஸத்க்ரியாம் த்$_3$ருஷ்ட்வா மாநுஷேஷு ஸுது$_3$ர்லப$_4$ாம் ॥ (15)

ததஸ்தாம் ஶர்வரீம் ப்ரீத: புண்யாம் ஶஶிநிப$_4$ாநந: ।
அர்சிதஸ்தாபஸை: ஸித்$_3$தை$_4$ருவாஸ ரகு$_4$நந்த$_3$ந: ॥ (16)

தஸ்யாம் ராத்ர்யாம் வ்யதீதாயாமபி$_4$ஷிச்ய ஹுதாக்$_3$நிகாந் ।
ஆப்ருச்சே$_2$தாம் நரவ்யாக்$_4$ரௌ தாபஸாந் வநகே$_2$சராந் ॥ (17)

தாவூசுஸ்தே வநசராஸ்தாபஸா த$_4$ர்மசாரிண: ।
வநஸ்ய தஸ்ய ஸஞ்சாரம் ராக்ஷஸை: ஸமபி$_4$ப்லுதம் ॥ (18)

ரக்ஷாம்ஸி புருஷாதீ$_3$நி நாநாரூபாணி ராக$_4$வ ।
வஸந்த்யஸ்மிந் மஹாரண்யே வ்யாலாஶ்ச ருதி$_4$ராஶநா: ॥ (19)

உச்சி$_2$ஷ்டம் வா ப்ரமத்தம் வா தாபஸம் த$_4$ர்மசாரிணம் ।
அதா$_3$ந்த்யஸ்மிந் மஹாரண்யே தாந்நிவாரய ராக$_4$வ ॥ (20)

ஏஷ பந்த$_2$ா மஹர்ஷீணாம் ப$_2$லாந்யாஹரதாம் வநே ।
அநேந து வநம் து$_3$ர்க$_3$ம் க$_3$ந்தும் ராக$_4$வ தே க்ஷமம் ॥ (21)

இதீவ தை: ப்ராஞ்ஜலிபி$_4$ஸ்தபஸ்விபி$_4$ர்–
த்$_3$விஜை: க்ருதஸ்வஸ்த்யயந: பரந்தப: ।
வநம் ஸப$_4$ார்ய: ப்ரவிவேஶ ராக$_4$வ:
ஸலக்ஷ்மண: ஸூர்ய இவாப்$_4$ரமண்ட$_3$லம் ॥ (22)

இத்யார்ஷே ஶ்ரீமத்$_3$ராமாயணே வால்மீகீயே ஆதி$_3$காவ்யே
அயோத்$_4$யாகாண்டே$_3$ ஏகோநவிம்ஶத்யதி$_4$கஶததம: ஸர்க$_3$: ॥

ஶ்ரீமத்$_3$வால்மீகீயேராமாயணே அயோத்$_3$யாகாண்ட$_3$: ஸம்பூர்ண:

அவ்வாறே அலங்காரம் செய்து கொண்ட அவள், தேவப்பெண் போல் விளங்கினாள். அவருக்குத் தலைவணங்கிவிட்டு இராமனை நோக்கிச் சென்றாள். (12)

தபஸ்வினியான அநஸூயையால் அன்புப் பரிசாகக் கொடுக்கப்பட்டவைகளை அணிந்து கொண்டு வந்த சீதையை, வாக்குத் திறனுடையவர்களில் சிறந்தவரான இராமன் பார்த்தார்; மகிழ்ச்சியும் அடைந்தார். (13)

தபஸ்வினியால் அன்புப் பரிசாக அளிக்கப்பட்ட ஆடை-ஆபரணங்களையும், மற்ற பேச்சுக்கள் எல்லாவற்றையும் இராமனிடம் மைதிலி தெரிவித்தாள். (14)

இராமனும், பெரும் வீரனான இலக்குவனும் மனிதர்களுக்குக் கிடைத்தற்கரிய பெரும்பேறு சீதைக்கும் கிடைத்திருப்பதைப் பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். (15)

சந்திரனையொத்த திருமுகத்தையுடைய ரகுநந்தனரான இராமன், தவசிகளாலும் ஸித்தர்களாலும் உபசரிக்கப்பட்டு, புண்ணியமான அந்த இரவை அவ்விடத்திலேயே கழித்தார். (16)

அந்த இரவு கழிந்ததும், நீராடிவிட்டு அக்னிகுண்டங்களில் ஹோமம் செய்து முடித்த காட்டுவாசிகளான தவசிகளிடம், தாங்கள் அங்கிருந்து புறப்பட்டுச் செல்வதற்கு புருஷோத்தமர்கள் இருவரும் விடைகேட்டார்கள். (17)

அறநெறியில் செல்லும் வனவாசிகளான அந்தத் தவசிகள், அந்தக் காட்டில் அரக்கர்கள் எல்லா இடங்களிலும் சஞ்சரித்துத் தொல்லை கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். (18)

இந்தப் பெருங்கானகத்தில் பல வடிவங்களை எடுத்து மனிதர்களைத் தின்னும் அரக்கர்களும், மனித ரத்தத்தைக் குடிக்கும் துஷ்ட விலங்குகளும் இருக்கின்றன. (19)

இந்தப் பெருங்கானகத்தில் தருமானுஷ்டானமுள்ள தவச்செல்வர்களை, அவர்கள் தூய்மை குறைந்தோ, கவனக்குறைவாகவோ இருக்கும்போது கைப்பற்றித் தின்று விடுகிறார்கள். நீங்கள், அவர்களை இங்கிருந்து ஓட்டிவிட வேண்டும். (20)

மாமுனிவர்கள் பழம்-புஷ்பம் சேகரித்துக் கொண்டு வரும் பாதை இது. இராகவா! இந்த வழியாகச் சென்றால் உட்புக முடியாத அடர்ந்த காட்டை அடையலாம். (21)

தபஸ்விகளான அந்த அந்தணர்கள், இவ்வாறு தெரிவித்துவிட்டு கைகளைக் கூப்பி அவர்களை ஆசீர்வதித்து, மேற்கொண்டு பயணம் நல்லபடியாக நிறைவேற வேண்டும் என்று மங்கள வாக்கியங்களைக் கூறினார்கள். எதிரிகளை வாட்டும் ஸ்ரீராமன், மனைவியோடும் லட்சுமணனோடும் மேக மண்டலத்திற்குள் பிரவேசிக்கும் சூரியனைப்போல, அந்தக் காட்டினுள் புகுந்தார். (22)

ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில்
நூற்றுப் பத்தொன்பதாவது ஸர்க்கம் முற்றிற்று.

அயோத்தியா காண்டம் முற்றிற்று.